# இந்து வணிகன்

# INTHU VANIHAN

## 2011-2012

உயர்தர வர்த்தக மாணவர் மன்றம்
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.
(தேசிய பாடசாலை)

# இந்து வணிகன்

# INTHU VANIHAN

PERMANENT REFERENCE
J/Chavakachcheri Hindu College

## மூன்றாவது மலர்

0042

2011-2012

சாவகச்சேரி இந்துக் கல்லூரி
(தேசிய பாடசாலை)

வர்த்தக மாணவர் மன்றம்

## நிகழாண்டு நிர்வாகக் குழு - 2011/2012

**காப்பாளர் :** திரு அ.கயிலாபிள்ளை (அதிபர்)
திரு ந.பாலச்சந்திரன் (பிரதி அதிபர்)
திருமதி செ.செல்வராசா (பிரதி அதிபர்)

**உதவிக் காப்பாளர்:** செல்வி இ.முருகுப்பிள்ளை (பகுதி தலைவர்)
திரு ஒ.விஜயரத்தினம் (பகுதி தலைவர்)
திரு த.பாலகிருஷ்ணன்
திரு க.சத்தியானந்தன்
திரு மு.வரதராஜன்
திரு இ.பிரபேஸ்கண்ணன்
திரு பு.குகானந்தன்

**பொறுப்பாசிரியர் :** திரு க.சத்தியானந்தன்

**தலைவர்:** செல்வன் ச.யதுர்ஷன்

**உபதலைவர்:** செல்வி த.துஜீவா

**செயலாளர்:** செல்வன்.ஸ்ரீ.ரிசர்பன்

**உபசெயலாளர்:** செல்வன் ச.விபூசன்

**பொருளாளர்:** செல்வன் ச.ஜெயதர்சன்

**இதழாசிரியர்:** செல்வன் க.நவிலன்
செல்வி பு.தர்ஜனி

**உதவிச் செயற்குழு:** செல்வன் த.பிருந்தாபன்
செல்வன் ச.சாயீசன்
செல்வி பிரதீபா
செல்வி ந.கவிப்பிரியா

**விளம்பரக் குழு:** செல்வன் ஜெ.கபில்ராஜ்
செல்வன் வ.ஜெரிந்தன்
செல்வன் ர.வவீசன்
செல்வி ச.அனுஷா
செல்வி த.உஷானா
செல்வி ஸ்ரீ.அபிவர்ணா
செல்வி சி.கேதுயன்

# வணிகனின் உள்ளே.........


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | சர்வதேச வர்த்தகமும், வளர்முக நாடுகளும் ஓர் மீள் பார்வை | 1 |
| 02. | பணவீக்கமும் பொருளாதாரத்தின் மீதான அதன் தாக்கமும் | 6 |
| 03. | உலக வங்கி | 18 |
| 04. | உலகமயமாக்கல் | 21 |
| 05. | இலங்கை மத்திய வங்கி | 23 |
| 06. | பொருளியலில் நடைமுறைத் தகவலின் முக்கியத்துவம் | 25 |
| 07. | விலைப் பொறிமுறை | 28 |
| 08. | சந்தைப் பொருளாதாரம் | 31 |
| 09. | சேமிப்பும் முதலீடும் | 33 |
| 10. | அரசின் பத்தாண்டு கால அபிவிருத்திக் கட்டமைப்பு | 36 |
| 11. | கணக்கீடும் அதன் நவீன போக்கும் | 39 |
| 12. | பங்குடமையும் அதன் கணக்கீட்டு அம்சங்களும் | 44 |
| 13. | கணக்கீட்டு நியமம் | 50 |
| 14. | செம்மையாக்கல்கள் | 53 |
| 15. | பெறுமதிசேர்வரி | 56 |
| 16. | கணக்கீடும் எண்ணக்கருக்களும் | 62 |
| 17. | கணக்கீட்டின் உள்ளீடுகளும் தகவல்களும் | 67 |
| 18. | மூலதனச் செலவும் வருமானச் செலவும் | 71 |
| 19. | வணிகத்தின் செயற்பாட்டு பெறுபேற்றைக் கணித்தலும் நிதி நிலைமைகளை வெளிப்படுத்தலும் | 73 |
| 20. | காப்புறுதி | 77 |
| 21. | பங்குச்சந்தை பற்றி ஓர் அறிமுகம் | 80 |
| 22. | கொழும்பு - பங்குப் பரிவர்த்தனைஅனுபவத்துடன் இணைந்த அறிவு செல்வத்தின் பிற்பபிடம் பங்கு முதலீடுகள் | 84 |
| 23. | நுகர்வோர் பாதுகாப்பு | 88 |
| 24. | வணிகத்தின் அடிப்படை | 92 |
| 25. | கூட்டுறவு | 95 |
| 26. | அங்கீகார வணிகமும் அதன் முக்கியத்துவமும் | 100 |
| 27. | நிதிச் சந்தை பற்றிய அறிமுகம் | 104 |
| 28. | சந்தைப்படுத்தலின் மைய எண்ணக்கருக்கள் | 108 |
| 29. | இலங்கையின் சந்தை அமைப்பில் சிறு வியாபாரங்களின் வகிபங்கு | 111 |
| 30. | பெருந்தெருப் போக்குவரத்தும் புகையிரதப் போக்குவரத்தும் | 113 |
| 31. | கைத்தொலைபேசி தொழில்நுட்பங்கள் | 116 |
| 32. | PARTS OF SPEECH | 122 |
| 33. | சுற்றுலா நினைவலைகள் | 125 |
| 34. | மனதோடு மன்னார் | 127 |
| 35. | வணிகத்தின் பரிணாம வளர்ச்சி | 128 |
| 36. | [illegible]லாண்டு காலங்களின் பின்னும் இந்து வணிகன | 130 |
| 37. | [illegible] ஓய்வு பெறும் பாலா சேர் | 132 |



# அருளாசிச் செய்தி

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இருந்து வருடந்தோறும் பல சஞ்சிகைகள் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியதொன்றாகும். இவ்வெளியீடுகள் இக் கல்லூரியின் வளர்ச்சியினையே சுட்டி நிற்கின்றது. அந்த வகையில் இவ்வருடம் இந்து வணிகன் என்ற இச்சஞ்சிகை வெளிவருவதையிட்டு மகிழ்ச்சி அடையும் அதேவேளை இச் சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமையும் அடைகின்றேன்.

இந்துவணிகன் சஞ்சிகை மூலம் மாணவர்களது ஆக்கத்திறன்கள் வெளிக்கொணரப்படுகின்றன. இச் சஞ்சிகை மூலம் ஏனைய பாடசாலை மாணவர்களும் பயன்பெறுவர் என்பது உறுதி. கற்றவர்களுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு என்பது ஆன்றோர் வாக்கு. கல்விமான்களை உருவாக்கும் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மேன்மேலும் வளரவும், இந்து வணிகன் சஞ்சிகை வருடந்தோறும் புதுப்புது பொலிவுடன் வெளிவர வேண்டும் என்றும் இறைவனை வேண்டி ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

*"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்."*

-சிவஸ்ரீ கு.ஸ்ரீகாந்தக்குருக்கள்-



# வாழ்த்துச் செய்தி

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் உயர்தர வணிகமாணவர் மன்றத்தின் "இந்துவணிகன் - 2012" சஞ்சிகைக்காக வாழ்த்துச் செய்தியை வழங்குவதையிட்டு நான் மிகுந்த பெருமையடைகின்றேன்.

ஒரு சமுதாயத்தின் அபிவிருத்தியானது அதன் வணிக செயல்முறைகளுடன் நெருங்கிய தொடர்புடையதாகும். இந்த வகையில் உயர்தர வணிக மாணவர் மன்றத்தினால் நீண்ட கால இடைவெளியின் பின்னர் வெளியிடப்படும் இந்துவணிகன் என்னும் சஞ்சிகையானது வணிகத்துறையின் அறிவுரீதியான அபிவிருத்திக்கு ஒரு வழிகாட்டியாக அமையும் என நான் நம்புகின்றேன்.

இந்தகைய உபயோகமிக்க நூலை இன்று போலென்றும் தொடர்ச்சியாக செம்மையான முறையில் வெளியிடுவதற்கு இம்மன்றத்தின் மாணவர்கள் இடைவிடாது செயற்படுவார்கள் என ஆர்வத்தோடு எதிர்பார்க்கின்றேன்.

பயன்மிக்க நல்லதொரு பணியில் ஈடுபட்டுள்ள இந்துவின் உயர்தர வணிக மாணவர் மன்றத்தின் உறுப்பினர்களுக்கு எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் மிகுந்த மகிழச்சியடைகின்றேன்.

திரு.பி.ஸ்ரீதரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
கணக்கியல் துறை

யாழ்.பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்.



# வாழ்த்துச் செய்தி

1993 - 1994 பகுதியில் முதலாவது சஞ்சிகையாக யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் உயர்தர வணிக மாணவர் மன்றத்தினால் வெளியிடப்பட்ட "இந்துவணிகன்" சஞ்சிகையானது மிக நீண்ட இடைவெளியின் பின்னர் மீண்டும் புதுப்பொலிவுடன் வெளிவர இருப்பது மிகுந்த மகிழ்ச்சியையளிக்கிறது.

இச்சஞ்சிகையின் முதல் வெளியீட்டில் வணிகத் துறை சார்ந்த ஆக்கங்கள் மட்டுமல்லாது புவியியற்றுறை சார்ந்த இரண்டு கட்டுரைகளும், இந்துநாகரிகத்துறை சார்ந்த இரண்டு கட்டுரைகளும் இடம்பெற்றிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். கலைத்துறைக்கான தனியான சஞ்சிகை அக்கால கட்டத்தில் வெளியிடுவதில் இருந்திருக்கக் கூடிய சிரமம் இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

தொடர்ந்து மாற்றமடைந்துவரும் வணிகத்துறைசார்ந்த அறிவு மாணவர்களை இலகுவிற் சென்றடையவும், மாணவர்கள் தமது கருத்துக்களை வினைத்திறனாகத் தொடர் பாடலிலீடுபடுவதற்கும் இச்சஞ்சிகையானது ஒரு சிறந்த களமாக அமையுமென்பதில் எள்ளளவுஞ் சந்தேகமில்லை.

இச்சஞ்சிகை சிறந்த முறையில் ஒவ்வோராண்டும் தொடர்ச்சியாக வெளிவர எல்லாம் வல்ல இறைவனை வேண்டி ஆசி வழங்குகின்றேன்.

திரு.கு.பிரேமகாந்தன்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
தென்மராட்சி.



# வாழ்த்துச் செய்தி

புகழ் பூத்த தென்மராட்சிப் பிரதேச கலங்கரை விள்ககமாகத் திகழும் யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி (தேசிய பாடசாலை) அன்னையின் பாதம் பணிந்து.

இந்து வணிகன் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் அளவிலா ஆனந்தமடைகின்றேன்.

இன்றைய இளைஞர்கள் நாளைய எதிர்காலச் சிற்பிகள், நாடுகாண விளைகின்ற நல்ல சான்றோர்கள். அவர்கள் செயல்களைப் பாராட்டுவதும் ஊக்குவிப்பதும் எமது கடமையாகும்.

அறிவு மைய நூற்றாண்டில் இன்று உலகம் சுருங்கி விட்டது. உலகம் ஒரு கிராமமாகி விட்டது. உலகை ஒரு நுனி விரலால் வலம் வரலாம். உலகளாவிய அறிவு பெற்று சவால்களுக்கு முகம் கொடுக்க வல்ல முழு மனிதர்களாக நம் குழந்தைகள் வளர வேண்டும். தேடிக் கற்று கற்றவற்றிலிருந்து புதிய சிந்தனைகளை வளர்த்து புது யுகம் படைக்கும் படைப்பாளிகளாக வேண்டும். இவர்களின் படைப்பாக்க முதற்களம் பாடசாலைச் சஞ்சிகைகளே. பாடசாலைக் காலத்தில் எழுத்துலகில் பிரவேசிப்போர் பிரபல எழுத்தாளர்களாகப் பிரகாசிப்பர். உலகிற்கு நல்லவற்றைக் கூற ஆர்வத்துடன் கற்பர். நேரிய முறையில் தெளிவுபடுத்த பொருளியல் கல்வியில் புலமை வேண்டும். காலத்தின் தேவையைக் கணக்கிட்டு சுய சுபீட்சமும் பொது நலமும் பேண கணக்கியல் அறிவும் வணிக நுட்பங்களும் தெளிவுற அறிய வேண்டும். இவ்வாறான பல்துறை மேம்பாட்டையும் வணிகத்துறைக் கல்வியால் பெற்று மேம்பட உண்மையான ஆய்வியல் செயற்பாடுகளில் மாணவர் ஈடுபட வேண்டும். அத்தகைய ஓர் முயற்சியே வணிக மாணவரின் சஞ்சிகை வெளியீடு. தம் முன்னோர் கருத்துக்களின் துணையோடு தாமும் ஆய்ந்தறிந்து கருத்துக்களை துணிச்சலுடன் வெளியிடும் மாணவர் முயற்சி பாராட்டிற்குரியது. எதிர்காலத்தில் தம் கன்னி முயற்சிகளை மீட்டிப் பார்த்து மகிழக் கூடிய நல்லதோர் ஆவணமும் பாடசாலைச் சஞ்சிகையே.

நல்ல செயற்பாட்டில் ஈடுபட்ட அதிபர் ஆசிரியர்கள் மாணவச் செல்வங்களைப் பாராட்டுவதுடன் இந்துவணிகன் தொடர்ந்து வருடா வருடம் புதுமை மிகு நாளாந்த புதிய புதிய நடைமுறை விடயங்களைத் தந்துதவ வாழ்த்தி வணங்கி நிற்கிறேன்.

ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி
பிரதிக் கல்விப் பணிப்பாளர்



# அதிபரின் ஆசிச் செய்தி

எமது இந்துவின் மைந்தர்களில் ஒரு பகுதியினரான வர்த்தக மன்றத்தினர் "இந்து வணிகன்" என்ற வரலாற்றுத் தடத்தினை வெளியிட்டு வருகின்றனர். இது அவர்களது வெளியீட்டு வரிசையில் மூன்றாவது இந்து வணிகனாகும்.

மனித குல வாழ்க்கையே வணிக சக்கரத்தில்தான் இயங்குகின்றது. வளர்ச்சியடைந்த நாடுகளையும். வளரும் நாடுகளையும் வளர்ச்சியடையாத நாடுகளையும் வேறுபடுத்திக் காட்டுவதே வணிகம் என்று கூறின் மிகையாகாது.

நாமும் நமது சமூகமும், எமது தேசமும் நலமாக உயர்வு பெற வேண்டுமானால் இன்றைய மாணவ உலகம் மிகச் சிறந்த ஆளுமையுடன் வளர வேண்டியதும் வளர்க்கப்பட வேண்டியதும் அவசியமாகும். அவர்களது ஆளுமை உயர்வடையும் போது சிறந்த தலைமைத்துவப் பண்பு கொண்டவர்களாக அவர்களால் உருவாக முடியும். அந்த ஆளுமை உருவாக்கத்திற்கு களம் அமைத்துக் கொடுப்பதாக சஞ்சிகை வெளியீடுகள் அமைகின்றன.

இவ்வகையில் "இந்து வணிகன்" எமது வர்த்தக மாணவர் ஆசிரியர் ஆகியோரின் இடைவிடா முயற்சியால் அனைவரது சிந்தனைக்கும் அறிவுக்கும் விருந்தான ஒரு சஞ்சிகையாக வெளிவருவது கண்டு அதிபர் என்ற வகையில் பெருமையடைகின்றேன். இம்மலர் மேன்மேலும் வளரவும், உயரவும் எனது நல்வாழ்த்துக்கள் உரித்தாகுக.

அ.கயிலாயபிள்ளை
அதிபர்



# வாழ்த்துச் செய்தி

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் ஆசிரியர்களினதும் மாணவர்களினதும் ஆக்கங்களைத் தாங்கி வருகின்ற சஞ்சிகைக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் நான் பெருமகிழ்வு அடைகின்றேன்.

மாறிவருகின்ற பொருளாதார மாற்றங்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் மாணவர்களைத் தயார்ப்படுத்துவதில் இத்தகைய சஞ்சிகைகள் பெரும் பங்குவகிக்கின்றன. தொழில் உலகிற்கு மாணவர்களைத் தயார்ப்படுத்தும் வகையில் மேலும் இத்தகைய ஆக்கங்கள் தொடர்ந்தும் வெளிவர வேண்டும் என ஆசிகூறி விடைபெறுகின்றேன்.

திருமதி ம.இராசேந்திரா
**ISA (Com)**



# வாழ்த்துச் செய்தி

எமது கல்லூரி வணிக மன்றத்தினரின் "இந்துவணிகன்" சஞ்சிகை பல ஆண்டுகளின் பின் மீள் எழுச்சி கொண்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது.

வணிகத்துறையின் புதிய தோற்றப்பாடுகளை நோக்கி கவனக்கவிப்பை எற்படுத்தவும் மாணவர்களின் சுய ஆக்கத்திறன் நோக்கிய நகர்வை முன்னெடுக்கவும் இச்சஞ்சிகை களம் அமைத்துக் கொடுத்திருக்கின்றது. கல்வியின் செயற்படுகளமாக விளங்கும் கலைத்திட்டம், இணைக்கலைத்திட்டம் ஆகியனவற்றின் இணைப்பினால் முகிழ்ந்த இச்சஞ்சிகை மாணவர்கள் ஆசிரியர்களது பன்முக மேம்பாட்டுக்கும் அகல்விரி சிந்தனைக்கும் உந்துசக்தியாக அமைந்து உன்னதங்களை நோக்கி விரைந்து செல்ல உதவும் என்பதில் ஐயமில்லை.

சஞ்சிகை உருவாக்கத்துக்குப் பக்கபலமாக நின்றுழைத்த ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் பாராட்டுக்கும் நன்றிக்கும் உரியவர்கள். அவரக்ளின் அர்ப்பணிப்புடன் கூடிய உழைப்பு சஞ்சிகையின் நிலைபேறுக்கு தொடர்ந்தும் கைகொடுக்க வேண்டும். இச்சஞ்சிகை அறிவுக் கையளிப்பில் பிரதான பங்காற்ற வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

செல்வி. இ.முருகுப்பிள்ளை
பகுதித் தலைவர்
கலை, வர்த்தகப் பிரிவு.



# பொறுப்பாசிரியரின் ஆசிச் செய்தி

எமது கல்லூரியின் வர்த்தக மாணவர் மன்றம் தனது மூன்றாவது "இந்து வணிகன்" சஞ்சிகையை வெளியிடுவது குறித்து மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். ஒரு கல்லூரியைப் பொறுத்தவரையில் மாணவர்கள் ஒரு சஞ்சிகையை அச்சிட்டு வெளியிடுவது என்பது சாமானியமான விடயமல்ல. பலவித அர்ப்பணிப்புக்களைச் செய்துதான் இதை நிறைவேற்ற வேண்டும். அந்த ஆற்றல் எமது மாணவர்களுக்கு உண்டு என்பதை நிரூபித்துள்ளார்கள்.

எமது கல்லூரியைப் பொறுத்தவரையில் வர்த்தகத்துறை தனித்துவமான ஒரு வளர்ச்சிப் போக்கைக் கொண்டுள்ளது. முப்பத்து நான்கு வருட வளர்ச்சியில் பலநூறு கணக்கியலாளரை எமது பிரதேசத்திற்கு அளித்துள்ளது என்பது யாவரும் அறிந்த ஒன்றே.

பல்வேறு இடர்பாடுகளுக்கு மத்தியிலும் மலரை வெளியிட வேண்டுமென்ற உறுதியோடு செயற்பட்டு அதனை நிறைவேற்றிய மலர்க்குழு உறுப்பினர்கள் உண்மையில் பாராட்டப்பட வேண்டியவர்கள், வர்த்தகப் பெருமக்களிடமிருந்தும் சக நண்பர்களிடமிருந்தும் நிதி உதவியை பெற்று சிறந்த முறையில் மலராக்கம் செய்தமை போற்றுதற்குரியதாகும்.

இம்மன்றம் தொடர்ந்தும் "இந்து வணிகன்" சஞ்சிகையை வெளியிட இந்து அன்னையின் ஆசியும், இந்து அன்னையின் குல தெய்வமான சங்கத்தானை முருகனின் அருளும் கிடைக்க வாழ்த்துகின்றேன்.

திரு க.சத்தியானந்தன்
பொறுப்பாசிரியர்.



# இதழாசிரியர் கருத்து

தமிழ் பேசும் மக்களின் வணிக அறிவு வளர்ச்சிக்காய் முதல் இரு மலர்களிலும் வணிக மணம் பரப்பிய "இந்து வணிகன்" பதினெட்டு வருட இடைவெளியின் பின் மூன்றாவது மலராக மலர்ந்து உங்கள் கரங்களில் தவழ்கின்றான்.

எமது முன்னாள் அதிபர் திரு பூ.வெற்றிவேலு அவர்களின் அயராத உழைப்பினால் 1978 ஆம் ஆண்டு வர்த்தகத்துறை உதயமாகி இன்று 34 வருடங்களைக் கடந்துவிட்ட நிலையில் பலசாதனைகளை நிலைநாட்டியுள்ளமை யாவரும் அறிந்ததே. எமது வர்த்தகத் துறையானது எத்தனையோ தடங்கல்கள் நேர்ந்த போதும் தனித்துவ பாணியில் முன்னேறிக் கொண்டே இருக்கிறது. இம்முன்னேற்றப் பாதையின் அடையாளமே மூன்றாவது தடவையாக மலரும் இவ் "இந்து வணிகன்" மலராகும்.

வணிகமே வாழ்க்கை என்றாகி, பூகோளமே ஓர் கிராமமாகி தொடர்பாடல் வளர்ச்சியை அனுபவித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் மூன்று தசாப்த கால யுத்தத்தின் கோரப் பிடியினுள் சிக்கி நலிவடைந்து போய்க் கொண்டிருக்கிறது நம் நாட்டுப் பொருளாதாரம். எனவே விரைவாய் ஓடும் வணிக உலகினோடு ஒத்து நகர்வதற்கு நமது தேசப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவது மிக அவசியமானதாகும்.

அத்தகைய இத்துறையின் ஆரம்ப வெளிப்பாடே இவ் "இந்து வணிகன்" என்றால் அது மிகையாகாது.

"வணிகக் கல்வியை பாரெல்லாம் பைந்தமிழில்
பரப்பி வளமுற வழி செய்வோம்"

எனும் உயரிய சிந்தனையை உயிர் மூச்சாகக் கொண்டு செயற்படும் எம் வணிக மாணவர் மன்ற வெளியீடான "இந்து வணிகன்" அறிஞர்களின் கருத்துக்களாலும், மாணவர்களின் ஆக்கங்களாலும் சமுதாயத்தின் அறிவுத் தேடலுக்கு இதைவிட நாம் அளிக்கக் கூடிய சிறந்த தீனி வேறு இல்லை என்றே நம்புகின்றோம்.

இம்மலரானது தொடர்ந்து வெளிவர வேண்டும் என்பதே எமது பேரவா. எங்கள் பணி நிறைவேறியது தொடரட்டும் உங்கள் பணி.

செல்வன் க.நவிலன்
இதழாசிரியர்

## வணிகத்துறை வளர்ச்சிக்கு உரம்சேர்ந்த உத்தமர்கள்

1. திரு.சி.கணேசன்
2. திருமதி சரஸ்வதி சின்னத்தம்பி
3. திரு க.பத்மகாந்தன்
4. திரு வே.கந்தசாமி
5. திருமதி செல்வராணி செல்வராஜா
6. திரு சி.தயாபரன் (அமரர்)
7. திருமதி சந்திரகலா ராதாகிருஷ்ணன்

## வணிகத்துறை ஆசிரியர் குழாம்

| | |
|---|---|
| 1. திரு த.பாலகிருஷ்ணன் | B.A Dip.in.Ed |
| 2. திரு ஓ.விஜயரத்தினம் | B.A(hons) Dip.in.Ed,M.Ed |
| 3. திரு க.சத்தியானந்தன் | B.Com Dip.in.Edu |
| 4. திரு மு.வரதராஜன் | B.A(Hons), Dip.in. Edu, M.Ed |
| 5. திரு இ.பிரபேஸ்கண்ணன் | B.Com Dip.in.Edu |
| 6. திரு பு.குகானந்தன் | B.Com Dip.in.Edu |
| 7. திருமதி ச.குகதாஸ் | B.Com Dip.in.Edu |
| 8. திருமதி சா.தங்கவேலு | B.Com Dip.in.Edu |
| 9. திருமதி ஆ.பவதாரணி | B.Com |

PERMANENT REFERENCE
J/Chavakachcheri Hindu College

# OUR PRINCIPAL



## Mr.A.Kailayapillai
## Principal

B.A (Hons) ,P.G.D.E, M.Ed, S.L.P.S -I, S.L.E.A.S, JP.

DEPUTY PRINCIPAL
(Administration)




**Mr.N.Balachchandran**
B.A,P.G.D.E,M.Ed,S.L.T.S-I

DEPUTY PRINCIPAL
(Education Development)



**Mrs.S.Selvarajah**
B.A(Hons), P.G.D.E M.Ed,SLTS I

## ASSISTANT PRINCIPAL



**Mr.T.Balashanmuganathan**
B.Sc, P.G.D.E ,SLTS I

# க.பொ.த உயர்தரப் பெறுபேறுகள்

## 2004 A/L

| | |
|---|---|
| 1. முத்துலிங்கம் விஜிதா | 3A |
| 2. கனகசபை கஜந்தன் | 3A |
| 3. கனகரட்ணம் கார்த்தீபன் | 3A |
| 4. சிதம்பரநாதர் சிவாசினி | 3A |
| 5. கனகசுந்தரம் கலீபன் | 2AB |
| 6. தங்கராஜா ஜஸ்மினா | 2AB |
| 7. கணேசலிங்கம் தேவிகா | 2AB |
| 8. தெய்வேந்திரன் ஆர்த்திகா | 2AB |
| 9. பத்மநாதன் அச்சுதன் | 2AB |
| 10. கந்தசாமி குமுதினி | 2AB |

## 2005 A/L

| | |
|---|---|
| 1. நவரத்தினம் லோஜிதா | 3A |
| 2. கயிலாயபிள்ளை றஜீந்தன் | 2AB |
| 3. காசிநாதன் சோதிநாதன் | 2AB |
| 4. ராஜலிங்கம் சிவகங்கை | 2AB |
| 5. அரியரட்ணம் சஞ்சீவ் | 2AB |
| 6. பஞ்சாட்சரம் இந்துஜா | 2AB |

## 2006 A/L

| | |
|---|---|
| 1. வ.ஞானவரதன் | 3A |
| 2. ந.வேணுகா | 2AB |
| 3. யோ.அர்சுதன் | 2AC |
| 4. அ.ஸ்ரீரூபி | A2B |

## 2007 A/L

| | |
|---|---|
| 1. சி.இலக்கியா | 3A |
| 2. பொ.றினோசா3A | |
| 3. க.கிருபாகரி | 3A |
| 4. ச.திவகுமாரன் | 2AB |
| 5. வை.துவாரகன் | 2AB |
| 6. சூ.தர்சிகா | A2B |
| 7. தி.தர்சிகா | A2B |

| | |
|---|---|
| 8. உ.கஜேந்திரா | ABC |
| 9. ச.சுமந்திரன் | 3B |
| 10. ஆ.சிந்துஜா | 2BC |
| 11. செ.தர்ஷா | 2BC |

## 2008 A/L

| | |
|---|---|
| 1. சி.கவிதா | A2B |
| 2. ஜே.றொகானவிக்டர் | A2B |
| 3. பா.சுலோசனா2AB | |
| 4. த.நிருசன் | A2B |
| 5. ந.அமுதினி | A2B |
| 6. யோ.குகந்தன் | ABC |
| 7. கு.தனுசன் | 2AC |

## 2009 A/L

| | |
|---|---|
| 1. தி.மிதிலா | 3A |
| 2. த.கிரித்திகா | 2AC |
| 3. பூ.கௌரிசங்கர் | A2B |

## 2010 A/L

| | |
|---|---|
| 1. த.நிரோஜனி | 3A |
| 2. தி.ஜெகத் | 3A |
| 3. இ.சுபிதா | A2B |
| 4. த.ஜெயிதா | 2AC |
| 5. ப.சிந்துசா | 2AC |
| 6. த.நிரோஜிதா | ABC |
| 7. சி.அஜந்தினி | 2AC |

## 2011 A/L

| | |
|---|---|
| 1. ஸ்ரீ.கோபிகா | 2AB |
| 2. த.சஞ்சித் | A2B |
| 3. இ.பானுப்பிரியா | ABC |
| 4. ஸ்ரீ.அகிலாண்டேஸ்வரி | 3B |
| 5. ச.சங்கரி | B2C |
| 6. ஜெ.ஆரூரன் | ACS |

# சர்வதேச வர்த்தகமும், வளர்முக நாடுகளும் - ஓர் மீள் பார்வை



திரு.ஓ.விஜயரத்தினம்
B.A(hons) Dip.in.Ed,M.Ed
பொருளியல் ஆசிரியர்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

வளர்முக நாடுகளின் பொருளா தார விருத்தியில் சர்வதேச வர்த்தகம் எப்பொழுதுமே ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. எனினும் அவற்றின் பொருளாதார அபிவிருத்திக்கு சர்வதேச வர்த்தகம் உதவியுள்ளதா என்பது வாதத்துக்குரிய விடயமாகவேயுள்ளது.

வளர்முக நாடுகளின் சர்வதேச வர்த்தகத்தில் ஏற்றுமதிப் பண்டமாக அமைவது முதல்விளைவுப் பொருட் களாகும். குறிப்பாக ஆசிய, ஆபிரிக்க, மத்திய கிழக்கு, இலத்தீன் அமெரிக்க நாடுகளின் பெரும்பாலான நாடுகள் முதல்விளைவுப் பொருட்களையே தமது எற்றுமதிக்குத் தயார்ப்படுத்தி வருகின்றன.

மொத்தத் தேசிய உற்பத்தியில் மரபுரீதியாகவே கணிசமான பங்கினை முதல்விளைவுப் பொருட்களே இடம் பெறுகின்றன. முதல்விளைவுப் பொருட் களை இருபெரும் பிரிவாகப் பிரிக்கலாம். அவையாவன விவசாய உற்பத்திப் பொருட்கள், கனிய வளங்கள் என்பதாகும். ஆயினும் அநேக வளர்முக நாடுகள் தேயிலை, கோப்பி, பருத்தி, கொக்கோ, சீனி போன்ற விவசாய உற்பத்திப் பொருட் களைச் சந்தைப்படுத்துவதிலேயே தங்கியுள்ளன. எனவே அந்நாடுகளுக்கு வருவாய் தரும் மூலமாகவும் விவசாய உற்பத்திகளே காணப்படுகின்றன.

ஆயினும் மத்திய கிழக்கு நாடுகள் சுத்திகரிக்கப்படாத பொற்றோலியப் பொருட்களின் ஏற்றுமதிகளில் 90% த்துக்கு மேற்பட்ட பங்கிற்கப் பொறுப்பாக உள்ளன.

பெரும்பாலான வளர்முக நாடுகள் கனிய வளம் அல்லாத முதல்விளைவுப் பொருட்களிலேயே தமது வர்த்தகத்துக்கும், அந்நியச் செலாவணி வருவாய்களுக்கும் பெருமளவு தங்கியுள்ளன. இவற்றின் சந்தை நிலைமைகள் நிச்சயமற்ற தன்மையுடையனவாகவே காணப்படுகின்றன. இதனால் முதல்விளைவு ஏற்றுமதிகளில் தங்கியிருப்பது வளர்முக நாடுகளைப் பொறுத்தவரை அவற்றின் பொருளாதார விருத்திக்கும் அச்சுறுத்தலாகவே உள்ளது.

அநேக வளர்முக நாடுகளின் ஏற்றுமதி அமைப்புக்குப் புறம்பாக இறக்குமதிகளிலும் பெரிதும் தங்கியிருப்பதும் முக்கிய பிரச்சினையாக அமைகின்றது. வளர்முக நாடுகளின் இறக்குமதிப் பொருட்களாக மூலதனப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், நுகர்வுப் பொருட்கள் காணப்படுகின்றன.

குறிப்பாக பெற்றோலிய உற்பத்திகளில் ஈடுபடாத அநேக வளர்முக நாடுகள் இறக்குமதிப் பொருட்களின் கேள்வியை பூர்த்தி செய்யும் அளவுக்கு தமது ஏற்றுமதிகளிலிருந்து வருவாய்களைப் பெறுவதில்லை. அதனால் அவை சென்மதி நிலுவைப் பற்றாக்குறையை எதிர்நோக்குகின்றன. நடைமுறைக் கணக்குக் குறைநிலை அதாவது பண்டக்கணக்கு, சேவைகள் கணக்கு, வருமானக் கணக்கு என்பவற்றின் ஏற்றுமதி வருவாய்களை விட அவற்றுக்கான இறக்குமதிக் கொடுப்பனவுகள் அதிகமாக இருப்பதால் அநேக காலங்களில் மூலதனக் கணக்கில் எற்படும் மிகை நிலை மூலம் கிடைக்கக் கூடிய வெளிநாட்டு அரச, தனியார் கடன்கள், அவற்றுக்கான வட்டி என்பவற்றை மீளச் செலுத்தப் போதுமானதாக அமைவதில்லை. இதனால் வளர்முக நாடுகளின் சர்வதேச நாணய ஒதுக்கீடுகள் மிக வேகமாக வீழ்ச்சியடைகின்றன.

வெளிநாட்டு வருவாய்களைவிட வெளிநாட்டக் கொடுப்பனவுகள் அதிகமாக இருப்பதால் வளர்முக நாடுகளால் அவற்றின் சுமைகளை தாங்கிக் கொள்ள முடிவதில்லை. இதனால் வளர்முக நாடுகளின் அபிவிருத்தி முயற்சிகள் தடைப்படுகின்றன.
சர்வதேச வர்த்தகத் தொடர்புகள் மிக நீண்டகாலமாக நிலவி வருகின்றபோதிலும் வளர்முக நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் நன்மை பெற முடிவதில்லை. இதற்கு அடிப்படைக் காரணியாக அமைவது குடியேற்ற நாட்டு வாதத்தின் மூலம் இந்நாடுகள் பெரிதும் தூண்டப்பட்ட முறைகளைப் பின்பற்றுவதே எனலாம்.

குடியேற்ற வாத காலத்திலுள்ளது போன்ற பொருட்கள் சேவைகளின் ஏற்றுமதி இறக்குமதிகள் காணப்படுவது வளர்முக நாடுகளின் பாதக வர்த்தகத்துக்குக் காரணமாகின்றது. இதனால் பொருளாதாரம், தொழில்நுட்பம், சமூகம் போன்ற பல்வேறு மட்டங்களிலும் இதன் தாக்கம் உணரப்படுகின்றது. இந்நிலையில் வளர்முக நாடுகளின் அபிவிருத்தி சார்ந்த பிரச்சினைகள் பற்றி ஆராயுமிடத்து சர்வதேச வர்த்தகம் பற்றிய ஆய்வு முக்கிய இடம்பெறுகின்றது.

சர்வதேச ரீதியில் வளர்முக நாடுகளின் சர்வதேச வர்த்தகம் பற்றி நோக்குமிடத்து அது குடியேற்ற நாட்டு வாதத்தின் தொடர்ச்சியாகவே காணப்படுகின்றது. வளர்முக நாடுகளின் பிரதான ஏற்றுமதிகளாக விளங்கும் முதல்விளைவுப் பொருட்கள் அபிவிருத்தியடைந்த நாடுகளின் கைத்தொழில் உற்பத்திகளின் உள்ளீடுகளாக விளங்குகின்றன. மறுபுறம் அபிவிருத்தியடைந்த நாடுகளின் கைத்தொழில் உற்பத்திப் பொருட்கள் வளர்முக நாடுகளின் பிரதான இறக்குமதிகளாக விளங்குகின்றன.

சர்வதேச வர்த்தகம் பற்றிய முழுநன்மை ஒப்பீட்டு நன்மைக் கோட்பாடுகள் கூட அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு சார்பாகவே விளங்குகின்றன. குறிப்பாக சர்வதேச வர்த்தகம் எல்லா நாடுகளுக்கும் அனுகூலங்களை வழங்குகின்றன எனக் கூறப்படுவது ஒரு பக்கசார்பான விடயமாகவே விளங்குகின்றது.

சர்வதேச வர்த்தகம் பற்றிய கோட்பாடுகளுள் முக்கியமாக அமைவது நாடுகளின் சிறப்பியல்பு என்பதாகும். அதாவது சர்வதேச சிறப்பியல்பு என்பது முக்கிய எண்ணக்கருவாகவுள்ளது.

உற்பத்திக் காரணிகளான நிலம், மூலதனம், உழைப்பு என்பன உள்ளபோதிலும் இங்கு நிலம், மூலதனம் ஆகிய இரு காரணிகளும் நிலையான காரணிகள் எனவும் ஊழியம் மாறும் காரணி எனவும் கொள்ளப்படுகின்றது.

இதன்படி மலிந்த ஊழையத்தைக் கொண்ட நாடுகள் உற்பத்தியின் போது ஊழியச் செறிவு வாய்ந்த பொருட்களை உற்பத்தி செய்து நன்மையடையலாம் என்று வலியுறுத்தப்படினும் இலங்கை போன்ற வளர்முக நாடுகள் ஊழியச் செறிவான தைத்த ஆடைகள், தேயிலை போன்ற உற்பத்திகளை ஏற்றுமதி செய்து வருகின்றன. பண்டைக்காலம் முதல் இன்றுவரை வளர்முக நாடுகள் என்ற பிரிவுக்குள் அகப்பட்ட ஒரு நாடுகூட அபிவிருத்தியடைந்த நாடு என்ற எல்லைக்குள் இதுவரை நுழைய முடியவில்லை என்பதும் தெளிவானதோர் உண்மையாகக் குறிப்பிடலாம்.

மறுபுறம் மூலதனக் கொடையைப் பெற்றுள்ள நாடுகள் கைத்தொழிற் பொருட்களின் உற்பத்தியில் ஒப்பீட்டு நன்மையை அனுபவிக்கின்றன. அவற்றின் உற்பத்திக்கு ஊழியத்துடன் ஒப்பிடும் போது கூடியளவு மூலதனம் அவசியமாகின்றது. ஆகவே மூலதனச் செறிவுடைய கைத்தொழிற் பொருட்களில் சிறக்குமியல்பினை அடைந்து அவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம் கூடியளவு நன்மைகளைப் பெற்றுக் கொள்கின்றன.

அதே போல் ஊழியச் செறிவுடைய உற்பத்திகளை உற்பத்தி செய்வதற்கு ஊழியம் மிகையாகவுள்ள நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்து கொள்ள முடியும் என்று சர்வதேச வர்த்தகம் பற்றிய கோட்பாடு கூறுகின்றது. ஆயினும் வளர்முக நாடுகளின் அபிவிருத்திக்கு இக்கோட்பாடு பெரிதும் உதவுவதாகக் கொள்ள முடியாதுள்ளது.

வர்த்தகம் பற்றிய பழம் பொருளியலாளர் புதுப் பழம்பொருளியலாளர் கோட்பாடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும், வளர்முக நாடுகளுக்குமிடையிலான வர்த்தகத்தில் பரஸ்பரம் இருவகை நாடுகளுக்கும் நன்மை கிடைக்கும் என்பதை வலியுறுத்தி வந்துள்ளது. அதன் மூலம் வளர்முக நாடுகள் உண்மையில் நன்மையடைந்தனவா என்பது வாதத்துக்குரிய ஒரு பிரச்சினையாகும்.

இந்நிலையில் வர்த்தகமானது அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கும், வளர்முக நாடுகளுக்கும் பரஸ்பர நன்மையை வழங்கவில்லையென்றும் அபிவிருத்தியடைந்த நாடுகளே கூடியளவு நன்மையையும் வளர்முக நாடுகள் குறைந்தளவு நன்மையையும் பெற்று வருகின்றன. நீண்டகாலமாகவே வளர்முக நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்துள்ள போதிலும் அவை அந்நாடுகளின் அபிவிருத்திக்கு எந்தவகையிலும் பாரியளவு உதவியை வழங்கியுள்ளது எனச் சுட்டிக்காட்ட முடியாது.

வளர்முக நாடுகளின் அபிவிருத்திக்கு உதவக் கூடிய வகையில் பின்வரும் இருவேறுபட்ட வர்த்தக கொள்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவையாவன

1. வெளிநோக்கிய கொள்கை
2. உள்நோக்கிய கொள்கை என்பனவாகும்.

வெளிநோக்கிய வர்த்தகக் கொள்கை என்பது கட்டற்ற வர்த்தகத்தை மட்டுமன்றி மூலதனம், ஊழியர்கள், தொழில்கள், கல்விமுறை போன்ற பலவற்றிலும் கட்டுப்பாடற்ற நகர்வுக்கு ஊக்கவிப்பதுடன் பல்தேசியக் கூட்டுத்தாபனங்கள், திறந்த தொடர்பாடல் முறைகள் என்பற்றையும் வரவழைக்கும் வர்த்தகக் கொள்கையாகும்.

மறுபுறம் உள்நோக்கிய கொள்கை என்பது வளர்முக நாடுகள் தமக்கு உகந்த வகையிலான அபிவிருத்தி முறைகளைத் தாமே நிர்ணயத்துக் கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதுடன் தாங்களே தமது எஜமான்கள் என்ற தத்துவத்தையும் அங்கீகரிக்கின்றது.

உள்நோக்கிய வர்த்தகக் கொள்கையானது ஒரு நாட்டின் காரணிகளின் அல்லது வளங்களின் கொடைக்கேற்ப பொருத்தமாக உள்நாட்டு நுட்பங்களை அறிமுகப்படுத்தி அவற்றினூடாக கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதை முன்வைக்கின்றது. இத்தகைய சுயசார்பு அபிவிருத்தியை ஏற்படுத்தும் வகையிலான கொள்கை ஒருவகையில் சரியானது போலத் தோன்றினாலும் மறுபுறம் அது தவறான கொள்கை எனவும் கருத இடமுண்டு.

வெளிநோக்கிய வர்த்தகக் கொள்கையானது வளர்முக நாடுகளின் முதல்விளைவுப் பொருட்களின் ஏற்றுமதி மேம்பாடு என்பதற்கு ஆதாரமாக அமைந்தாலும் அவை வளர்முக நாடுகளுக்கு நன்மையற்றவையாகவே காணப்படுகின்றது. எனவே இறக்குமதிப் பதலீடுகளை உள்நாட்டில் உற்பத்தி செய்வதுடன் ஏற்றுமதி மேம்பாட்டுக் கைத்தொழில்களை விரிவாக்கம் செய்யும் முறையாகவும் கூறப்படுகின்றது.

இத்தகைய வர்த்தக கொள்கையும் கூட அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு கூடிய நன்மையையும் வளர்முக நாடுகளுக்கு குறைந்தளவு நன்மைகளையுமே பெற்றுக் கொள்ளுமளவுக்கு வரையறுத்துள்ளது.

எனவே வளர்முக நாடுகளின் அபிவிருத்தி இலக்குகளை எய்தக் கூடிய வகையில் இன்றுவரை சர்வதேச வர்த்தகம் உதவவில்லை என்பதே இன்றுவரை யதார்த்தமாகும். இதற்கு முற்றுப்புள்ளி வைத்து வளர்முக நாடுகளை முன்னேற்ற வேண்டுமாயின் அது உலகளாவிய சிந்தனைமாற்றமாக அமையும் போதே சாத்தியமாகும்.

இன்றைய காலகட்டத்தில் பூகோளமயமாக்கல் கொள்கைகூட அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கே கூடியளவு பயனளிப்பதாகக் காணப்படுகின்றது. வளர்முக நாடுகள் தமக்குள்ளே ஒன்றுபட்டு சர்வதேச வர்த்தகத்தில் பங்கெடுத்துக் கொள்வதன் மூலமே மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

நவீன உலகின் தேவைகளுக்கேற்றவாறு வர்த்தகக் கொள்கைகள் வகுக்கப்பட்டு அவை நடைமுறைப்படுத் தப்படும் போது வளர்முக நாடுகள் தமது சர்வதேச வர்த்தகத்தை விஸ்தரித்து இன்றைய காலட்டத்தின் சவால்களை வெல்ல முடியும் என்பதில் ஐயமில்லை.

“சர்வதேச வலைப்பின்னல் மூலம் வளர்முக நாடுகள் சர்வதேச வர்த்தகத்தில் புத்தாக்கங்களைப் படைக்கும் போது இந்நாடுகளின் வளமான எதிர்காலத்துக்கு வழிபிறக்கும்.”

**மனித குலத்திற்குத் தீராத நோய் ஒன்று பிழத்திருக்கிறது, மாறாத சாபம் இறங்காத நச்சு, இதன் பெயர் பணம்.**

**– பாரதியார்**

**சின்னஞ்சிறு செலவுகளைப் பற்றிக் கவனமாக இருங்கள், சிறிய ஓட்டை கப்பலையே கவிழ்த்து விடும்.**

**– பெஞ்சமின் பிராங்களின்**

# பணவீக்கமும் பொருளாதாரத்தின் மீதான அதன் தாக்கமும்

## Inflation and It's Effects on Economic



திரு மு.வரதராஜன்
**B.A(Hons), P.G.D.E (Merit),M.Ed (Distinction)**
பொருளியல் ஆசிரியர்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

### அறிமுகம் (Introduction)

சர்வதேச ரீதியில் நாடுகளில் காணப்படுகின்ற இன்றியமையாத பொருளாதாரப் பிரச்சினையாக பணவீக்கம் காணப்படுகின்றது. பணவீக்கம் என்பது பொருளாதாரத்தில் பொது விலை மட்டத்தில் ஏற்படும் நீண்ட காலப் பகுதியிலான தொடர்ச்சியான அதிகரிப்பேயாகும். பொருளாதாரத்தில் பணவீக்கத்தின் அளவானது ஒவ்வொரு பண்டத்தின் விலையில் ஏற்படும் மாற்றத்தினால் அல்லாமல் எல்லாப் பொருட்கள் சேவைகளினதும் விலைகளின் சராசரிப் பெறுமதியின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றது. பொது விலை மட்டம் அதிகரித்துக் செல்லும் போது பணத்தின் மெய்கொள்வனவு சக்தியானது அதாவது பணத்தின் பெறுமதியானது குறைவடைந்து செல்வதும் பணவீக்கமாகக் கொள்ளப்படும். Crowther என்பவரின் கருத்துப்படி பணத்தின் பெறுமதி தொடர்ந்து குறைவடைந்து கொண்டு செல்லுதலும் நாட்டின் போது விலை மட்டம் தொடர்ச்சியாக அதிகரித்துக் கொண்டு செல்வதுமே இத்தகைய பணவீக்கமாகும். இரண்டாம் உலக யுத்த காலம் முதல் இன்று வரை இலங்கை எதிர்நோக்கும் ஒரு முக்கிய பொருளாதாரப் பிரச்சினையும் இதுவேயாகும்.

### பணவீக்கத்தை அளவிடல்

பணவீக்கமானது பொது விலை மட்ட அதிகரிப்பின் ஒரு பிரதி பலிப்பாகக் காணப்படுவதனால் பொது விலை மட்டமானது விலைச் சுட்டெண்ணால் அளவிடப்படுகின்றது. இதன்படி இரண்டு ஆண்டுகளுக்கிடையே ஒரு நாட்டினதும் விலைச் சுட்டெண்ணில் ஏற்படும் அதிகரிப்பு வீதமாகவே அளவிடப்படுகின்றது. இவ்வாறு இரண்டு ஆண்டுகளுக்கிடையில் விலைச் சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பின் நூற்று வீதமே பணவீக்க வீதமாகும்.

$$\text{பணவீக்க வீதம்} = \frac{\text{நடப்பு வருட விலைச் சுட்டெண் - முன்னய வருட விலைச் சுட்டெண்}}{\text{முன்னய வருட விலைச் சுட்டெண்}} X 100$$

$$P= \frac{I_2 - I_1}{I_1} X 100$$

P - பணவீக்க வீதம்

$I_2$ - நடப்பு வருட விலைச் சுட்டெண்

$I_1$ - முன்னய வருட விலைச் சுட்டெண்

இத்தகைய அளவீட்டு முறையிலேயே ஒரு நாட்டின் பண வீக்கமானது அளவீடு செய்யப்படுகின்றது. இந்த அளவீட்டு முறை துல்லியமாகத் தெளிவுபடுத்தக் கூடியது எத்தகைய பணவீக்கப் போக்கு நாடுகளில் காணப்படுகின்றது என்பதனையோயாகும்.

## பணவீக்க வகைகள் (Types of Inflation)

நாடுகளில் ஏற்படக் கூடிய பணவீக்கமானது பல்வேறுபட்ட வகைகளில் வகைப்படுத்தப்படுகின்றது. பணவீக்கத்தின் தன்மை, போக்கு, பணவீக்கத்தின் வேகம், பணவீக்கம் ஏற்படுவதற்கான காரணங்கள் போன்ற பல அடிப்படைகளில் பணவீக்கமானது வேறுபட்ட வகைகளில் அவதானிக்கப்படுகின்றது.

### வெளிப்படையான பணவீக்கமும் அடிப்படைப் பணவீக்கமும்

பொதுவிலை மட்டத்தில் உண்மையாக ஏற்படும் உயர்வு வெளிப்படையான பணவீக்கமாகும். அதாவது ஒரு நாட்டில் வழமையாகக் கணிப்பிடப்படும் விலைச் சுட்டெண்ணின் படி உண்மையில் ஏற்படும் சதவீத அதிகரிப்பு இத்தகைய முதன்மைப் பணவீக்கமே ஆகும். இப்பணவீக்கத்தினை நுகர்வோர் விலைச் சுட்டெண் அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்திச் சுருக்கியைப் பயன்படுத்திக் கணிப்பீடு செய்யலாம். உணவு வகைகள் மற்றும் வேறு சில அடிப்படைப் பொருட்களின் விலைகள் தளம்பும் போது வெளித்தெரியும் பணவீக்கம் தீவிரமான ஏற்ற இறக்கங்களுக்கு உட்படுவதாகக் காணப்படும்.

அடிப்படைப் பணவீக்கம் என்பது தற்காலிக விலை மாற்றங்களைக் குறித்துக் காட்டும் பொருட்டு செம்மையாக்கப்பட்ட பணவீக்க வீதமாகும். வெளித் தெரியும் பணவீக்கத்தில் காணப்படுகின்ற நிரம்பல் அதிர்ச்சிகள் நிருவகிக்கப்படும் விலைகளிலான மாற்றங்கள் போன்ற தற்காலிக விலைத் தளம்பல்களை அகற்றும் பொருட்டு சிலவகைப் பொருடகளின் விலைகளை நீக்கிக் கணிப்பிடப்படும் விலைச் சுட்டெண்ணின் போக்கு அடிப்படைப் பணவீக்கமாகவே கொள்ளப்படுகின்றது. சர்வதேச நியமங்களின் அடிப்படையில் இலங்கையும் அடிப்படைப் பணவீக்தகத்தைக் கணிப்பீடு செய்வதற்கு

உணவு மற்றும் எரிபொருட்களின் விலைகள் நீக்கப்பட்டுள்ளது. விலை மட்டத்தைப் பாதிக்கும் தற்காலிக காரணிகளை அகற்றி அடிப்படைக் காரணிகளை இனங்காண்பது பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பணக் கொள்கை போன்ற முகாமைத்துவக் கொள்கைகளை வகுப்பதில் அடிப்படைப் பணவீக்கம் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகும்.

**பணவீக்க வேகத்தின் அடிப்படையில் பணவீக்க வகை**

நாட்டிற்கு நாடு அவற்றின் பொருளாதார செயன்முறைக்கு ஏற்ப வெவ்வேறு பணவீக்க வீதங்களை அனுபவிக்கின்றன. ஏனெனில் பொது விலை மட்ட மாற்றங்கள் மிக மெதுவான வேகத்திலிருந்து மிகத் தீவிரமான வேகம் வரையிலான வேறுபட்ட விகிதங்களில் ஏற்படுகின்றன. இதற்கேற்ப பணவீக்க வேகத்தை அடிப்படையாகக் கொண்டு பல வகைகளில் குறிப்பிடப்படுகிறது.

**1. ஊரும் பணவீக்கம் / மிதமான பணவீக்கம்**
**(Creeping / Moderate Inflation)**

நீண்ட காலத்தில் மிக மெதுவாக விலைமட்டம் அதிகதித்து வரும் நிலை மிதமான பணவீக்கமாகும். ஓரளவு உறுதியானதும் மிதமானதுமான வேகத்தில் இப்பணவீக்கம் காணப்படும். பொதுவாக 5% திலும் குறைவான விலை அதிகதிப்பு வீதமாகக் காணப்படும்.

இத்தகைய பணவீக்கத்தினால் விலை மட்ட அதிகரிப்பை எதிர்வு கூறவும், நிதி முறைமையின் சிறந்த தொழிற்பாட்டிற்கும் உதவுவதாக இருக்கும். அத்துடன் பணத்திற்கான கேள்வி அதிகரிக்கவும், வட்டி வீத தீர்மானங்களை எதிர்வு கூறுவதற்கும் மற்றும் பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பு என்பவற்றை ஏற்படுத்திக் கொள்வதற்கும் வாய்ப்பானதாக அமைகின்றது.

**2. ஓடும் பணவீக்கம்**

குறித்த ஒரு வருட காலத்தில் ஒரு நாட்டில் 10% - 50% வரையிலான பணவீக்கம் காணப்படும் எனின் அத்தகைய பணவீக்கமே ஓடும் பணவீக்கம் எனப்படுகின்றது. பொருளாதார சகடவோட்டத்தின் விளைவாக சில நாடுகள் இவ்வாறான பண வீக்கத்தினை அனபவிக்கின்றன.

**3. பாயும் பணவீக்கம் (Galloping Inflation)**

ஓரளவு வேகமாக அதிகரிக்கும் பணவீக்க நிலமை பாய்ச்சல் பணவீக்கமாகும். அதாவது பணவீக்க வீதம் மிகக் கூடுதலாக இருக்கும் போது அது பாயும் பணவீக்கம் என அழைக்கப்படுகின்றது. ஒரு வருடத்திற்கு 50%, 200% போன்ற இரு இலக்க அல்லது மூன்று இலக்க வீதமாக பொது விலை மட்டம் அதிகரிக்கும் நிலை இதுவாகும். பொருளாதார முரண்பாடுகள் தோன்றவும் பணத்திற்கான கேள்வி குறையவும்

ஏதுவாகின்றது. அத்துடன் மக்கள் பணத்தைப் பணமாக வைத்திருப்பதை விட பொருட்கள் சேவைகளையும் ஆதனங்களையும் கூடுதலாக வைத்திருக்க விரும்புவர்.

## 4. அதிவேக / அதி தீவிர பணவீக்கம் (Hypeninflation)

பொருளாதாரத்தில் 50% மும் அதற்கு கூடுதலான அளவிலும் அதிவேகமாகப் பொது விலைட்டம் அதிகரித்தல் அதிவேக பணவீக்கமாகும். இப்பண வீக்கம் பிரமிக்கத் தக்கதும் மிக ஆபத்தனாதுமாகும். 2ம் உலக யுத்த காலத்தில் ஜேர்மனி, இத்தாலி, சீனா போன்ற நாடுகள் இத்தகைய பணவீக்கத்தை அனுபவித்துள்ளன. 1950 / 95 காலப்பகுதியில் பிரேசில் 868% மும் ஆர்ஜன்டீனா 2311% மும், ஜேர்மனி 1923 இல் 2900% மும் அதியுயர் பணவீக்கத்தினை அனுபவித்தன. இதற்குக் காரணம் பணநிரம்பலின் விரைவான அதிகரிப்பேயாகும். இதனால் மக்கள் பணத்தின் மீதான நம்பிக்கைகளையும் இழக்க நேரிடுகின்றது.

## 5. சுழல் பணவீக்கம் (Spiral Inflation)

பொருளாதாரத்தில் பலம் வாய்ந்த தொழிற்சங்க ஊழியர்களால் உற்பத்தித் திறன் அதிகரிப்பிலும் பார்க்க கூலி உயர்த்தப்படும் சந்தர்ப்பங்களில் விலை உயர்வும், பின் விலை உயர்வைத் தொடர்ந்து தொழிற் சங்கங்களின் கோரிக்கையால் மீண்டும் கூலி உயர்வும் என கூலி - விலை சுழல் தன்மை அடிப்படையில் மாறி மாறி வரும் ஒரு நிலை சுழல் பணவீக்கம் எனப்படும்.

## 6. அமுக்கப்பட்ட பணவீக்கம் (Suppressed Inflation)

நிரம்பலை விடக் கேள்வி கூடுதலாகவுள்ள பற்றாக்குறை நிலையில் விலைக் கட்டுப்பாடு மற்றும் பங்கீடு மூலம் விலையிலான அதிகரிப்பு கட்டுப்படுத்தப்பட்டிருக்கும் நிலை அமுக்கப்பட்ட பணவீக்கமாகும். அதாவது விலை அதிகரிப்பதற்கான முனைப்பு உள்ள நிலையில் அது அமுக்கப்பட்டிருக்கும் ஒரு நிலையாகும். இத்தகைய நிலைமையில் பொருட் தட்டுப்பாடு, கியூவரிசை, கறுப்புச் சந்தை (Black Market) போன்றன ஏற்படக் கூடியதாகக் காணப்படும். 2ம் உலக யுத்தத்தின் போதும் கொரிய யுத்தத்தின் போதும் பல நாடுகளில் பணவீக்கமானது இவ்வாறு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. முன்னைய சோசலிஷ நாடுகளில் தீவிரமான அரச சட்டங்கள் மூலம் பணவீக்கம் அமுக்கப்பட்டிருந்தது.

## பணவீக்கத்திற்கான காரணங்களின் அடிப்படையில் பணவீக்க வகை

நாடுகளிலே பணவீக்கச் செயன்முறையினை விளக்குவதற்கான கோட்பாடுகள் விலை அதிகரிப்பின் இரண்டு வகையான காரண காரிய தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு விளக்கப்படுகின்றது. பொருட்களின் நிரம்பலிலும் பார்க்க மித மிஞ்சிய கேள்வி நிலவுவது இதிலொன்றாகும். இதன்படி மித மிஞ்சிய கூட்டுக் கேள்வி பொருட்கள் சேவைகள்

என்பவற்றின் விலைகளை உயர்த்துகின்றன. இந்நிலை கேள்விப் பணவீக்கம் எனப்படுகின்றது. அதே போன்று மறுபுறத்தில் சந்தைச் சக்தி கொண்ட பொருளாதாரக் குழுக்கள் உற்பத்திக் காரணிகள் மீதான விலைகளை உயர்த்துவதன் மூலம் விலை மட்டங்களை உயர்த்துகின்றன. இது நிரம்பல் பணவீக்கமாகும்.


இது தவிர பொருளாதாரத் துறைகளில் ஏற்படும் குறைபாடுகள் மற்றும் நெகிழ்வற்ற தன்மைகளினாலும் உள்நாட்டில் விலை மட்டங்கள் உயர்வடைகின்றன. இது அமைப்பு ரீதியாக ஏற்படும் ஒரு பணவீக்க நிலைமையாகும்.

இவற்றினடிப்படையில் பணவீக்கமானது பின்வரும் வகைகளின் ஊடாக அவதானிக்கப்படுகின்றது.

## 1. கேள்வித் தூண்டல் பணவீக்கம்

பொருளாதாரமொன்று தனது இயலளவுக்கு மேலாக செலவு செய்யும் போது அதனால் ஏற்படும் மிகைக் கேள்வியானது நிலையான மெய் வெளியீட்டின் விலை மட்டத்தினை உயர்த்தி பணவீக்கத்தினை உருவாக்குதல் கேள்வித் தூண்டல் பணவீக்கமாகும். அதாவது மொத்த நிரம்பலுடன் ஒப்பிடுமிடத்து மொத்தக் கேள்வி மிகையாக இருப்பதனால் பொதுவிலைட்டம் அதிகரிப்பது கேளவித்தூண்டல் பணவீக்கமாகும். வரையறுக்கப்பட்ட சில பொருட்களின் பின்னே துரத்தும் அதிகளவான பணத்தின் (too much of money chasing few goots) காரணமாக இப்பணவீக்கம் ஏற்படுகிறது.

இந்தப் பணவீக்கத்தினைப் பின்வருமாறு வரைபடதின் மூலம் காட்டலாம்.




இங்கு வரைபடத்தில் $AD_1$ மொத்தக் கேள்வி வளையியினையும் AS மொத்த

நிரம்பல் மட்டத்தினையும் காட்டுகின்றது. $Q_1$ அதற்கான உற்பத்தி மட்டத்தினையும் ஒரு எல்லைக்கு அப்பால் நிறை தொழில் மட்டத்திலான உற்பத்தி அளவினையும் எடுத்துக் காட்டுகின்றது. $Q_1$ என்பது அடையப்பட்ட நிலையில் மொத்தக் கேள்வியானது AD1, $AD_2$, $AD_3$ என அதிகரித்துச் செல்கின்றது. நிறை தொழில் மட்டம் காரணமாக நிரம்பலை அதிகரிக்க முடியாமையினால் பொது விலைமட்டமும் $P_1$, $P_2$, $P_3$ என அதிகரித்துச் செல்கின்றது. இவ்வாறு கேள்வி அதிகரிப்பினால் பொது விலை மட்டம் அதிகரித்துச் செல்வதனையே கேள்வித் தூண்டல் பணவீக்கம் எனலாம்.

பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வி அதிகரிப்பை ஏற்படுத்தும் காரணிகளே இப்பண வீக்கத்தைத் தோற்றுவிக்கின்றன. அத்தகைய காரணிகள் வருமாறு

1. பண நிரம்பல் அதிகரிப்பு (M)
2. நுகர்வுச் செலவு அதிகரிப்பு (C)
3. முதலீட்டுச் செலவு அதிகரிப்பு (I)
4. அரசாங்கச் செலவு அதிகரிப்பு (G)
5. அரசாங்க கடன் அதிகரிப்பு
6. நேர்வரியில் குறைப்பு


எனினும் இந்தப் பணவீக்கமனாது எப்போதும் பணநிரம்பல் அதிகரிப்பதனாலேயே ஏற்படுகின்றது என இர்விங் பிஷர் (Irving) fisher) என்பவர் தமது $MV = PT$ எனும் பணக்கணிய பரிமாற்றச் சமன்பாட்டின் மூலம் நேர்கணியத் தொடர்பை எடுத்துக் காட்டுவதன் மூலம் விளக்குகின்றார். இதன்படி V,T நிலையாக உள்ள போது M,P ஆகியவற்றிக்கிடையிலான தொடர்பு நேர்கணியமானதும் பணநிரம்பல் அதிகரிக்கும் போது பொது விலை மட்டம் அதிகரிப்பதாகவும் பண நிரம்பல் குறைவடைகின்ற போது குறைவடைவதாகவும் காணப்படும்.

## 2. செலவுத் தூண்டல் பணவீக்கம்
## (Cost - Push OR Supply side Inflation)

மொத்தத் தேசிய உற்பத்தி அதனது நிறை தொழில் மட்ட நிலைக்குக் கீழ் இருக்கும் போது நிறுவனங்கள், கூலி, சம்பளங்களை உயர்த்துவதனாலும் இறக்குமதிகளின் விலை அதிகரிப்புக்கள் மற்றும் நிறுவனங்கள் இலாப எல்லையை உயர்வாக வைத்திருப்பதற்காக பொருட்களின் விலைகளை உயர்த்துவதனாலும் ஏற்படுகின்ற பணவீக்கமே செலவுத் தூண்டல் பணவீக்கம் அல்லது கூலித் தூண்டல் பணவீக்கம் எனப்படுகின்றது.

வேறு வகையில் குறிப்பிடுவதாயின் உள்ளீடுகளான உற்பத்திக் காரணிகளின் விலை உயர்வதன் காரணமாக உற்பத்திச் செலவு அதிகரித்து நிரம்பல் குறைந்து

பொருட்கள் சேவைகளின் விலை உயர்வதானது செலவு தள்ளும் பணவீக்கமேயாகும். இதனைப் பின்வரும் வரைபடத்தின் மூலமும் விளங்கிக் கொள்ளலாம்.




இங்கு AD என்பது பொருளாதாரத்தின் மொத்தக் கேள்வியினையும் AS என்பது பொருளாதாரத்தின் மொத்த நிரம்பலினையும் குறிக்கின்றது. உற்பத்திக் காரணிகளின் விலை அதிகரிப்பு, மற்றும் கூலி / சம்பளம் என்பவற்றின் அதிகரிப்பினால் உற்பத்திச் செலவானது அதிகரிக்க உற்பத்தி மட்டம் குறைவடைய மொத்த நிரம்பல் கோடு இடது புறம் நகர்வடைவதனை வரைபடம் காட்டுகின்றது. மொத்தக் கேள்வி (AD) மாறாதிருக்கும் போது மொத்த நிரம்பல் கோடு (AS) இடப்புறம் நகருவதன் காரணமாக மொத்த நிரம்பலானது $AS_1$, $AS_2$, $AS_3$ எனக் குறைவடைந்து செல்வதனால் பொது விலை மட்டமும் $P_1$, $P_2$, $P_3$ என உயர்வடைந்து செல்வதனைக் காணலாம். இவ்வாறு உயர்வடைந்து செல்வதே செலவுத் தூண்டல் பணவீக்கமாகும். எனினும் இப்பணவிக்கத்தின் கேள்வி, நிரம்பல் காரணிகளுக்கிடையில் நெருங்கிய இடைத் தொடர்புகளும் காணப்படுகின்றன.

இத்தகைய செலவுத் தூண்டல் பணவீக்கமானது பின்வரும் நிரம்பல் பக்க காரணிகளினால் ஏற்படுகின்றது.

1. உற்பத்தித் திறன் அதிகரிக்காத நிலையில் காரணி விலைகள் அதிகரித்தல்

   உ-ம் : தொழிற் சங்க நடவடிக்கையால் உயர்த்தப்படல்

2. மூலப் பொருட்களின் விலைகள் அதிகரித்தல்

   உ- ம் : எரிபொருள்

3. இறக்குமதிப் பொருள் விலைகள் அதிகரித்தல்
4. நாணய மாற்று வீதம் வீழ்ச்சியடைதல்
5. மறைமுக வரிகள் அதிகரித்தல்
6. உற்பத்திக்கான மானியங்கள் குறைக்கப்படல்

7. வட்டிவீதங்கள் உயர்வடைதல்
8. சிலருரிமை நிறுவனங்கள் இலாபத்தை அதிகரிக்க விலையை அதிகரித்தல். இது இலாபத்தால் தள்ளப்படும் பணவீக்கமாகும்.
9. காலநிலைப் பாதிப்புக்களால் உற்பத்தி குறைதல்.

போன்ற பல்வேறுபட்ட காரணிகளினால் செலவுத் தூண்டல் பணவீக்கமானது ஏற்படுவது தவிர்க்க முடியாததாகின்றது.

### 3. அமைப்பு ரீதியான பண வீக்கம்

பொருளாதார அமைப்பிலுள்ள குறைபாடுகள், வரையறைகள், நெகிழ்ச்சியற்ற தன்மைகள் என்பவற்றால் தோன்றும் விலை மட்ட அதிகரிப்புக்கள் அமைப்பு ரீதியான பணவீக்கம் எனப்படும். அதாவது உள்நாட்டில் யாதாயினும் ஒரு துறையில் ஏற்படும் பணவீக்கமான விலை அதிகரிப்புக்களினூடாக ஏனைய துறைகளில் விலை மட்ட அதிகரிப்புக்கு காரணமாக அமையும் எனின் அதனூடாக ஏற்படுகின்ற பணவீக்கமே அமைப்பு ரீதியான பணவீக்கம் எனப்படுகின்றது.

உதாரணமாக பொருளாதார அமைப்பிலுள்ள குறைபாடான உள்ளீட்டுச் செலவின அதிகரிப்பு அல்லது மானியங்கள் நீக்கப்படல் போன்ற யாதாயினும் காரணங்களினால் விவசாயப் பொருட்களினது விலைகள் அதிகரிக்கும் எனின் அதன் காரணமாகக் கைத்தொழில் துறைகளிலும் விலைகள் அதிகரிக்கின்றன. இவ்விரு துறைகளிலும் ஏற்படும் விலை அதிகரிப்பு சேவைகளுக்கான கட்டணங்களை உயர்வடையச் செய்து முழுப் பொருளாதாரத்திலும் விலை மட்டம் அதிகதிப்பதற்குக் காரணமாய் அமைகின்றது. இத்தகைய விலை அதிகரிப்பினூடான பணவீக்கமே இத்தகைய துறைத் தூண்டல் பணவீக்கமாகும்.

## பணவீக்கத்தின் விளைவுகள் (Effects on Inflation)

நாடுகளில் ஏற்படுகின்ற தொடர்ச்சியான பணவீக்கமானது பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள் மீதும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன. இப்பாதிப்புக்கள் சில சாதகமானதாக அமைந்த போதிலும் பெரும்பாலும் வளர்முக நாடுகள் மீது தொடர் பணவீக்கம் பல்வேறு எதிர்விளைவுகளினையே தோற்றுவிக்கின்றது. பணத்தின் மெய்ப் பெறுமதி குறைவடைவதனால் நிலையான வருமானம் பெறுவோர், சேமிப்பாளர், கடன் கொடுநர் ஆகியோர் மீது பணவீக்கமானது தீய விளைவுகளினையே ஏற்படுத்துகின்றது. ஆனால் மாறும் வருமானம் பெறுவோர், கடன்பட்டோர் போன்றோர் பணவீக்கத்தினால் நன்மை அடைகின்றனர். இத்தகைய விளைவுகளினைப் பின்வருமாறு ஒவ்வொன்றாக அவதானிக்கலாம்.

## 1. மாறும் வருமானம் (நிலையற்ற வருமானம்) பெறுவோர் மீதான தாக்கம்

மாறும் வருமானம் பெறுவோர் மீது பணவீக்கமானது சாதகமான விளைவினையே ஏற்படுத்துகின்றது. மாறும் வருமானம் உழைப்போர் என்னும் போது வர்த்தகர்கள் மற்றும் தொழிற்பிரிவினர்களான முதலீட்டாளர்கள், விவசாயிகள் போன்றோர்களாவர்.

வர்த்தக சமூகத்தினர்களைப் பொறுத்தவரையில் இவர்கள் நெகிழ்வுத் தன்மையுடைய வருமானம் உழைப்பவர்களாவர். பணவீக்க காலங்களிலே விலை மட்டங்கள் அதிகரிப்பதனால் வர்த்தகப் பிரிவினரது மொத்த வருமானங்கள், தேறிய வருமானங்கள் என்பனவும் அதிகரிக்கின்றன. இந்நிலையில் நாட்டின் விலைமட்டம் அல்லது வாழ்க்கைச் செலவு உயர்வதற்கேற்ப பணவருமானம் உயர்வடைவதனால் பணவீக்க விளைவுகள் இவர்களது மெய்வருமான மட்டத்திலும் ஒரு முனைப்பான அதிகரிப்பினை ஏற்படுத்துகின்றது.

தொழிற்துறையினர்களான முதலீட்டாளர்கள், விவசாயிகள் போன்றவர்களைப் பொறுத்தவரையில் பணவீக்க விளைவுகள் உள்ளீட்டு வெளியீட்டு விலை ஒப்பீட்டின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றன. அதாவது வளங்களினது உள்ளீடுகளின் விலை அதிகரிப்பினைவிட வெளியீடுகளின் விலை அதிகரிப்பு உயர்வாகக் காணப்பட்டால் இவர்கள் நன்மை அடைகின்றனர். மாறாகக் காணப்படுமாயின் அது அவர்களுக்குப் பாதகமானதாகவே அமைகின்றது. இந்த அடிப்படையில் அவதானிக்கும் போது பொதுவாக மாறும் வருமானம் உழைப்பவர்களின் மெய்வருமானங்கள் அதிகரிக்கக் கூடியதாக இருப்பதனால் அவர்களுக்கு நன்மை அளிப்பதாகவே உள்ளது.

## 2. கடன் பட்டோர் மீதான தாக்கம்

இந்தப் பிரிவினர் மீதான பணவீக்கத் தாக்கமானது மெய்வட்டி வீதத்தினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. மெய்வட்டி வீதம் எனப்படுவது பணவட்டி வீதத்தில் இருந்து பணவீக்க வீதத்தை நீக்கிப் பெறுவதாகும்.

மெய்வட்டி வீதம் = பணவட்டி வீதம் - பணவீக்க வீதம்

இந்நிலையில் பணவட்டி வீதத்தினைவிட பணவீக்க வீதம் உயர்வாகக் காணப்படும் நிலையில் மெய் வட்டி எதிர்கனியமாகக் காணப்படும் போது கடன்பட்டவர் அதனால் நன்மை அடைகின்றார். ஆனால் மெய்வட்டி வீதம் நேர்கனியமாகக் காணப்படுமாயின் அது அவர்களுக்குப் பாதகமாக அமையும்.

## 3. நிலையான வருமானம் பெறுவோர்

இந்த வருமானம் பெறும் வகுப்பினர்களாகக் குறிப்பிடப்படுவோர் ஒப்பந்த

அடிப்படையிலான வருமானம் உழைப்போராவர். பொதுத்துறை (அரச துறை) ஊழியர்கள், தனியார் துறையில் ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளோர், ஓய்வூதியம் பெறுவோர், வெள்ளை வேட்டித் தொழிலாளர்கள், சேம நலக் கொடுப்பனவுகளைப் பெறுவோர் ஆகியோர்களே நிலையான வருமானம் உழைப்பவர்களாவர். பணவீக்க காலங்களில் நாட்டின் விலைமட்டம் அதிகரிப்பினும் நிலையான வருமானம் பெறுபவர்களின் பெயரளவு வருமானம் அதிகரிப்பதில்லை. இதனால் இவர்களது மெய்வருமான மட்டம் படிப்படியாக வீழ்ச்சியடைகின்றது. இந்நிலையில் நிலையான வருமானம் பெறும் பிரிவினர் தமது வாழ்க்கைத்தரம் படிப்படியாகக் குறைவதை உணருவார்கள். இக்காலத்தில் நிலையான வருமானம் பெறுவோர்களிடமிருந்து ஏனையோருக்கு வருமானமும் மீள் பங்கீடு செய்யப்படுவதாக இருக்கும். இதனால் இவர்கள் பணவீக்கத்தினால் பாதிக்கப்படபவர்களாகக் காணப்படுவர்.

### 4. சேமிப்பாளர் மீதான தாக்கம்

பணவீக்கமானது சேமிப்பாளர்களையும் ஊக்கமிழக்கச் செய்கின்றது. ஏனெனில் விலைட்டம் அதிகரிக்கின்ற போது சேமிப்புக்களின் மெய்ப் பெறுமதி குறைவடைகின்றது. தமது வைப்புக்களின் மெய்ப் பெறுமதி குறைவடைகின்றது என்பதை வைப்பாளர்கள் உணரும் போது அவர்கள் சேமிக்க முன்வருவதில்லை. அத்தோடு பணவீக்க காலங்களில் சேமிப்புப் பத்திரங்கள், காப்புறுதி ஆவணங்கள், மற்றும் நிலையான பெறுமதியுடைய பத்திரங்களினதும் மெய்ப் பெறுமதி வீழ்ச்சியடைகின்றது. ஆனாலும் பணவீக்க வீதத்திலும் உயர்வாக பணவட்டி வீதத்தினைப் பேண முடியும் எனின் மெய்வட்டி நேர்கனியமானதாகும். மாறும் இவ்வாறான சந்தர்ப்பங்களில் சேமிப்புக்களினதும் மெய்ப் பெறுமதி உயர்வடைவதனால் மக்கள் சேமிக்க முன்வருகின்றனர்.

### 5. கடன்கொடுனர் மீதான தாக்கம்

மெய்வட்டி வீதத்தினால் தீர்மானிக்கப்படும் இவர்கள் மீதான தாக்கமானது பணவட்டி வீதத்தினைவிட பணவீக்க வீதம் உயர்வாகக் காணப்படும் நிலையில் மெய்வட்டி எதிர்கணியமாகக் காணப்படும் போது கடன் கொடுனர் பாதிக்கப்படுகின்றனர். ஆனால் மெய்வட்டி வீதம் நேர்கணியமாகக் காணப்படுமாயின் கடன்கொடுனர் நன்மையடைவார்.

### 6. முதலீடுகள் மீதான தாக்கம்

பணவீக்கம் காரணமாக நிலவும் நிச்சயமற்ற தன்மை காரணமாகவும் எதிர்கால வட்டி வீதம் பற்றி எதிர்வு கூறல்களைச் செய்ய முடியாது என்பதனாலும் முதலீட்டாளர்கள் நீண்டகால முதலீடுகள் மீது நம்பிக்கை இழக்கின்றனர். இதனால் பணவீக்கமானது நாட்டினுடைய நீண்டகால முதலீடுகளைப் பாதிப்பதாக அமைகின்றது.

### 7. சர்வதேச வர்த்தகம் மற்றும் நாணய மாற்று விகிதம் என்பனவற்றின் மீதான தாக்கம்

பணவீக்க காலங்களில் ஏற்றுமதிகளினது உலக விலைகள் அதிகரிப்பதனால் ஏற்றுமதிகளுக்கான கேள்வி குறைந்து அந்நியச் செலாவணி உழைப்பு குறைவடைகின்றது. மறுபுறத்தில் பணவீக்க காலங்களில் இறக்குமதி விலைகள் ஒப்பீட்டடிப்படையில் மலிவானதாகக் காணப்படுவதனால் இறக்குமதிகளுக்கான கேள்வி கூடி அந்நியச் செலாவணிக்கு கேள்வி அதிகரிக்கின்றது. இவ்வாறு பணவீக்கம் அந்நியச் செலாவனிக்கான நிரம்பலைக் குறைத்து கேள்வியினை அதிகரிக்கச் செய்வதால் உள்நாட்டு நாணயத்தின் வெளிநாட்டுப் பெறுமதி வீழ்ச்சியடைந்து நாணய மாற்றுச் சமநிலை சீர்குலைகின்றது.

## பணவீக்கத்தின் பொருளியற் செலவு
## Ecomomic Cost of Inflation

பணவீக்கம் காரணமாக பொருளாதாரநடவடிக்கைகளின் வினைத்திறன் குறைவடைவது பணவீக்கத்தின் பொருளியற் செலவு எனப்படும். பணவீக்கமானது வருமானப் பங்கீடு, உற்பத்தி, பொருளாதாரச் செற்றிறன், பட்டியற் செலவுகள், சென்மதி நிலுவை போன்றவற்றின் மீது பல்வேறுபட்ட பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்ற போது பொருளாதார வினைத்திறன் குறைவடைகின்றது. இவ்வாறு பணவீக்கத்தினால் பொரளாதார வினைத்திறன் குறைவடைவது பணவீக்கத்தின் பொருளியல் செலவுகளாகக் கொள்ளப்படுகின்றது.

### பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தும் கொள்கைகள்

பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்காக பணக் கொள்கை மற்றும் இறைக் கொள்கை முகாமைத்துவ நடவடிக்கைகளைப் பயன்படுத்த முடியும். இத்தகைய நடவடிக்கைகள் மூலம் பின்வரும் செயற்பாடுகள் மீது கூடுதல் கவனம் செலுத்துதல் வேண்டும்.

1. மொத்தக் கேள்வி அதிகரிப்பைக் கட்டுப்படுத்துதல்
2. மொத்த நிரம்பல் அதிகரிப்பு வேகத்தைக் கூட்டுதல்
3. அரசாங்க நேரடித் தலையீடுகள்
4. செயற்றிறனாக வளம் பகிருவதில் உள்ள தடைகளை நீக்குதல்.

இவ்வாறான நிலைமைகளினூடாக பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என்பது திண்ணம்.

### முடிவுரை

நாடுகள் எதிர்நோக்குகின்ற முக்கிய சவாலாக பணவீக்கம் காணப்படுகின்றது. நாடுகளின் அரசியல், சமூக, பொருளாதார சூழ்நிலைகளுக்கேற்ப பணவீக்கத்தின் போக்கும் காணப்படுகின்றது. சர்வதேச சந்தைகள், போட்டிகள், நிதி நிலைமைகள் என்பவற்றிற்கேற்பவும் பணவீக்கத் தன்மை எதிர்கொள்ளப்படுகின்றது. இலங்கை போன்ற

வளர்முக நாடுகளுக்கு பொது விலை மட்டத்தின் அதிகரிப்பானது அதிகளவிலான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இதனால் இந்நாடுகளினால் பணவீக்கத்தை எதிர்கொள்ள முடியாதவகையில் அபிவிருத்தி செயற்பாடுகளும் பாதிக்கப்படுகின்றது. ஏற்றத்தாழ்வான வருமானம் பெறும் மக்களைக் கொண்ட எமது நாட்டில் வறியவர்களின் நிலையினையும் கூடுதல் கவனத்திற் கொண்டு செயற்பட வேண்டியுள்ளது. ஏனெனில் அவர்கள் அதிகளவில் பாதிக்கப்படுபவர்களாக உள்ளனர். இவ்வாறு பணத்தின் மெய்ப் பெறுமதியானது குறைவடைந்து செல்வது நாட்டின் பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி, பேண்தகு அபிவிருத்தி என்பவற்றில் தாக்கத்தை உண்டுபண்ணுவதனால் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவையும் கடப்பாடும் அந்நாடுகளுக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகும்.

## உசாத்துணை நூல்கள்


1. கலாநிதி சந்திரசேகரம்.செ (2003) பொருளியல் - 2, வெளியீடு உயர்கல்விச்சேவை நிலையம், யாழ்ப்பாணம், பக்.52, 54

2. வேலாயுதம்.சி (1975) "பணவியலும் பாங்கியலும்" (இரண்டாம் பாகம்) தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் மீள் பதிப்பு.

3. நவ்பல்.S.H.M (2000) பணம், வங்கி, விலைட்டம், Lanka Book Center, பக்.118, 119.

4. கருணாகரன்.வே (2011) பொதுவிலை மட்டம், விலைச் சுட்டெண், பணவீக்கம், வெளியீடு கங்கை பிறின்டேர்ஸ் பக். 40, 41.

5. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி, (2010) வெளியீடு தேசிய கல்வி நிறுவகம்.

6. சிவஞானம்.கோ (1973) பணவியல் (Currency) வெளியீடு தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம்.

7. Suraja.B Gupta (1988) Monetany Economics (Institution, Theory and Policy S.Chant and company (Pvt) Ltd, New Delhi Second Edition)

8. Thirlwall.A.P (1974) Inflation, Saving and Growth In Developing Ecomomics (First Published by the macmillam press Ltd)

# உலக வங்கி (world Bank)

1944 இல் (USANEW HOMPSHNE BreattonWOODS) என்ற இடத்தில் நடந்த மாநாட்டில் உருவாக்கப் பட்ட இரு நிறுவனங்களில் உலக வங்கி முதன்மை பெறுகின்றது. இரு பிரதான அமைப்புக்கான திட்டம் தயாரிக்கப்பட்டு 28 நாடுகளால் கைச்சாத்திடப்பட்டதை தொடர்ந்து 1945 டிசம்பரில் அபிவிருத்திக்கும் புனர்நிர்மானத்திற்கும் என 185 அங்கத்துவ நாடுகளை கொண்ட இவ்வுலக வங்கி

1) சர்வதேச புணர்நிர்மான அபிவிருத்தி வங்கி
2) சர்வதேச அபிவிருத்தி வங்கி
3) சர்வதேச நிதிக் கூட்டுத் தாபனம்
4) பல்தரப்பு முதலீட்டு உத்தரவாத நிறுவனம்
5) முதலீட்டு பிணக்குகளை தீர்ப்பதற்கான சர்வதேச நிலையம்

எனும் 05 ஸ்தாபனத்தை தன்னகத்தே கொண்டு இவ் உலக வங்கி தனது நிர்வாக கட்டமைப்பை ஒழுங்கமைத்துள்ளது.

சர்வதேச புணர்நிர்மான அபிவிருத்தி வங்கியானது 1944 இல் உருவாகி 184 அங்கத்துவ நாடுகளை கொண்டுள்ளது. இதன் முக்கிய பணியாக ஏழை, வளர்முக நாடுகளுக்கு என 383 மில்லியன் அமெரிக்க டொலரை கடனாக வழங்குகின்றது. மேலும் கடன் வழங்கும் நாடுகள் மட்டுமே வாக்களிக்கும் உரிமையை கொண்டு விளங்ககின்றது.

சர்வதேச அபிவிருத்தி சங்கம்



(IDA) ஆனது 1960 இல் ஆரம்பிக்கப்பட்டது. 165 அங்கத்துவ நாடுகளையும் 142 மில்லியன் அமெரிக்க டொலரை கல்வி, சுகாதாரம், குடிநீர், ஆரோக்கிய வாழ்வு போன்றவற்றிக்கு கடனாக வழங்குகின்றது.

சர்வதேச நிதிக்கூட்டுத்தாபன (IFC) ஆனது 1956 இல் உருவாக்கப்பட்டு 176 அங்கத்துவ நாடுகளைக் கொண்டு தனியார் துறைகளை ஊக்குவித்தல், வளர்முக நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தல் என்பவற்றுக்காக 23.6 மில்லியன் அமெரிக்க டொலரை கடனாக வழங்குகின்றது.

பல்தரப்பு முதலீட்டு உத்தரவாத நிறுவனம் (MIGA) 1988 இல் ஆரம்பிக்கப்பட்டு 164 அங்கத்துவ நாடுகளை கொண்டுள்ளது. வளர்முக நாடுகளின் பணச்சிக்கல், யுத்தம், உள்ளூர் குழப்பத்தில் நட்டம் ஏற்படாது முதலீடு செய்தல் என்பற்றிற்காக 12.4 மில்லியன் அமெரிக்க டொலரை கடனாக வழங்ககின்றது.

முதலீட்டு பிணக்குகளை தீர்ப்பதற்கான சர்வதேச நிலையம் ஆனது (ICSID) 1996 இல் பிறந்தது. 140

அங்கத்துவ நாடுகளை கொண்டுள்ளது. வெளிநாட்டு முதலீட்டில் ஏற்படும் பிணக்குகளை தீர்த்தல் இதன் முக்கிய பணி ஆகும்.

**உலக வங்கி நீண்டகாலத்தில் அடைய எதிர்பார்ப்பது VISSION**

முதலீடு மூலமாகவும் ஆற்றல் மூலமாகவும் வறிய மக்களின் அபிவிருத்தி கருமங்களில் பங்கு கொள்ளல், பொருளாதார அபிவிருத்தி பொருளாதார உறுதி, வேலை வாய்ப்பு, முதலீட்டுக்கான சூழல் என்பவற்றின் மூலமாக மிலேனிய அபிவிருத்தி இலக்கை அடைவதற்கும் அபிவிருத்தி அடைந்த நாடுகளுக்கும் அதன் மக்களுக்கும் உதவுதல் என்பதாகும்.

-தனது அங்கத்துவ நாடுகளின் புணர்நிர்மான அபிவிருத்தி பணிகளுக்கு மூலதன வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல்

-3ம் உலக நாடுகளுக்கான விசேடமான நிதித்தேவையை பூர்த்தி செய்தல்

-உத்தவாதங்களை வழங்குவதன் ஊடாக தனியார் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல்

-சர்வதேச வர்த்தகத்தின் சமனிலையான நீண்டகால வளர்ச்சியினை முதலீடுகளை அதிகரிப்பதன் ஊடாக ஊக்கப்படுத்தல்

-சர்வதேச ரீதியாக பொருளாதாரங் களுக்கிடையே நாணய ஒத்துழைப்பை ஏற்படுத்தல்.

-சர்வதேச ரீதியில் நாடுகளிற்கிடையேயான சர்வதேச வர்த்தகத்தினை விஸ்தரித்தல், அன்னிய செலாவனி உறுதிப்பாட்டை ஊக்குவித்தல்

-அங்கத்துவ நாடுகளிற்கிடையே ஏற்படுகின்ற நாணய கொடுப்பனவு விடயங் களுக்கு உதவி புரிதல்

-நடுத்தர நீண்டகால செயற்திட்டங்களுக்கு கடன் வசதிகளையும் உத்தரவாதங் களையும் ஒழுங்கமைத்துக் கொடுத்தல்.

-உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதன் ஊடாக அபிவிருத்தியை உயர்த்துதல்.

போன்ற தொழிற்பாடுகளை இவ் உலகவங்கியானது தனது அங்கத்துவ நாடுகளுக்கு அல்லது உறுப்புரிமை நாடுகளுக்கும் வழங்கி வருகின்றது.

அதுமட்டுமன்றி இவ் உலக வங்கியின் நிதி சம்பந்தமான நடவடிக் கைகளை எடுத்து நோக்கின்.......

-உலக வங்கி, சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம் சர்வதேச அபிவிருத்திச் சங்கம் போன்ற சர்வதேச முகவர் மூலமும் பல்பக்க கடன்கள் மூலமும் நிதி வழங்குதல்

-LDC நாடுகளுக்கு நிதி தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல்

-வறிய செல்வந்த நாடுகளுக்கு இடையில் உள்ள பொருளாதார இடைவெளியை குறைக்கும் வகையில் செயற்படுத்தல்.

போன்ற நிதி நடவடிக்கைகளை தாராண்மை வாத பொருளாதார நிகழ்ச்சித்திட்டதிற்கு அமைய மேற்கொள்கின்றது.

உலக வங்கி நிதி நடவடிக்கையுடன் மட்டும் நின்றுவிடாது பல கடன் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. அவையாவன:

-உட்கட்டமைப்பு விருத்தி

-தனியாள் துறையின் அபிவிருத்தி

-கல்வியூட்டல்

-அரச துறைமுகாமை

-வேளாண்மை

-போக்குவரத்து

-தொலைத்தொடர்பாடல்

-குடித்தொகை, சுகாதாரமும் சத்துணவும்

-கைத்தொழில்

-பல்பக்க நிதி உதவிகள் வழங்கப்படுகின்றமை

-நீர் வழங்கலும் சுகாதாரப் பணிகளும்

-அரச தயாரிப்பு தொழில்முயற்சியின் சீர்த்திருத்தம்

-நிதியியல்துறை சீர்த்திருத்தங்கள்

இலங்கைக்கு அபிவிருத்தி ஏற்படுத்துதல் தொடர்பான நடவடிக்கையில் உலக வங்கி பல்வேறுபட்ட சவால்களுக்கு முகம் கொடுத்தது அவையாவன:

- சனத்தொகையில் 1/4 பங்கினர் வறுமைக்குட்பட்டோர்

- உள்நாட்டு யுத்தம் வடக்கு கிழக்கு பிராந்தியத்தை பாதித்தமையால் மக்களிடையே பிரதேச ரீதியான ஏற்றத்தாழ்வு காணப்பட்டமை

- 80% மான மக்கள் கிராம பகுதியில் பொதுசுகாதாரம், கல்வி, குடிநீர் கழிவு அகற்றல் கழிப்பிட வசதிகள் கூட அற்று வாழ்கின்றமை

- நகர்ப்புறங்களில் கூட நிலப் பாவனை உரிய முறையில் பேணப்படாமையாலும் போதிய திட்டமிடல் இல்லாமையாலும் பல இடங்கள் சேரிப்புறமாக காணப்படுகின்றமை.

- வேலையின்மை, உயர்கல்வி மற்றும் தொழிற் பயிற்சிகளில் குறைபாடுகள் காணப்பட்டமை

- சீரற்ற பாதைகள், மின்சாரம் கிடைக்காமை போன்றவற்றினால் பொருளாதார வளர்ச்சி கிடைக்காமை

போன்ற இன்னோரன்ன காரணிகள் உலக வங்கியின் இலங்கை மீதான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு குந்தகமாக அமைந்தது.

"காய்க்கின்ற மரத்திற்குத்தான் கல்லடி..." எனும் கூற்றுக்கிணங்க உலக வங்கி மீது பல்வேறுபட்ட குற்றச்சாட்டுக்களும் எழத்தவறவில்லை. அந்த வகையில் உலக வங்கி மீது எழுந்த குற்றச்சாட்டுகளாக...

- குறிப்பிட்ட துறைகளுக்கு மட்டும் தொடர்ச்சியாக கடன் வழங்கல்

- கடன் வழங்கும் போது விதிக்கப்படுகின்ற நிபந்தனைகள் குறைவிருத்தி நாடுகளை
பாதித்துள்ளது

- உலக வங்கியானது தனியார் முதலீட்டை ஊக்குவிப்பதால் முதலாளித்துவம் சார்ந்துள்ளது.

- புனரமைப்புக்கான கடன்களினால் கிடைக்கின்ற நேர்கணிய வெளிவாரி விளைவுகள்
குறைவு

- உயர்வான வட்டி வீதம் விதிக்கின்றமை.

போன்ற குற்றச்சாட்டுக்களே அவையாகும்.

1ம், 2ம் உலக மகாயுத்தத்தின் பின்னர் உலக நாடுகளின் பொருளாதார சீரழிவால் ஏற்பட்ட வீழ்ச்சிப்போக்கை நீக்கிய இவ் உலக வங்கியானது சுமார் 57 வருடங்களாக இலங்கை, இந்தியா, மாலைதீவு, சூடான் போன்ற அபிவிருத்தி

அடைந்துவரும் நாடுகளிற்கு பல்வேறு வகையிலும் பல்வேறு துறையிலும் உதவி வழங்கியதானது, காலத்தை வென்று தன் பணியை வாரி வழங்கிய வண்ணமே உள்ளது. இன, மத, மொழி வேறுபாடின்றி அனைத்து மக்கள் மத்தியிலும் உயிர்த்த வண்ணம் உள்ளது என்றால் அது மிகையாகாது.



செ.வினுதனன்
தரம் :13C

---

## உலகமயமாக்கல்



நாம் தற்பொழுது 20ம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். தற்பொழுது உலகம் ஒரு கிராமம் என்ற நிலை உருவாகியுள்ளது. இக்கருத்தில் உலகமயமாக்கல் பெரும்பங்கை வகிக்கின்றது என்பது புலப்படுகின்றது. தற்பொழுது வணிகத்தில் உலகமயமாக்கலானது பரந்து விரிந்த அளவில் தனது செல்வாக்கை நிலைநிறுத்தியுள்ளது. தற்கால வணிகத்தின் நவீன போக்குகளில் ஒன்றாக இவ் உலகமயமாக்கல் காணப்படுகின்றது. அத்துடன் தற்கால வணிகதின் வளர்ச்சிக்கும் இது பங்காற்றி வருகின்றது.

உலகமயமாக்கல் என்பது உலகமே ஒரு சந்தை என்ற அடிப்படையில் வணிகத் தடைகள் நீக்கப்பட்டு தொழிற்படும் அமைப்பு உலகமயமாக்கல் எனப்படும் உலகமயமாக்கல் ஏற்படுவதற்கு பல்வேறு காரணிகள் செல்வாக்குச் செலுத்தியுள்ளன. அதாவது தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட விரைவான வளர்ச்சி, தொடர்பாடல் துறையில் ஏற்பட்ட அதிகரித்த வளர்ச்சி, சர்வதேச வியாபாரத்தில் காணப்படும் அதிகரித்த போட்டி, குறைந்த போக்குவரத்துச் செலவு, தாராளவர்த்தகக் கொள்கை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இவ் உலகமயமாக்கலினால் இலங்கைக்கு பல அனுகூலங்களாக பின் வருவனவற்றைக் குறிப்பிட முடியும். அதாவது வெளிநாட்டு முதலீடுகளை வரவழைக்க முடியும். உயர் நவீன தொழில்நுட்பத்தை வரவழைக்கலாம், உற்பத்தி செலவுகள் குறையும் தொழில் வாய்ப்பு அதிகரிக்கும். மக்களின் வருமானம் அதிகரிக்கும், மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பிரதி கூலங்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். அதாவது இலங்கை வளர்ந்த நாடுகளில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்படும். பல்தேசியக் கம்பனிகளின்

ஆதிக்கம் அதிகரிக்கும். உள்ளூர் கைத் தொழில்கள் பாதிப்படையலாம். சென்மதி நிலுவைப் பிரச்சினைக்கு வழவகுக்கும் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

உலகமயமாக்கலின் செல்வாக்கு வளர்ச்சியடைந்த நாடுகளில் மட்டுமல்லாது வளர்முக நாடுகளிலும் தனது பரந்த செல்வாக்கினை செலுத்தியுள்ளது. ஒரு நாடு உலகமயமாக்கல் கொள்கையை பின்பற்றுவதற்கு பின்வருவனவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். அதாவது திறந்த வர்த்தக கொள்கையைப் பின்பற்றுதல் நாணயமாற்று தொடர்பான கட்டுப் பாடுகளை நீக்குதல், வர்த்தகம் தொடர்பான கட்டுப்பாடுகளை நீக்குதல் அரசு ஆலோ சணை அளித்தலும் பல்வேறு வசதிகளைச் செய்து கொடுத்தலும் போன்ற வசதிகளை அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

இலங்கை எதிர்நோக்கும் பிரதான சவாலாக வெளிநாடுகளின் போட்டியைக் குறிப்பிடலாம். இப்போட்டியை எதிர் கொள்வதனால் உலகம் முழுவதும் பரந்து காணப்படும். விநியோகமுறை, கொடுக்கல் வாங்கல் முறை போன்றவற்றைப் பயன்படுத்துவதில் அதிக அக்கறை கொள்ள வேண்டும். மற்றும் இராஜதந்திர ரீதியாக பூகோளத்தடைகளைத் தாண்டி தீர்மானம் எடுப்பதற்கு பூகோளச் சிந்தனை அவசியமாகும்.

ஏராளமான மாணவர்கள் தமது சொந்த நாட்டினை விட்டு வேறு நாடுகளுக்கு சென்று கல்வி பகிர்கின்றனர். மற்றும் பல மாணவர்கள் தமது சொந்த நாடுகளிலேயே காணப்படும் வெளிநாட்டு கல்வி நிறுவனங்களிலும் வெளிநாட்டு கல்வி நிகழ்ச்சித்திட்டங்களில் சேர்ந்து படித்து வருகின்றனர். இத்துடன் பல மாணவர்கள் இணையத்தின் ஊடாகவும் தமது கல்வியைத் தொடர்ந்து கற்று வருகின்றனர்.

தற்கால வணிகர்கள் உள்நாட்டுச் சந்தையில் மட்டும் இலக்காகக் கொள் ளாமல் உலக சந்தையிலும் தமது கவனத் தைச் செலுத்த வேண்டும். ஒரு வணிகர் தனது செயற்பாட்டில் வெற்றி பெற உலகச் சந்தையில் ஈடுபடுவதற்கான சிறந்த ஊக்கத்தையும் ஆற்றலையும் கொண்டி ருக்க வேண்டும். உண்மையில் வணிகர் களின் தூர நோக்கு உலகளாவும் தூர நோக்காக இருத்தல் வேண்டும். இவ்வாறு தூர நோக்கு இல்லாத வணிகர்களிற்கு வேறு மாற்றுவழிகள் எதுவும் இல்லை என்றே கூற முடியும்.

தற்போது உலகம் ஒரு பூகோளப் புரட்சிக்கு உட்பட்டுள்ளது. எனவே அவ் வாறான பூகோளப் புரட்சிக்கும் மத்தியில் நாம் எல்லோரும் அத்தகைய எல்லா மாற்றங்களையும் முகங்கொடுத்து வாழ் வதற்கு எமது அறிவை நாமே வளர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு அந்த அறிவை வளர்க்காவிடின் நாம் அத்தகைய பூகோள சூழலில் வாழ முடியாத நிலை ஏற்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

**ப. சங்கீர்த்தனா**
**தரம் : 13C**

# இலங்கை மத்திய வங்கி



ஒரு நாட்டின் பணம், வங்கி முறைமை என்பவற்றை நெறிப்படுத்திச் செல்லும் கேந்திர நிறுவனம் மத்திய வங்கி ஆகும். மத்திய வங்கி தொடர்பாகப் பல்வேறு அறிஞர்கள் கருத்து வெளியிட்டு உள்ளனர். இவ்வகையில் Veera smith என்பவர் வங்கி முறையில் ஒரு தனிவங்கி முழுமையாக அல்லது நிறையப் பணம் வெளியிடுகின்ற உரிமையை பெற்றிருப்பது தான் மத்திய வங்கிக்கான அடிப்படை எனக் கூறுகின்றார்.

ஒரு நாட்டிலே ஒரு மத்திய வங்கி மட்டுமே காணப்படும். அவ்வகையில் இலங்கையில் 1949 ஆம் ஆண்டின் 58 வது சட்டமாகிய நாணயச் சட்டத்தின் பிரகாரம் இலங்கை மத்திய வங்கி நிறுவப்பட்டது. ஆனால் 1950 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 28 ஆம் திகதி முதல் செயற்பட ஆரம்பித்தது. இலங்கையில் மத்திய வங்கியொன்றை நிறுவுவதற்கான ஆலோசனை ஐக்கிய அமெரிக்காவின் சமஷ்டி ஒதுக்கு வங்கியின் ஆளுநர் சபையின் ஜோன் எக்ஸ்ரர் என்பரிடமிருந்தே பெறப்பட்டது.

இலங்கையின் நாணய முறைக்குப் பொறுப்பாக இருந்த நாணயச்சபை முறை நாட்டின் பொருளாதார அபிவிருத்தி தேவைகளுக்கு ஏற்றவகையில் நிதியீட்டத்தை மேற்கொள்ளவில்லை என்ற குறைபாட்டினை அடிப்படையாகக்கொண்டு அம்முறை திருத்தி அமைக் கப்பட்டு மத்திய வங்கி ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையின் நாணயச் சட்டம் மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட நாணயசபை ஒன்றுக்கு இடமளித்திருந்தது இவ்வகையில் ஆளுநர், திறைசேரியின் துணைச்செயலாளர், பிரதம மந்திரி நியமிக்கும் ஒருவர் இன்று திறைசேரியின் துணைச் செயலாளருக்குப் பதிலாக நிதி அமைச்சின் செயலாளர் என்போர் இடம்பெற்றுள்ளனர். இலங்கை மத்திய வங்கி அண்மைய ஆண்டுகளில் தனது தொழிற்பாடுகளை விரிவுபடுத்தியுள்ளது இவ்வகையில் இலங்கை மத்திய வங்கி மாத்தறை, அனுராதபுரம், மாத்தளை ஆகிய பகுதிகளில் தமது கிளைகளைத் ஏற்படுத்தியுள்ளது.

இலங்கை மத்திய வங்கியிலே பல்வேறு திணைக்களங்கள் காணப்படுகின்றன. அவை பல்வேறு தொழிற்பாடுகளை ஆற்றுகின்றன. அத் திணைக்களங்கள் வருமாறு பொருளாதார ஆராய்ச்சி திணைக்களம், உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம், பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம், கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு திணைக்களம், பொதுப்படுகடன் திணைக்களம், செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், பிரதேச அபிவிருத்தி திணைக்களம், நிதி திணைக்களம், ஊழியர் சேமலாபத் திணைக்களம், செயலகத் திணைக்களம்,

சட்டத் திணைக்களம், தகவல் திணைக் களம், மனிதவளத் திணைக்களம், முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களம், போன்ற பல்வேறு திணைக்களங்கள் காணப்படுகின்றன.

இலங்கையின் உற்பத்திக் காரணி களின் அபிவிருத்தியை ஊக்குவித்து மேம் படுத்தும் நோக்கில் இலங்கை மத்திய வங்கி இரு குறிக்கோள்களை கொண்டுள்ளது. அவையாவன பொருளாதாரம் மற்றும் விலை உறுதிப்பாட்டினைப் பேணுவது மற்றும் நிதியில் முறைமையின் உறுதிப்பாட்டினைப் பேணுவது என்பன வாகும். 2002ஆம் ஆண்டின் நாணய விதிச்சட்டம் திருத்தப்படுவதற்கு முன் இலங்கை மத்திய வங்கியின் குறிக் கோள்களாக உள்நாட்டு நாணயப் பெறுமதி களைச் சமநிலைப்படுத்தல், செலாவணிவீத உறுதிப்பாட்டினைப் பேணுதல் உயர்ந்த மட்ட உற்பத்திகள், தொழில் வாய்ப்பு மற்றும் உண்மை வருமானத்தினை மேம்படுத்தல் மற்றும் உற்பத்தியாக்க மூலவளங்களின் முழுமையான அபிவிருத்தியை ஊக்குவித்து மேம்படுத்தல் போன்றன விளங்கின.

இலங்கை மத்திய வங்கியானது தனது குறிக்கோளை அடைந்து கொள்ளும் நோக்கில் பல தொழிற்பாடுகளை ஆற்று கின்றது. இவ்வகையில் இலங்கை மத்திய வங்கியின் முதன்மைத் தொழிற்பாடுகளாக நாணய கொள்கையினை மேற் கொள் ளுதல், செலாவணிவீத கொள்கையினை மேற்கொள்ளுதல், இலங்கையின் அலுவல் சார் வெளிநாட்டு ஒதுக்குகளை முகாமைப் படுத்தல், நாணயங்களை வெளியீடு செய்தல், வங்கிகள். நிதிக்கம்பனிகள் மற்றும் அரசபிணையங்களிலுள்ள முத னிலை வணிகர்கள் ஆகியோருக்கு உரிமம் வழங்கல், ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் தீர்ப்பனவுகளை மேற்கொள்ளுதல், அரசின் வங்கியாகத் தொழிற்படுதல் போன்ற பல்வேறு தொழிற்பாடுகளை ஆற்றுகின்றது.

மத்திய வங்கி முகவராண்மைத் தொழிற்பாடுகளையும் மேற்கொள ளுகின்றன. இவ்வகையில் பொதுப்படுகடன் முகாமைத்துவம், வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம், பேரண்ட நிதி மற்றும் கிராமிய கொடுகடன் திட்டங்களின் உச்சமுகவராண்மையாக தொழிற்படுதல், ஊழியர் சேமலாபத்தின் முகாமைத்துவமும் நிர்வாகமும் போன்ற தொழிற்பாடுகளினை இலங்கை மத்திய வங்கி ஆற்றுகின்றது.

துரிதமாக மாறிக் கொண்டுவரும் பொருளாதார நிலைமைகளுக்கு ஏற்றவாறு தம் முறைகளை மத்தியவங்கி மாற்றிக் கொள்கின்றன. இலங்கை மத்திய வங்கி காலமாற்றங்களுக்கு ஏற்ப தமது கொள்கைகளிலும் தொழிற்பாடுகளிலும், நோக்கங்களிலும் மாற்றங்களை மேற்கொண்டு தமது பணியை சிறப்பான முறையில் முன்னெடுக்கின்றன.

ச.ஜெயதர்சன்
தரம் : 13C

# பொருளியலில் நடைமுறைத் தகவலின் முக்கியத்துவம்



**பொ**ருளியல் பாடத்தை கற்கின்ற பலதரப்பினரதும் கருத்து யாதெனில் பொருளியல் பாடத்தினைப் பயிலும் போது அது பரீட்சைக்கும், புத்தகத்திற்கும் மாத்திரம் மட்டுப்பட்ட பாடம் என்பதாகும். ஆயினும் பொருளியல், குறிப்புக்களைப் போன்று, நடைமுறை விடயங்களை உள்வாங்கியுள்ளது. எவ்வளவு பிரயோக ரீதியிலான விடயங்கள் பரீட்சையில் வினவப்பட்டுள்ளன என்பதை சுட்டிக் காட்டுவதற்காக இக்கட்டுரை என்னால் வரையப்படுகின்றது.

2010 இற்கான வரவு செலவுத் திட்டம் இலங்கை பாராளுமன்றத்தினூடாக அது நிறைவேற்றப்பட்டபின் அது தொடர்பில் நிதி அமைச்சின் செயலாளர் தெரிவித்த கருத்துக்களில் சில உங்களுக்கு தரப்படுகிறது. இவ்விடயங்களில் பொருளியல் கற்கும் உங்களுக்கு எவ்வளவு விடயங்கள் எந்தளவிற்கு முக்கியம் உடையன என்று நன்கு சிந்தியுங்கள்.

இக்கருத்துக்களில் இருந்து நாம் பெற்றவை கடந்த காலங்களில் பேசப்பட்டு கொண்டிருக்கும் நடைமுறை மற்றும் எண்ணக்கரு ரீதியிலான விடயங்கள் ஆகும். இதனை நாட்டின் சாதாரண பிரஜையாக இருந்து வாசிக்காது பொருளியல் கற்கின்ற ஒரு மாணவனாக வாசிக்க வேண்டும். இதன் முக்கிய நோக்கம் யாதெனில் எம்மால் அநேகமாக பேசப்படும் விடயங்களை எவ்வாறு பொருளியல் பாடத்தில் உள்வாங்கப்படுவது என்பதாகும். மேலும் இந் நடைமுறை விடயங்கள் பரீட்சைகளில் எவ்வாறு வினவப்படுகின்றன என்பதும் தரப்படுகின்றது. பொருளியல் பாடம் மட்டுமல்ல பரீட்சையும் நடைமுறை சார்ந்ததே என்பதை இதன் மூலம் நிருபிக்க முடியும்.

பெரும்பான்மையானோரின் கருத்துப்படி வரவு செலவுத் திட்டம் என்பது விலையினை உயர்த்தல் அல்லது குறைத்தலை மேற்கொள்வதற்கான ஆவணம் என்பதாகும். ஆயினும் பாதீட்டின் கருமம் அதுவல்ல நவீன பொருளியல் சமூகத்தில் பாதீடு ஏதேனும் நாடொன்றின் எதிர்காலம் தொடர்பான கொள்கை ரீதியிலான யோசனைத் தொகுப்பு என்பதாகும். கடந்த வருடத்தில் இடம்பெற்ற தேர்தலின் காரணமாக இந்நாட்டு வரவு செலவுத் திட்டம் தொடர்பில் வெவ்வேறு பிரச்சினைகள் எழுந்தன. இதனால் இலங்கையில் 2010 ஆம் ஆண்டு கணக்கு மீதான வாக்கெடுப்பு (vote of account) தயாரிக்க நேர்ந்தது.

80 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஆயுளையுடையோரை தவிர ஏனைய அனைத்து பிரஜைகளும் இந்நிலைமையை கூர்ந்து நோக்க வேண்டும். விஷேடமாக 30 - 60 வயதுக்கிடையிலான பிரிவினர் நாட்டின் எதிர்கால 10 - 30 வருடம் தொடர்பில் கவனமெடுக்க வேண்டும். இங்கு அனைவரிலும் எழ வேண்டிய வினா யாதெனனில் நாம் அபிவிருத்தியடைய வேண்டியது எவ்வாறு என்பதாகும்.

எமது வரவு செலவுத் திட்டம் அரசாங்கத்தின் பலத்தினை வெளிப் படுத்தும் வரவு செலவுத் திட்டமாகும். ஐக்கிய இராச்சியம் ஐரோப்பிய சங்கம் போன்று உலகில் பல நாடுகளில் பல பிரச்சினைகளை சந்தித்துக் கொண்டிருக் கின்றன. இதன் விளைவாக வங்கிகளின் வீழ்ச்சி நிறுவனங்கள் மூடப்படல், தொழில் வாய்ப்புக்கள் என்பன பெருமளவில் இழக்கப்பட்டன. இதன் பெருமளவிலானோர் உலகில் பொருளாதார வீழ்ச்சியொன்று ஏற்படுவதாக கூறினர். பொருளாதார வீழ்ச்சி என்பது பற்றிய அறிவு மிகச் சிறு அளவிலானோருக்கே உண்டு. 1920 - 1930 காலப்பகுதிகளில் உலகப் பொருளாதார வீழ்ச்சி பற்றி கலந்துரையாடப்பட்டிருப் பினும் தற்போது அது தொடர்பில் கலந்துரையாடப்படுவதில்லை. 2004 ஆம் ஆண்டில் சுனாமியினை சந்தித்தமை எமக்கு புதுவித அனுபவமே அது போன்று கடந்த வருடத்தில் இடம்பெற்ற உலக பொருளாதார வீழ்ச்சி பற்றி யாரும் எதிர்வு கூறவில்லை.

எமக்கு இதனை விட கூடுதலான பொருளாதார வளர்ச்சி அவசியமாகிறது. இம்முறை வரவு செலவுத் திட்டம் தொடர்பில் நடுத்தரகால திட்டங்களை கொண்டிருக் கின்றது. இதன் ஆரம்பம் இவ்வருடம் ஆகும். இன்றும் 3 - 4 ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சி வேகத்தினை 8% உயர்த்த வேண்டும். அதன் பின் 10 - 12% மான இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சி வேகத்தை இரட்டிப்பாக்க வேண்டும். இம்முறை எதிர்கால பாதீடுகளை சரியாக நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாகின்றது. இதன் போது அழிவைத் தரும் வழிவகைகளைப் பின்பற்றக் கூடாது. வரி அறவிடப்படல் வேண்டும். வரி இறுப்பாளர்களைப் பாதிக்காத வகையில் இவ் வரி அறவிடப் படல் வேண்டும். வரி இறுப்பாளர் நம்பிக்கை மற்றும் சுதந்திர தன்மையை ஏற்படுத்துதல் வேண்டும். எதிர்வரும் 3 - 4 ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சி வேகத்தினை 8% மாக மாற்ற வேண்டுமெனில் அதன்பின் அதனை 10 - 12% மாக இரட்டை இலக்கமாக மாற்றுவதில் அவசியமா கின்றது.

மேற்கூறப்பட்ட கருத்துக்களில் நாம் கண்டறிதலில் மிக அவசியமான பொருளியல் எண்ணக்கருக்களை அவதா னியுங்கள் இவை நடைமுறையில் எவ்வளவு முக்கியமானவை என்பதை நீங்கள் உணர வேண்டும். பொருளியல் பாடத்திட்டத்தின் ஒன்பதாவது அலகின் கீழ் கலந்துரை யாடப்படும் வரவு செலவுத் திட்டம் தொடர்பாக இங்கு வரைவிலக்கணம் கூறப்பட்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. ஐரோப்பிய சங்கம் உட்பட உலகின் பல நாடுகளில் பல்வேறு பிரச்சினைகள்

ஏற்பட்டதோடு இது இலங்கையையும் பாதித்தது. இலங்கையில் கடந்த காலத்தில் வழங்கப்பட்ட G.S.P(+) நீக்கப்பட்டமைக்கு இது தாக்கம் செலுத்திய காரணியாகும்.

இந்த எண்ணக்கரு எம்மைப் பொறுத்த மட்டில் எவ்வளவு முக்கியத்துவ முடையது என சிந்தித்தீர்களா? 2007 ஆம் ஆண்டில் உலகளாவிய ரீதியில் இது தோற்றம் பெறும்வகையில் இதனைப் பொருளாதார சிதைவு பொருளதார மந்தம், பொருளதார பின்னடைவு என பல்வேறு வழிகளில் கூறினர். ஆயினும் 2007 ஆம் ஆண்டில் வீழ்ச்சியில் முக்கியத்துவம் யாது? பொருளாதார பின்னடைவு, பொருளாதார வீழ்ச்சி எவ்வாறு இடம்பெறுகின்றது என ஆராயப்பட்டது. இக்கூற்றுடன் பொருளியலின் முக்கிய எண்ணக் கருக்கள் தொடர்புறவில்லையா? இதனால் பலர் இதனை உலக பொருளாதார வீழ்ச்சியாக கருதினர்.

உலகம் பாரிய பொருளாதார பின்னடைவினை எதிர்நோக்கி இருப்பதாகவும் இதன் முக்கிய நிலைக்கு வழியமைக்கப்பட்டிருப்பதாகவும் இதன் மூலம் கருதப்படுகின்றது. அது எமது பொருளியல் கோட்பாடுகளை பிரயோகமாக மாற்றியுள்ளது. பொருளாதார பின்னடைவின் உச்சநிலைகள் பொருளாதார மந்தமாகும்.

**சி. சசிகரன்**
**தரம் : 13C**


**பணத்தில் நான்கில் ஒரு பகுதியை மகிழ்ச்சியாகச் செலவிட வேண்டும். இரு பகுதிகளைத் தொழிலில் ஈடுபடுத்த வேண்டும். நான்காம் பகுதிகயைச் சேமிக்க வேண்டும். அது ஆபத்துக்கு உதவும்.**

**– பர்மா**

# விலைப் பொறிமுறை / விலை முறைமை (Price Mechanism)



கேள்வி, நிரம்பல்களினால் பொருட்கள், சேவைகள், உற்பத்தி காரணிகள் அவற்றின் விலைகள் தீர்மானிக்கப்படும் செயற்பாடு விலைப் பொறி முறையாகும். விலைப் பொறிமுறை தொழிற்படுவதற்கு கேள்வி, நிரம்பல் ஆகிய இரு சக்திகளும் காணப்பட வேண்டும்.




விலைப் பொறிமுறையானது சந்தைக்குள் மாத்திரம் தொழிற்படும். அத்தோடு இலாபத்தன்மை உள்ளவற்றில் மட்டும் இது தொழிற்படும். சந்தைப் பொருளாதாரத்தில் காணப்படும் தொடர்பாடல் இயந்திரம் விலைப் பொறிமுறையாகும்.

பொருளாதாரத்தில் நுகர்வோர், உற்பத்தியாளர்,காரணி வழங்குநர் போன்றோர் சுயமாக எடுக்கும் தீர்மா னங்கள் வெற்றிபெற வழிவகுப்பது விலைப்பொறி முறையாகும். கொள்வன வாளரும் விற்பனையாளரும் அன்னியோன்யமாக செயற்பட்டே விலையை நிர்ணயிக்கின்றனர்.

இவ்வாறு நிர்ணயிக்கும் விலை நுகர வோருக்கும், உற்பத்தியாளருக்கும், காரணி வழங்குனருக்கும் தமது தீர்மானங்களை மேற்கொள்வதற்கான சைகையை இவ் விலைப் பொறிமுறையானது வழங்கு கின்றது.

அடிப்படைப் பொருளாதார பிரச்சனைகளான எதனை எந்தளவு உற்பத்தி செய்தல், எவ்வாறு உற்பத்தி செய்தல், யாருக்காக உற்பத்தி செய்தல் போன்ற பிரச்சினைகள் தோன்றுவதற்கு இவ்விலைப் பொறிமுறையே காரணமாகும். இப் பொருளாதார அடிப்படை பிரச்சி னைகள் விலைப் பொறிமுறை மூலம் தீர்க்கப்படுமாயின் அவை சந்தை முறைமை ஆகும்.

இவ் பொருளாதார அடிப்படை பிரச்சனைகளுக்கு பின்வருமாறு விலைப் பொறிமுறையானது தீர்வு வழங்குகின்றது.

**எதனை எந்தளவு உற்பத்தி செய்தல் என்பதற்கான தீர்வு**

சந்தைப் பொருளாதாரத்தில் அடிப்படை பொருளாதார பிரச்சனை

களுக்கான தீர்வு விலைப் பொறிமுறை ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றது. இதன்படி சார்பளவில் எந்த பொருள் விலைகூடியதோ அந்தப் பொருள் உற்பத்தி செய்யப்படும். சார்பு விலை உயர்வாக இருப்பதனால் இலாபமும் உயர்வாக இருக்கும்.

இதனால் சந்தைப் பொருளதார மொன்றில் இயங்கும் உற்பத்தியாளன் விலைகூடிய பொருட்களை உற்பத்தி செய்வார்.

**எவ்வாறு உற்பத்தி செய்தல் என்பதற் கான தீர்வு**

சந்தைப் பொருளாதாரத்தில் விலைப் பொறிமுறையின் தீர்மானத்துக்குப் பிறகே எந்தப் பொருளை உற்பத்தி செய்வது என்பதையும் தீர்மானிக்கும் போதே எவ்வாறு உற்பத்தி செய்வது என்பதையும் தீர்மானித்துக் கொள்கின்றனர்.

எந்தத் தொழில்நுட்பம் மலிவா னதோ அதனையே உற்பத்திக்காக தேர்ந் தெடுப்பர். சந்தைப் பொருளா தாரத்தில் குறைந்த செலவிலான உற்பத்தி தொழில்நுட்பத்தையே தேர்ந்தெடுத்து உற்பத்தி மேற்கொள்வர்.

இங்கு அதிகலாபம் ஈட்டுவதற்கு குறைந்த செலவிலான தொழில் நுட்பத் தையே பயன்படுத்துகின்றனர்.

**யாருக்காக உற்பத்தி செய்தல் என்பதற்கான தீர்வு**

சந்தைப் பொருளாதாரத்தில் விலைப் பொறிமுறையின் தீர்மானத்துக்கு அமைய யாருக்காக உற்பத்தி செய்வது என்பது தீர்மானிக்கப்படும்.

சந்தையில் யார் அதிகளவு விலைகொடுத்து பொருட்கள், சேவைகளை கொள்வனவு செய்யத் தயாராக உள்ள னரோ அவர்களுக்காகவே பொருட்களும் சேவைகளும் உற்பத்தி செய்து வழங்கப் படும். எனவே விலை குறைந்த பொருட்கள், சேவைகள் இங்கு உற்பத்தி செய்யப் படமாட்டாது.

இவ்விலைப் பொறிமுறையானது பொருளாதார அடிப்படை பிரச்சனை களுக்கு தீர்வு வழங்கினாலும் இவ் விலைப் பொறிமுறையில் சில குறைபாடுகள் காணப்படுகின்றது.

- வளப் பங்கீட்டில் திறனின்மை
- பொதுப் பண்டங்களுக்கு வள ஒதுக்கம் பூச்சியமாக இருத்தல்
- நலன்தரு பண்டங்களுக்கு வளங்களை குறைவாக ஒதுக்குதல்
- தீங்குதரு பண்டங்களுக்கு வளங்களை மிகையாக ஒதுக்கீடு செய்தல்
- காரணி வருமான பங்கீட்டில் நியாயமில்லை.
- வெளிவாரி விளைவுகள் அதிகமாக இருத்தல்
- சந்தைத் தகவல் பற்றாக்குறை
- நுகர்வோன் சுரண்டலுக்கு ஆளாக நேரிடல்
- வருமான ஏற்றத்தாழ்வுகள் ஏற்படல்
- பேரினப் பொருளாதார சமமின்மை ஏற்படல்
- விளம்பரங்களின் மூலம் நுகர்வோன் விருப்பத் தெரிவு மாற்றமடைதல்

•பொதுவளங்களின் பயன்பாடு செயற்திற னற்று காணப்படல்.

இவ்விலைப் பொறிமுறையானது பின்வரும் தொழிற்பாடுகளை ஆற்று கின்றது.

## தகவல் வழங்கும் தொழிற்பாடு (Information Function / signaling Function)

சந்தைப் பொருளாதார முறைமை யில் நுகர்வோரும், உற்பத்தியாளரும், காரணி வழங்குனரும் தீர்மானங்களை மேற்கொள்வதற்கு அவசியமான முக்கிய தகவல்களை விலை வழங்குகின்றது. எதனை கொள்வனவு செய்வது எதனை உற்பத்தி செய்வது என்பன தொடர்பாக நுகர்வோரும், உற்பத்தியாளரும் விலையை அடிப்படையாக வைத்தே தீர்மானங்களை மேற்கொள்கின்றனர்.

## ஊக்குவிப்புத் தொழிற்பாடு (Incentive Function)

விலைகள் ஊக்குவிப்பு வழங்கும் காரணியாகச் செயற்படும் போது அது உற்பத்தி வளங்களின் உரிமையாளர் உச்ச இலாபத்தை உழைப்பதற்கும் கொள்வன வாளர்கள் உச்சப் பயனை பெறுவதற்கும் வழிகாட்டியாக அமையும். இதற்கு விற்பனையாளரும் கொள்வனவாளரும் விலைச் சமிக்கைகளுக்கு உரிய துலங்கல்களை காட்டுதல் வேண்டும்.

ஊக்குவிப்பை மேற்கொள்ள இலாபம் / நட்டம் எனும் விலைச் சமிக்கைகள் பயன்படுகின்றன.

## வள ஒதுக்கீட்டுத் தொழிற்பாடு (Allocation Function)

விலைப் பொறிமுறையானது அருமையான வளங்களை மாற்றுப் பயன்பாடுகளிடையே பங்கீடு செய்கிறது.

பொருளாதாரத்தின் வளங்கள் வரையறுக்கப்பட்டதாக இருப்பதால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் அளவும் வரையறுக்கப்பட்டதாக உள்ளது. விலைகள் இவற்றை சிறந்த முறையில் பகிர்வு செய்கிறது.

இவ்வாறான தொழிற்பாடுகளை விலைப் பொறிமுறையானது மேற் கொள்ளப்படுகின்றது.

சு.லாவண்யா
தரம் : 12C

# சந்தைப் பொருளாதாரம் - (Market Economy)



அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைகளிற்கான தீர்வுகளில் சந்தைப் பொருளாதார முறையும் ஒன்றாகும். இங்கு பொருளாதாரத்தின் அடிப்படைப் பிரச்சினைகள் யாவும் விலைப் பொறிமுறை (Price mechanism) மூலம் தீர்க்கப் படுகின்றது. உற்பத்தி சாதனங்களை தனியார் உடைமையாகக் கொண்டு இயங்குகின்ற பொருளாதார முறை இவை ஆகும். இப் பொருளாதாரத்தில் துலங்கலை வெளிப்படுத்தும் பிரதான ஊக்குவிப்பாக இலாபம் அமையும்.

இங்கு நுகர்வோர் உற்பத்தியாளர், தனியார் சொத்துடைமையாளர் மற்றும் அரசாங்கம் ஆகியோரும் இப் பொருளாதாரத்தின் பிரதான நடிகர்கள் ஆவர். இங்கு வளங்கள் யாவும் தனியாரிற்கு சொந்தமாகக் காணப்படும். அரசாங்கம் தனியாரது உடமையை உறுதிப்படுத்தும் இது சட்டங்களினால் மேற்கொள்ளப்படும். நிலம், மூலதனம், போன்றவற்றை உடமையாகக் கொண்டிருப்பது போல் உழைப்பாளர்களை உடமையாகக் கொண்டிருக்க முடியாது.

உற்பத்தியாளர்களும் தனிப்பட்ட சொத்துடைமையாளர்களும் தாம் விரும்பிய வளங்களை வாங்கவும் விற்கவும் உரிமை உண்டு. இவ் வளங்களை இணைத்து தொழில் முயற்சியாளர்களையும் உற்பத்திகளையும் மேற்கொள்வர். அரசாங்கம் சில இடங்களில் கட்டுப்பாட்டை விதிக்கும். நுகர்வோரிற்கு தமது பணத்தைப் பயன்படுத்தி விரும்பிய பொருளை தெரிவு செய்யும் சுதந்திரம் காணப்படும்.

பொருளாதார முகவர்கள் வளங்களை ஒதுக்கீடு செய்வதில் பூரண சுதந்திரத்தைப் பெற்றுள்ளதால் போட்டி காணப்படும். உற்பத்தியாளர் நுகர்வோரது செல்வாக்குகளைப் பெறவும் வேலை செய்வோர் விலை கொடுப்போரின் செல்வாக்குகளை பெறவும் போட்டி யிடுவார்கள். தனிப்பட்ட ஒவ்வொருவரும் தீர்மானம் மேற்கொள்ள முடியும். எண்ணற்ற தனிப்பட்ட முகவர்களின் தீர்மானங்களின் விளைவாக சாதன ஒதுக்கீடு இடம்பெறுகின்றது. அரசாங் கத்தின் பங்கு குறைவாகக் காணப்படும். குறிப்பாக பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதும் சட்டங்கள், கட்டளை களைப் பராமரிப்பதுமாகும்.

அடுத்து என்ன பொருளை எந்தளவில் உற்பத்தி செய்தல், எவ்வாறு உற்பத்தி செய்தல், யாரிற்காக உற்பத்தி செய்தல் என்பவற்றை நோக்குவோம். என்ன பொருளை எந்தளவில் உற்பத்தி செய்தல் எனும் போது அதிகளவு இலாபம் ஈட்டும் பொருட்கள் சேவைகள் அதிகளவில் உற்பத்தி செய்யப்படும். ஆகவே பொருட் சந்தையில் எந்த பொருளின் சார்பு விலை அதிகமோ அப்பொருளின் இலாபம்

உயர்வாகக் காணப்படும். இதனால் சார்பளவில் விலைகூடிய பொருட்களே அதிகம் உற்பத்தி செய்யப்படும்.

குறைந்த உற்பத்திச் செலவினை உடைய தொழில்நுட்பங்களைப் பயன் படுத்தி அதிகளவிலான பொருட்கள் உற்பத்தி செய்யப்படும். ஏனெனில் செலவு குறைவடையும் போதே இலாபம் உயர் வாகக் காணப்படும். எனவே காரணிச் சந்தையில் குறைந்த விலையினை உடைய காரணிகளைப் பயன்படுத்தியே உற்பத்தி செய்வர்.

யாருக்காக உற்பத்தி செய்தல் எனும் போது யார் அதிக விலை கொடுத்து வாங்கத் தயாராக உள்ளனரோ அவர் களிற்கே வழங்கப்படும். நுகர்வோன் செலுத்தும் விலையானது அவர்கள் வைத்திருக்கும் செல்வம், வருமானம் என்பவற்றில் தங்கியுள்ளது. இது காரணி வளங்களின் உரிமையில் தங்கியுள்ளது.

இப் பிரச்சினைக்கு எல்லாம் தீர்வாக விலைப் பொறிமுறை காணப் படுகிறது. நுகர்வோர் தீர்மானம் கேள்வியை தீர்மானிக்கின்றது. உற்பததியாளன் தீர்மானம் நிரம்பலை தீர்மானிக்கின்றது. கேள்வி, நிரம்பலினால் தீர்மானிக் கப்படுகின்ற விலை மாற்றங்களிற்கு ஏற்ப வள ஒதுக்கீடுகளிலும் மாற்றம் ஏற்படு கின்றது. இதனையே விலைப் பொறிமுறை என்பர். இவ்வாறு சந்தைப் பொருளா தாரத்தில் விலைப் பொறிமுறை இயங்கு வதனால் அதனை மறைகரம் என்றார் அடம்சிமித்.

அமெரிக்கா, ஜப்பான், கனடா போன்ற பெருமளவில் வளர்ச்சியடைந்த நாடுகள் இப் பொருளாதார முறைமை யையே பின்பற்றி வருகின்றது. புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளல், நுகர்வோர் இறைமை காணப்படல் தரமான பொருட்களின் உற்பத்தி விரைவான பொருளாதார வளர்ச்சி, வாழ்க்கைத் தரம் அதிகரிப்பு என்பவற்றை இப் பொருளாதார முறைமையின் நன்மைகளாகக் குறிப்பிடலாம்.

இப் பொருளாதாரமுறைமையின் குறைபாடுகளாகப் பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

1. சமூகத் தேவைகளிற்கு முன்னுரிமை அளிக்காது இலாப நோக்கிலேயே பொருட்கள் உற்பத்தி செய்யப்படல்.
2. வெளிவாரி விளைவுகளைக் கருத்தில் கொள்ளாததால் உத்தம வெளியீட்டு மட்டத்தை அடைய முடியாமை.
3. வருமானப் பங்கீட்டில் ஏற்றத்தாழ்வு காணப்படல்.
4. பேரினப் பொருளாதார உறுதியின்மை / வர்த்தக சகடவோட்டம் காணப்படல்
5. நுகர்வோன் சுரண்டப்படல்.
6. பொது வளங்களின் பயன்பாடு செயற்றிறனற்று காணப்படுதல் .
7. விளம்பரங்கள் மூலம் நுகர்வோர் தெரிவு மாற்றி அமைக்கப்படுதல்.

சந்தைப் பொருளாதார முறை மையின் இத்தகைய குறைபாடுளைக் களைவதற்கு அரசின் தலையீடு அவசிய மாகக் காணப்படுகின்றது. இப் பொருளாதாரத்தில் காணப்படும் குறை பாடுகளை நீக்குவதற்காக உருவாக்கப் பட்டதே சமூக சந்தைப் பொருளாதாரம் ஆகும். இது தலையிடா கொள்கை உடைய முதலாளித்துவப் பொருளதார முறை

மையை பின்பற்றும் நாடுகள் சமூக சந்தைப் பொருளாதாரத்தைப் பின்பற்றுவனவாக மாறிக் கொண்டு வருகின்றது. இச் சமூகசந்தைப் பொருளாதாரத்தில் சந்தைப் பொருளாதார குறைகள் யாவும் நீக்கப்பட்டு சமூக நலன்களை பேணும் ஒரு பொருளாதாரமாக காணப்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

பு.ஜெயவிகிர்தா
தரம் : 12C (2013)

## சேமிப்பும் முதலீடும்



ஒரு நாட்டின் பொருளாதார விருத்தியில் சேமிப்பு மற்றும் முதலீடு என்பன முக்கியம் பெறுகின்றன. தனி நபர்கள், நிறுவனங்கள் என்பன தமக்கு கிடைக்கும் வருமானததிலிருந்து நுகர்வு செலவுகளை மேற்கொண்ட பின்பு காணப்படும் மிகை சேமிப்பு எனப்படும். இச் சேமிப்பு அனைத்தையும் ஒன்று திரட்டி வருமானம் பெறும் வழியில் ஈடுபடுத்தும் போது அவை முதலீடுகளாக மாற்றம் அடைகின்றது. இதன் மூலம் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடைந்து மக்களின் வருமானம் பெறும் ஆற்றல் அதிகரிக்கின்றது.

தனிநபர்கள் தமது எதிர்கால தேவைகளை பூர்த்தி செய்யவும், எதிர்பாராமல் ஏற்படும் சடுதித் தேவை களுக்கும், சொத்துக்களை அதிகரிப் பதற்கும் சேமிப்பு நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். நிறுவனங்கள் எதிர்கால நட்டங்களை ஈடுசெய்யும், நிறுவன விரிவாக்க நடவடிக்கைகளுக்கும் நவீன தொழில்நுட்ப மாற்றங்களை பெறவும், ஊழியரை மேம்படுத்தவும், மூலதன சொத்துக்களை அதிகரிக்கவும் சேமிப்பில் ஈடுபடுகின்றன.

இன்று பலரும் சேமிப்பை திரவத்தன்மை கொண்டதாக வைத்திருக்க எண்ணுகின்றனர். அவ்வாறு வைத்துக் கொண்டால் தேவையான போது உடனடியாக பயன்படுத்தலாம் என்பது அவர்களது எண்ணமாகும். அவ்வாறு எண்ணுவது தவறானது. சேமிப்பை முதலீடு செய்வதன் மூலம் சேமிப்புக்கான பாதுகாப்பும், மேலதிக வருமானமும் கிடைக்கும். இதன் மூலம் நாட்டின் அபிவிருத்தி முன்னேற்றத்தை நோக்கி நகரும்.

முதலீட்டிற்கும் சேமிப்புக்கும் இடையில் நேர்த்தொடர்பு காணப்படும்.

அதாவது சேமிப்பு அதிகரித்தால் முதலீடு அதிகரிக்கும். சேமிப்பு குறைந்தால் முதலீடு குறையும். நுகர்விற்கும் முதலீட்டிற்கும் இடையில் எதிரான தொடர்பு காணப்படும். நுகர்வு அதகிரித்தால் சேமிப்பு குறை வடைந்து முதலீடும் குறைவடையும். நுகர்வு குறைவடைந்தால் சேமிப்பு அதிகரித்து முதலீடும் அதிகரிக்கும்.

மக்களின் சேமிப்பை முதலீடு களாக மாற்றி அமைக்க பல்வேறு நிதி நிறுவனங்களும், வங்கிகளும் பல்வேறு முதலீட்டு வழிமுறைகளை உருவாக்கி உள்ளன. அவையாவன வங்கி வைப்புக் களில் சேமிப்பு மற்றும் நிலையான வைப்பு என்பன உள்ளடங்கும். சொத்துக்களை கொள்வனவு செய்தல் என்ற முறையில் காணி கட்டடம், தங்க ஆபரணங்களை கொள்வனவு செய்தல், பங்குச் சந்தையில் சாதாரண பங்குகள், தொகுதிக்கடன்களை கொள்வனவு செய்தல், அரசபிணைகளில் முதலீடு செய்வதில் திறைசேரி உண்டியல், திறைசேரி முறி என்பன உள்ளடங்கும்.

வணிக மக்கள் முதலீட்டு வழி ஒன்றினை தெரிவு செய்யும் போது முதலீட்டில் இருந்து கிடைக்கும் அனுகூலம், முதலீட்டில் காணப்படும் நட்டஅச்சம், சட்டப்படியான தன்மை, அவற்றுக்கான பாதுகாப்பு, வருமானத்தை மீளப்பெறக் கூடிய வாய்ப்பு என்பவற்றை கவனத்தில் கொள்ள வேண்டும். பகுத்தறிவுள்ள முதலீட்டாளர் இவற்றை கவனத்தில் எடுத்து முதலீடு செய்யும் போது நிச்சயம் சிறந்த விளைவைப் பெறுவர்.

வங்கி வைப்புக்களில் முதலிடு வதனால் முதலீட்டுக்கு அரச பாதுகாப்பு, நிலையான வட்டி வருமானம், எந்நேரமும் பணமாக மாற்றும் வசதி, விரும்பிய போது வைப்பு கணக்கை பிணையாக காட்டி பணம் பெறும் வசதி என்பவற்றை பெறலாம். சொத்துக்களை கொள்வனவு செய்வதன் மூலம் மூலதன இலாபம், பாதுகாப்பு, நட்ட அச்சம் குறைவு, அழிவு நட்டம் ஏற்படும் சந்தரப்பம் குறைவு வேறு தேவைகளுக்கு பிணையாக கொடுக்கலாம். சாதாரண பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் பங்கு இலாபம், மூலதன இலாபம், உரிமை வளங்கள் பெறுவதற்கு உரிமை பெறல், பங்குகள் உயர்திரவத்தன்மை கொண்ட சொத்தாக காணப்படல் இதனால் பணமாக மாற்றிக் கொள்ளலாம். தொகுதிக கடன்களில் முதலிடுவதனால் நிலையான வட்டியையும், கூடிய வருவாயையும் பெறுவதுடன் பங்குச் சந்தையில் விற்பனை செய்யலாம். வட்டியையும், முகப் பெறுமதி யையும் பெறுதல் தொடர்பாக உயர் பாதுகாப்பும் காணப்படுகின்றது.

இவ்வாறான முதலீட்டு வழிமுறைகளில் முதலீட்டாளர்கள் நட்ட அச்சம் குறைந்ததும் அனுகூலங்கள் கூடியதுமான முதலீட்டு வழிமுறையை தெரிவு செய்து முதலிடுவதன் மூலம் உயர்வருவாயை பெற்றுக் கொள்ளலாம்.

போட்டி நிறைந்த வணிக உலகில் எந்தஒரு நபர் நிறுவனம் குறுங்காலத்தில் தமது சேமிப்பை முதலீடு செய்து உச்ச வருவாயை பெற்றுக் கொள்கின்றாரோ அவரே வணிக உலகில் நிலைத்து நின்று வெற்றி பெறலாம். இதுவே போட்டி வணிக

உலகின் தற்போதைய நிலை ஆகும்.

வணிக உலகில் பல்வேறு மனநிலை கொண்ட நிதி முதலீட்டாளர்கள் காணப்படுகின்றனர். இவர்களில் சிலர் அதிக இடரைத் தாங்கி அதன் மூலம் கிடைக்கும் உச்ச வருவாயை நோக்கி பயணிப்பர்.

ஆனால் இன்னும் சிலர் தமது பணம் பாதுகாப்பாக இருந்தால் போதும் அதற்குரிய வருவாய் குறைந்தாலும் பரவாயில்லை என எண்ணுவர். நாம் முதலில் கூறிய எண்ணம் கொண்டவர்கள் சாதாரண பங்குகளில் தமது பணத்தை முதலீடு செய்வதன் மூலம் தமது இலக்கை அடைந்து கொள்ளலாம். இரண்டாவதாக கூறிய எண்ணம் கொண்டவர்கள் வங்கிகளில் தமது பணத்தை வைப்புச் செய்வதன் மூலம் தமது எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

இன்று பெரும்பாலானோர் முறைமைசாராத நீண்டகால முதலீட்டு வழிகளான தங்க ஆபரணங்கள் காணி கட்டடங்களில் தமது பணத்தை முதலீடு செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இவர்கள் தாங்கிக் கொள்ளும் நட்ட அச்சம் குறைவாக காணப்படுவதுடன் சாதாரணமாக கூடிய அனுகூலங்களை பெற்றுக் கொள்ளக் கூடியவர்களாக காணப்படுவர்.

ஒரு சிலர் தமது பணத்தை வீட்டிலேயே வைத்திருக்க எண்ணுவர். இது தவறானது அப்பணத்திற்கான பாதுகாப்பு குறைவாக காணப்படுவதுடன் கள்வர்களால் ஏற்படும் இடரை தாங்க வேண்டி ஏற்படும். மேலும் பணத்தின் பெறுமதி வீழ்ச்சி அடைதலான பணவீக்க நிலைமையை எதிர்கொள்ள வேண்டி ஏற்படும். அதாவது பொருட்கள், சேவைகளுக்கான விலை மட்டம் தொடர்ச்சியாக அதிகரிக்கும் போது இப்போது கையில் உள்ள பணத்தை பயன்படுத்தி எதிர்காலத்தில் குறைந்த பொருட்களையே பெற்றுக் கொள்ளலாம். எனவே ஏதாவது வருமானம் தரும் வழிகளில் தமது பணத்தை ஈடுபடுத்தினாலேயே எதிர்கால சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுக்க முடியும்.

எந்த ஒரு நிதி முதலீட்டாளரும் முதலில் தமது முதலீட்டிற்கான இடரை கருத்தில் கொண்டு அதிகரித்து வரும் பணவீக்க நிலைமையை எதிர்க்கொள்வதற்கு பொருத்தமான வகையில் தமது சேமிப்பு பணத்தை முதலீடு செய்வதன் மூலம் உச்ச அனுகூலங்களை பெற்றுக் கொள்வர் என்பது திண்ணம்.

**த. துஜீவா**
**தரம் 12C**

# அரசின் பத்தாண்டு கால அபிவிருத்திக் கட்டமைப்பு

(இலங்கை அரசின் பத்தாண்டுத் தொலை நோக்கு)



பத்தாண்டு தொலைநோக்கானது பொதுவான கொள்கைத் தொலை நோக்கான மகிந்த சிந்தனையுடன் இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டது.

### பேரினப் பொருளாதார இலக்குகள்

உள்ளூர் தொழில் முயற்சியாளர்க்கு தேவையான பதவியை வழங்குதல் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவித்தல் என்பவற்றின் மூலம் சந்தையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கைகளின் சாதக மான பண்புகளுடன் மக்களின் தேவை களை ஒருங்கிணைப்பதற்காக இக் கொள்கை அமைக்கப்பட்டது.

நடுத்தர காலத்தில் அடுத்த ஆறு ஆண்டுகளில் 8% இற்கும் கூடுதலான நீடித்த நிலைத்திருக்கக் கூடிய உயர் வளர்ச்சியைப் பேணுதல் இதன் பின்னர் 9 - 10% வளர்ச்சியை பேணுதல்

2007 இறுதியில் பணவீக்கத்தை ஒற்றை இலக்கு மட்டத்திற்குக் கொண்டு வருதல். நடுத்தர காலத்தில் குறைவானதும் உறுதியானதுமான 4% பணவீக்கம்

வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4% இற்கு வைத்திருத்தல்.

2016 அளவில் பொதுப்படுகடனை மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 50% அளவிற்குக் குறைத்தல்.

### இக்கொள்கை உபாயத்தின் முக்கிய நோக்கம்

வலு, தொலைத் தொடர்பூட்டல் பணிகள், குடிநீர், பாசனநீர், வீதிகள், துறைமுகங்கள், விமான நிலையங்கள் மற்றும் கல்வி, சுகாதார மருத்துவ வசதிகள் போன்றவற்றின் தொடர்ச்சியான வழங்கலை உறுதிப்படுத்துவதற்காக நடைமுறை யிலிருக்கும் உட்கட்டமைப்பு மற்றும் பணிகளுக்கான தடைகளுக்குத் தீர்வு காண்பதற்காக பெருமளவு முதலீட்டை இவற்றிற்கு வழங்குவதன் மூலம் நாட்டின் உள்ளார்ந்த வளர்ச்சியை தூண்டிவிடுதல்.

குறிக்கோள்

-மரபு ரீதியான பிழைப்பு மட்ட விவசாயத்தை வர்த்தகம் சார்ந்த உயர்ந்த உற்பத்தித் திறன் வாய்ந்த துறையாக மாற்றுதல்.

-உயர்ந்த பெறுமதி கூட்டல், உயர்ந்த உற்பத்தித் திறன், நிலைத்து நிற்கும் தொழில் நிலை போன்றவற்றை உருவாக்குவதற்கான ஆற்றலும் போட்டித் தன்மையும் வாய்ந்த கைத்தொழிற் துறையை உருவாக்குதல்.

-பயணிகள் மற்றும் பொருட்களை போக்குவரத்துச் செய்வதற்கான உயர்ந்த தரமானதொரு வீதி வலையமைப்பை உருவாக்குதல்.

-தெற்காசியாவின் முதன்மையான கப்பற் போக்குவரத்து வியாபார மற்றும் வர்த்தக நிலையமாக இலங்கையின் துறை முகங்களை அபிவிருத்தி செய்தல், அனைத்து மக்களுக்கும் ஒரு நியாயமான செலவில் இலகுவாகக் கிடைக்கக் கூடியதான ஒரு நவீன தொலைத்தொடர்பு வலையமைப்பை உருவாக்குதல்.

-விரைவான பொருளாதார வளர்ச்சிக்கும் தேசிய அபிவிருத்திக்கும் வேண்டப்படும் தொழில்நுட்ப ஆற்றல்களை மேம்படுத்துகின்ற ஒன்றாக கல்வித்துறையை மாற்றியமைத்தல்.

-அனைத்து பொது மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீரையும் சுகாதாரத்தையும் கட்டுப்பாடின்றி வழங்குதல்.

-தாழ்ந்த வருமானக் குழுக்களினதும் சமூகத்திலுள்ள அதிகளவில் பாதிக்கப்படக் கூடியவர்களதும் தேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்கி அனைவருக்கும் தரமானதும் நவீனமானதுமான சுகாதாரப் பணிகளை கிடைக்கச் செய்தல்.

-சுதந்திரம், சமத்துவம், பாதுகாப்பு, மற்றும் மனித கௌரவம் போன்ற நிலைப்பாடுகளில் புத்தாக்கத் திறன் வாய்ந்த தொழில்களைப் பெற்றுக் கொள்வதற்கான சந்தரப்பங்களை மேம்படுத்தல்.

இவ்வாறான இலக்குகளையும் குறிக்கோளையும் நிறைவேற்றுவதற்காக அரசு பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்டு வருகின்றது.

**உட்கட்டமைப்பு வசதிகள்**

பொருளாதார மற்றும் சமூக முன்னேற்ற நடவடிக்கைகளுக்கு உதவக் கூடியதாகவுள்ள அடிப்படை வசதிகள் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் எனப்படும். இது இரண்டு வகைப்படும்

1. பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள்
2. சமூக உட்கட்டமைப்பு வசதிகள்

**பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள்**

பொருளாதாரத்தின் உற்பத்தித் துறைகளை இலகுபடுத்துகின்ற அடிப்படை வசதிகள் பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளாகும்.

உ-ம் : மின்சாரம், தொலைத் தொடர்பு,
நீர்ப்பாசனம், விமான
நிலையங்கள், புகையிரத சேவை

இப்பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் 2 வகைப்படும்

1. வன் உட்கட்டமைப்பு வசதிகள்
2. மென் உட்கட்டமைப்பு வசதிகள்

**வன் உட்கட்டமைப்பு வசதிகள்**

அதிவேகப் பெருந்தெருக்கள், துறைமுகங்கள், விமான நிலையங்கள், நீர்ப்பாசன வசதிகள் என்பன இதிலடங்கும்.

**மென் உட்கட்டமைப்பு வசதிகள்**

நிதிச் சந்தை முறை, ஊழியர் பயிற்சி தொழில்சார் பயிற்சிப் பட்டறைகள், தொழில்நுட்ப பரிமாற்றங்கள்.

**சமூக உட்கட்டமைப்பு வசதிகள்**

சமூக நடவடிக்கைகளுக்கு உதவக்

கூடியதாகவுள்ள அடிப்படை வசதிகள் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் எனப்படும்.

உ-ம் : பாடசாலை, வைத்தியசாலை, வீடமைப்பு திட்டங்கள்

இச் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் 2 வகைப்படும்

1. வன் உட்கட்டமைப்பு வசதிகள்
2. மென் உட்கட்டமைப்பு வசதிகள்

**வன் உட்கட்டமைப்பு வசதிகள்**

பாடசாலை, வீடமைப்புதிட்டங்கள், வைத்தியசாலைகள்.

**மென் உட்கட்டமைப்பு வசதிகள்**

சமூக பாதுகாப்பு முறைகள், சமூக அமைப்புக்கள், சூழல் பாதுகாப்பு வேலைத்திட்டங்கள்

உட்கட்டமைப்பு வசதிகளின் முக்கியத்துவம்

பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகளால்

1. பொருளாதாரத்தின் புதித் திறன் புதி இயலளவு அதிகரிக்கிறது.
2. உற்பத்திச் செலவுகளை இவை குறைக்கின்றன. இதனால் உற்பத்தி நடத்தையின் போது சிக்கனங்கள் ஏற்படுகின்றது.
3. பொருளாதார கீழ்க்கட்டமைப்பு வசதிகள், உற்பத்திக் காரணிகளின் உற்பத்தித் திறனை உயர்த்துகிறது.
4. இக் கீழ்க் கட்டமைப்பு வசதிகளை பருவாக்குவதன் மூலம் பொருளாதார வளர்ச்சி ஏற்படும்.

சமூக உட்கட்டமைப்பு வசதிகளால் மனித மூலதனம் உருவாக்கப்படும்.

இலங்கை அரசு உட்கட்டமைப்பு வசதிகளைப் போலவே இலங்கையில் தேசிய ரீதியிலும் பிரதேச ரீதியிலும் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தி வருகின்றது.

**தேசிய ரீதியில்**

1. இலங்கை அதிவேகப் பாதை அமைப்பு, தென் பகுதி விரைவுப் பாதை, கொழும் - கண்டி வீதி, கொழும்பு வெளிச்சந்து வீதி
2. துரைச்சோலை, கெரவலப்பிடிய, மேல் கொத்தமலை மின்சக்தி நிலயங்கள்
3. விமான நிலையம் அமைத்தல்
4. கொழும்பு, அம்பாந்தோட்டை, ஒலுவில் துறைமுகை அபிவிருத்தி

**பிரதேச மட்டத்தில்**

மகநகும, கமநகும தீட்டங்கள்

இலங்கை அரசானது உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் பொருளாதார இலக்குகளையும் குறிக்கோளையும் நிறைவேற்ற உள்ளது.

**உசாத்துறை நூல்கள்:**

இலங்கைப் பொருளாதாரம்

**சி. கஜானி**

**தரம் :12 C**

# கணக்கீடும் அதன் நவீன போக்கும் (Accounting and It's Modern Trend)



திரு க.சத்தியானந்தன்
B.Com Dip.in.Edu
கணக்கீடு ஆசிரியர்
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

மனிதனது தேவைகள் வரையறை செய்ய முடியாதவையாகவும் தொடர்ந்து அதிகரித்து செல்வனவாகவும் காணப்படுகின்றன. ஆனால் பொருளாதார வளங்கள் மட்டுப்படுத்தப்பட்டவையாகவே உள்ளன. இவ்வாறு அளவற்ற மனித தேவைகளை ஓரளவுக்கேனும் பூர்த்தி செய்ய வேண்டிய அவசியத்தின் பேரில் பொருளாதார வளங்களை கட்டுப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. இத்தகைய தேவையின் நிமிர்த்தமே கணக்கீடு என்பது தோற்றம் பெற்றது எனலாம்.

தற்காலத்தில் எந்தவொரு பொருளாதார அலகும் தம்மிடமுள்ள பொருளாதார வளங்களை திறமையாக பயன்படுத்துவது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு கணக்கீட்டுத் தகவல் இன்றியமையதவையாக உள்ளன. இந்த வகையிலேயே கணக்கீடானது தற்காலப் பொருளாதாரத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது.

கணக்கீடு என்பது தெரிவு செய்த ஓர் கணக்கீட்டு அலகில் ஏற்படும் பணம் என்னும் ஊடகத்தினால் பெறுமதி மதிக்கத்தக்க கணக்கீட்டு உள்ளீடுகள் பற்றிய தகவல்களை சேர்த்தல், அறிக்கையிடல், வகைப்படுத்தல், பகுப்பாய்வு செய்தல், வியாக்கியானம் செய்தல், தாயர் செய்யப்பட்ட கணக்கீட்டுத் தகவல்களை பல்வேறு தீர்மானங்களை மேற்கொள்வதற்கு வழிகாட்டும் வகையில் உள்வெளிக் கட்சியினருக்கு வழங்குதல் உட்பட்ட செயல்முறையாகும்.

கணக்கீடு என்பது தொடர்பாக அமெரிக்க கணக்கீட்டுச் சங்கம் கூறுகையில், "தகவல்களை பயன்படுத்தும் பிரிவினர் ஒரு முடிவுக்கு வந்து தீர்மானம் மேற்கொள்ளவும் ஏற்ற விதத்தில் பொருளாதாரத் தகவல்களை இனம்காணவும், அளவிடவும், தொடர்பாடலுமான கருமங்களே" கணக்கீடாகும்.

அமெரிக்க சான்றுபெற்ற பொதுக் கணக்காளர் நிறுவனம் கூறுகையில் "ஆகக் குறைந்தது பகுதியளவுக்கேனும் நிதித் தன்மையுடைய கொடுக்கல் வாங்கல்களையும் நிகழ்வுகளையும் சிறப்பான முறையில் பண ஊடகத்தைப் பயன்படுத்திப் பதிவு செய்தலும், வகைப்படுத்தலும், பொழிப்பாக்குதலும் அச்செயற்பாட்டின்

நிதிப் பெறுபேற்றை வியாக்கியானம் செய்தலும் தொடர்பான கலை" கணக்கீடாகும்.

கணக்கீடானது பல்வேறுபட்ட நோக்கை தன்னகத்தே கொண்டு காணப் படுகின்றது. அவ் நோக்கங்களை எடுத்து நோக்குவோமாயின்

1) பொருளாதார வளங்களைச் சிறப்பாகவும் வினைத்திறன் உடையதாகவும் கையாளலும் கட்டுப்படுத்தலும்

2) வளப்பயன்பாடு பற்றிய தீர்மானங்களை மேற்கொள்ளல்

3) பொருளாதாரச் செயற்பாடுகளின் பெறுபேறுகளை மதிப்பிடல்

4) சட்டத்தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளல்

மேலும் கணக்கீடானது தகவல் தேவைப் படும் பிரிவினருக்கு தகவல் வழங்குவதை சமூக பொறுப்பாகக் கொண்டு காணப்படு கின்றது. கணக்கீட்டத் தகவல்களில் இருந்து பல்வேறு தரப்பினர் பயனடைவதால் தகவல் வழங்குவது சமூகப் பொறுப்பும் சமூகத் தேவையுமாகும்.

கணக்கீட்டின் நோக்கங்களையும் அது தொடர்பான சமூகப் பொறுப்பபையும் தொடர்புபடுத்தி கணக்கீடு தொடர்பான பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப் பட்டுள்ளன.

1) கணக்கீடு சமூக நலனுக்கு உதவுகின்றது.
(Accounting as a social phenomenon)

ஒரு நாட்டினுடைய பொருளாதார அபிவிருத்தியினை விரைவுபடுத்துவதற்கு கணக்கீடானது இன்றியமையாததாகக் காணப்படுகின்றது. ஒரு நாட்டினுடைய பொருளாதார அபிவிருத்திக்கு முதலீடுகள் பல்கிப் பெருக வேண்டும். முதலீடுகள் பெருகுமிடத்து உற்பத்தி பெருக்கமடையும் வேலைவாய்ப்புக்கள் அதிகரிக்கும் முதலீட்டு வாய்ப்புக்களை இனம் கண்டு கொள்வதற்கும் எவற்றில் முதலீடு செய்து கொள்வது சிறப்பாக அமையும் என்பது தொடர்பான தீர்மானங்களை மேற்கொள் வதற்கும் கணக்கீட்டின் மூலமான தகவல் பெரிதும் உதவுகின்றது. மேலும் கணக் கீட்டின் மூலம் முதலீட்டாளர்கள் முதலீட்டின் மீதான நட்ட அச்சங்களை இழிவுபடுத்திக் கொள்வதற்கும் தொழில் முயற்சியில் இடம்பெறக் கூடிய மோச டிகளை கட்டுப்படுத்திக் கொள்வதற்கும் ஆலோசனையும் வழிகாட்டலும் வழங்கப் படுகின்றது. கணக்கீட்டின் இத்தகைய தகவல் முறைமை காரணமாக உற்பத்தியா ளர்களும், முதலீட்டாளர்களும் உற்பத்தி வியாபார முயற்சிகளில் தயக்கமின்றி முதலீடு செய்தவற்கு முன்வருகின்றனர். இதன் காரணமாக உற்பத்திப் பெருக்கத் தினூடான விலைக்குறைப்பு வேலைவாய்ப்பு என்பன ஏற்பட சமூக நலனுக்கு ஏற்புடைய தாகக் காணப்படுகின்றது.

2) கணக்கீடு ஒரு தகவல் வழங்கும் முறை
(Accounting as a Information system)

கணக்கீட்டின் அடிப்படை நோக்கங் களில் ஒன்றாக அமைவது வணிக முயற்சி ஒன்றின் மீது அக்கறை கொண்டுள்ள பல்வேறு தரப்பினரும் தீர்மானங்களை மேற்கொள்ளக் கூடிய வகையில் தகவல்களை முறையாக திரட்டி வழங்கு வதாகும். கணக்கீட்டு செயன்முறை யினூடாக (Accouting Process) வழங்கப்

படும் தகவல்களானது உண்மையான தாகவும் பொருத்தமானகவும் ஒப்பீட்டுத் தன்மை கொண்டதாகவும் யதார்த்தமாகவும் விளக்கமாகவும் அமைவது உறுதிப்படுத்தப் படுவதால் அத் தகவலைப் பயன் படுத் துவோர் நம்பிக்கையுடன் சரியாக தீர்மானங்களை எடுக்கக் கூடியதாக அமைகின்றது. இதனால் கணக்கீட்டினை தகவல் வழங்கல் முறையாக இனம் காணலாம்.

3) கணக்கீடு வளக்கட்டுப்பாட்டு முறையாகும் (Accounting as a control system)

அருமைத்தன்மை கொண்ட அல்லது பொருளாதார வளங்களை சிக்கனமாக பயன்படுத்திக் கொள்வதன் பொருட்டே கணக்கீடானது தோற்றம் பெற்றது எனலாம். தொழில் முயற்சிகளில் பொருளாதார வளங்கள் மோசடி செய்யப் படாமலும் வீண்விரயங்கள் இன்றியும் பயன்படுத்திக் கொள்வதற்கு அவ்வளங் களை முகாமை செய்வதற்கு வழிகாட்டக் கூடியதான தகவல்களை கணக்கீடு வழங்குகின்றது. இதன் காரணமாக கணக்கீடானது வளக்கட்டுப்பாட்டு முறையாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

4) முகாமைக்கருமங்களின் ஒரு பகுதியே கணக்கீடாகும் (Accounting as a sub system of Management)

நிறுவனம் ஒன்றின் உயர்ச்சியும் வீழ்ச்சியும் முகாமையிலேயே தங்கியுள்ளது. நிறுவனங்களின் முகாமையின் திட்டமிடுதல், தீர்மானம் எடுத்தல், கட்டுப் படுத்தல், எதிர்வு கூறல், மதிப்பிடுதல், செயற்படுத்தல் போன்ற பணிகளை செவ்வனே ஆற்றுவதன் மூலமே நிறுவனத்தை வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்ல முடியும். இத்தகைய பணிகளை ஆற்று வதற்கு வேண்டிய தகவல்களை கணக் கீட்டின் மூலம் பெற்றுக் கொள்ளக் கூடியதாகக் காணப்படுகின்றது. இதன் காரணமாக முகாமைக் கருமங்களின் ஒரு பிரிவாக கணக்கீட்டு பணியானது முன்னிலைப்படுத்தப்படுகின்றது.

நவீன கணக்கீடு தொடர்பாக ஆர்னோல்ட் டபிள்யு ஜோன்சன் (Arnold W.Johnson) என்பவர் ஆரம்ப நிலைக் கணக்கீடு (Elementary Accounting) என்ற தனது நூலில் குறிப்பிடும் போது நவீன கணக்கீடானது வணிகத்தின் மொழியாக அமைகின்றது. இதன் ஆழ்ந்த கருத்து யாதெனில் வணிக அமைப்புக் களின் இலாபத்தினையும் நிதி நிலமை யினையும் நேர்மையாக எடுத்துக் கூறும் பொருட்டு பொதுவாக ஏற்றுக் கொள்ளப் பட்ட கணக்கீட்டு பொதுவிதி முறைகளை பிரயோகிப்பதாகும். சமூகங்களின் தொடர்பாடலும் மொழி எவ்வாறு பிரதான கருவியாக அமைகின்றதோ அதேபோல வணிகத்தின் மொழியாக கணக்கீடு அமைந்து அதனூடாக அதன் தகவல்கள் பரிமாற்றிக் கொள்ளப்படுகின்றன. இவ்வாறாக கணக்கீட்டின் நவீன மயப்படுத் தல் காரணமாக கணக்கீட்டில் நவீன போக்குகள் முடுக்கி விடப்பட்டு வருகின்றன. இத்தகைய நவீன போக்குகள் தோன்றக் காரணமாக அமைந்த உந்துதல்களை எடுத்து நோக்குவோமாயின்

1) பொருளாதாரத்தில் ஏற்படும் அதிகரித்த பணவீக்கம் காரணமாக வரலாற்றுக்

கிரயத்தை அடிப்படையாகக் கொண்டு கணக்கீடு வழங்கும் தகவல்களை தீர்மானம் எடுத்தலில் பயன்படுத்த முடியாமை.

2) வணிகம் சமூகப் பொறுப்பை நிறைவேற்றியுள்ளதா என அறிவதற்கான தகவல்களுக்கு வாய்ப்புக்கள் இருத்தல் வேண்டும் என்ற சமூக வலியுறுத்தல்கள் அதிகரித்தல்

3) அளவு ரீதியான முறை நடத்தையியல் போன்ற பாடங்களின் அபிவிருத்தி வணிகத்தீர்மானம் எடுத்தலில் நேர்த்தாக்கம் ஏற்படுத்துவதால் கணக்கீட்டிலும் தாக்கம் ஏற்படும்.

4) வெளிக்கட்சிக்கு நிதித்தகவல்களை வழங்குவதற்காக தயார் செய்யப்படும் நிதிக்கூற்றுக்களில் பெருமளவு விமர்சனத் திற்கு உட்படுதல்

5) பாரம்பரிய கணக்கீட்டுத்துறை ஏனைய துறைகளால் ஆக்கிரமிக்கப்படல்

6) ஏனைய துறைகளின் வளர்ச்சிக்கு இணையாக கணக்கீட்டுத்துறையும் விருத்தியடைதல்.

மேற்கூறிய காரணங்களின் அடிப்படையில் கணக்கீட்டில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட நவீன போக்குகளை எடுத்து நோக்குவோமாயின்

1) பாரம்பரிய கணக்கீட்டு முறைக்குப்பதிலாக கணனிப் பயன்பாட்டுடன் கணக்கீட்டு அறிக்கைகள் தயார் செய்யப்படுதல் (Computerize Accounting)

நாளேடு (Day Book) பேரேடு (Ledger) என்ற கணக்குப் புத்தகங்களில் மனித வலுவினூடாக பதிவுகளை மேற்கொள்கின்ற (Book and Pen) பாரம்பரிய முறைக்குப் பதிலாக கணக்கீட்டு மென்பொருள் தயாரிக்கப்பட்டு (Accounting Package) கணனியினூடாக கணக்கப்பதிவுகள் மேற்கொள்ளப்படுவதுடன் நிறுவனத்தின் இலாபத்தன்மை நிதி நிலமைகள் மிக விரைவாகவும் துள்ளியமாக அறிந்து கொள்ளக் கூடியதாகக் காணப்படு வதுடன் கணக்கீட்டு வெளியீடுகளை (Accounting Reports) அச்சுப் பிரதிகளாக (Print Out) பெறக் கூடியதாக காணப் படுகின்றது. மேலும் கணனி வலையமைப் பினூடாக கணக்கீட்டுத் தகவல்களை பரிமாற்றக் கூடியதாகக் காணப்படுகின்றது.

2) பணவீக்கம் காரணமாக ஏற்படும் பணத்தின் பெறுமதி மாற்றத்தைக் கருத்தில் கொண்டு கணக்கு வைக்கும் நுட்ப முறை அறிமுகம் செய்யப்படுதல்.

(Infalationary Accounting)

பெறுமதியானது மாற்றமடைந்து செல்வதால் முனனைய கால தகவல்களை நிகழ்கால கணக்குகளில் காட்டுகின்ற போது பணவீக்கத்தினாலான இன்றைய பெறுமதியை (Present value) கருத்தில் கொண்டு கணக்கு வைப்பு செய்யும் முறை யதார்த்த ரீதியானதாக அமையும். முதலீட்டு தீர்மானங்களின் போது எதிர்காலம் கிடைக்க இருக்கும் பணத்தின் தேறிய இன்றைய பெறுமதியானது (Net Present value - NPV) மதிப்பீட்டுக் கொள்ளப் படுகின்றது.

3) வணிகங்களுக்கு சமூகப் பொறுப்பு உண்டு எனவும் அப்பொறுப்பை நிறை

வேற்றியுள்ள முறையை வெளிப்படுத்த வேண்டும் எனவும் கூறப்படுகின்றது. அப்பொறுப்புக்களை நிறைவேற்ற உருவானதே "சமூகப் பொறுப்பு கணக்கீடு (Social Responsibility Accounting)" ஆகும்.

4) வணிகத்தினால் சூழலிற்கு ஏற்படுத்திக் கொள்ளப்படும் தீங்குகள் அல்லது நலன்கள் என்பனபற்றிய தகவல்களை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல் வேண்டும். அத்தகைய சூழல் நலன்களை நிறைவேற்றுவதற்கு உருவானதே சூழல் கணக்கீடு (Environmental Accounting) ஆகும்.

5) மானிடவளத்தின் நிபுணத்துவத்தினை நிதிவடிவில் மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தல் வேண்டும். அத்தகைய மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு உருவானதே மனிதவளக் கணக்கீடு (Human Resourser Accounting) ஆகும். பாரம்பரிய கணக்கீட்டு முறையில் அளவுசார் தகவல்களில் நிதிசார் கணக்கீடுசார் தகவல்கள் மட்டுமே கணக்கீட்டு செயன்முறைக்கு உட்படுத்தக் கூடிய தகவல்கள் என்ற நிலையில் இருந்து மாறி நவீன கணக்கீட்டில் நிதிசாராத் தகவல்களும் பண்புசார் தகவல்களும் கணக்கீட்டு செயன்முறைக்கு உட்படுத்தக் கூடிய வகையில் கணக்கீட்டின் நவீன போக்கானது அமைந்து காணப்படுகின்றது.

பாரம்பரிய முறைகளில் இருந்து விடுபட்டு அறிவியல் தொழில்நுட்ப மாற்றங் களால் கணக்கீட்டில் எற்படுகின்ற நவீன போக்கானது கணக்கீட்டு அலகுகளின் தீர்மானங்களைச் சிறப்பாக மேற்கொள் ளலுக்கும் துல்லியமான பெறுபேறுகளை வெளிப்படுத்துவதற்கும் வழிவகுப்பதுடன் எதிர்கால அபிவிருத்திக்கு வழிவகுக்கும் என்பது திண்ணம்.

**உசாத்துணை நூல்கள்**


1. கணக்கீடு - ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி
2. நிதிக் கணக்கீடு - frankwood


## என் உதயம்

"எப்பொழுது தருமம் குறைந்து அதர்மத்திற்கு எழுச்சி ஏற்படுகின்றதோ? அப்பொழுது நான் என்னைப் படைத்துக் கொள்கிறேன். சாதுக்களைக் காப்பதற்கும் துஷ்டர்களை அழித்து தர்மத்தை நிலைநாட்டுவதற்கும் யுகந்தோறும் வந்து உதயமாவேன்".

– பகவத்கீதை



# பங்குடமையும் அதன் கணக்கீட்டு அம்சங்களும் (Partnership and It's Accounting Contents)

திரு பு.குகானந்தன்

B.Com Dip.in.Edu

இருவர் அல்லது அதற்கு மேற்பட் டோர் இலாபம் உழைக்கும் நோக்குடன் உடன்படிக்கை ஒன்றின் அடிப்படையில் ஈடுபடின் அம்முயற்சி பங்குடமை எனப்படும். 1890 ஆம் ஆண்டின் பங்குடமைச் சட்டமானது பின்வருமாறு பங்குடமை அமைப்பினை வரைவிலக் கணப்படுத்துகின்றது. "இலாப நோக்குடன் ஏதாவது தொழில் முயற்சி ஒன்றில் ஈடுபடக் கூடிய நபர்களுக்கு இடையிலான உறவு" பங்குடமையாகும். இங்கு "உறவு" என்பது பரஸ்பர நம்பிக்கையினைக் குறிக்கின்றது.

## பங்குடமை அமைப்பு ஒன்றின் பண்புகள் (NATURES OF PARTNERSHIP)

- இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட உரிமையாளர்கள் இருத்தல்.
- பங்குடமையில் இணைந்து செயற்படும் நபர்களுக்கிடையே உறவு காணப்படும். அதாவது பங்காளர்களுக்கான உறர்வு முதல்வர் முகவர் உறவு காணப்படும்.
- தொழில் முயற்சி ஒன்று இருத்தல்.
- தொழில் முயற்சியினால் உழைக்கப்படும் இலாபம் அல்லது நட்டம் பங்காளர் களிடையே பகிர்வு செய்யப்படும்.
- பங்குடமையானது அனைத்துப் பங்காளர் களினாலே அல்லது அனைத்துப் பங்காளர் களின் சார்பில் பங்காளர்களின் ஒரு பிரவினராலோ முகாமை செய்யப்படலாம்.
- சொத்துக்கள் தொடர்பாக பொதுவான உரிமை இருத்தல்.
- சட்ட ஆளுமை இல்லை.

## பங்குடமை ஒப்பந்தம் (Partnershipdeedor Agreement)

பங்குடமையமைப்பில் பங்காளர் களின் செயற்பாடுகள் தொடர்பாக அவர்களுக்கிடையில் ஏற்படுத்திக் கொள் ளப்படும் ஒரு உடன்படிக்கையே பங்குடமை ஒப்பந்தம் எனப்படும். பங்குடமை அமைப்புக்களில் ஒன்றக்கு மேற்பட்ட உரிமையாளர்கள் இருப்பதனாலும் அவரக்ள் அனைவருக்கும் முகாமைக கருமங்களில் ஈடுபடுவதற்கு உரிமையிருப் பதனாலும் பங்குடமை அமைப்பினை செயற்படுத்திக் கொண்டு செல்லுகின்றபோது முரண்பாடுகள் பிணக்குகள் ஏற்படுவது தவிர்க்க முடியாதது ஆகும்.

எனவே இத்தகைய முரண்பாடுகளினை குறைக்க இத்தகைய பங்குடமை ஒப்பந்தம் உதவுகின்றது எனலாம்.

இப்பங்குடமை ஒப்பந்தமானது பின்வரும் மூன்றுவழிகளில் ஏற்படுத்தப்படலாம்.

1. எழுத்து மூலமாக by written
2. வாய்மொழி மூலமாக by Oral
3. நடத்தை மூலமாக by conduct

மேற்கூறப்பட்ட ஒப்பந்தங்களில் எழுத்து மூலமான ஒப்பந்தமே உறுதியான ஒப்பந்தமாக கருதிக் கொள்ள முடியும்.

பங்குடமை ஒப்பந்தங்களில் எழுத்து மூலமான ஒப்பந்தத்தில் உள்ள டக்கப்படக் கூடிய பல்வேறு விடயங்கள் பற்றிக் குறிப்பிடலாம். அவ்வாறு குறிப்பிடப் படும் விடயங்களில் கணக்கீட்டில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய விடயங் களாக பின்வருவனவற்றினைக் கூறிக் கொள்ள முடியும்.

1) ஒவ்வொரு பங்காளரினதும் மூலதனத்தின் அளவு.
2) பங்காளர்களினால் பங்குடமையில் ஈடுபடுத்திய மூலதனத்திற்கு வட்டி அனுமதிக்கப்படுமா? அவ்வாறாயின் ஆண்டுக்குரிய வட்டி வீதம்.
3) பங்குடமையின் செயற்பாடுகளில் ஈடுபடும் பங்காளர்கள் சம்பளம் பெறுவதற்கு உரிமை உடையவரா? அவ்வாறாயின் அவர்களின் மாத / வருடாந்த சம்பளத் தொகையின் அளவு.
4) பங்காளர்களின் எடுப்பனவுகள் மீது வட்டி அறவிடப்படுமா? அவ்வாறாயின் ஆண்டிற்கான வட்டியின் சதவீதம்
5) பங்காளர் நடைமுறைக் கணக்குகளை வரவு நிலுவைகளிற்கு வட்டி அறிவடப்படுமா? அவ்வாறாயின் ஆண்டிற்கான வட்டி வீதம்
6) பங்காளர் நடைடுறைக் கணக்கின் செலவு நிலுவைகளுக்கு வட்டி அறவிடப்படுமா அவ்வாறாயின் ஆண்டிற்கான வட்டி வீதம்.
7) பங்குடமையில் உழைக்கப்படும் இலாப நட்டங்களை பங்காளரிடையே பகிர்வு செய்ய வேண்டிய வீதம்
8) ஒரு பங்காளரின் ஆகக் குறைந்த இலாப பங்கிற்கு உத்தரவாதம் வழங்கப் படுகின்றதா? அவ்வாறாயின் உத்தரவாதத் தொகையின் அளவு உத்தரவாத சீராக்கப்படும் முறை.
9) பங்காளர் மூலதனத்தின் அளவுக்கு அதிகமாக வியாபாரத்திற்கு வழங்குகின்ற கடன்களும் முற்பணங்களும் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய ஆண்டிற்கான வட்டி வீதத்தின் அளவு.
10) பங்குடமையில் புதிய பங்காளனை சேர்க்கும் போது அல்லது ஏற்கனவே உள்ள பங்காளர் ஓய்வு பெறும் போது

1. பங்குடமையின் நன்மதிப்பு கணிப்பீடு செய்யப்பட வேண்டி வழிமுறை

2. ஓய்வு பெறும் பங்காளியின் உரிமைத் தொகை

3. ஓய்வு பெறும் பங்காளனுக்கு செலுத்தப்பட வேண்டியுள்ள அவரது உரிமைத் தொகையானது வியாபாரத்தில் நிறுத்தி வைக்கப்படும் போது செலுத்தப்பட வேண்டிய ஆண்டுக்குரிய வட்டியின் சதவீதம்

**பங்குடமை தொடர்பில் செல்வாக்குச் செலுத்தும் பிரதானசட்டங்கள்**

1. 1890 ஆம் ஆண்டு பங்குடமைக் கட்டளைச் சட்டம்
2. 2007 ஆம் ஆண்டு 7ஆம் இலக்க கம்பனிச் சட்டம்

**1890 ஆம் ஆண்டு பங்குடமைச் சட்டத்தின் 24ஆம் பிரிவின் சார்ந்துள்ளமை**

1. இலாப நட்டங்கள் பங்காளரிடையே சமமாக பங்கிடப்படல் வேண்டும்.

2. பங்குடமை முடிவிற்கு கொண்டு வரும் போது பங்குடமையில் மூலதனதினை சமனாக பகிர்ந்து கொள்வதற்கு பங்காளர்களிற்கு உரிமை உண்டு.

3. பங்காளரின் மூலதனத்திற்கு வட்டி இல்லை.

4. வியாபார செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு உரிமை உண்டு ஆனால் அதற்கான சம்பளதினை பெறுவதற்கு உரிமை இல்லை.

5. பங்குடமைக்கு மூலதனத்திற்கு மேலதிகமாக கடனை அல்லது முற்பணம் என்பவற்றை வழங்கியிருந்தால் அதற்கான 5% வட்டி (ஆண்டு) பெறுவதற்கு உரிமை உண்டு.

6. பங்காளர்களின் பற்றுக்கு வட்டி அறவிட முடியாது.

7. பங்காளர் பங்குடமையின் வியாபாரச் செயற்பாடுகளில் தொடர்பில் செலவு செய்திருந்தால் அதன் மீளப் பெறுவதற்கது உளர்த்துடையவராவர்.

8. பங்குடமையில் உள்ள அனைத்துப் பங்காளர்களினதும் அனுமதி இன்றி புதிய பங்காளரை பங்குடமையில் சேர்த்துக் கொள்ள முடியாது.

9. பங்குடமையின் வியாபாரக் கணக்குப் புத்தகங்கள் பங்குடமையின் பிரதான அலுவலகதில் வைத்திருக்கப்படும் அத்துடன் அதனை பரிசீலனை செய்தவற்கு அனைத்து பங்காளர்களிற்கும் உரிமை உண்டு.

10. பங்குடமையில் பங்காளர்களிக்கிடையில் ஏற்படும் சாதாரண விடயங்கள் தொடர்பாக எழும் கருத்து வேறுபாடுகளை பெரும்பாலான பங்காளர்களின் விருப்பத்தின்படி தீர்த்துக் கொள்ளப்படல் வேண்டும். ஆனால் பங்குடமையில் வியாபார நோக்கங்களில் மாற்றம் செய்ய வேண்டுமாயின் அனைத்து பங்காளர்களினதும் சம்மதம் தேவை.

## பங்குடமை வியாபார அமைப்புக்களின் கணக்கீடு தொடர்பான தனித்துவமான விடயங்கள்

பங்குடமைக் கணக்கீடு தனி வியாபார கணக்கீட்டினை பெரிதும் ஒத்ததாக காணப்படுகின்ற போதிலும் ஆனால் கீழ்வரும் விடயங்களில் மட்டும் பங்குடமை கணக்கீடு தனித்தவமாக காணப்படுகின்றது.

•பங்காளர் மூலதனங்களினைப் பராமரித்தல்

•தேறிய இலாபம் அல்லது நட்டத்தினைப் பகிர்வு செய்தல்

•இலாப உத்தரவாதம் வழங்கப்பட்டதொகையினை சீர் செய்தல்

•கடந்த காலங்கில் தவாறக கணிப்பீடு செய்யப்பட்ட இலாபம் அல்லது நட்டம் தொடர்பான சீராக்கங்கள்

பங்குடமை அமைப்பினை புனரைமைப்பு தொடர்பான கணக்கீடு இவ்விடயம் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது.

1. இலாப நட்ட விகிதாசார மாற்றங்கள்
2. புதிய பங்காளரை அனுமதித்தல்
3. இருந்துவரும் பங்காளர் ஓய்வு பெறுதல் அல்லது மரணமடைதல்
4. பங்குடமையினை புனரமைத்தல்

## பங்குடமை வியாபார அமைப்புக்களின் தேறிய இலாபத்தினை தீர்மானித்தல்

தனிவியாபார அமைப்பு ஒன்றில் தேறிய இலாபத்தினை கணிப்பீடு செய்யும் சகல விதிமுறைகளையும் பின்பற்றிய வகையிலே பங்குடமை வியாபார அமைப்புக்களினது தேறிய இலாபக் கணிப்பீடு மேற்கொள்ளப்படும். தனி வியாபாரம் ஒன்றின் வியாபார இலாப நட்டக் கணக்கினை பெரிதும் ஒத்ததாகவே பங்குடமை அமைப்பின் வியாபார இலாபநட்டக் கணக்கு அமையும். ஆனாலும் பங்குடமையின் தேறிய இலாபத்தினை கணிப்பீடு செய்வதில் பின்வரும் விடயத்தினை இட்டு கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

1. பங்குடமையில் இருந்து பங்காளர் உழைக்கக் கூடிய தனிப்பட்ட வருமானங்கள் பங்குடமையின் செவாக கருதப்பட்டு தேறிய இலாப கணிப்பீட்டில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

உ-ம் : கட்டிட வாடகை, கடனிற்காக வட்டி

பங்குடமை வியாபார அமைப்புக்களின் இலாப பகிர்வு

தனிவியாபார அமைப்புக்களில் இலாப நட்டக் கணக்கின் மூலமாக கணிப்பீடு செய்யப்படும் தேறிய இலாபம் உரிமையாளரின் பங்குடமையினால் உழைக்கப்படும் இலாபமும் பங்களாரின் மூலதனக் கணக்கிற்கு அல்லது பங்காளர் நடைமுறைக்கணக்கிற்கு மாற்றப்படல் வேண்டும்.

ஆனால் பங்குடமை வியாபாரத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட பங்காளர்கள் இருப்பதனால் தேறிய இலாபம் பங்காளர்களிடையே பகிர்வு செய்யப்பட்டதன் பின்னரே அவ்வாறு மூலதனக் கணக்கிற்கு அல்லது நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்படல் வேண்டும்.

## இலாப நட்டங்களின் கணக்கு

பங்குடமையினால் உழைக்கப்பட்ட தேறிய இலாபத்தினை பங்காளரின் ஒப்பந்தத்தின் பிரகாரம் பகிர்வு செய்வதற்காக தயாரிக்கப்படும் கணக்கு இதுவாகும்.

இக் கணக்கு இலாப நட்டக் கணக்கின் ஒரு பகுதியாகவோ அன்றேல் அதன் கீழ் வோறாகவோ தயாரிக்கப்படும்.

பெரும்பாலான பங்குடமை வியாபார அமைப்புக்களில் பங்காளர்கள் மூலதனத்தினை சமனாக இடுவதில்லை. இதன் காரணமாக பங்குடமையினால்உழைக்கப்பட்ட தேறிய இலாப பங்களாரிடையில் நேரடியாக பகிர்வு செய்யப்படாது பின்வரும் வழி முறைகளில் பகிர்வ செய்யப்படுகின்றது.

1. மூலதனம் மீதான வட்டி என்ற வகையில் இலாபத்தினை பகிர்வு செய்தல்

2. சம்பளம் அல்லது தரகு என்ற வகையில் இலாபத்தினை பகிர்வு செய்தல்.

3. மூலதனவட்டி பங்களார் சம்பளம் என்பவற்றினை தேறிய இலாபத்திலிருந்து கழித்து பின்னர் எஞ்சிய இலாபத்தினை பங்காளரிடையே பகிர்வு செய்தல்

## மூலதனம் மீதான வட்டி

பங்காளர்கள் பங்குடமையில் மூலதனத்தினை சமனாக ஈடுபடுத்தாவிடத்து இலாப பங்கினை நியாயமான முறையில் மேற்கொள்வதற்காக பங்குடமை ஒப்பந்தங்களில் மூலதனத்தின் மீதான வட்டி குறிப்பிடப்படுகின்றது. பங்குடமை ஒப்பந்தங்களில் மூலதனம் மீதான வட்டி உள்ளடக்கப்படுவதற்கான நியாயங்கள்

1. இலாபநட்ட விகிதாசாரம் சமனான இருவருக்கும் போது பங்காளர்கள் அதிக மூலதனத்தினை ஈடுபடுத்துவதனை தூண்டுவதற்கு

2. அதிக மூலதனத்தினை இருவர் கூடுதலான அளவில் நட்டப் பொறுப்பினையும் இணைந்த மூலதனத்தினை இடுபவர் குறைவான அளவில் நட்டப் பொறுப்பினையும் ஏற்பதன் காரணமாக கூடியளவில் நட்டப் பொறப்பினை ஏற்கும் பங்காளருக்கு கூடிய அளவு இலாபங்கினை வழங்கவதற்கு

3. பங்காளர் ஈடுபடுத்திய மூலதனத்தின் மீது ஆகக் குறைந்த இலாபத்தினை உழைப்பதனை தூண்டுவதற்கு.

## பங்காளர் சம்பளம்

உரிமையாளர்கள் நிறுவனத்தின் வியாபாரக் கருமங்களில் ஈடுபடுவது என்பது அவரக்ளின் கடமையாகும். அவர்கள் தமது நிறுவனங்களிலிருந்து சம்பளத்தினை பெற்றுக் கொள்ள முடியாது. ஆனால் பங்குடமையில் அனைத்துப் பங்காளர்களும் வியாபாரக் கருமங்களில் ஒரே மாதிரியான பங்களிப்பினை வழங்குவதில்லை என்ற காரணங்களினால் பங்குடமை ஒப்பந்தங்களில் பங்காளார்களிற்கு சம்பளம் வழங்கப்படும். பங்குடமை ஒப்பந்தம் ஒன்றில் பங்காளருக்கு சம்பளம் வழங்கப்படுவதற்கான நியாயங்கள்.

1. அனைத்துப் பங்காளரும் பங்கடமையின் வியாபார கருமங்களில் ஒரே மாதிரியான பங்களிப்பினை வழங்கப்படாதவித்து கூடிய பங்களிப்பினை வழங்கம் பங்காளர் சம்பளம் என்ற வகையில் கூடியளவான இலாப பங்கினை பெறுவர்.
2. ஆர்வத்துடன் நிர்வாகத்தில் ஈடுபடுவதற்கு
3. உண்மையான செயற்பாட்டு இலாபத்தினை மதிப்பீடு செய்வதற்கு

## இலாப நட்ட பகிர் கணக்கினதும் பங்காளர் மூலதனக் கணக்கினதும் அமைவு மிதக்கும் [மாறும்] மூலதனக் கணக்கு

மூலதனக் கணக்கொன்றில் பங்காளர்களின் உரிமையில் மாற்றத்தினை ஏற்படுத்தக் கூடிய அனைத்து விடயங்களும் பதியப்பட்டு பராமரிக்கப்படும் மூலதன கணக்கு மிதக்கும் மூலதனக் கணக்கு என அழைப்பர்.

இவ்வாறான கணக்கு பேணி பங்காளர்கள் தாமாக உழைத்து இலாபத்தினை விடவும் கூடுதலான தொகையினை பங்குடமையிலிருந்து பற்றி விட முடியும். இதன் காரணமாக தங்களை அறியாமலே தமது மூலதனத்தின் பகுதியினை எடுத்து விடலாம்.

இவ்வாறு பங்காளரினால் முதலீடு செய்யப்பட்ட மூலதனத் தொகை படிப்படியாக குறைவடைந்து பங்குடமையில் வழமையான வியாபார செயற்பாடு பகிர்ந்து விடும். இதனால் கட்டுப்பாடற்ற எடுப்பனவின் பின் பங்காளரிடையே கருத்து வேறுபாடுகளினை தோற்றுவித்து விடலாம். இந்நிலையில் தடுப்பதற்காக பங்குடமையில் பங்காளர்களின் மூலதனக் கணக்கு நிலையானதாகப் பராமரிக்கப்பட்டு வருவது விரும்பப்படுகின்றது.

## நிலையான மூலதனக் கணக்கு

பங்காளர்களினால் பங்குடமையில் முதலீடு செய்வதற்கு ஒப்புக் கொண்டு பங்குடமைக்கு கொண்டு வந்த அனைத்து வளங்களிலும் மூலதனக் கணக்கில் செலவில் பதிந்து அத்தொகையினை நிலையானதாக தொடர்ந்து பராமரிக்கப்படும் கணக்கு நிலையான மூலதனக் கணக்கு ஆகும். நிலையான மூலதனக் கணக்கு பகிர்வு செய்யப்படும் விடயங்கள்

1. பங்காளர்களினால் கொண்டு வந்த காசு மற்றும் பிற வளங்கள்
2. மூலதன இலாபங்கள் நட்டங்கள்
   i. நன்மதிப்பு ii. மறுபடி விலைமதிப்பு
3. மேலதிக மூலதனம்
4. எடுப்பனவு

## பங்காளர் நடைமுறைக் கணக்கு

பங்காளர் மூலதனக் கணக்கு மீதியினை நிலையானதாக பராமரித்து வரும் பங்குடமை வியாபாரத்திற்கும் பங்காளர்களிற்கும் இடையில் ஏற்படும் கொடுக்கல் வாங்கல்களை பகிர்வு செய்யும் கணக்கு இதுவாகும். பங்காளர் நடைமுறைக் கணக்கு மூலதனக் கணக்கின் ஒரு பகுதியாக நடைமுறைக் கணக்கு பேணுவதால் பங்காளர் மூலதன அளவில் ஏற்படும் மாற்றங்களினை துல்லியமானதாக அளவிடக் கூடியதாக உள்ளது. பங்காளர் நடைமுறைக் கணக்கு செலவு மீதியினை காட்டுமாயின் இந் செலவு மீதியில் அளவுக்கு பங்காளர் மூலதனதின் அளவு அறிந் காணப்படும். வரவு மீதியினை காட்டுமாயின் வரவு மீதியின் அளவுக்கு பங்காளர் மூலதன கணக்கு குறைவாக காணப்படும்.

## உசாத்துணை நூல்கள்

1. கணக்கீடு - ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி
2. நிதிக் கணக்கீடு - frankwood



# கணக்கீட்டு நியமம்

**நா**ம் ஒவ்வொரு செயற்பாடுகளையும் நியமங்கள், நியதிகள் அடிப்படையிலேயே மேற்கொள்கின்றோம். அந்தவகையில் கணக்கீட்டிலும் நியமங்கள் முக்கியம் பெறுகின்றன.

சொத்துக்களை மதிப்பிடல் போன்றவற்றில் பயன்படுத்தக் கூடிய மாற்று முறைகளைத் தவிர்த்து ஏற்றுக் கொள்ளப்பட்ட பொதுவான முறையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்காக வழிகாட்டும் நியமங்கள் கணக்கீட்டு நியமங்கள் எனப்படும். இவ் நியமங்கள் அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்னர் கணக்கீட்டு எண்ணக்கரு, கணக்கீட்டு நடைமுறை, கணக்கீட்டு கருதுகோள், கணக்கீட்டு அடிப்படை போன்ற முறைகளில் கண்கீட்டுச் செயற்பாடு பூரணப்படுத்தப்பட்டு வந்தது. சர்வதேசக் கணக்கீட்டு நியமம், இலங்கைக்கணக்கீட்டு பெயர் நியமம் எனும் முறைகளில் இந்நியமம் காணப்படுகின்றது.

சட்ட அதிகாரம் பெற்ற கணக்கீட்டு கொள்கையை இலங்கை கணக்கீட்டு நியமம் எனக் கூறலாம். இந்நியமங்களை பட்டயக் கணக்கறிஞர் நிறுவனத்தால் வெளியிடப்படுகின்றன. 1995 இல் 15 கொண்ட இலங்கைக் கணக்கீட்டு கணக்காய்வு நியமச்சட்டத்தின்படி பெயர் குறிப்பிட்ட விசேட வணிகங்கள் கணக்குக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது நியமத்திற்கு அமைவாகத் தயாரித்தல் வேண்டும் என இது குறிப்பிடுகின்றது.

இலங்கையில் பின்பற்றப்படும் கணக்கீட்டு நியமங்களில் க.பொ.த(உ/த) வகுப்பு மாணவர்களுக்கு அவசியமான நியமங்களும், அவை எந்த சர்வதேச கணக்கீட்டு நியமத்திற்கு அமைவானது என்பது தரப்படுகின்றது.

| இலங்கைகணக்கீட்டு பெயர் நியமத்திற்குரிய இலக்கம் | | சர்வதேச கணக்கீட்டு நியமத்திற்கு உரிய இலக்கம் |
|---|---|---|
| 03 | நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் | 01 |
| 05 | சரக்கிருப்பு | 02 |
| 09 | காசுப்பாய்ச்சல் கூற்று | 07 |

| | | |
|---|---|---|
| 10 | கால எல்லைக்கான தேறிய இலாபம், தேறிய நட்டம், அடிப்படை வழுக்கள் கணக்கீட்டுக் கொள்கை மாற்றம் | 08 |
| 12 | ஐந்தொகைத் திகதிக்குப்பின் நிகழ்வுகள் | 10 |
| 18 | ஆதனம், பொருத்துக்களும், உபகரணங்களும் | 16 |
| 36 | ஏற்பாடு நிகழத்தக்க பொறுப்பு, நிகழத்தக்க சொத்து | 37 |

நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படையை கணக்கிட்டு நியமம் 03 சிபார்சு செய்கின்றது. இலங்கை கணக்கீட்டு நியமத்தைப் பின்பற்றவதால் கணக்கீட்டு அறிக்கைகளுக்கு மேலதிக பாதுகாப்பு அளித்து முறையாகச் சமரப்பிக்க முடிகின்றது. ஒவ்வொரு நிறுவனமும் தாம் கணக்கீட்டில் பயன்படுத்திய கொள்கைகளை வெளிப்படுத்த வேண்டும் என நியமம் 03 குறிப்பிடுகின்றது.

வரலாற்றுக் கிரய கணக்கு வைப்பில் பின்பற்ற வேண்டிய நுட்ப முறைகள் தொடர்பான அடிப்படை வழிகாட்டல்களைத் தருவது இலங்கைக் கணக்கீட்டு நியமம் 05 ஆகும். இது சரக்கிருப்புத் தொடர்பானது. செயற்பாட்டு இலாபம் கணிப்பதற்கான விற்ற சரக்குகளின் கிரயக் கணிப்பும், சொத்தொன்றாகக் காட்ட வேண்டிய இருப்புச் சரக்கின் கணிப்பும் தொடர்பாக பின்பற்ற வேண்டியவை தொடர்பாக இவ் நியமம் வழிகாட்டுகின்றது.

கணக்கீட்டு நியமம் 07 காசுப் பாயச்சல் கூற்றுப் பற்றி கூறுகின்றது. காசை உருவாக்க நிறுவனத்திற்கு உள்ள கற்றலும் அந்தக் காசைப் பயன்படுத்த வணிகத்தின் தேவையையும் கையாண்ட முறையையும் கூறுவது காசுப் பாயச்சல் கூற்ற ஆகும். இந்நியமங்களை வழங்குகின்றது காசுப்பாய்ச்சல் கூற்று வெளிச் செயற்பாடு, நிதியிடல் செயற்பாடு என மூன்று வகைச் செயற்பாடுகள் வெளிப்படுத்தப்பட வேண்டும்.

வருமனாக் கூற்றில் தேறிய இலாபத்தை அல்லது தேறிய நட்டத்தை செம்மை செய்தலும், அடிப்படை கணக்கீட்டு வழுக்களை இனங்காட்டுதலும், கணக்கீட்டுக் கொள்கைகளை வெளிப்படுத்துதல் பற்றிய திட்டமான முறையை அறிமுகஞ் செய்து அதனை கணக்கீட்டு நியமம் 10 வழிகாட்டுகின்றது. நிதிக்கூற்றுகளைத் தயாரிப்பவர்களுக்கும், ஆராய்பவர்களுக்கும் இலகுவாக விளங்கிக் கொள்ளவும் ஒப்பிடவும் வாய்ப்பை ஏற்படுத்துதலும் இந்நியமத்தின் பிரதான நோக்கங்களாகும்.

கணக்கீட்டு நியமம் 12 ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் இடம்பெறும் நிகழ்வுகள் பற்றிக் குறிப்பிடுகின்றது. நிதியறிக்கை தயாரிக்கும் தினத்தில் நிகழ்ந்தாலும், இறுதிப் பெறுபேறும் அதனால் இலாப நட்டத்தில் ஏற்படும் தாக்கமும் எதிர்காலத்தில்

தீர்மானிக்கப்படும் நிலையிலிருந்தால் அது நிகழத்தக்கதெனக் கூறப்படும். ஐந்தொகைத்திதகிக்குப் பின்னர் நிகழத்தக்கவை என நிகழத்தக்க நட்டத்தையும், நிகழத்தக்க இலாபத்தையும் குறிப்பிடலாம்.

ஆதனம், பொறித்தொகுதி உபகரணம் என்பவற்றின் கணக்கீட்டிற்குரிய முறைகளை இலங்கைக்கான கணக்கீட்டு நியமம் 18 விரிவாக எடுத்துரைகின்றது. இலங்கைக் கணக்கீட்டு நியமம் 08 இலங்கைக் கணக்கீட்டு நியமம் 18 இன் மூலமாகப் பாவனையிலிருந்து விலக்கப்படுகின்றது. இங்கு சொத்தை உடமையாக்கிய போது கிரயமிடல், சொத்துத் தொடர்பான பிந்திய செலவுகள் சொத்து தொடர்பான பெறுமானத் தேய்வு குறை என்பன பற்றியும் இங்கு விரிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்பாடுகள், நிகழத்தக்க பொறுப்புக்களும் நிகழத்தக்க சொத்துக்களையும் இனங்காணல், அளவிடக் கூடிய அடிப்படையைப் பயன்படுத்தல் இனம் காட்டுதல், வெளிப்படுத்துதல் மூலமாக நிதிக் கூற்றக்களைப் பயன்படுத்துபவர்கள் புரிந்து கொள்ளக் கூடிய அம்சங்களை கணக்கியல் நியமம் 36 கொண்டுள்ளது. 01.01.2002 லிருந்து பாவனைக்கு வந்த SLAS 36, SLAS 12 இல் நிகழத்தக்க பொறுப்புத் தொடர்பாக இருந்த விடயங்களைப் பாவனையிலிருந்து அகற்றுகின்றது.

இவ்வாறு கணக்கீட்டினை செம்மையாகவும், வினைத்திறனாகவும் செய்வதற்கு கணக்கீட்டு நியமமானது வரையறை செய்கின்றது.

ச. அனுஷா
தரம் : 13C

தலைவர்கள் அறுவகைப்படுவர்

நல்லியல்புகள் அமைந்த பெருமிதத் தலைவர்கள்

பொறுப்பற்ற தலைவர்கள்

பொறுப்பேற்கத் தயங்கும் தலைவர்கள்

இடைக்காலத் தலைவர்கள்

தலைமைப் பண்பு இல்லாத தலைவர்கள்

சந்தர்ப்ப வசத்தால் தலைவர்கள் ஆனவர்கள்

# செம்மையாக்கல்கள் / சீராக்கங்கள்



01) இறுதி இருப்பு

வியாபார நோக்குடன் / மீள் விற்பனை நோக்குடன் கொள்வனவு செய்யப்பட்டு கொள்வனவு கணக்கில் பதிவு செய்யப்பட்ட உருப்படிகளில் குறித்த தினத்தில் விற்பனை ஆகாத உருப்படி இறுதி இருப்பாகும்.

இதன் இரட்டை பதிவு

இறுதி இருப்பு கணக்கு வரவு

வியாபரக் கணக்கு செலவு

இறுதி இருப்பு கொள்விலையில் மதிப்பிடப்பட்டு அதுவே இறுதி இருப்பு பெறுமதியாக சேர்க்கப்படும்.

இறுதி இருப்பானது கொள்விலையிலும் சந்தை விலையிலும் தரப்படும் இடத்து எது குறைவான பெறுதியோ அதுவே கணக்கீட்டில் சேர்க்கப்படும்.

இருப்புக்கள் குறித்த தினத்தில் வியாபார நிலையத்தில் உள்ளேயும் வெளியேயும் காணப்படலாம்.

வழிச் சரக்கு

கொள்வனவு பட்டியல் பெறப்பட்டு கொள்வனவு கணக்கில் பதியப்பட்ட இருப்பு பௌதீக ரீதியில் கணிப்பிடப்பட்டு பெறுமதி இடும் வேளையில் நிறுவனத்தை வந்தடையா நிலையில் இருக்கும் இருப்புக்கள் ஆகும். அல்லது குறித்த நிதி ஆண்டில் கொள்வனவு செய்து ஏடுகளில் பதியப்பட்டு பண்டக சாலைக்கு வந்து சேராத இருப்பாகும். இது நிறுவனத்திற்கு உரிமையானபடியால் இறுதி இருப்புடன் சேர்க்கப்படும்.

02) கொடுக்க வேண்டிய செலவுகள்

நிதியாண்டு காலப்பகுதியில் குறிப்பிட்ட செலவு தொடர்பாக செலுத்த வேண்டிய தொகையே ஆகும். கொடுக்க வேண்டிய செலவு பொறுப்பாகும். எனவே இது காட்டப்படும்.

இரட்டைப் பதிவு

குறிப்பிட்ட செலவு கணக்கு வரவு

கொடுக்க வேண்டிய செலவு கணக்கு செலவு

03) முற்பணச் செலவு

குறித்த நிதியாண்டில் குறிப்பிட்ட செலவீனம் தொடர்பாக செலுத்த வேண்டிய தொகையிலும் பார்க்க கூடுதலான தொகையை செலுத்தி இருப்பின் அது முற்பண செலவு எனப்படும். முற்பணச் செலவு நடைமுறைச் சொத்தாக காணப்படுவதால் .... நடைமுறை சொத்தின் கீழ் காட்டப்படும்.

இரட்டைப் பதிவு

முற்பண செலவு கணக்கு வரவு

குறிப்பிட்ட செலவு கணக்கு செலவு

04) பெற வேண்டிய வருமானம்

குறித்த நிதியாண்ட காலப்பகுதி முடிவில் இன்னும் நிறுவனத்திற்கு வர

வேண்டிய தொகையே பெற வேண்டிய வருமானமாகும். இது சொத்தானபடியால் ... நடைமுறை சொத்தின் கீழ் காட்டப்படும்.

இரட்டைப் பதிவு

பெறவேண்டிய வருமான கணக்கு வரவு

குறித்த வருமான கணக்கு செலவு

05) முற்பண வருமானம்

குறித்த நிதியாண்டில் குறிப்பிட்ட நிறுவனம் குறிப்பிட்ட வருமானம் தொடர்பாக மேலதிகமாக பெற்ற தொகையே இதுவாகும். இங்கு முற்பண வருமானம் என்பது அடுத்த ஆண்டு வருமானமாக கருதப்படுவதால் இது பொறுப்பாகும். எனவே இது ...... நடைமுறை பொறுப்பின் கீழ் காட்டப்படும்.

இரட்டைப் பதிவு

குறித்த வருமான கணக்கு வரவு

வருமான முற்பண கணக்கு செலவு

06) வழுக்கள்

வழுக்கள் என்பது கணக்கின் தொகையை இன்னொரு கணக்கில் பதிதல் அல்லது முற்றாக பதிவு செய்யாது விடல் போன்றவற்றை கருதலாம்.

07) பெறுமானத் தேய்வு

பௌதீக காரணிகளால் ஒரு சொத்து தொடர்ந்து பயன்படுத்துவதால் ∴ பயன்படுத்தாமல் வைத்திருப்பதால் ஏற்படும் பெறுமதி ரீதியிலான குறைவீனம் பெ.தேய்வாகும். இது நிறுவனத்திற்கு ஏற்படும் நட்டம் / செலவு ஆகும். இது பின்வரும் முறைகளில் கணிப்பீடு செய்யப்படும்.

1. நேர் கோட்டு முறை
2. ஒருங்குபாக மீதி முறை

பெ.தேய்வு = சொத்தின் கிரயம் - இறுதி பெறுமதி

பயன்தரு ஆயுட் காலம்

08) அறவிட முடியாக் கடன்

கடன்பட்டோனின் திட்டவட்டமாக (க/ப இறந்தால், முறிவடைந்தால், காணாமல் போனால்) கிடைக்கப் பெறாமல் போகும் கொடுத்த கடன் தொகையே ஆகும்.

இரட்டைப் பதிவு

அறவிடமுடியாக் கடன் கணக்கு வரவு

கணக்கு செலவு

09) ஐ.க.ஏற்பாடு

கடன்பட்டோரில் ஒரு குறிப்பிட்ட தொகை கிடைக்கலாம் ∴ கிடைக்காமல் விடலாம். என்ற சந்தேக நிலையால் காணப்படும் தொகையே ஐ.கடனாகும். இவ் ஐயக்கடனுக்காக லாபத்தில் இருந்து ஒதுக்கப்படுகிற ஒதுக்கமே ஐயக் கடன் ஏற்பாடாகும்.

இரட்டைப் பதிவு

ஐயக் கடன் கணக்கு வரவு

ஐயக் கடன் ஏற்பாட்டு கணக்கு செலவு

இது 2 வகைப்படும்

1. பற்றாக்குறை ஐ.கடன்
2. மிகை ஐ.கடன்

10) மீளப் பெற்ற அறவிடமுடியாக கடன்

கடன்பட்டோரில் இருந்து பெறமுடியாது என பதிவழிக்கப்பட்ட அ.மு∴ கடன் அது சில சமயங்களில் மீளப் பெறப்படுதல் ஆகும்.

இரட்டைப் பதிவு

கடன்பட்டோர் கணக்கு வரவு

மீளப் பெற்ற அ.மு.க கணக்கு செலவு

11) கடன்பட்டோர் கழிவு ஏற்பாடு

கடந்த காலாண்டு காலத்தின் இறுதி திகதிகளில் நிலுவையாக உள்ள கடன்பட்டோர் பணத்தினை தரக் கூடிய நிலையில் இருப்பவனுக்கு கழிவு வழங்க கூடிய சாத்தியம் உள்ளமையால் அவ்வாறு அனுமதிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் கழிவிற்காக லாப நட்ட கணக்கில் இருந்து சிராக்கி வைத்திருக்கப்படும் ஏற்பாடு இதுவாகும்.

இரட்டைப் பதிவு

இலாப நட்ட கணக்கு வரவு

கடன்பட்டோர் கழிவு ஏற்பாட்டு கணக்கு செலவு

12) நன்கொடையாக வழங்கப்பட்ட பொருள்

நன்கொடையாக பொருள் வழங்கப்பட்டிருப்பின் நன்கொடையாக வழங்கப்பட்ட பொருள்களின் கொள்விலை கொள்வனவில் இருந்து கழிக்கப்படும்.

13) சேதமடைந்த சரக்கு

வியாபார இருப்பில் ஒரு பகுதி சேதமடைந்திருப்பின் அதன் கொள்விலை இறுதி இருப்பிலிருந்து நீக்கப்படும்

இரட்டைப் பதிவு

சேதமடைந்த சரக்கு கணக்கு வரவு

கொள்வனவு கணக்கு செலவு

காப்புறுதி கம்பனி தருவதாக ஒப்புக் கொண்டால்

காப்புறுதி கம்பனி கணக்கு வரவு

அழிவடைந்த சரக்கு கணக்கு செலவு

நட்டம் ஏற்படின்

இலாப நட்ட கணக்கு வரவு

அழிவடைந்த சரக்கு கணக்கு செலவு

ஜெ.தாரணி

தரம் : 13C

நீங்கள் ஆர்வத்துடன் உங்கள் கடமையில் மூழ்கிறிருக்கும் பொழுது தான் வெற்றியைப் பெற்றுவிடலாம் என்ற தன்னம்பிக்கை உங்களிடம் தளிர்விட்டுத் துளிர்கின்றது.

– டேவிட் ஜே.ஸ்பார்ட்ஸ்



# பெறுமதிசேர்வரி
# Value Added Tax (VAT)

பண்டங்களினாதும், சேவைகளினதும் கூட்டிய பெறுமதிகள் மீது அளவிடப்படும் (நேரில் வரியாக) பெறுமதி சேர்வரி அமைகின்றது. பண்டங்களும், சேவைகளும் நுகர்வோர்களை சென்றடைவதற்கு முன்னர் உற்பத்தி, விநியோகம் என்ற பல்வேறு கட்டங்களை தாண்டிச் செல்லுகையில் சேர்க்கப்பட்ட பெறுமதி மீது குறித்துரைக்கப்பட்ட வீதத்தில் அறவிடப்படும் வரி இதுவாகும். இவ்வரிச் சுமையானது இறுதியில் நுகர்வோரினை முழுமையாக சென்றடைகின்றது.

இவ் வரியினை சேகரித்துக் கொடுப்பவர்களாக உற்பத்தியாளரும் விற்பனையாளரும் காணப்படுகின்றனர்.

கூட்டிய பெறுமதி = வெளியீட்டுப் பெறுமதி - உள்ளீட்டுப் பெறுமதி

அல்லது

கூட்டிய பெறுமதி = வாடகை + கூலி + வட்டி + பெறுமானத் தேய்வு + இலாபம்

பெறுமதி சேர் வரி சேர்க்கப்படும் முறைகள் தொடர்பான எடுத்துக் காட்டு

| | உற்பத்தி | மொத்த விற்பனை | சில்லறை விற்பனை |
|---|---|---|---|
| கிரயம் | 100000 | 138000 | 161000 |
| கூட்டிய பெறுமதி | 20000 | 20000 | 20000 |
| விற்பனை விலை | 120000 | 158000 | 181000 |
| 15% VAT | 18000 | 3000 | 3000 |
| VAT சேர்ந்தபின் விற்பனை விலை | 138000 | 161000 | 184000 |

இதன்படி நுகர்வோர் மீது சுமத்தப்படும் VAT வரி

ரூ 18000 + ரூ 3000 + ரூ 3000 = ரூ24000 ஆகும்

அல்லது

| | உற்பத்தி | மொத்த விற்பனை | சில்லறை விற்பனை |
|---|---|---|---|
| கிரயம் | 100000 | 120000 | 140000 |
| கூட்டிய பெறுமதி | 20000 | 20000 | 20000 |
| விற்பனை விலை | 120000 | 140000 | 160000 |

| | | | |
|---|---|---|---|
| 15% vAT | 18000 | 21000 | 24000 |
| VAT சேர்த்த வி/னை வரி | 138000 | 161000 | 184000 |

இதன்படி

| | |
|---|---|
| உற்பத்தியாளரினால் சேர்கக்ப்பட்ட VAT : | 18000 |
| மொத்த வியாபாரியினால் சேர்கக்படப்ட VAT : | 3000 |
| சில்லறை வியாபாரியினால் சேர்கக்ப்பட்ட VAT : | 3000 |
| இறைவரி திணைக்களத்திற்குச் சேரும் VAT : | 24000 |

நியம வீதி பெறுமதி சேர் வரி (Standed Rate value Added) பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கான பதிவுகள்

VAT தொடர்பில் தொழில் முயற்சிகள் யாவும் அவை உற்பத்தி செய்யும் VAT வரிக்கு உட்பட்ட பொருட்கள் சேவைகள் மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள், சேவைகள் ஆகியவற்றிற்கு கணக்கேடுகளில் பதிவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும். இந்நிறுவனங்களின் உள்ளீட்டு VAT உம், வெளியீட்டு VAT உம் கணக்கேடுகளில் பதிவு செய்யப்படுவதாக அமையும்.

எனினும் வருமானக் கூற்றுக்களில் VAT தொடர்பாக எவ்வித வெளிக்காட்டல்களும் இட்பெறமாட்டாது. ஆனால் ஐந்தொகையில் VAT தொடர்பான தகவல்கள் காட்டப்பட்டிருக்கும். அதாவது தொழில் முயற்சியினால் பேணப்படும் VAT (கட்டுப்பாட்டுக்) கணக்கானது அதன் மீதியின் அடிப்படையில் நடைமுறைச் சொத்தாக இல்லது நடைமுறைப் பொறுப்பாக ஐந்தொகையில் காட்டப்படும்.

பண்டங்கள், சேவைகளை கொள்வனவு செய்யும் பொழுது VAT ஆனது உள்ளீட்டு வரியாகவும், பண்டங்கள் சேவைகளை விற்பனை செய்யும் பொழுது VAT ஆனது வெளியீட்டு வரியாகவும் காணப்படும்.

வெளியீட்டு ஏயுவு இலிருந்து உள்ளீட்டு VAT இனை கழித்து வரும் தேறிய VAT இனையே தொழில் முயற்சிகள் இறைவரித் திணைக்களத்திற்கு செதுத்துகின்றன.

VAT இனை பதிவு செய்வதற்கு கொள்வனவு நாளேட்டிலும் விற்பனை நாளேட்டிலும் தனியாக நிரல்கள் பராமரிக்கப்படும்.

## பெறுமதி சேர் வரியும் விற்பனைப் பட்டியலும்
## VAlue Added Tax and sales Jnuoice

நிறுவுனங்கள் விற்பனைப் பட்டியலில் உள்ள பெறுமதியின் அடிப்படையிலேயே VAT யினை கணித்து சேர்த்துக் கொள்கின்றன.

உதாரணம் :

25/March/2009 இல் கண்ணன் நிறுவனம் அருண் நிறுவத்திற்கு கீழ்வரும் இருப்புக்களை விற்பனை செய்தது.

20 தேயிலை பெட்டிகள், பெட்டி ஒன்று ரூபா 30000 படி 25 கறுவா பெட்டிகள் பெட்டி ஒன்று 4000 படி 70 பதப்படுத்தப்பட்ட றப்பர் தட்டு ஒன்று ரூபா 500 படி

அனைத்து விற்பனையான இருப்புக்களுக்கும் 35% வியாபாரக் கழிவு வழங்கப்பட்டது.

அத்துடன் அனைத்து இருப்புக்களின் விற்பனைகளும் 15% VAT இற்கு உட்படுதுதப்படும்.

இவ்விடயம் விற்பனைப்பட்டியல் ஒன்றில் எவ்வாறு இடம்பெறும் என்பதை அவதானிப்போம்.

கண்ணன் கம்பனி,
40, ஸ்ரான்லி றோட்,
கண்டி.

To:
M.அருண்
No:102 வெளிப்புறம்
சாவகச்சேரி

| | | | |
|---|---|---|---|
| பட்டியல் இல : | | 8402 | |
| திகதி : | | 2009.03.25 | |
| சங்ககளின் கட்டளை இல : | | 6740 | |
| தேசியலைபெட்டிகள் | 20 | ரூபா 3000 படி | 60000.00 |
| கறுவா பெட்டிகள் | 25 | ரூபா 4000 படி | 100000.00 |
| இறப்பர் தட்டுக்கள் | 70 | ரூபா 500 படி | 35000.00 |
| | | | 195000.00 |
| (-) வியாபாரக்கழிவு | | | (48750.00) |
| | | | 146250.00 |
| கூட்டு VAT 15% | | | 21937.50 |
| | | | 168187.50 |

VAT உம் விற்பனை நாளோடும்

உதாரணம் : 5 சரி கம்பனியின் 200g march மாதத்தில் இடம்பெற்ற கடன் விற்பனைகள் பற்றிய தகவல்கள் வருமாறு

| திகதி | விற்பனைப் பட்டியல் தொகை VAT நீங்கலாக | 15% VAT |
|---|---|---|
| March 2 S.ஜெயா | 40000 | 6000 |
| March 8 K.கார்தி | 30000 | 4500 |
| March 10 M.ஜெசி | 50000 | 7500 |
| March 28 R.மனோ | 25000 | 3750 |

(விற்பனைப் பெறுமதிகள் வியாபாரக் கழித்த பின்னராகும்)

மேற்கூறிய கொடுக்கல் வாங்கல்களை விற்பனை நாளேடு ஒன்றில் பதிந்தால் அது பின்வருமாறு அமையும்.

விற்பனை நாளேடு

| திகதி | வாடிக்கையாளர் | பட்டி.இல | பே.பக் | தேறியது | VAT | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| மார்ச் 2 | S.ஜெயா | 8820 | SL-40 | 40000 | 6000 | 46000 |
| 8 | K.கார்தி | 8821 | SL-50 | 30000 | 4500 | 34500 |
| 10 | M.ஏஜசி | 8822 | SL-55 | 50000 | 7500 | 57500 |
| 25 | R.மனோ | 8823 | SL-60 | 25000 | 3750 | 28750 |
| | | | | 145000 | 21750 | 166750 |
| | | | | G-L-40 | GL-65 | |

மேற்கூறிய விற்பனை நாளேட்டில் உள்ளபடியான பதிவுகள் விற்பனைப் பேரேட்டிலும், பொதுப் பேரேட்டிலும் உள்ள கணக்குகளில் எவ்வாறு தோன்றும் என்பதை அவதானிப்போம்.

விற்பனைப் பேரேடு (SL)

S.ஜெயா (40)

| | |
|---|---|
| விற்பனை 46000 | |

K.கார்த்தி (50)

| | |
|---|---|
| விற்பனை 34500 | |

M.ஜசி (55)

| | |
|---|---|
| விற்பனை 57500 | |

R.மனோ (60)

| | |
|---|---|
| விற்பனை 28750 | |

பொதுப்பேரேடு G.L

விற்பனை கணக்கு

| | |
|---|---|
| | கடன்பட்டோர் 145000 |

VAT.கணக்கு (65)

| | |
|---|---|
| | கடன்பட்டோர் 21750 |

## பெறுமதி சேர் வரியும் கொள்வனவுப் பட்டியலும்
## Value added Tax and Purchase Invoice

விற்பனைப் பட்டியலில் உள்ள விடயங்கள்போன்றே கொள்வனவுப் பட்டியலிலும் VAT சேர்க்கப்படும்.

VAT உம் கொள்வனவு நாளேடும்

உ-ம் : S.சசி கம்பனியின் 2009 march மாத்தில் இடம்பெற்றிருந்த கடன் கொள்வனவுகள் ப ற்றிய தகவல்கள் பின்வருமாறு.

| திகதி | கொள்வனவுப் பட்டியல் தொகை VAT நீக்கலாக | VAT 15% |
|---|---|---|
| march 1 சர்மிளா | 60000 | 9000 |
| march 9 தாமிகா | 80000 | 12000 |
| march 20 செந்திகா | 100000 | 15000 |

மேற்கூறிய கொடுக்கல் வாங்கல்களை கொள்வனவு நாளேடு ஒன்றில் பதிந்தால் அது பின்வருமாறு அமையும்

கொள்வனவு நாளேடு

| திகதி | வழங்குனர் | பே.பக்கம் | தேறியது | VAT | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| March 1 | சர்மிளா | PL-18 | 60000 | 9000 | 69000 |
| 9 | தாமிகா | PL-20 | 80000 | 12000 | 92000 |
| 20 | செந்திகா | PL-24 | 100000 | 15000 | 115000 |
| | | | 240000 | 36000 | 115000 |
| | | | G-50 | GL-65 | |

**கொள்வனவு பேரேடு**

சர்மிளா (18)

| | |
|---|---|
| | கொள்வனவு 69000 |

தாமிகா (20)

| | |
|---|---|
| | கொள்வனவு 92000 |

செந்திகா (40)

| | |
|---|---|
| | கொள்வனவு 115000 |

**பொதுப்பேரேடு**

கொள்வனவு கணக்கு (40)

| | |
|---|---|
| கடன்கொடுத்தோர் 240000 | |

VAT கணக்கு (40)

| | |
|---|---|
| கடன் கொடுத்தோர் 36000 | |

VAT கணக்கின் மீதி செலவு மீதியினைக் காட்டின் அது இறைவரித் திணைக்களத்திற்கு கொடுக்கப்பட வேண்டியதையும் VAT கணக்கின் மீதி வரவு மீதியாக அமையின் அது இறைவரித் திணைக்களத்திலிருந்து மீளப் பெற வேண்டியதையும் காட்டும்

**பெறுமதி சேர்வரியும் – காசுக் கழிவும்**

கடன் விற்பனையின் போது கடன்பட்டோருக்கான விற்பனைப் பெறுமானத்தில் இருந்து

வியாபாரக் கழிவினை கழித்த பின்னர் வரும் தேறிய தொகையிலிருந்து கடன்பட்டோருக்கு அனமதிக்கப்படும் காசுக் கழிவினையும் கழித்த பின்னர் வரும் தேறிய பெறுமதிக்கே VAT கணிக்கப்படும்.

உ-ம் : குறித்த நிறுவனம் ஒன்றின் விற்பனைப் பட்டியல் தொடர்பான தகவல் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1000 அலகு பேனாக்கள் ரூ 20 படி | | ரூ 20000 |
| 15% வியாபாரக் கழிவு | | (3000) |
| | | 17000 |
| 15% VAT | 2550 | |
| | 19550 | |

குறித்த கடன்பட்டோர் 20 நாட்களுக்குள் பணத்தினை செலுத்துவார் என்பது உறுதிபட அறிய முடிகின்றது. இதனால் ரூ 1000 காசுக்கழிவு அனுமதிக்கப்படுமாயின் VAT பின்வருமாறு கணிப்பிடப்படும்.

| | |
|---|---|
| | ரூ 17000 |
| | (1000) |
| காசுக்கழிவு | 16000 |
| 15% VAT | 2400 |
| | 18400 |

**பெறுமதி சேர் வரியும் – விற்பனை விலையும்**

பொதுவாக ஒரு பண்டத்தின் விற்பனைப் பெறுமதியினுள் பல்வேறு உற்பததியாளர்களினாலும் சேர்க்கப்பட்ட பெறுமதியும் இச்சேர்க்கப்பட்ட பெறுமதியின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட VAT உம் உள்ளடக்கப்பட்டதாக அமையும். (உற்பத்தியாளர்களினால் செலுத்தப்பட்ட VAT முழுமையாக இறுதியில் நுகர்வோர் மீது சுமத்தப்படும்) இதனால் VAT ஆனது இன்றும் குறைபாடுடையதாக அமைந்ததெனக் கூறப்படுகின்றது.

உ-ம் : ஆடை உற்பத்தியின் போது VAT
பின்வருமாறு கணிப்பிடப்படுவதாக அமையும்

1) பஞ்சினை உற்பத்தி செய்து விற்பவர்
2) நூலினை உற்பத்தி செய்து விற்பவர்
3) துணியினை உற்பத்தி செய்து விற்பவர்
4) ஆடையினை உற்பத்தி செய்து விற்பவர்

குறித்த பொருளின் விற்பனைப் பெறுமதி
VAT 15% உள்ளடங்கலாக ரூ 230000 எனில்
மொத்தப் பெறுமதியிலிருந்து VAT பின்வருமாறு கணிப்பிடப்படும்

$$\text{VAT} = \frac{\text{VAT வீதம்}}{100+\text{VAT வீதம்}} \times \text{மொத்தப் பெறுமதி}$$

$$= \frac{15}{100+15} \times 230000$$

= ரூ 30 000 ஆகும்

சி. கபிலா
தரம் :13C

# கணக்கீடும் எண்ணக்கருக்களும்



நிதிக் கூற்றுக்களை தயாரிக்கின்ற போது அனைவராலும் பின்பற்றபட வேண்டும் என எதிர்பார்க்கும் எண்ணக் கருக்கள் கணக்கீட்டு எண்ணக்கருக்கள் எனப்படும்.

அதாவது நிதிக் கூற்றுக்களை தயாரிக்க பயன்படுத்தப்படுகின்ற அடிப்படை கணக்கீட்டு நிதிகள் முறைகள் மரபுகள் போன்றவற்றையே எண்ணக்கரு என்பர்.

நிறுவனத்தால் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கின்ற போது அவை நிறவனத்தில் கரிசனை உடையவர்களுக்கு தகவல்களை வழங்குவதற்கு நம்பகத்தன்மையானதாக அமைய வேண்டும் என்பதற்காக நிறுவனங்களால் பின்பற்றப்படுகின்ற கொள்கைகளே எண்ணக்கருவாகும்.

**கணக்கீட்டு எண்ணக்கருவின் வகைகள்**

1. தொழில் முழுமைக்கூற்று எண்ணக்கரு
2. பண அளவீட்டு எண்ணக்கரு
3. வரலாற்றுகிரய எண்ணக்கரு
4. அட்டுறு எண்ணக்கரு
5. தேறிய எண்ணக்கரு
6. தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு
7. கால அளவு எண்ணக்கரு
8. இணைதல் எண்ணக்கரு
9. முன்னெச்சரிக்கை எண்ணக்கரு
10. கொள்கை மாறா எண்ணக்கரு
11. இரட்டை விளைவு எண்ணக்கரு
12. பொருண்மை எண்ணக்கரு
13. வெளிப்படுத்தும் எண்ணக்கரு

**01) தொழில் முழுமைக்கூற்று எண்ணக்கரு**

நிறுவனம் வேறு அலகு, அதனைக் கொண்டு நடாத்துகின்ற உரிமையாளர் வேறு அலகு என்ற அடிப்படையில் கணக்கு வைப்புக்களும் நிதிக் கூற்றக்களும் தயாரிக்கப்பட வேண்டுமென இவ் எண்ணக் கரு கூறுகிறது. இந்நியதியானது கம்பனி, பங்குடமை, தனிவியாபரம் போன்ற நிறுவனங்களில் பின்பற்றப்படுகின்றன.

உரிமையாளரின் தனிப்பட்ட நடவடிக்கைகள் நிறவனதின் செயற்பாட்டின் பாதிப்பு ஏற்படுத்த கூடாது என்பதற்காக இவரது நடவடிக்கைகளை பதிவு செய் வதற்கு மூலதனக் கணக்கு பற்றுக் கண்க்கு என்பன பேணப்பட்டு வருகின்றன. இதற் கமைவாகவே உரிமையாளரால் இடப்பட்ட மூலதனம் பொறுப்பாக காட்டப்படுகிறது. அத்துடன் உரிமையாளரின் பற்று அவருடைய மூலதனம் பொறுப்பிலிருந்து குறைத்து காட்டப்படுகின்றது.

இதனுடைய மறுபெயர்களாக அலகு சார் எண்ணக்கரு வளதாந்தன்மை எண்ணக்கரு, தனிமனித எண்ணக்கரு என அழைக்கப்படும்.

உ-ம் : உரிமையாளரின் வீட்டு வளவில்

வியாபாரத்தாபனம் அமைக்கப்பட்டிருந்த போதிலும் வியாபரத்தாபனத்தின் ஐந்தொகையில் ஒரு சொத்தா வீட்டு வளவு காட்டப்படுவதில்லை.

தனியுடமை வியாபாரத்தாபனத்தில் உரிமையாளரால் செலுத்தப்பட்ட வருமானவரி இலாபநட்டக் கணக்கில் ஒரு செலவாக காட்டப்படுவதில்லை.

02) பண அளவீட்டு எண்ணக்கரு / பண அலகு எண்ணக்கரு

நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல் களை அளவீடு செய்வதற்கு பொருத்தமான அளவீட்டு கருவியாக பணத்தினை இவ் எண்ணக்கரு ஏற்றுக் கொள்கிறது. இதனால் பணத்தினால் அளவிடக் கூடிய விடயங்கள் மட்டும் கணக்கீட்டில் கருத்தில் கொள்ளப் படுகிறது. மாறாக பணத்தினால் அளவிட முடியாத எந்த ஒரு உள்ளீடுகளும் கணக்கீட்டில் உள்ளடக்கப்படுவதில்லை.

பண அளவீட்டு எண்ணக்கருவின் எடுகோள் ஆக அமைவது

1) பணத்தின் பெறுமதி மாற்றமடைவதில்லை

அதாவது பொருளாதாரத்தில் பணவீக்கமோ, பணச்சுருக்கமோ, ஏற்படு வதில்லை இது நடைமுறைக்கு சாத்திய மற்றது.

2) பணத்தினால் அனைத்தையும் அளவு செய்தல்

அதாவது நிறுவனத்தில் காணப்படுகின்ற அனைத்தையும் பணத்தினால் அளவு செய்யலாம் என இது கூறுகின்றது.

இதன் குறைபாடு யாதெனில் பணத்தினால் அளவீடு செய்ய முடியாத நடவடிக்கைகளை கணக்கீட்டிற்கு உட்படுத்த முடியாது என்பதாகும்.

உ-ம் : நிறுவனத்தில் காணப்படும் அனுபவம் வாய்ந்த ஊழியர் ஐந்தொகையில் ஒரு சொத்தாக காட்டப்படுவதில்லை.

3) வரலாற்றுக்கிரய எண்ணக்கரு

சொத்துக்களும் சேவைகளும் தொடர்பாக ஏற்பட்ட உண்மைக் கிரயங்களை கணக்கீடுகளில் பதிவு செய்யப்படுதல் வேண்டும். மாறாக நாளாந்த சந்தையில் ஏற்படும் தளம்பல்விலை கவனத்தில் கொள்ளப்படு வதில்லை.

இதன் மறுபெயர்களாக கிரய எண்ணக்கரு, செலவு எண்ணக்கரு எனவும் அழைக்கப்படும்.

உ-ம் : பொறி இயந்திரத்தின் கொள்விலை ரூபா 50000/- இதன் தற்போதய சந்தை விலை ரூபா 70000/- எனினும் கொள்விலை பெறுமதியே காட்டப்படும்.

4) அட்டுறு எண்ணக்கரு

குறிப்பிட்ட காலப்பகுதிக்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது அக்காலப்பகுதியில் பெறப்பட்ட வருமானங் களையும் கொடுக்கப்பட்ட செலவினங் களையும் கவனத்தில் கொள்ளாது அவ்வருடத்திற்குரிய செலவுகளையம் (கொடுத்த கொடுக்க வேண்டிய) அவ்வருடத்திற்குரிய வருமானங்களை (பெற்ற, பெறவேண்டிய) முழுமையாக கணக்கில் கொள்ள வேண்டும் எனக்கூறும் எண்ணக்கரு இதுவாகும்.

உ-ம் : காப்புறுதிக்கு செலுத்தியது 6000/- இலாப நட்டக் கணக்கில் 8000/- எக் காட்டப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட நிதியாண்டில் இடம் பெற்ற விற்பனை ரூபா 100000/- இதில் கிடைத்த காசு 80000/ மாத்திரம் காட்டாது முழுமையாக வியாபாரக் கணக்கில் காட்டப்படும்.

5) தேறிய எண்ணக்கரு அல்லது

சேவை தொடர்பாக சேவை ஒன்றிற்கான ஒப்பந்தம் ஒன்று நிறைவேற்றப் பட்டதும் அதற்கான கொடுப்பனவு தீர்மானிக்கப்படாத போதிலும் சேவை நிகழ்ந்ததாக கருதப்படுகிறது. அதாவது வருமானம் ஒன்று எப்போது கிடைக்கப் பெற்றதோ அன்றே அது ஈட்டப்பட்டதாக கருதிக் கணக்குகளில் பதிவு செய்யப்படும்.

நிச்சயமாக கிடைக்கக் கூடிய வருமானங்கள் அவை பெறப்பட முன்னரே வருமானமாக காட்டப்பட முடியும் என இவ் எண்ணக்கரு கூறுகின்றது. ஆகவே நிச்சயமன்ற வருமானம் கிடைக்க முன் அவற்றை வருமானமாக காட்ட முடியாது என இது கூறுகிறது.

உ-ம்: இதன் மறுபெயர்களாக கைக்கிட்டும் எண்ணக்கரு, வருமான எண்ணக்கரு, தேறிய பண எண்ணக்கரு என்பவற்றை குறிப்பிடலாம்.

ஜனவரி மாத்தில் நடந்த விற்பனைக்கான பணம் பெப்ரவரியில் கிடைக்குமாக இருப்பினும் அது ஜனவரி மாத கணக்குகளிலேயே விற்பனையாக காட்டப்படும்.

6) தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

நிறுவனம் நிச்சயமற்ற நிகழ்வுகள் எயையும் எதிர்காலத்தில் எதிர் கொள்ளாது என்ற எடுகோளின் அடிப்படையில் வரையற்ற காலத்தில் நிறவனம் விரைவில் கலைக்கப்படும் என்றோ அல்லது மூடப்படும் என்ளோ கணக்குகள் பேணப் படாது நிறுவனம் பல வருடங்களுக்கு தொடர்ந்து இயங்கும் என்ற அடிப்ப டையிலேயே கணக்குகள் பேணப்படும்.

உ-ம் :

•பெறுமானத்தேய்வு பல்வேறு வருடத்திற்கு ஒதுக்கம் செய்யப்படுகின்றது.

•நிகழாண்டு இலாபத்தில் இருந்து ஒதுக்கம் செய்யப்படுகிறது.

•நிகழாண்டு காலப்பகுதி பிரிக்கப்பட்டு கணக்கு வைப்பு முறைகள் பேணப்படுகின்றன.

7) கால அளவு எண்ணக்கரு

நிறுவனம் தொடர்ந்து இயங்கும் எனினும் நிறுவனத்தின் மீது அக்கறை செலுத்தக் கூடிய கட்சியினருக்கு சரியான செயற்பாட்டுப் பெறுபேறுகளை வெளிக் காட்ட வேண்டும். இவர்கள் கலைக்கப்படும் வரை காத்திருக்க வேண்டும். இதனைத் தவிர்ப்பதற்காகவே நிறுவனத்தின் கணக்கீட்டுக்காலம் சிறு காலப்பகுதியாக வகுக்கப்பட்டு கணக்கீடு மேற்கொள்ளப் படுகிறது. இது பொதுவாக 12 மாதங்களைக் கொண்ட ஒரு நிதியாண்டு என வரையறுக்கப்படுகிறது.

இதன் மறுபெயர்களாக ஆவர்த்தன எண்ணக்கரு, கால நேர எண்ணக்கரு என்பனவாகும்.

உ-ம் : 31.12.2011 முடிவடைந்த ஆண்டிற் கான கிருவா வியாபார நிறுவனத்தின் வியாபார இலாபநட்டக் கணக்கு.

8) இணைதல் எண்ணக்கரு

குறித்த ஒரு நிதியாண்டுக்கான வியாபாரப் பெறுபேறான இலாபம் அல்லது நட்டத்தை நிட்சயிக்கும் போது அக்காலப் பகுதிக்கான வருமானங்கள் அவ்வரு மானத்தை உழைக்க எழுந்த செலவு களுடன் ஒப்பிடல் வேண்டும் எனக் கூறுவதே இவ் எண்ணக்கரு.

ஒரு செலவினை இச் செலவினால் ஏற்படக் கூடிய வருமானங்களுக்கிடையில் ஒப்பீடு செய்ய வேண்டும் என இவ் எண்ணக்கரு கூறுகிறது. அதாவது குறிப்பிட்ட ஒரு நிதியாண்டுக்கான இலாப நட்டத்தினை கணிப்பீடு செய்யும் போது அவ்வருடத்தில் உழைக்கப்பட்ட வருமனாங் களை அதற்கான செலவுகளோடு தொடர்பு படுத்தி இலாப நட்டத்தை கணிப்பீடு செய்ய வேண்டும்.

இதன் மறுபெயர்களாக பொருந்தச் செய்யும் எண்ணக்கரு செலவினை வருமானத்துடன் ஒப்பிடும் எண்ணக்கரு சம்பந்தப்படும் எண்ணக்கரு எனவும் அழைக்கப்படும்.

உ-ம் : குறிப்பிட்ட வருடத்தில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்து பல்வேறு வருடங் களிற்கு நிறவனம் இயங்குகின்ற போதிலும் அவ்வருடத்திலேயே இலாப நட்டக் கணக்கில் முழுமையாக காண்பிக்கக் கூடாது.

9) முன்னெச்சரிக்கை எண்ணக்கரு

நிறுவனங்கள் இலாபங்கள் வருமாங்களை எதிர்பார்க்கின்றது. அதாவது இலாபங்கள் வருமாங்களை கணக்குகளில் காட்டுவதாயின் அவை காசாக தேறியி ருத்தல் வேண்டும் அல்லது தேறக் கூடிய தாக இருத்தல் வேண்டும். தேறக் கூடிய சொத்து வடிவில் காணப்படுவதுடன் அதன் பெறுமதி மதிப்பீடு செய்யக் கூடியதாக இருத்தல் வேண்டும். ஆனால் பொறுப்புக் களிற்கான தொகை சரியாக தெரியாது விடின் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென இவ் எண்ணக்கரு கூறுகின்றது.

நிறுவனங்கள் கணக்கு பதிவை மேற்கொள்ளும் போது எதிர்காலத்தில் நட்டங்கள் ஏற்படும் எனக் கூறினால் கணக்கீட்டில் அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் மாறாக எதிர்காலத்தில் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்ற வருமானங்களை கணக்குகளில் குறிப்பிட கூடாது எனவும் இவ் எண்ணக்கரு கூறுகிறது. அதாவது நிறுவனத்தின் உண்மைத்தன்மையை காட்ட நிறுவனத தின் உண்மை இலாபத்தை பதிய வேண்டும். இதற்கமைவாகவே எதிர்பார்க் கப்படும் இலாப நட்டம் பதியப்படும் எனக் கூறும் எண்ணகருவாகும்.

இதன் மறுபெயர்களாக கவனம் அல்லது பாதுகாப்பு எண்ணக்கரு புத்திக் கூர்மை எண்ணக்கரு எனவும் குறிப்பிடப் படுகின்றது.

உ-ம் : ஐயக்கடன்ஏற்பாடுசெய்யப்படுகின்றது. எதிர்காலத்தில் ஏற்படும் செலவு

10) கொள்கை மாறா எண்ணக்கரு

நிறுவனம் தொடர்ந்து வரும் காலங்களில் ஒரே கொள்கையையே

பின்பற்ற வேண்டும் எனக் கூறுவதே இவ் எண்ணக்கருவாகும். அதாவது விசேட காரணங்கள் எதுவுமின்றி கொள்கைகள் மாற்றப்படக் கூடாது.

கொள்கைகள் கோட்பாடுகள் அடிக்கடி மாற்றப்படுமாயின் கடந்தகாலப் பெறுபேறுகளினை ஒப்பிடு செய்து சிறந்த முடிவுகளை பெற முடியாது. இக்கொள் கைகள் மற்றங்கள் கூட நிறுவனங்கள் செயற்பாட்டில் பெறுபேற்றில் மாற்றத்தை ஏற்படுத்தும்.

இதன் மறுபெயர்களாக பழமை பேணல் எண்ணக்கரு இயல்பான எண்ணக் கரு, இசைவுத் தன்மை எண்ணக்கரு என்பனவாகும்.

உ-ம் : பெறுமானத் தேய்வு கோட்பாடு
இருப்பு மதிப்பீட்டுக் கொள்கை

குறிப்பு : ஏற்கனவே உள்ள முறையில் காணப்படும் குறைபாடுக்ள காரணமாக கொள்கை மாற்றம் நிறுவனத்திற்கு சாதகமாக காணப்படின் மாற்றம் மேற்கொள்ள முடியும்.

11) இரட்டை விளைவு எண்ணக்கரு

ஒவ்வொரு கணக்கீட்டு உள்ளீடு களும் இரண்டு விளைவுகளைக் கொண்டவை. இவ்விரு விளைவுகளும் ஒரு கணக்கிலோ அல்லது இரு கணக்கிலோ வரவிலும் செலவிலும் பதியப்படும்.

ஒவ்வொரு கணக்கீட்டுக் கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வு இடம் பெறும் போது அதிகரிப்பு குறைவு என்ற விளைவுகள் ஏற்பட்டு உரிமை, பொறுப்பு, சொத்து என்பவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தி உரிய கணக்குகளில் வரவு செலவு பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் எனும் எண்ணக்கரு இரட்டை விளைவு எண்ணக்கருவாகும்.

உ-ம் : மூலதனம் இடல்
பொறுப்பு, சொத்து அதிகரிக்கும்

12) பொருண்மை எண்ணக்கரு

கணக்கீடு உள்ளீடுகளால் நிறுவனத்தின் கணக்கியல் தகவல்களில் ஏற்படக்கூடிய செல்வாக்குகளின் முக்கியத் துவம் எத்தகையது என்பது கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது ஒரு செலவு மூலதனச் செலவா அல்லது வருமானச் செலவா எனத் தீர்மானிக்கும் போது மரபு நீதியான அம்சங்களுக்கு மேலதிகமாக அவ் உள்ளீட்டின் கணக்கீட்டுத் தகவல்களின் சார்புத் தன்மையான முக்கியத்துவங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் எனக் கூறுவதே இவ் எண்ணக்கருவாகும்.

மேலும் நிறுவனத்தின் தன்மையை பொறுத்து முக்கியமான விடயங்கள் நிறுவனத்திற்க நிறுவனம் வேறுபடலாம் அதாவது ஒரு நிறுவனத்திற்கு முக்கியமான விடயம் மற்றுமோர் நிறுவனத்திற்கு முக்கியமற்றதாக காணப்படும். அதே போல் நடவடிக்கைகளின் முக்கியத்துவ அடிப்ப டையிலேயே அவை குறித்த நிதியாண் டிற்காக அல்லது பல வருடங்களுக்கா உரியதா என தீர்மானிக்கப்படுகின்றது. ஒரு நடவடிக்கை முக்கியமானதா அல்லது முக்கியமற்றதா என்பது ஒவ்வொரு நிறுவனத்தின் தன்மையினையும் இயலுமை யையும் பொறுத்தே காணப்படும்.

உ-ம்: ஒரு பேனா கொள்வனவு செய்யப்பட்டது. இது 5 வருடங்களுக்கு பயன்படுத்தப்படும் எனினும் அதே வருட இலாப நட்டக் கணக்கிலேயே செலவாக காட்டப்படுகின்றது.

13) வெளிப்படுத்தும் எண்ணக்கரு

கணக்குகளை தயாரிக்கும் போது மேற்கொள்ளப்படுகின்ற அனுமதிப்புக் களும் நடைமுறைகளும் சில வேளைகளில் நிறுவனத்தைப் பற்றிய உண்மையான கருத்திற்கு புறம்பான ஒரு விளக்கத்தை கொடுக்கக் கூடும். எனவே நிதிக் கூற்றுக் களுக்கு புறம்பாக அவைக்குரிய போதிய விளக்கங்கள் பின் இணைத்தல் குறிப்பு வடிவில் வெளிப்படுத்த வேண்டும்.


இவ் எண்ணக்கருவினை வெளி யாக்கும் எண்ணக்கரு எனவும் அழைப்பர். உ-ம் : நிலையான சொத்து தொடர்பான விபரங்களில் தேய்வு, திரண்டதேய்வு அகற்றல் போன்ற விடயங்கள் தெளிவுடன் விளக்குவதாக அமையும்.

த. தமிழேந்தினி
தரம் : 12C

# கணக்கீட்டின் உள்ளீடுகளும் தகவல்களும்



கணக்கீடு என்பதனை விரிவாக வரைவிலக்கணப்படுத்துவோமாயின் கணக்கீடானது வணிக நிறுவனத்தின் நிதி சார்ந்த கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வகள், நிலைமாற்றங்கள், என்பவற்றைத் திரட்டுதல் பதிதல், வகைப்படுத்துதல், சுருக்குதல், பகுப்பாய்வு செய்தல், வியாக்கியானமம் கூறுதல் போன்ற செயற்பாடு ஆகும். அவை எத்தன்மைகளைக் கொண்டிருந்தாலும் உள்ளீட்டினை கொண்டே கணக்கீடு காணப்படுகின்றது. இதன்படி தகவல்களில் பணத்தால் அளவிடக்கூடிய தகவல்கள், பணத்தால் அளவிடமுடியாத தகவல்கள், பண்புசார் தகவல்கள் ஆகிய அனைத்தும் உள்ளடங்கும். உதாரணமாக நுகர்வோர் பண்டமொன்று தொடர்பில் கொண்டிருக்கும் சுவைகூட தகவல்களை திரட்டும் போது முக்கிய தகவலாக கருதப்படுகின்றது. கணக்கீட்டில் தகவல்களை எவ்வாறு வகைப்படுத்துகின்றோம் என்பதை கீழ்வரும் வரைபடம் தெளிவாக காட்டுகின்றது.





(தீர்மானம் எடுப்பத்தலுக்கு பயன்படும் அனைத்து தகவல்களும் அறிக்கைகளும்)

கணக்கீடு உள்ளீடு என்றால் கணக்கீடு செயன்முறைக்கு அடிப்படையாக அமைவது ஆகும். இக் கணக்கீட்டு உள்ளீடுகளைப் பயன்படுத்தி கணக்கீட்டு தொழிற்பாட்டிற்கு உட்படுத்தி கணக்கீட்டின் வெளியீடுகளைப் பெற முடியும். கணக்கீட்டின் உள்ளீடுகள் என கூறுவது கொடுக்கல் வாங்கல்கள், நிகழ்வுகள், நிலைமாற்றங்கள் ஆகும். பணத்தினால் அளவு செய்யக் கூடியதாக இருக்க முடிகிறது. வணிக நிறுவனத்தின் சொத்துக்கள், பொறுப்புக்கள் நிதியிடலின் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கிறது. இந்த கணக்கீட்டு உள்ளீடுகள்.

கணக்கீட்டினை நிதி கணக்கீடு, முகாமைக் கணக்கீடு என வகைப்படுத்தும் போது அவை ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு தகவல்கள் அவசியமாகின்றன. உதாரணமாக நிதி கணக்கீட்டில் காணக் கூடிய பல்வேறு செயற்பாடுகளில் அதாவது கொடுக்கல் வாங்கல்களை பதிதல், பேரேடுகளை தயாரித்தல், பரீட்சை மீதியை தயாரித்தல், நிதி கூற்றுகளை தயாரத்தல் ஆகிய கருமங்களை வெவ்வேறு அவதானிக்கும் போது ஒவ்வொரு சந்தரப்பத்திலும் தேவைப்படும் தகவல்கள் வேறுபடுகின்றன. நிதி கணக்கீட்டை பொறுத்தமட்டில் கொடுக்கல் வாங்கல்களும் நிகழ்வுகளும் மட்டுமே உள்ளீடுகளாகும். ஆயினும் பணத்தால் அளவிட முடியாத உள்ளீடுகள் காணப்பட முடியும். உதாரணமாக பொருளாதாரத்தில் ஏற்படும் கேள்வி அதிகரிப்பால் எதிர்காலத்தில் பண்டங்களை விற்பனை செய்ய கூடிய வாய்ப்பு அதிகமென்பதை பணத்தால் நிச்சயமாக திட்டமாக அளவிட முடியாது. ஆயினும் இதனால் ஏற்படும் தாக்கத்தினை தகவலாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுதத முடியும்.

ஆயினும் பேரேடுகளை தயாரிக்கும் போது உள்ளீடுகளாக பணத்தால் அளவிடக் கூடிய தகவல்களை மட்டுமே பயன்படுத்த முடியும். இதற்கான காரணம் யாதெனில் குறிப்பிட்ட நிதிக் கூற்றை தயாரிக்கும் போது அதனை இனங்காணப்பதற்கு ஏனைய தேவைப்பாடுகளோடு நம்பகத்தன்மையுடன் அளவிடக் கூடியமையும் முக்கியமானதாகும். இதனை கீழ் வரும் வரைபடத்தில் தெளிவாக அவதானிப்போம்.

பரீட்சை மீதியை தயாரித்தல் மற்றும் நிதிக் கூற்றக்களை தயாரித்தல் தொடர்பில் பயன்படுத்தும்




உள்ளீடுகளைத் தயார்ப்படுத்தும் நடவடிக்கைகளாக தகவல்களைத் திரட்டுதல், தகவல்களைப் பதிவு செய்தல், வகைப்படுத்துதல், சுருக்குதல், பகுப்பாய்வு செய்தல், வியாக்கியானம் கூறுதல் என்ற காணப்படுகின்றது. கணக்கீட்டின் உள்ளீட்டின் கொடுக்கல் வாங்கல் என்பது நிறுவனத்தின் சொத்து பொறுப்புக்களில் மாற்றத்தை ஏற்படுத்தும் விடயங்கள் ஆகும். உதாரணமாக காசு விற்பனை, இயந்திரம் கொள்வனவு என்பவற்றைக் குறிப்பிடலாம். நிலைமாற்றம் ஆனது நிறுவனத்தின் வளங்களில் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையிலான நடவடிக்கைகள் ஆகும். உதாரணமாக பலகையைத் தளபாடம் ஆக்குதல் நிகழ்வுகள் என்பது நிறுவனத்துக்கு உள்ளேயும் வெளியேயும் இடம்பெறுகின்ற சாதாரண அசாதாரண விடயங்கள் ஆகும். உதாரணமாக ஆண்டுப் பொதுக் கூட்டம் நடைபெறுதல் தீயழிவு ஏற்படுதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

தகவலை பல்வேறு தன்மையின் அடிப்படையில் வகைப்படுத்த முடியும். அதன் படி

1. அளவின் அடிப்படையில்

அளவு சார் தகவல்

அளவு சாராத் தகவல்

2. உட்புறமா? வெளிப்புறமா? என்ற அடிப்படையில்

அகத்தகவல்

புறத்தகவல்

3. தொழிற்பாட்டின் அடிப்படையில்

கணக்கீட்டு நிதித் தகவல்

மனித வளத் தகவல்

விற்பனை சந்தைப்படுத்தல் தகவல்


உற்பத்தித் தகவல்

ஆராயச்சி அபிவிருத்தித் தகவல்

கணக்கீட்டுத் தகவலின் முக்கியத்துவமாக நிறுவனத்தின் உரிமையாளருக்குத் தேவையான தகவலை வழங்குதல், முகாமையாளர் முகாமைத் தீர்மானங்களை எடுப்பதற்கு, உற்பத்திக் கிரயத்தைக் கணிக்க நிறவனத்தின் திட்டமிடலுக்கு கட்டுப்படுத்தலுக்கு, மனித பகுதிக வளங்களின் கட்டுப்படுத்தலுக்கும் அவற்றின் உடமை பற்றி அறிகையைத் தயாரிக்கவும் காணப்படுகின்றது.

அறிவை விருத்தி செய்வதற்கோ, தீர்மானம் எடுப்பதற்கோ பயன்படுத்தக் கூடிய எந்த ஒரு விடயமும் தகவல் ஆகும். இதன் பின்பாக உரிய நோக்கத்தைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருத்தல் வேண்டும். மிக விரைவாகப் பெறக் கூடியதாக இருத்தல் வேண்டும். பிழைகள் அற்ற தன்மையைக் கொண்டிருத்தல் வேண்டும். பொருததமானதாகப் பாதுகாக்கப்பட வேண்டும். முழுமையானதாக இருத்தல் வேண்டும்.

தகவலினை பாய்ச்சல் கோட்டுப்படம் மூலம் காட்டப்படுகிறது பின்வருமாறு,




தே.சர்மிளா

தரம் :12C

# மூலதனச் செலவும் வருமானச் செலவும்



**தொ**ழில் முயற்சியில் ஈடுபடும் நிறுவனங்கள் வருமானங்களைப் பெற்றுக் கொள்பவதற்காக பல்வேறுபட்ட செலவீனங் களை வருவித்துக் கொள்கின்றன. அச் செலவீனங்களின் கிடைக்கும் பயன்களின் அடிப்படையில் மூலதனச் செலவு வருமானச் செலவு என பாகுபடுத்திக் கொள்கின்றன.

மூலதனச் செலவு மற்றும் வருமானச் செலவு ஆகிய இரு செலவு களிடையே உள்ள வேறுபாட்டினை மிகத் தெளிவாக அறிந்திருப்பது மிகவும் அவசியமானதாகும். ஏனெனில் இவை கணக்குப் புதிவியலினதும் கணக்கீட்டி னதும் அடிப்படைகளைப் பாதிக்கக் கூடியதாக இருப்பது ஆகும். கணக்குப் பதிவின் போது மூலதனச் செலவை வருமானச் செலவாகவே பதிவு செய்யும் போது கணக்கீட்டு கோட்பாட்டைப் மீறு வதாக அமையும். இத்தகைய வழுக்களை கோட்பாட்டு வழுக்கள் என அழைப்பர். எனவே மூலதனச் செலவு, வருமானச் செலவை பாகுபடுத்தும் போது மிகவம் சுலபமாக பாகுபடுத்த வேண்டும்.

ஐந்தொகையில் நிறுவனத்தின் நிதி நிலைமையினை முறையாக வெளிப் படுத்திக் காட்டுவதற்கு இவ்விரு செலவீ னங்களும் வேறுபடுத்தி அறிந்து கொள்வது அவசியமானதாகும். இதன் காரணமாக முடிவுக் கணக்குகள் அல்லது நிதியறிக்கை களை தயார் செய்யும் பொழுது இச் செலவீனங்கள் தொடர்பில் சீராக்கங்கள் இனங்கண்டு கொள்ளப்பட்டு நிதியறி வகையில் காட்டப்பட வேண்டும்.

மூலதனச் செலவு

வருமானத்தினை உழைத்துக் கொள்வதற்கான ஆதாரங்களைப் பெருக்கிக் கொள்வதற்கும் வருமானத் தினை உழைக் கும் திறனை அதிகரிப்பதற் கெனவும் தொழில் முயற்சியில் நீண்ட காலத்தில் பயன்படுத்துவதற்காக பெற்றுக் கொள் ளப்படும் சொத்துக்களும், அத் தகைய சொத்துக்களினை விரிவு படுத்தும் (மேம்படுத்தும்) செலவுகள் சொத்துக்களை புனரமைக்கும் செலவினங்கள் போன்றவை மூலதனச் செலவாகும்.

உ-ம் :

- புதிய பொறியின் கொள்வினவிற்கான செலவு
- புதிய பொறியை பொருத்தும் செலவு
- புதிய மோட்டார் கொள்வனவு செய்த இடத்தில் இருந்து கொண்டு வரும் செலவு
- புதிய மோட்டாரின் பரீட்சார்த்த செலவு
- புதிய கட்டடமொன்றிற்கு வர்ணம் பூசும் செலவு

நடைமுறையல்லாச் சொத்துக் களினை கொள்வனவு செய்து அதன் பயன்படு நிலைக்கு கொண்டுவரும் வரையில் ஏற்படும் அனைத்துச்

செலவுகளையம் மூலதனச் செலவாக கருதுதல் வேண்டும். வருமானத்தினை உழைக்கும் கற்றலை அதிகரிப்பதற்காக நடைமுறையல்லாத கொள்வனவுகள் மீது மேற்கொள்ளப்படும் எந்த ஒரு செலவும் மூலதனச் செலவாகும். இச் செலவு மேற்கொள்வதன் பயன் பல கண்டு நிறுவனத்திற்கும் கிடைத்துக் கொண்டிருக்கும். மூலதனச் செலவானது எந்தச் சொத்து தொடர்பாக உருவாகியதோ அந்த சொத்து கணக்கிலேயே பதியப்படும்.

வருமானச் செலவு

வருமானத்தினை உழைத்துச் கொள்வதற்காக வழமையான வியாபார நடவடிக்கையின் போது தொழில் முயற்சிக்கு ஏற்படும் செலவீனங்களே இவையாகும். இச் செலவீனங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்படும் பயனை நிறவனம் குறுங்காலத்திற்கு மட்டுமே அனுபவிக்கக் கூடியதாக இருக்கும். இதனால் இச் செலவினங்கள் மீண்டும் மீண்டும் உருவாகும்.

தொழில் முயற்சிகள் மீள் விற்பனைகள் செய்யும் எண்ணத்துடன் இருப்புக்களை கொள்வனவு செய்வது தொடர்பாகவும் நிர்வாக நடவடிக்கையினை கொண்டு நடத்தும் போது நாளாந்த விற்பனை மற்றும் விநியோகத்தினை மேற்கொள்வதற்காகவும் நடைமுறையல்லாச் சொத்துக்களை பராமரிப்பு தொடர்பாகவும் இச் செலவினங்கள் ஏற்படுகின்றன.

ஒரு செலவீனம் வருமானச் செலவா அல்லது மூலதனச் செலவா என்பதை தீர்மானிக்கும் போது அச் செலவின் பொருண்மைத் தன்மை, குறித்த செலவில் இருந்து பயனைப் பெற்றுக் கொள்ளும் காலம் என்பன கவனத்தில் கொள்ளப்படும்.

மூலதனச் செலவு, வருமானச் செலவு என்பன வியாபாரத்தின் தன்மைகேற்ப வேறுபடும். உதாரணமாக மோட்டார் வாகனம் கொள்வனவு தொடர்பான செலவு மூலதன செலவாகும். ஆனால் மோட்டார் விற்பனையில் ஈடுபடும் நிறுவனம் கொள்வனவு செய்யும் போது ஓர் வருமானச் செலவாகும்.

**மூலதனச் செலவிற்கும் வருமானச் செலவிற்கும் இடையிலான வேறுபாடு**

-மூலதனச் செலவு வருமானத்தினை உழைப்பதற்கான இயலாமை அதிகரிக்கும் ஆனால் வருமானம் உழைக்கும் இயலளவை அதிகரிக்காது.

-மூலதனச் செலவினால் நீண்டகாலத்திற்கு நன்மையைப் பெறலாம்.

-வருமானம் செலவினால் குறுங்காலத்தில் நன்மையைப் பெறலாம்

-மூலதனச் செலவு மீண்டும் மீண்டும் உருவாகாது வருமானச் செலவு மீண்டும் மீண்டும் உருவாகும்.

-மூலதனச் செலவு எச் சொத்து தொடர்பாக உருவானதோ அந்தக் கண்ககிலேயே பதியப்படும். வருமானச் செலவு அவற்றிற்குரிய பிரத்தியேக கணக்குகளில் பதியப்படும்.

-மூலதனச் செலவை வருமானச் செலவை ஏற்படுத்தும் வருமானச் செலவு மூலதனச் செலவை ஏற்படுகிறது.

சில சந்தர்ப்பங்களில் மூலதனச் செலவு வருமானச் செலவாக மாற்றமடையலாம். அவ்வாறான சந்தர்ப்பங்கள் வருமாறு,

**கூலி :** பொதுவதாக கூலி ஓர் வருமானச் செலவாகும். ஆனால் நிலையான சொத்தொன்றை கொள்வனவு செய்து பொருத்துவதற்கு உரிமையாளருக்குத் செலுத்தும் கூலி மூலதனச் செலவாகும்.

**பராமரிப்புச் செலவு :** நடைமுறையல்லாச் சொத்துக்களை பராமரிப்பது தொடர்பான செலவு ஓர் வருமானச் செலவாகும். ஆனால் வேறு நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்ட நடைமுறையல்லாச் சொத்துக்களை பயன்படுத்த முன்னர் மேற்கொள்ளும் கிரயத் செலவு மூலதனச் செலவாகும்.

**வண்டிக் கூலி :** சாதாரணமாக வண்டிக் கூலி வருமானச் செலவாகும். ஆனால் நிலையான சொத்துக்கள் கொள்வனவு செய்யும் போது ஏற்பட்ட வண்டிக் கூலி மூலதனச் செலவாக கருதலாம்.

**சட்டச் செலவுகள் :** பொதுவாக சட்டச் செலவுகள் ஒரு வருமானச் செலவாகும். எனினும் நடைமுறையல்லாச் சொத்துக் களை கொள்வனவு செய்வது தொடர்பாக ஏற்பட்ட சட்டச் செலவு மூலதனம் செலவாகக் கருதப்படும்.

ஜெ.கஜேந்திகா
தரம் : **12C**

# வணிகத்தின் செயற்பாட்டு பெறுபேற்றைக் கணித்தலும் நிதி நிலைமைகளை வெளிப்படுத்தலும்

**வ**ணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் கட்சியினர் கணக்கீட்டுச் செயற்பாட்டின் இறுதி வெளியீடான நிதிக் கூற்றுக்களின் மீதே அதிக கவனம் செலுத்துகின்றனர். வணிகத்தின் மூலம் தயாரிக்கப்படும் பிரதான நிதிக்கூற்றக்கள் பின்வருமாறு

வியாபார இலாப நட்ட கணக்கு
ஐந்தொகை

வியாபார இலாப நட்ட கணக்கு நிதியாண்டு காலத்துள் உழைத்த இலாப நட்டத்தை அல்லது பெறுபேற்றினைக் கண்டறிவதற்காக தயாரிக்கப்படும்.



மொத்த இலாபம் அல்லது நட்டம்
தேறிய இலாபம் அல்லது நட்டம்

வியாபார கணக்கு

பொருட்கள் அல்லது சேவைகளை விற்பனை செய்யும் செயற்பாட்டில் ஈடுபடும்

வணிகமொன்றின் வியாபார இலாபம் அல்லது மொத்த இலாபத்தைக் கணிப்பிடுவதற்காக வியாபார கணக்கு தயாரிக்கப்படும். அதில் உள்ளடக்கப்படுபவை.

1. வியாபார இலாபம் அல்லது நட்டம்
2. விற்பனைச் கிரயம் அல்லது விற்றசரக்கின் கொள்விலை

**விற்பனை வருமானம்**

உடன்காசுக்கும் கடனுக்கும் விற்பனை செய்யப்படும் பெறுமதிகளின் கூட்டுத்தொகையே மொத்த விற்பனையாகும். கடனுக்கு விற்பனை செய்யப்பட்ட பண்டங்கள் ஏதாவது ஒரு காரணததினால் நிறுவனத்திற்கு உட்திருப்பப்படும் என்பதை அறவீர்கள். இவ்வாறு இடம்பெறும் உட்திருப்பம் மொத்த விற்பனையிலிருந்து கழித்துக் காட்டப்படும். இவ்வாறு கிடைக்கும் தேறிய விளைவு தேறிய விற்பனை எனப்படும்.

**விற்பனைக்கிரயம்**

விற்பனைக்கிரயம் கணிக்கும் போது பின்வரும் உருப்படிகளை கவனத்தில் கொள்ள வேண்டும்

ஆரம்ப இருப்பு
கொள்வனவு
வெளித்திரும்பல் /
கொள்வனவுத்திருப்பம்
உட்சுமை கூலி
இறுதி இருப்பு

ஒரு நிதியாண்டு இறுதியிலுள்ள இறுதி இருப்பு அடுத்துவரும் நிதியாண்டில் ஆரம்ப இருப்பாக கருதப்படும். புதிதாக ஆரம்பிக்கப்படும் நிறுவனம் ஒன்றின் ஆரம்ப இருப்பு காணப்படாது என்பதால் ஆரம்ப இருப்பானது விற்பனைக்கானது என்பதால் விற்பனைக் கிரயத்தின் ஒரு பகுதியாகும்.

நிதியாண்டு காலத்துள் விற்பனைக்காக வைத்திருக்கும் இருப்பு மாத்திரம் விற்பனைக்கு போதுமானதல்ல. புதிதாக பண்டங்கள் கொள்வனவு செய்யப்படவும் வேண்டும். இவ்வகையில் காசுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்கள் காசுக் கொள்வனவு எனவும், கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்கள் கடன் கொள்வனவு எனவும் கொள்ளப்படும். கடனுக்கு கொள்வனவு செய்த பண்டங்கள் பல்வேறு காரணங்களினால் கடன் கொடுத்தோருக்கு திருப்பதியனுப்பப்படும். அவ்வாறு இடமபெறும் கொள்வனவத் திருப்பம் மொத்தக் கொள்வனவிலிருந்து கழிக்கப்படும். அதன் மூலம் கிடைக்கும் விளைவு தேறிய கொள்வனவாகும். கொள்வனவு செய்த பண்டங்கள் தொடர்பாக நேரடியாக ஏற்பட்ட கொள்வனவுச் செலவுகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது கொள்வனவுச் செலவுகளான கொள்வனவு செய்த பண்டங்களை நிறவனத்திற்கு கொண்டுவருவதற்கான கூலி, இறக்கற் கூலி போன்றவற்றை கொள்வனவுடன் சேர்க்க வேண்டும்.

ஆரம்ப இருப்பு, கொள்வனவு, கொள்வனவு தொடர்பாக ஏற்பட்ட செலவுகள் ஆகியவற்றின் மொத்தம் விற்பனைக்குத் தயாரான பண்டங்களின் கிரயம் எனப்படும். இது விற்பனைக் கிரயமல்ல. விற்பனைக்குத் தயாரான

பண்டங்களின் கிரயத்திலிருந்து இறுதி இருப்பைக் கழிப்பதன் மூலம் விற்பனைக் கிரயம் பெறப்படும். நிதியாண்டின் இறுதியில் விற்பனைக்குத் தயாரான பண்டங்களில் விற்பனையாகாதது இறுதி இருப்பு எனப்படும்.

மொத்தலாபமானது விற்பனை வருமானத்திலிருந்து விற்பனைக் கிரயத்தைக் கழிப்பதன் மூலம் பெறப்படும். இதற்கமைய வியாபாரக் கணக்கைச் சமப்படுத்தி மொத்தலாபம் அல்லது மொத்த நட்டத்தை கணிப்பிட முடியும். வியாபாரத்தின் மூலம் பெற்ற மொத்த லாபம் இலாப நட்ட கணக்கிற்கு மாற்றப்படும்.

வியாபாரக் கணக்கை தயாரித்தது போன்று இலாப நட்ட கணக்கும் நிதி யாண்டு காலத்திற்குரிய வருமானங் களையும் செலவீனங்களையும் செம்மை யாக்கிய பின்னரே தயாரிக்கப்படகின்றது. அட்டுறு எண்ணக்கருவுக்கு அமைய செம்மையாக்கல்கள் இடம்பெறுகின்றன. இலாப நட்ட கணக்கில் வருமானங்களும் வருமானச் செலவுகளும் உள்ளடக்கப் படுகின்றன. வியாபார நடவடிக்கைகளின் ஊடாகப் பெறப்படும் வருமானமாக மொத்த லாம், பெற்ற கழிவு, என்பவற்றினையும் வியாபார நடவடிக்கை தவிர்ந்த வேறு வழிகளினூடாகப் பெறப்படும் வருமானமாக பெற்ற வட்டி முதலீட்டு வருமானம், கட்டிட வாடகை வருமானம் என்பற்றினையும் குறிப்பிட முடியும். வருமானச் செலவுகளாக செம்மையாக்கலுக்கு உட்பட்ட செயற்பாட்டு செலவுகள் இலாப நட்டக் கணக்கில் பின்வரும் தலைப்புக்களின் கீழ் காட்டப்படும்.

உ-ம்:

நிலைய நிர்வாகச் செலவுகள் - கட்டிட வாடகை, மின்சார கட்டணம், நிர்வாகச் சம்பளம், அலுவலகச் செலவு

விற்பனை விநியோகச் செலவுகள் - விளம்பரம், கொடுத்த கழிவு, வெளிச்சென்ற வண்டிக்கூலி,

நிதிச் செலவுகள் - வஙகிக் கட்ட்டணம், வங்கிக் கடன் வட்டி

ஏனைய செலவுகள் - இருப்பழிவு, நன்கொடை, தீ அழிவு

தேறிய இலாபமாயின் இரட்டைப் பதிவு
இலாப நட்ட கணக்கு வரவு
மூலதன கணக்கு செலவு

தேறிய நட்டமாயின் இரட்டைப் பதிவு
மூலதனக் கணக்கு வரவு
இலாபநட்ட கணக்கு செலவு

வியாபார நிறுவனம் தொடர்பில் அக்கறை செலுத்தும் கட்சியினர் அந் நிறுவனத்தின் நிதி நிலைமைபற்றியும் கவனத்தில் கொள்வர். நிதி நிலைமை என்பது ஏதாவதொரு குறித்த தினத்தில் நிறுவனத்திற்கு உரித்தான சொத்துக் களுக்கும் பொறுப்புக்களுக்கும் இடையே யான தொடர்பாகும். இங்கு நிறுவனத்தின் மொத்தச் சொத்துக்களின் பெறுமதி எவ்வளவு? அவை எவ்வகையான சொத்துக்கள்? அவை உரிமையாளரால் இடப்பட்ட மூலதனத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டா? அல்லது கடனுக்குப் பெறப்பட்டா? எனும் அடிப்படையில் கவனம்

செலுத்தப்படும். வணிகம் ஒன்றின் நிதி நிலைமையை ஐந்தொகை தயாரிப்பதன் மூலம் அறியலாம். பின்வரும் அடிப்படைக் கணக்கீட்டுச் சமன்பாட்டின் கூற்று வடிவாகவே ஐந்தொகை காணப்படும்.

மூலதனம் + பொறுப்புக்கள் = சொத்துக்கள்

ஐந்தொகை என்பது ஏதாவது ஒரு தனித்தில் நிறுவனத்தின் சொத்துக்கள், உரிமை, பொறுப்புக்கள் என்றவகையில் நிதி நிலைமைகளைக் காட்டும் ஒரு கூற்றாகும். அது ஒரு கூற்றொன்றே தவிர கணக்கொன்றாகக் கருத்தப்படுவதில்லை. நிறுவனத்தில் அக்கறை செலுத்தும் கட்சினர் பொருளாதாரத் தீர்மானம் எடுப்பதற்குத் தேவையான தகவல்களை ஐந்தொகையின் மூலமாகப் பெற்றுக் கொள்வர். சொத்துக் கணக்குகள், உரிமைக் கணக்குகள், பொறுப்புக்கணக்குகள் என்பவற்றின் மீதிகளை உள்ளடக்கி ஐந்தொகை தயாரிக்கப்படும். இலாப நட்டக் கணக்கை தயாரித்ததன் மூலம் கிடைக்கும் தேறிய இலாபம் அல்லது தேறிய நட்டம் ஐந்தொகையில் மூலதன கணக்கின் மீதியுடன்

தேறிய இலாபமாயின் மூலதனத்துடன் கூட்டப்படும்

தேறிய நட்டமாயின் மூலதனத்திலிருந்து கழித்துக் காட்டப்படும்

ஐந்தொகையைச் சரியாகத் தயாரிக்கும் போது மூலதனத்தினதும், பொறுப்புக்களினதும் கூட்டுத்தொகை அங்குள்ள சொத்துக்களின் கூட்டுத் தொகைக்குச் சமனாகும். இதன் மூலம் கணக்குகளின் செம்மையை உறுதிப் படுத்திக் கொள்ள முடியும்.

ப.பிரதீபா
தரம் : **12C**

இலட்சியம் இல்லாத மனிதன் மனிதனே அல்லன், இலட்சியத்திற்காகப் பாடுபடாத வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையே ஆகாது.

– மாஜினி

# காப்புறுதி



**சா**தாரண காப்புறுதி ஒப்பந்தங்கள்
சாதாரண காப்புறுதி ஒப்பந்தங் களினை கீழ்வருமாறு வகைப்படுத்த முடியும்.

பிரதான வகைகளும் உட்பிரிவுகளும்

சொத்து / ஆதன காப்புறுதி
தீயபாயம்
களவு
மோட்டார்
கடலபாய காப்புறுதி
விமான காப்புறுதி

பொறுப்பு காப்புறுதி
பொது காப்புறுதி
உற்பத்திப் பொறுப்பு
ஊழியர் பொறுப்பு

தனிநபர் விபத்து காப்புறுதி
திடீர் விபத்து
வைத்தியசாலை கட்டணம்

நிதி ரீதியான இழப்புக்கான காப்புறுதி
நம்பிக்கை பிணை
வியாபார நட்டம்
(சொத்து அழிவால் ஏற்படக் கூடிய இலாப இழப்பு)

## தீயபாய காப்புறுதி

தீ அபாய காப்புறுதியின் கீழ் தீ மின்னல் குண்டுவெடிப்பு, மூலமாக சொத்துக்களுக்கு ஏற்படும் இழப்புக்களுக்கு இழப்பீடு வழங்கப்படம் இத்தகைய அடிப்படை தீயபாய காப்புறுதிக்கு வேறு சில இடர்களையும் உட்படுத்த முடியும் புயல் சூறாவளி, வரட்சி வெள்ளப்பெருக்கு, புவிநடுக்கம், விமானங்கள் உடைந்து விழுதல் போராட்டங்கள் போன்றவற்றையும் உட்படுத்த முடியும்.

## களவபாய காப்புறுதி

களவினால் சொத்துக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களுக்கான இழப்பீடு வழங்கப்படம் காப்புறுதியில் களவு என்பது பின்வருமாறு வரைவிலக்கணகப்படுத்தப் பட்டுள்ளது. ஏதேனும் வலுவினை பயன்படுத்தி அத்துமீறி உள்நுழைந்து வெளியேறி மேற்கொள்ளும் திருட்டுக்கள் களவு ஆகும்.

## மோட்டார் காப்புறுதி

மோட்டார் பதிவு சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மோட்டார் வாகனமொன்று பெருந்தெருவில் செலுத்தப் படல் வேண்டுமெனில் குறித்த பாதசாரிகள் தொடர்பாக வரையறுக் கப்படாத பொறுப்பினை கொண்டிருக்கிறது. எனவே கட்டாயம் இரண்டாம் தரப்பினர் தொடர்பாக காப்புறுதி மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

பல்வேறு காப்புறுதி நிறுவனங்களால் பல்வேறு நலன்களை வழங்கும் காப்புறுதி ஒப்பந்தங்களை காண முடியும். சட்டத்தின் கீழ் கட்டாயமாக பெற வேண்டிய இரண்டாம் கட்சி ஒப்பந்தம் சட்டத்திற்கு அமைவான ஒப்பந்தத்திற்கு மேலதிகமாக சொத்துக்கள் பாதிக்கப்படல் தொடர்பா பெற்றுக் கொள்ளப்படும் 3ம் கட்சி ஒப்பந்தம் இரண்டாம் கட்சி ஒப்பந்தத்திற்கு மேலதிகமாக தீ களவு தொடர்பான இழப்புக்களுக்கான காப்புறுதி

### பூரண காப்புறுதி (Full Opetion)

மேற்கூறிய இழப்பீடுகளுக்க மெலதிகமாக வாகனத்திற்கு ஏற்படும் பாதிப்பக்களுக்கு இழப்பீடு வழங்கும் காப்புறுதி ஒப்பந்தமாகும். இதன் கீழ் பல்வேறு இடர்களுக்கான இழப்பீடு வழங்கப்படுகின்றது.

### பொறுப்பு காப்புறுதி

இதன் சில வகைகள் பின்வருமாறு

### பொது பொறுப்பு காப்புறுதி

வணிகத்தை நடாத்தி செல்லும் போது பொது மக்களுக்கு ஏற்படும் உடல் ரீதியான அல்லது ஏனைய பொதுமக்கள் பாதிப்புக்களுக்கு வணிகர்களின் சட்ட ரீதியான கட்டுப்பாட்டுக்கு அமைவாக பெற வேண்டிய காப்புறுதி ஒப்பந்தமாகும்.

### ஊழியர் பொறுப்பு காப்புறுதி

நிறுவனத்தில் தொழில் புரியும் ஊழியர் தொழிலில் ஈடுபட்டள்ள போது ஏற்படும் உடல் ரீதியான அல்லது நோய்கள் ரீதியான பாதிப்பக்களுக்கான சட்ட ரீதியான கடப்பாடுகளுக்கான சட்ட ரீதயிான கடப்பாடுக்கமைவாக தொழில் தருணர் பெற வேண்டிய காப்புறுதி ஒப்பந்தமாகும்.

### உற்பத்தி பொறுப்பு காப்புறுதி

குறித்த நிறுவனம் உற்பத்தி செய்யும் உற்பத்தி பொருளினால் வாடிக்கையாளருக்கு ஏற்படும் உடல் ரீதியான பாதிப்புக்கள் அல்லது அவர்களது சொத்துக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பான காப்புறுதி

### தொழில்சார் பொறுப்பு காப்புறுதி

சட்டத்தரணிகள், கணக்காளர்கள் வைத்தியர் போன்ற தொழில்சார் நிபுணரகளின் கவனக்குறைவு காரணமாக அவர்கள்து ஆலோசனை பெற்ற தரப்பினர்க்கு ஏற்படும் பாதிப்பக்களுக்கான காப்புறுதி.

### தனிநபர் பொறுப்பு காப்புறுதி

தனிநபரொருவரின் தனிப்பட்ட செயலான்றினால் வேறுதரப்பினர்க்கு ஏற்படும் பாதிப்புக்களுக்கான காப்புறுதி

### கடலபாய காப்புறுதி

கப்பல் கப்பல் சரக்கு (Cargo) மற்றும் கப்பல் கட்டணம் கடலபாய காப்புறுதியோடு தொடர்புடைய விடயங்களாகும். இவை கடலபாய காரணிகளுக்கு எதிராக காப்புறுதி செய்யப்படும். இதற்கு தீ மற்றும் பேராட்டங்கள் என்பனவும் உள்ளடங்கும். கப்பால் கட்டணம் என்பது சரக்கு, போக்குவரத்து அல்லது கப்பல் கட்டணத்திற்கு செலுத்தப்பட்ட பணமாகும். இவற்றிற்கு மேலதிகமாக கப்பல் உரிமையாளரின் பொறுப்புக்கள் கப்பல் புதுப்பித்தல் என்பவற்றிற்கு காப்புறுதி செய்ய முடியும்.

விமான காப்புறுதி

விமானம் மற்றும் அதனூடாக ஏற்படும் பொறுப்புக்கள் விமானப் பயணிகள் மற்றும் பயணிகளின் பொதிகள் தொடரப்பாக மேற்கொள்ளப்படும் காப்புறுதி ஆகும்.

கடன் காப்புறுதி

கடன்படுநர் முறிவடைதல், அல்லது வேண்டுமென்றே கடனைப் புறக் கணித்தல் காரணமாக ஏற்படும். நட்டங் களை நீக்கி கொள்வதற்கான காப்புறுதி

பிணை பொறுப்புக் காப்புறுதி

ஊழியரின் ஊழல் வஞ்சக செயலினால் ஏற்படும் நம்பிக்கை முறிவு தொடர்பான காப்புறுதி ஒப்பந்தமாகும். ஒப்பந்தகாரர்கள் நம்பிக்கை முறிவுக்கு இதன் கீழ் இழப்பீட்டை பெற முடியும்.

தனிநபர் விபத்துக் காப்புறுதி

சடுதியான விபத்துக்கள் காரண மாக நபர்களுக்கு ஏற்படும் உடற்காயங்கள், மரணம் என்பவற்றால் ஏற்படும் நிதிரீதியான இழப்பக்களை வழங்கும் காப்புறுதி ஆகும்.

பொறியியலாளர் காப்புறுதி

கட்டிட தொழில் தொடர்பான காப்புறுதி

ஒப்பந்தகாரரின் அனைதத்து இடருக்குமான காப்புறுதிக்கும் ஒப்பந்தகாரர் அதனை நிறைவு செய்து உரிமையாளருக்கு கையளிக்கும் வரையிலான இடர்களை உள்ளடக்கியதான ஒப்பந்தமாகும்.

பொறிகள் தொடர்பான காப்புறுதி

கட்டிடத்தொழிலில் பயன்படுத் தப்படும் பொறிகளுக்கு ஏற்படும் இடர்கள் தொடர்பான காப்புறுதி.

இலத்திரனியல் உபகரண காப்புறுதி

கணனி மற்றும் ஏனைய இலத்திரனியல் உபகரணங்கள் தொடர் பான இடர்கள் தொடர்பான விசேட காப்புறுதி ஆகும்.

**யோ.டினோஜன்**
**தரம் : 13C**

> தன்னை அடக்கப் பழகிக் கொண்டவன் புறத்தே உள்ள எதற்கும் வசப்பட்டவன் அல்லன். அத்தகைய மனிதனே நன்கு வாழத் தெரிந்தவன்.
>
> – விவேகானந்தர்




# பங்குச்சந்தை பற்றி ஓர் அறிமுகம்
# An introduction of the Stock market

நிதிச் சந்தை - அறிமுகம்

நீண்டகால மற்றும் குறுங்கால நிதிமுதல்களை வகுத்து கொள்வதற்கான தளம் அல்லது இடம் நிதிச்சந்தை எனப்படும். பொதுவாக நீண்டகால மற்றும் குறுங்கால நிதி வழங்குனர்களையம், நிதி பெறுனர்களையும் தொடர்புடுத்துகின்ற செயல் ஒழுங்கு நிதிச்சந்தை எனப்படும்.

இலங்கையின் நிதிசந்தை கட்டமைப்பு (Financial Markiting) பின்வரும் வரைபடம் மூலம் வேறுபடுத்திக் காட்டலாம்




**பணச்சந்தையின் துணை சந்தைகள்** (Submarkets of money market)

1. அழைப்பு கடன் சந்தை (call money market)
2. வணிக பத்திரங்களின் சந்தை (market for commercial papers)
3. நாணயமாற்றுச் சந்தை (Foreign currency market)
4. கனரகடந்த வங்கிச்சந்தை (offshore markdet)
5. திறைசேரி உண்டியல்சந்தை (market for Treasury Bills)

**மூலதனசந்தையின் துணைச்சந்தைகள்** (Sub markets of capital martet)

1. திறைசேரி முறி (Tresury Bonds)
2. தொகுதிக்கடன்கள் (Debentures)
3. உரிமை முதல் சந்தை (Equity market)

இதுவரையும் இலங்கையின் நிதிசந்தையில் பங்குவகிக்கும் துணைச்சந்தைகள் பற்றி பார்த்தோம் தொடர்ந்து நிதிச்சந்தையில் பாரிய பங்கு வகிக்கும் பங்கு சந்தை பற்றிய அறிமுகம்

**பங்குச்சந்தை ஓர் அறிமுகம் (An introduction to thet stock market)**

பொதுவாக சந்தை என்பது பொருட்கள் சேவைகளை இறுதி பாவனைக்காக கொள்வனவு விற்பனை செய்யத்தக்க பிரத்தேய இடம் அல்லது களம் சந்தை எனப்படும் இங்கு அடிப்படையில் பொதுச் சேவைகளின் நகர்வு உரிமைகள் ஒருவரிடமிருந்து இந்நொருவருக்கு மாற்றப்படும்.

இதே அடிப்படையில் பொருட்சந்தை கட்டமைப்பை ஒத்ததாகவே பங்குசந்தையின் கட்டமைப்பும் அதாவது நிறவனத்தின்உ ரிமைத்தத்துவதை பிரநிதிநித்துவப்படுத்துகின்ற சம அளவிலான பகுதிகள் மூலதனச் சந்தை தொடர்பில் பங்குகள் எனப்படும். இங்கு கம்பனியின் உரிமைத்துவமானது ஒரு முதலீட்டாளரிடம் இருக்கு இன்னுமொரு முதலீட்டாளருக்கு சட்டரீதியாக மாற்றப்படும் இடம் பங்குச் சந்தை எனப்படும். இலங்கையின் பங்குச்சந்தை செயற்பாடுகளை கொழும்பு பங்கு பரிவர்த்தனை பொறுப்பேற்று நிறைவேற்றுகின்றது. தனது சேவையை நாடுபூராகவும் விஸ்தரிக்கும் நோக்கில் மாத்தறை, கண்டி, குருணாகல், நீர்கொழும்பு மற்றும் இறுதியாக யாழ்ப்பாணத்திலும் தனது கிளைகளை நிறுவியுள்ளது. அதேவேளை இலங்கை பங்கு சந்தையின் வளர்ச்சியானது,

**இலங்கையில் பங்குச்சந்தையின் தோற்றம்**

**(History of the Stock market in Sri Lanka)**

இலங்கையில் பங்குசந்தையானது 1896 ஆம் ஆண்டளவில் தோற்றவிக்கப் பட்டதாக கருதப்படுகின்றது. இச்செயற்பாடு ஆரம்பிக்கப்படும் 100 ஆண்டுகளை கடந்த நிலையில் அது பல்வேறுபட்ட வளர்ச்சி பரிமானங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

பிரித்தானிய காலனிந்கல ஆட்சிக் காலத்தில் பெருந்தோட்ட பயிர் செய்கை தேவையான நிதிமூலத்தை திரட் சென்றும் நோக்குடனும் பொதுகம்பனிகள் பதிவு செய்யப்பட்டு பொது மக்களுக்கு பங்குகளை வழங்கி மூலதனத்தை திரட்டி கொள்ளும் நோக்குடனும் முதன் முதலாக இலங்கையில் 1896 ஆம் ஆண்டு பங்கபரிவர்த்தனை கூட்பினைக்காட்ட கொழும்பு பங்குதரகர் சங்கத்தினால் (Clolmbo stock brokers association) உருவாக்கப்பட்டு முறைமைப்படுத்தப்பட்டது.

1904 ஆம் ஆண்டு பங்குதரகர் சங்கம் என்பது கலைக்கப்பட்டு மீண்டும் கொழும்பு பங்குதரகர் சங்கம் எனும் அமைப்பு உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டது. (colombo stock brodet's Association)

1948 ஆம் ஆண்டு யூன் மாதம் அறிமுகப்படுத்தப்பட்ட நாணய பராமரித்தல் சட்டத்திற்கு அமைய வெளிநாடுகளில் பதியப்பட்ட கம்பனிகளின் பங்குபரிமாற்றங்கள் நிறுத்தப்படல்.

## இலங்கையின் நவீன பங்கச் சந்தையின் தோற்றமும் வளர்சியும் (History of the modern stock market in srilanka

1984 ஆம் ஆண்டு பகிரங்க வியாபாரத்தளம்(Troding floor) அறிமுகப்படுத்தப்பட்டதன் பயனாக நிறந்த கத்தல் முறையில் (open outery system) பங்குகள் பரிமாற்றம் செய்ய வசதியளிக்கப்பட்டது.

1986 ஆம் ஆண்டு கொழும்பு பங்குபரிவர்த்தனை உத்தரவாதத்தால் பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாக கூட்டினைக்கப்பட்டது.

1991 ஆம் ஆண்டு மத்திய வைப்பு திட்ட (தனியார்) கம்பனி கூட்டிணைக்கப்பட்டது.

1997 ஆம் ஆண்டு யூன் 3ம் திகதி திறந்த சுத்தல் முறையானது தன்னியக்க வியாபார முறைக்கு (Automated trading system) மாற்றப்பட்டது.

2008 ஆம் ஆண்டு விசேட அவதானிப்பு (Surueillance) முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

மேலும் தற்போது Cse MdJ south Asian federation of exclaanges (SAFE) world federation Exchan gos (WFe) இல் உறுப்பு நிமையினை கொண்டுள்ளது.

## பங்கு தரகர்களால் வழங்கப்படும் சேவைகள் (Services provied by the stock bro)

பங்குசந்தையில் பங்குகளை கொள்வனவு மற்றும் விற்பனை செய்வதற்கு பங்கு தரகர்களின் சேவை இன்றியமையாதது. அதாவது பங்குதரகர் இன்றி பங்குபரிமாற்றம் சாத்தியமற்றது. இவர்களது சேவைகள் வேறுபட்ட நிலைகளில் தேவைக்கு ஏற்ற வேறுபடுகின்றன அந்தவகையில்,

1. நடுவராண்மை சேவைகள் (Intermediaton)

பங்குமுதலீடுகள் தொடர்பான ஆலோசனைகள் அதாவது பரிமாற்றங்களை முறைமைப்படுத்தலும் அவற்றை உறுதிப்படுத்தலும் ஆகும். மேலும் பங்கு கொள்வனவின் போது அவை தொடரபாக ஆலோசனை மற்றும் அனுசரனை அழித்தல் என்பனவாகும்.

2. ஆய்வு சேவைகள் Cre search

பொதுவில் தரகர்கள் மூலதன சந்தை தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ள

பிரத்தியேகமாக ஆய்வு பகுதியை பேணிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

3. எல்லை வியாபார சேவை (Margin Trading)

முதலீட்டாளர் பங்கு முதலீட்டுகளுக்கு தேவையான கடன்வசதிகளை வழங்கும் ஒலை

4. கூட்டு நிதியில் சேவை (Corporete finance services)

பங்குதாரர் கணக்குகளை ஆரம்பித்தல் தொடக்கம் கொடுக்கல்வாங்கல் மேற்கொள்ளல் வரை பதிவுகளை மேற்கொள்ளுதல்.

**கொழும்பு பங்கு பரிமாற்றகத்தில் கொடுக்கல் வாங்கல் செய்யப்படும் பிணையங்களின் வகைகள் (SEcurities traded on the CSE)**

1. சாதாரண பங்குகள் cordinary shares

கம்பனி உரித்துடமையை அழிக்கும் பங்குகள் சாதாரண பங்குகள் எனப்படும். இவை ஆபத்து கூடிய பங்குகளாகும்.

2. மூன்று நிலை பங்குகள் (preference shares)

நிச்சயிக்கப்பட்ட பங்குலாபத்தை பெறுவதற்காக கொள்வனவு செய்யப்படும் பங்குகள் இவையாகும். இவை சாதாரண பங்குடன் ஒப்பிடும் போது நட்ட அச்சம் குறைவு.

3. பங்கு ஆணைப்பத்திரம் (Share warrants)

எதிர்காலத்தில் குறித்த விலைக்கு கம்பனி பங்குகளை பெற்றுக் கொடுக்கும் ஆவணமே இதுவாகும்.

4. வாக்குரிமை அற்ற பங்குகள் (non - voting shares)

வாக்குரிமை பாவிக்க முடியாத ஆனால் சாதாரண பங்குதாரருக்கான நலன்களை பெற்றுக் கொடுக்கும் பங்குகள் இவை.

5. கம்பனி தொகுதிகடன்கள் (corporated debertures)

கடன் மூலதனம் திரட்ட கம்பனியால் வழங்கப்படும் கம்பனி தொகுதி கடன்கள்

நிதிச் சந்தையின் முக்கிய இடம்வகிக்கும் பங்குச் சந்தை எனும் தலைப்பின் கீழ் ஆசியாவிலே முதல்த்தரமாகவும் உ லக அளவில் இரண்டாம் தர பங்குச் சந்தையாக வழங்கும் CSe பற்றியும் முக்கிய செயற்பாடுகள் பற்றியும் மேற்கண்ட ஆய்வு கட்டுரை மூலம் அறிந்து கொள்ள முடியும்.

ஞா . பிருந்தாவன்
தரம் 13C

# கொழும்பு - பங்குப் பரிவர்த்தனை அனுபவத்துடன் இணைந்த அறிவு செல்வத்தின் பிறப்பிடம் பங்கு முதலீடுகள்



கொழும்பு பங்குப் பரிவர்த்தனையின் அண்மைக்கால செயற்திறன் மட்டமானது உலகப் பங்கச்சந்தைத் தரப்படுத்தல்களில் ஆசிய பிராந்தியத்தில் முதன்மையானதாகவும், உலகளாவிய ரீதியல் இரண்டாம் நிலை எனும் உயர்தரப்படுத்தலினையும் கடந்த இரு ஆண்டுகளாக பெற்றுள்ளன. இது இலங்கையராகிய நாம் ஒவ்வொருவரும் பெருமைப்பட வேண்டிய விடயம். இவ் வெளிப்பாடு எமது நாட்டின் எதிர்கால சுபீட்சமான வளர்ச்சிக்கான ஒரு சிறந்த சமிக்ஞையாக அமைகிறது.

எமது தனிப்பட்ட இலக்கினை அடைந்து கொள்வதற்கான சிறந்த தெரிவாக பங்குச் சந்தை முதலீடுகளை ஏற்றுக் கொள்ள முடியும். இது ஓர் இலகு நடைமுறை ஆகும். நாம் விரும்பிய நேரத்தில் எதுவித கட்டப்பாடும் இன்றி மிக்க குறைவான தொகையுடன் முதலீட்டினை ஆரம்பிக்க முடியும். செல்வத்தினைப் பெருக்குவதற்கு சிறந்த வழிகளில் முதலீடுகள் இன்றியமையாதவை. எனவே எமது முதலீட்டின் ஒரு பகுதியாக பங்கு முதலீட்டினை இணைத்துக் கொள்ளுதல் மிகச் சிறந்த தீர்மானமாக அமையும். இப் பங்குகளில் முதலீடு செய்ய முன்னர் நாம் தெரிந்து கொள்ள வேண்டியவை யாவை? என்பன பற்றி அறிந்து கெள்வது அவசியமானதாகும்.

## பங்குகளில் முதலீடு செய்யமுன்னர் நாம் தெரிந்து கொள்ள வேண்டி யவை யாவை? (what do we need to know before we start)

### பங்குகள் என்றால் என்ன? What are shares

ஒரு தொழில் முயற்சியின் பகுதிய ளவிலான உரிமையே பங்கு எனப்படும். இது ஒரு முயற்சியில் எம்மை இணைத்தக் கொள்வதற்கான உரிமையைக் கொடுக் கின்றது. அதாவது மூலதனத்தின் சம அளவிலான பகுதி பொதுவாக பங்கு எனப்படும். நாம் கொண்டுள்ள பங்குகளின் அளவிற்கு ஏற்ப உரிமைத்துவம் தீர்மானிக் கப்படுகின்றது. ஒரு முயற்சியானது தனக்குத் தேவையான மேலதிக நிதி முதலினை பொதுமக்களுக்கு பங்குகளை வழங்குவதன் மூலம் திரட்டிக் கொள்ள முடியும். அவ்வாறு பங்குகளைக் கொண் டுள்ளவர்கள் அந்நிறுவனத்தின் பங்குதாரர் ஆவர். இவர்கள் முதலீட்டிற்கான வருமா னமாக பங்குலாபம் உட்பட பல்வேறுபட்ட அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வர்.

## ஏன் முதலீட்டாளர்கள் பங்குகளில் முதலீடு செய்ய வேண்டும் (Why do investors buy shares)

நாம் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் முதலீட்டாளர்கள் இல்லையா நாம் பொருளாதார ரீதியான பிரதிபலன் களை எதிர்பார்த்த பல்வேறுபட்ட முதலீட்டுத் திட்டங்களில் எம்மை நாளாந்தம் உட்படுத் துகின்றோம். ஆனால் அவற்றிலிருந்த வருமானமானது நாம் எதிர்கொள்ள தயராகவுள்ள ஆபத்தின் அளவு தொடக்கம், வருமானம், பால், வயது, குடும்பச் சூழல், அறிவு மற்றும் பல்வேறு காரணிகளில் தங்கியள்ளதை எம்மால் உணர முடிகின்றது. இருந்தும் ஒரு சிறந்த முதலீடு பின்வரும் 3 அடிப்படைக் குறிக்கோள்களை கொண்டி ருத்தல் வேண்டும்.

1. முதலுக்கான வருமானம் - Income objective
2. முதலுக்கான பாதுகாப்பு - capital preservation
3. முதல் பெருக்கம் - capital Appreciation

## முதன் முதலாகப் பங்குகளில் முதலீடு செய்வோர் (First Time share Investors)

நீங்கள் ஒரு பங்கு முதலீட்டாளராக வரவிரும்புமிடத்து அல்லது நீங்கள் ஒரு பங்கு முதலீட்டாளராக இருக்குமிடத்து உங்கள் முதலீட்டுத் தேக்கத்தினை வினைத்திறனுடையதாக உருவாக்குவதற்கு பின்வரும் வினாக்கள் உங்களுக்கு பயனுள்ளதாக அமையும்.

1. எமது இலக்கு என்ன?
2. எவ்வளவு பணத்தை முதலீடு செய்ய வேண்டும்
3. எப்படி முதலீடு செய்ய வேண்டும்
4. ஏன் முதலீடுகள் தொடர்பான தகவல்களின் கிடைப்பனவு, நம்பகத் தன்மையும் அவசியம்

## எவற்றில் முதலீடு செய்வது என்பதனை எப்படித் தீர்மானிக்கலாம் (How to decide what to buy)

எங்களால் நிர்ணயிக்கப்பட்ட குறிக்கோளினை அடைவதற்கான முக்கிய காரணியாக நாங்கள் கொள்வனவு செய்யத் தீரமானித்துள்ள பங்குகள் அமைகின்றன. அதாவது பங்குகள் மீதான திரும்பல்கள் குறிக்கோள்களிற்கான பெறுபேற்று அடைவுகளாக அமைகின்றன.

உ-ம் நாம் எமது குறிக்கோள்களை பின்வருமாறு வகுத்துக் கொள்ள முடியும். எனது முதலீட்டுத் தேக்கத்தின் தேறிய பங்கு இலாப முதலீட்டு விளைவு வீதம் 4% ஆக அமைந்திருக்கும். அதே சமயம் அவ் முதலீட்டுத் தேக்கம் அடுத்த 2 வருட காலத்திற்குள் 10% மான மூலதன வளர்ச்சியினைப் பெற்றுத்தரும்.

இங்கு குறித்த நாள் வியாபாரம் (Day Trading) ஒப்பீட்டளவில் அதிக ஆபத்தினைக் கொண்டு இருப்பினும் அறிவு, அனுபவதின் மூலமாக ஆபத்தினை இழிவுபடுத்த முடியும். நீங்கள், பங்குச் சந்தையில் வேறுபட்ட பங்குத் தொகுதியி லிருந்து குறித்த பங்குகளைக் கொள்வனவு செய்த் தீர்மானிக்கின்ற பொழுது பின்வரும் காரணிகளைக் கருத்திற் கொள்ளுதல்

மேலதிக அனுகூலத்தினை ஈட்டித்தரும்.

1. வருமானப் பங்குகள் (Income shares)
2. மிலங்கா கம்பனிப் பங்குகள் (Milanka Companies)
3. வளர்ச்சிப் பங்குகள் (Growth shares)
4. சுழற்சிப் பங்குகள் (Cyclical shares)
5. பாதுகாப்புப் பங்குகள் (Defensive shares)

## ஏன் எமக்கு பங்குத்தரகர் முக்கியமானவர்கள் (Why we need a stock broker)

இலங்கையில் பங்கு வர்த்தகத்தினை பாதுகாப்பானதாகவும் முறையாகவும் நிறைவேற்றுவதற்கு தேவையான வசதியினை CSE வழங்குகின்றது. இங்கு பங்குகளின் கொடுக்கல் வாங்கல்களை இலகுபடுத்தி விரைவுபடுத்துவதற்குப் பங்குத்தரகர் செயற்பாடுகள் அவசியமானவையாகும். இவர்கள் கொடுக்கல், வாங்கல்களின் போது இடைநடுவர்களாகச் செயற்பட்டு பரிமாற்றம் நிறைவடைவதனை உறுதிப்படுத்தி சேவைக்கட்டணத்தினை பெற்றுக் கொள்வார்கள்.

பங்குத்தரகர் இல்லாத பங்கு வர்த்தகம் நடைமுறையில் சாத்தியமற்றது. 1ம் தரச்சந்தையிலோ அல்லது 2ம் தரச்சந்தையிலோ பங்குத்தரகர் இன்றி பங்குகளில் முதலீட்டினை மேற்கொள்ள முடியாது.

## பங்குச் சந்தையில் உள்ள பங்குகளை கொள்வனவு மற்றும் விற்பனை செய்தல் (Existing shares traded on CSE)

இலங்கைப் பங்குச்சந்தையில் பட்டியல்படுத்தப்பட்ட 245 (30.03.2011) கம்பனிகளின் பங்குகளில் நாம் முதலீட்டினை மேற்கொள்ள முடியும். இங்கு சந்தையில் குறித்த நேரத்தில் காணப்படுகின்ற பங்குகளுக்கான கேள்வி மற்றும் நிரம்பல் பங்கின் விலையைத் தீர்மானிக்கின்றது. பங்கின் விலை மற்றும் திரவத்தன்மை என்பன பங்கிற்கு பங்கு நேரத்திற்கு நேரம் மாற்றமடையக் கூடியவை. உயர்ந்த திரவத்தன்மையுடை பங்குகளை இலகுவாகக் கொள்வனவு மற்றும் விற்பனை செய்ய முடியும். பங்குச் சந்தையில் பங்குக்கான கேள்வி நிரம்பல்கள் அதன் விலையில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

## பங்குதாரர் உரிமைகளும் நலன்களும் (Sharcholder rights and benefits)

பணத்தினை கம்பனிகளின் பங்குகுளில் முதலீடு செய்து கம்பனியின் வளர்ச்சியின் பகுதியளவான உரிமையாளராக எம்மை இணைத்துக் கொள்ள முடியும். இந்நிலையில் நாம் கமப்னியின் பங்குதாரர் ஆவோம். நிர்ணயித்த இலக்கினை அடைந்து கொள்ளும் நோக்குடன் பங்கத்தரகர் ஆலோசனைக்கமைய கட்டளை இட்டுப் பெற்றுக் கொண்ட கம்பனியின் பங்குகளிலிருந்து பல உரிமைகளையம் நலன்களையம் எதிர்பாரக்க முடியும்.

1. கம்பனியின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பங்குபற்றும் உரிமை
2. கம்பனியின் ஆண்டறிக்கை மற்றும் காலாண்டு அறிக்கையினைப் பெற்றுக் கொள்ளல்
3. பங்கு இலாபம் மற்றும் மீள் முதலீட்டு

திட்டத்தின் நலன்களை அனுபவிக்கும் உரிமை

4. பங்குகளை முன் உரிமை அடிப்படையில் பெற்றுக் கொள்ளல்
5. கம்பனிகளின் தீர்மானங்களிற்கு பங்களிப்புச் செய்யும் உரிமை

## பங்குச் சந்தையுடன் தொடர்புடைய நிறுவனங்கள் (Organization related to share market)

**இலங்கை பிணையங்கள் பரிமாற்று ஆணைக்குழு(securities and Exchange commision of srilanka)**

இலங்கையில் பிணைகளின் பரிமாற்றங்களை நெறிப்படுத்தி முகாமை செய்வதனை முதன்மை நோக்காகக் கொண்டு 1987 ஆம் ஆண்டு 36 ஆம் இலக்க பிணைகள் ஆணைக்குழுச்சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட சட்ட ஆளுமையுடைய அரச துறைசார்ந்த நிறுவனம் ஆகும். இதன் முதன்மை நோக்காகக் திகழ்வது மூலதனச் சந்தைச் செயற்பாடுகளை நியாயமான முறையில் நெறிப்படுத்துதல் ஆகும். இந்த வகையில் முதலீட்டார்களின் நட்ட அச்சத்தினைக் குறைக்கும் வகையில் நட்ட ஈட்டு நிதியத்தினை ஏற்படுத்துதல் பிணையங் களின் பரிமாற்றங்களை மேற்பார்வை செய்தல் என்பன அமைகின்றன.

கொழும்பு பங்கு பரிவர்த்தனை **(colombo stock exchange)**

இலங்கையில் பங்குச் சந்தை நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான நிறுவனம் கொழும்பு பங்குப்பரிவர்த்தனை ஆகும். இந்நிறுவனம் 1982 ஆம் ஆண்டு 17ம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் உத்தரவாதத்தால் பொறுப்பு வரையறுக்கப் பட்டதும், இலங்கையில் பிணையங்களின் சந்தையை முறைப்படுத்த பிணைகள் பரிமாற்று ஆணைக்குழுவினால் உரிமம் பெற்றதுமான ஓர் கம்பனியாகும்.

பங்குத்தரகர் நிறுவனங்கள் **Stock Brokers**

பங்குச்சந்தை பிணையங்கள் (பங்குகள், நம்பிக்கை அலகுகள், முறிகள், நம்பிக்கை அலகுகள்) மீது தமது நிதியினை முதலீடு செய்ய விரும்பும் முதலீட்டாளர் களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் அதிகாரத்தையுடைய உரிமம் பெற்ற நிறுவனங்கள் பங்கத்தரகர் நிறுவனம் எனப்படும்.

பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகள் **(Listed companies)**

கம்பனிகள் தமது பகுதியளவிலான உரிமைத்துவத்தை பொதுமக்களிடையே பகிர்ந்து கொள்வதன் ஊடாக மேலதிக நிதித் தேவைகளைப் பூரத்தி செய்து கொள்கின்றன. இதற்காக கம்பனிகள் தம்மை பட்டியல் விதிமுறைக்கமைவாக கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் பட்டியல்படுத்துகின்றன. இவ்வாறான கம்பனிகள் பட்டியல்படுத்தப்பட்ட கம்பனிகள் எனப்படும். இவ்வாறான கம்பனிகள் CSE இன் பட்டியல் விதிக்கமையச் செயற்பட சட்டரீதியாக கடமைப்பட்டுள்ளன.

*"புதிய முதலீட்டு வாய்ப்பு - புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கை"*

ச.கஸ்தூரி
தரம் : 13C

# நுகர்வோர் பாதுகாப்பு

## நுகர்வோர்

தமது சொந்தத் தேவைகளை நிவர்த்தி செய்வதனை அடிப்படையாகக் கொண்டு பொருட்கள், சேவைகளை கொள்வனவு செய்பவர்களே நுகர்வோர் ஆவர். நாட்டு மக்கள் அனைவரும் நுகர்வோர் ஆகவும், உலக மக்கள் யாவரும் உலக நுகர்வோராகவும் கருதப்படுவர்.

இந்நுகர்வோர் உற்பத்தியாளர்களாலும், வியாபாரிகளாலும் மற்றும் தரகர்களினாலும் பல்வேறு வழிகளில் பாதிப்புக்களாகின்றார்கள். அதாவது உற்பத்தியாளர்களால் நிறை அளவுகைள குறைத்து பொதி செய்தல், தரம் குறைந்த உள்ளீடுகளை பயன்படுத்தி உற்பத்தி செய்தல், விலையை உயர்வாக நிர்ணயித்தல், பொய்யான / போலியான விளம்பரப்படுத்தல்களினை மேற்கொள்ளல் போன்ற சந்தர்ப்பங்களிலும் வியாபாரிகளால் கலப்படம் செய்வது, பாவனைக் காலம், விலைகளில் மாற்றம் செய்தல், நிறை அளவுகளை மாற்றுதல் போன்ற சந்தர்ப்பங்களிலும் பாதிக்கப்படுகின்றார்கள். இவ் நுகர்வோரை இவர்களின் செயல்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வது அவசியமாகும். இந்த நுகர்வோர்களுக்கான உரிமைகளும் கடமைகளும் காணப்படுகின்றது. இதற்கு மேலாக இவர்களைப் பாதுகாப்பதற்கான சட்டங்களும் காணப்படுகின்றன.

## நுகர்வோர் உரிமைகள்

நுகர்வோரை பாதிப்புக்குள்



ளாக்குபவரிம் இருந்து பாதுகாப்பதற்கான சர்வதேச ரீதியில் பின்வரும் உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

1. பாதுகாப்பை பெறுவதற்கான உரிமை
2. தகவல் பெறுவதற்கான உரிமை
3. தெரிவு செய்வதற்கான உரிமை
4. செவிமடுப்பதற்கான உரிமை
5. அடிப்படைத் தேவைகைள பூர்த்தி செய்வதற்கான உரிமை
6. இழப்பீடு பெறுவதற்கான உரிமை
7. நுகர்வொர் கல்விக்கான உரிமை
8. சுகாதாரச் சூழலில் வாழ்வதற்கான உரிமை போன்றனவாகும்.

இவற்றில் 1 - 4 வரையான உரிமைகள் ஐக்கிய அமெரிக்க குடியரசின் ஜனாதிபதியாக இருந்த John - f.hxnody ஆலும் மிகுதி 5-8 வரையின் உரிமைகள் சர்வதேச நுகர்வோர் சங்கத்தினாலும் பிரகடனப்படுத்தப்பட்டனவையாகும்.

## நுகர்வோர் பொறுப்புக்கள்

நுகர்வோர்களுக்கு உரிமைகள் மட்டுமன்றி பொறுப்புக்களும் அதாவது கடமைகளும் காணப்படுகின்றன. அத்தகைய சில பொறுப்புக்கள் கீழ்

வருமாறு :

1. விசாரனை செய்யும் நோக்குடன் விழிப்பாக இருத்தல்
2. நுகர்வோர் உரிமையை உறுதி செய்வதற்காக கருமமாற்றல்
3. சமூகம் தொடர்பாக அக்கறை கொள்ளல்
4. சூழல் பற்றிய அக்கறையுடன் இருத்தல்
5. ஒத்துழைப்பு நல்குதல் / ஐக்கியம் / கூட்டுறவு

இலங்கையில் நுகர்வோரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அறிமுகப்படுத்தியுள்ள சட்டங்கள்

1. பாவனையாளர் விவகார அதிகாரச்சட்டம்
2. இலங்கை தரக்கட்டுப்பாட்டுச் சட்டம்
3. அளவீட்டு அலகுகளும் நியமும் கட்டளைச் சட்டம்
4. தேசிய சூழல் பாதுகாப்புச் சட்டம்
5. உணவுச்சட்டம்
6. அழகுசாதனக் கருவிகள் மருந்துப் பொருட்கள் கட்டளைச்சட்டம்
7. கிருமிநாசினி பயன்பாட்டு பாதுகாப்புச் சட்டம்
8. அபாயகரமான போதைப்பொருட்கள் கட்டுப்பாட்டுச் சட்டம்
9. மோட்டார் போக்குவரத்துச் சட்டம்

இவ்வாறான பாதுகாப்புச் சட்டங்களின் மூலாகவும், சிறந்த நுகர்வோர் கல்வி மூலமாகவும், நுகர்வோர் நிறுவன அமைப்புக்களுடாகவும், அரச நிறுவனங்கள் மூலமாகவும் பாவனையாளர்கள் பாவனையாளர் உரிமைகளை பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இலங்கையில் நுகர்வோரைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கை எடுக்கும் நிறுவனங்கள்

1. நுகர்வோர் விவகார அதிகார சபை (பிரதான அமைப்பு)

நுகர்வோர் விவகார அதிகார சட்டத்தை அமுலாக்குதல்

2. இலங்கை தர நிர்ணய நிறுவனம்

பொருட்களுக்கான நியமம் (SLS) சான்றிதழ்களை வழங்குதல்

3. சுகாதார சேவைத் திணைக்களம்

உணவுச் சட்ட விதிகள் அமுலாக்கல்

## நுகர்வோர் விவகார அதிகார சபை

2003 ஆம் ஆண்டு 5 இலக்க சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சபை இதுவாகும். முறையற்ற போட்டி வியாபாரம் தொடர்பாக அறிக்கை வெளியிடுவதுடன் சபைக்குச் சமர்ப்பிக்கப்டும் முறைப்பாட்டை விசாரணை செய்தல். இந்நிறுவனத்தின் பணியாகும். இதில் 3 உறப்பினரைக் கொண்ட கட்டமைப்பு காணப்படுகின்றன. இதன் குறிக்கோள்களாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. நுகர்வோர் உயிருக்கும், உடமைக்கும் தீங்கு விளைவிக்கக் கூடிய பொருட்கள், சேவைகளில் இருந்து நுகர்வோரைப் பாதுகாத்தல்.
2. நியாயமற்ற வியாபார நடைமுறைக்கு எதிராக நுகர்வோரை பாதுகாத்தல்.
3. நுகர்வோர் நியாயமான விலையில் பொருட்கள் சேவைகளினைப் பெறுவதனை உறுதிப்படுத்தல்.
4. வியாபாரிகளினால் நுகர்வோர் சுரண்டப்படுவதில் இருந்து பாதுகாத்தல்.

2003 ஆம் ஆண்டில் நுகர்வோர் விவகார அதிகார சபைச் சட்டத்தின் கீழ் வியாபாரிகள் இழைக்கத்தக்க குற்றங்கள்

1. பொருளின் கற்றுத்துண்டில் விலை குறிப்பிடப்படாமை, பொருளின் மீது விலை குறிப்பிடப்படாமை, பொருளினை பொதி செய்தோன், உற்பத்தியாளன் போன்ற விபரங்களினைக் குறிப்பிடாமை.

2. விற்பனைக்கு வைக்கப்பட்ட பொருளின் சுட்டுத்துண்டின் விபரத்தை மாற்றல், அழித்தல், மிகைப்படுத்தல், கிழித்தல்.

3. உச்ச விலை குறிக்கப்பட்ட தீர்மானிக்கப்பட்ட பொருளைக் கூடிய விலைக்கு விற்றல்.

4. குறித்துரைத்த நியமத்திற்கு / தரத்திற்கு இணங்கி அமையாத முறையில் பண்டங்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்தலும் விற்பனை செய்தலும்.

5. தன்னிடம் விற்பனைக்கு உள்ள ஒர் பொருளை விற்க மறுத்தல்.

6. தனது விற்பனைச் செயற்பாட்டுக்கு அதிகமான பொருட்களினை சேமித்து வைத்தல்.

7. பொருள் சேவை விலை தொடரப்பாக தீர்மானிக்கப்பட்ட காரணியை மீறல்.

இவ்வாறு பல்வேறுபட்ட குற்றங்களையும் நீக்குவதற்காக விலையை வெளியிடச் செய்தல், பற்றுச்சீட்டு வழங்கல் (நுகர்வோருக்கு அறிவுறுத்தல் போன்ற நடவடிக்கைகள் இச்சட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

## நுகர்வோர் பாதுகாப்புச் சங்கம்

கிராம சேவையாளர் பிரிவு மட்டங்களில் நகரசபை தேர்தல் பிரவு ரீதியான 15 பேருக்கு குறையாது ஒன்று சேர்ந்து பாவனையாளர் அதிகார கட்டளைச் சட்டத்தின் கீழ் அமைக்கும் அமைப்ப நுகர்வோர் பாதுகாப்பு சங்கம் எனப்படும்.

நுகர்வோர் உரிமைகள், அவரக்ளின் பாதுகாப்பு பற்றிய சட்ட ரீதியான அறிவைப் பெறுதலே இதன் நோக்கமாகும்.

நுகர்வோர் தமது விவகாரங்களை / பிரச்சினைகளைக் கூறக் கூடிய / முறைப்பாடு செய்யக் கூடிய அதிகாரிகள்

1. நுகர்வோர் விவகார அதிகார சபைப் பணிப்பாளர்

2. சுகாதார சேவை பணிப்பாளர் / அவரது அதிகாரம் பெற்ற பிராந்திய அதிகாரிகள்.

இலங்கைத் தர நிறுவனம் / இலங்கைக் கட்டளை நிறுவனம்

சுதந்திர நாடாக எமது பொருளாதார கட்டமைப்பு வலுப்படுத்துவதில் விவசாயம், கைத்தொழில், வர்த்தகம் மட்டுமன்றி பல்வேறு சேவையிலும் தரத்தை பேண வேண்டிய முக்கியத்துவம் உணரப் பட்டது. 1964 இல் இல 38 கொண்ட தர நிர்ணய சட்டம் பாராளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டபின் 1965 இல் கைத்தொழில் அமைச்சின் கீழ் தரநிர்ணய சபை ஆரம்பிக்கப்பட்டது.

அதன் பின் தேசிய சேவையை மிகவும் பரந்த அளவில் பூர்த்தி செய்யும் நோக்குடன் தரநிர்ணய சபை 1984 இல் இல.06 கொண்ட இலங்கை தரநிர்ணயம் கொண்ட நிறுவனமாக உருவாக்கப்பட்டது. இந்நிறுவனத்தின் மூலமாக ஒரு நாடு பல நன்மைகளைப் பெற முடியும். ஒரு நாட்டில் தர நிர்ணய நிறுவனம் ஒன்று இருக்க

வேண்டியதன் அவசியங்களாவன,

1. வளங்களின் விரயத்தை குறைப்பதன் ஊடாக பொருளாதார விருத்தியை அடைய முடிதல்.

2. மக்கள் தரமான பொருட்கள் சேவைகளை நுகரக் கூடியதாக இருத்தல்.

3. மக்கள் ஆரோக்கியமான பொருளைப் பெறக் கூடியதாக இருத்தல்.

போன்றவற்றைக் கூறலாம். இந்நிறுவனம் உற்பத்தி செய்யப்படும் பொருளின் தரத்தை பேண பயன்படுத்தும் தரசமுலாக்க முறைகளாக தன்னிச்சையான தரம் பேணல் :SLS குறியீட்டு முறை 2003 ஆம் ஆண்டு 9 இல் கொண்ட நுகர்வோர் அலுவல்கள் சட்டம் ஏற்றமதிக்கு முன் பரிசோதனை இறக்குமதிக்கு பின் பரிசோதனை ஏற்றமதிக்கு தயாராகும் கடல் உணவு பரிசோதனை போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இலங்கைத் தர நிறுவனத்தின் பணிகள் / தொழிற்பாடுகள்

1. தரங்களை நிர்ணயித்தல்

2. தரத்தை நடைமுறைப்படுத்தல்

3. தரப்படுத்தலும், தரக்கட்டுப்பாடும் தொடர்பான மேம்படுத்தல்கள்

4. மின் உபகரணம், எரிபொருள் செயற் பாட்டிகுத் திறனை மதிப்பீடு செய்தல்

5. இலங்கைத் தேசிய தரப்பரிசுகளை வழங்கல்

6. தராசுகள் அளவிடும் கருவிகளகுக சான்றிதழ் வழங்கல்

7. தரமுறை தொடர்பாக சர்வதேச தரத்தை அமுல் செய்தல்

8. நுகர்வோர் கல்வியை அமுல் செய்தல்

போன்றவற்றைக் குறிப்பிட முடியும். மேலும் இவ் இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தால் விதிக்கப்பட்டுள்ள நியமங்க ளுக்கும் நிபந்தனைகளுக்கும் அவைமா கவும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இலங்கையின் தர முறைக்கு அமைவாகவும் குறித்த நிறுவனத்தினால் குறிப்பிட்ட பொருள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்தி கட்டளை தகுதிச் சான்றிதழ் வழங்கப்படும். இச் சான்றிதழ்களைக் கொண்ட நிறுவனத்தின் பொருளிற்கு SLS என்ற அடையாளத்தை பயன்படுத்த முடியும். இது சீமெந்து, சவர்க்காரம், தீப் பெட்டி போன்ற பொருட்களுக்கு அதிகள வில் பயன்படுத்தப்படும். இதற்கி ணங்க SLS அடையாளம் இடப்பட்ட பொருள் ஒன்றைக் கொள்வனவு செய்த நுகர்வோர் நிர்ணயிக்கப்பட்ட தரம் காணப்படாவிடின் விற்பனையாளரிடம் சமர்ப்பித்து வேறு பொருளை மாற்றிப் பெற்றுக் கொள்ளவும் விற்பனையாளருக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கவும் முடியும்.

இக்குறியீட்டின் மூலம் நுகர்வோர் பொருள் தொடர்பான நம்பிக்கையை பெறமுடியும், தமது கொள்வனவு இலகு படுத்தல், தரம் குறைவாக காணப்படின் மாற்றிப் பெறல், பொருளை இலகுவில் இனம் காணல் போன்ற நன்மைகளைப் பெற முடியும்.

இவ்வாறான பல பாதுகாப்புக்களை இன்று நுகர்வோர் பெறுகின்றனர். அண்மைக்காலத்தில் பெரும்பாலான பொருள், சேவையியல் சிக்கலான தன்மை அதிகரித்துள்ளமை, வணிகச் சூழலில்

போட்டி அதிகரித்துள்ளமை இறக்குமதிக் கட்டுப்பாடு இருத்தல், நுகர்வோர் செலவிடக் கூடிய வருமானம் அதிகரித்தல், உலகமயமாக்கலுடன் சந்தைவிரிவு போன்ற காரணங்களால் இன்று நுகர்வோர் பாதுகாப்பின் தேவைகள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இ. நிறோஜா
தரம் : 13C

# வணிகத்தின் அடிப்படை
## (Basis of Business)



**வணிகக் கல்வியின் முக்கியத்துவம்**

நாம் எத்துறையில் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும் எமது சேவையின் கருமங்கள் தொடர்பிலும் நமது அன்றாட வாழ்க்கை தொடர்பிலும் வணிகம் அளப்பரிய பங்காற்றுகிறது. அந்தவகையில் வணிகக் கல்வியை கற்றிருப்பது அவசியமான தொன்றாகும்.

வணிகக் கல்வியை ஒருவர் கற்பதன் மூலம் பின்வரும் நன்மைகளை பெற்றுக் கொள்ள முடியும்.

1. உலகினைப் பற்றி சிறப்பாக சிந்திக்கும் நுகர்வோர் ஆக முடியும்.
2. தர்க்க ரீதியாக சிந்திக்கும் வெற்றிகரமான நுகர்வோராக முடியும்
3. பல்வேறு தேர்ச்சிகளையும் கொண்ட பிரஜைகளாக முடியும்.
4. நாளாந்த வாழ்க்கையை இசைவுபடுத்திக் கொள்ள முடியும்.
5. அறிவுள்ளதும் பலம் வாய்ந்ததுமான நுகர்வோராகவும் ஒழுக்க விழுமியங் களையும் சமூக பொறுப்புக்களையும் அறிந்துள்ள நற்பிரஜை ஆவதற்குரிய ஆற்றலைப் பெற்றுக் கொள்ள முடியும்.
6. வேலை ஒன்றில் ஈடுபடுவதற்கான திறனைப் பெற்றுக் கொள்ள முடியும்.
7. தாமே சுயமாக வணிகமொன்றை ஆரம்பித்து அதனைக் கொண்டு நடாத்துவற்கு தேவையான அறிவினை பெற்றுக் கொள்ள முடியம்.
8. நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு வினைத்திறமையுடன் பங்களிப்பு செய்யும் முயற்சியாண்மைகளை விருத்தி செய்து கொள்ள முடியும்.
9. உயர் கல்வியை நாடாதோர் சுய தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்கு தேவையான அறிவினைப் பெற்றுக் கொள்ள முடியும்.
10. உயர் கல்விப் பாடங்களுடன் இது தொடர்புபட்டிருப்பதனால் ஏனைய

பாடங்களை இலகுவில் விளங்கிக் கொள்ள முடியும்.

உ-ம் :பொருளியல்

11. உயர் கல்வியை கற்பதற்கு ஒரு வழிகாட்டலாக அமைவது

உ-ம் Cima
ACCA
BBA
MBA
M.COM

## வணிகம் :

வணிகம் என்பதனை இரண்டு கோணங்களில் அல்லது பார்வைகளில் அர்த்தப்படுத்த முடியும்.

### 1. வணிகம் - (The Business)

நுகர்வோரின் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்ய மேற்கொள்ளப்படும் அனைத்து பொருளாதார நடவடிக்கைகளையும் வணிகம் எனலாம்.

இது இலாப நோக்குடனோ அல்லது இலாப நோக்கின்றியோ நடைபெறலாம்.

உ-ம் : சிரமதானப் பணியில் ஈடுபடல்
தனியார் மருத்துவமனை ஒன்றில் சிகிச்சை பெறுதல்
தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றை வியாபாரம் செய்தல்.

### 2. (A Business) வணிகம்

நுகர்வோரின் தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்து கொள்வதற்காக பல்வேறு அளவுகளையும் தன்மையையும் கொண்ட வணிக அமைப்புக்கள் பொருளாதாரத்தில் செயற்பட்டு வருகிறது. இவ்வாறு செயற்பட்டு வரும் அமைப்புக்களில் ஒரு தனி அலகினையே (firom) வணிகம் என வரைவிலக்கணப்படுத்தலாம்.

இவை தனி ஆளாகவோ அல்லது குழுவாகவோ ஒழுங்கமைக்கப்பட்டு உள்ளது.

### வணிகங்களின் பிரதான நோக்கம் யாது?

நுகர்வோரின் தேவைகளையும் விருப்பங்களையம் நிறைவு செய்வதன் மூலம் தமது நோக்கத்தினை அடைவதே பிரதான நோக்கமாகும்.

இதற்காக அவை உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடுகின்றன.

### Business - Busy + NESS

Business என்ற சொற்பதமானது Busy + Ness என்ற பதங்களில் இருந்தே பெறப்பட்டதாகும்.

அதாவது வணிக நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் வணிகர்கள் தமக்கு தேவையான வளங்களை ஒதுக்குதல் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடல் அவற்றை பங்கீடு செய்தல் தேவையான நிதியை முகாமை செய்தல் நிறுவனத்திலுள்ள பணியாளர்களை முகாமைப் படுத்தல் போன்ற செயற்பாடுகளில் உழைப்பு மிகுந்தவர்களாக இருக்கிறார்கள் என்பதையே Busy, Ness என்ற பதம் விளக்க நிற்கின்றன.

### மனிதன் ஒரு பொருளாதார விலங்கு Economic Anima

பொதுவாக மக்கள் ஈடுபடுகின்ற

பெரும்பாலான நடவடிக்கைகள் மனித தேவைகளையம் விருப்பங்களையும் நிறைவு செய்வதனை நோக்கமாகக் கொண்டவையாகும். தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்கின்ற நடவடிக்கைகளையே பொருளாதார நடவடிக்கைகள் எனப்படுகிறது.

உலகிலுள்ள சகல பௌதீக வளங்களையும் பொருளாதார முக்கியத் துவம் வாய்ந்த வளங்களாக மாற்றி அமைக்கக் கூடிய ஒரே ஒரு சமூக விலங்காக மனிதன் ஒரு பொருளாதார விலங்கு எனப்படும்.

**வணிக எண்ணம் (Business idea)**

வணிகமொன்றை ஆரம்பிப்பதற்கான தொடக்கப் புள்ளி வணிக எண்ணம் எனப்படும் ஒரு ஆரம்ப எண்ணக்கருவில் இருந்தே சகல வணிகங்களும் தோற்றம் பெறுகிறது. புதிய முயற்சியாளர்களுக்கு (வணிகர்களுக்கு) ஆரம்பத்தில் பல வணிக எண்ணங்கள் தோன்றுகின்றன. இதில் தங்களிடமுள்ள மனித நிதி தகவல் தொழில்நுட்ப எண்ணத்தை தேர்தெடுக்கின்றனர். இதற்கு அடிப்படையான காரணம் வளங்களின் பற்றாக்குறையே ஆகும்.

பெரும்பாலான வணிக எண்ணங்கள் முயற்சியாளருக்கு எதிர் பாராத விதமாகவே (ou of the blue) தோன்றுகிறது.

ஆனால் சில வணிக எண்ணங்கள் முயற்சியாளர்களுக்கு குறிப்பிட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட கடும் முயற்சியின் விளைவாக தோன்றியதாகும்.

உ-ம் : Ball point.pen.

பெரிய வணிகங்கள் மிகத் தெளிவான வணிக எண்ணத்துடனேயே ஆரம்பமாகிறது.

**இலாப நோக்கத்தை கொண்டிராத வணிகங்கள் அல்லது இலாப நோக்கற்ற வணிகங்கள்(Not for Profit businesses)**

இலாபம் உழைப்பதை நோக்கமாக கொண்டு இயங்காத வணிகமே இலாப நோக்கற்ற வணிகங்கள் எனப்படும். இவை மக்களுக்கு தேவையான நன்மைகளையும் வசதிகளையும் விழிப்புணர்வையும் சமூக அபிவிருத்தியும் கலைப்பண்பாட்டு கலாச்சாரங்களை மேம்படுத்தவும் என தொழில்பட்டு வரும் வணிக அலகுகள் ஆகும்.

இவை இலாபம் உழைப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லையே தவிர சமூகத்தின் தேவைகளையம் விருப்பங்களையும் வினைத்திறனுடன் நிறைவ செய்வதில் பங்களிப்பு செய்கிறது.

உ-ம்

1. சங்கங்கள்
2. கழகங்கள்
3. அரசாங்க பாடசாலைகள்
4. அரசாங்க பல்கலைக்கழகங்கள்
5. பொது நூலகங்கள்
6. அறக்கொடை அமைப்பு
7. விழிப்புணர்வ இயக்கம்
8. பொது மருத்துவ மனை
9. வணக்க ஸ்தலங்கள்
10. அரசசார்பற்ற அமைப்புக்கள்

ஸ்ரீ.கார்த்தீபன்
தரம் :13C

# கூட்டுறவு (co-operative)



அதிகரித்துவரும் சனத் தொகைக்கும் மாறிவரும் வாழ்க்கைப் பணிக்கும் ஏற்ப தனியுடமை, பங்குடமை, கம்பனி, கூட்டுறவு போன்ற பல்வேறுபட்ட வணிக நிறுவனங்களும் தோன்றி மறைய தவறவில்லை. அவ்வாறான வணி அமைப்புகளின் வரிசையில் 1.5 நூற்றாண்டுகளாக ஜனநாயக முறை நிர்வாகம், சுய உதவி. சயபொறுப்பு, சமத்துவம் போன்ற அம்சங்களை தன்னகத்தே கொண்ட தனியார்துறை அமைப்புக்களில் இலாப நோக்கம் கொண்ட அமைப்பு என்றால் கூட்டுறவை விட எவையும் விஞ்சிவிட முடியாது.

இவ்வாறான சிக்கனகூட்டுறவு ஆனது 1844 ஆம் ஆண்டு இங்கிலாத்தில் றொக்ஸ்மூலம் நெசவாளராக 28 உறுப்பினர்களை கொண்ட கூட்டுறவு விற்பனை நிலையமாக பிறப்பிக்கப்பட்டது. இவ்வாறு தோற்றம் பெற்ற இக் கூட்டுறவு சில்லறைக் கடையில் வாரம் ஒன்றக்கு 2 பவுன்ஸ் வீதம் 28 பவுன்ஸ் திரட்டப்பட்டு 5 வகைப் பொருட்களுடன் சில மணி நேரம் வியாபாரம் மேற்கொள்ளப்பட்டது.

ஒருவர் பலருக்கும் பலர் ஒருவருக்கும் உதவதல் சுய உதவியும் பரஸ்பர உதவியும் மதிதல், ஒத்துழைப்பையும் சமத்துவத்தையும் மதித்தல் போன்ற பண்புகளை கூட்டுறவாளர்களிடையே வளர்த்து நிற்பதுடன் சமத்துவம் ஜனநாயக நிர்வாகம், திறந்த அங்கத்துவம், மூலதனத்திற்கு மட்டான வட்டி, கூட்டுறவு கல்வியை முன்னேற்றல் போன்ற கோட்பாடுகளையும் கொண்டு பயனுடையவர்களின் அங்கத்துவம் பொறுப்பு நிர்வாகம் பொறுப்புக்களை விரும்பி ஏற்று செயற்படுத்துவதால் கூட்டுறவு செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவேற்றி நிற்கின்றது.

அதுமட்டுமன்றி கூட்டுறவு இயக்கமானது 10இற்கு மேற்பட்ட அங்கத்தவர்களை கொண்டிருப்பதுடன் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாயும் அங்கத்தவர்கள் 6 மாதங்களேனும் சங்க எல்லைக்குள் வசிப்பவராகவோ அல்லது தொழில் புரிபவராகவோ இருத்தல் வேண்டும்.

1972 ஆம் ஆண்டு கூட்டுறவு சட்டத்தின் கீழ் கூட்டறவு அபிவிருத்தித் திணைக்களத்தில் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம்

- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம்
- சங்க உபவிதிகளின் பிரதிகள்
- அமைவிடத்தை விளக்கும் படப்பிரதிகள்
- பதிவு செய்வதற்கான தீர்மானப் பிரதிகள்
- கணக்கக் கூற்று (வருமானக் கூற்று, நிதிக் கூற்று)
- பொருளாதார சாத்தியக்கூற்ற அறிக்கை

•அங்கத்துவரைபணம்செலுத்திய மைக்கான உறுதிப்படுத்தலும் செலவு விபரமும்

மேற்கூறப்பட்ட ஆவணங்களை சமர்ப்பித்து கூட்டுறவு இயக்கம் ஆனது பதிவு செய்யப்பட வேண்டும். இங்கு உதவிக் கூட்டுறவு ஆணையாளருக்கூடாக கூட்டுறவுப் பரிசோதகரின் சிபாரிசுக்கமைய 1000/- இற்கு மேற்பட்ட மூலதனம் கொண்டதாக கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரிடம் பதிவு செய்யப்படுகின்றனது. அத்துடன் முதனிலை கூட்டுறவு சங்கத்தின் நெறியாளர் குழுவில் 09 பிரதி நிதிகள் காணப்படுவர்.

1) கூட்டுறவு ஆணையாளர்

•கூட்டுறவுசட்டத்தை அமுல்படுத்துதல்
•கூட்டுறவு சங்க தகைமைகளை மதிப்பிட்டு பதிவு செய்தல்
•அரசின் கூட்டுறவு கொள்கைகளை பரப்புதல்
•கூட்டுறவு சங்கங்களை சுவைத்தல்
•கூட்டுறவு சங்க மோசடிகளின் விசாரணைக் குழுக்களை நியமித்தல்

போன்ற கடமைகளை நிறைவேற்றி நிற்கின்றார்.

அரசிடம் இருந்து பெறும் நன் கொடைகள், மானியம், பங்குகளை அங்கத் தவர்களுக்கு விற்றல் என்பவற்றின் மூலமாக மூலதனத்தை பெற்றுக் கொள்கின்றது. அத்துடன் மூலதன மிகையை சங்கங்களின் அபிவிருத்தி, அங்கத்தவர் ஊழியர் உட்பட சமூக அபிவிருத்தி அங்கத்தவரிடையே பங்கீடு செய்தல் போன்ற வழிகளில் அங்கத்தவர்கள் சங்கத்துடன் வைத்துக் கொண்ட கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதிக்கேற்ப விகிதமாகப் பங்கிடுகின்றது.

இக் கூட்டுறவு ஆனது

•நுகர்வோர் கூட்டுறவுச் சங்கம் (1850)
•தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் (1852)
•நுகர்ச்சியாளர் கூட்டுறவுச் சங்கம் (1853)
•பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் (1852)
•கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் (1881)
•கடன்வழங்கும் கூட்டுறவுச் சங்கம் (1912)
•பாடசாலை கூட்டுறவுச் சங்கம்
•பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்
•கூட்டுறவு வைத்தியசாலை (1935)
•பண்டகசாலை கூட்டுறவுச் சங்கம் (1927)
•கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரி (1943)
•கூட்டுறவு கிராமிய வங்கி (1964)
•வீடமைப்பு கூட்டுறவுச் சங்கம்
•ஐக்கிய நாணய சங்கம்
•பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (1972)
•இலங்கை கூட்டுறவு கைத்தொழில்மையம்
•சிக்கனகடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் கூட்டுறவுச் சங்கம்

எனும் பல்வேறுபட்ட வகைகளில் பல்வேறுபட்ட துறைகளுக்கு சேவை நோக்கில் அளப்பெரிய சேவைவழங்கி காலத்தை வென்று நிற்கின்றது.

அதுமட்டுமன்றி கூட்டுறவு சங்கங்கள் பரப்பளவு, பொறுப்பு, நோக்கம், உரிமை என்பவற்றின் அடிப்படையிலும் பல்கிப் பெருகியுள்ளன. பரப்பளவின் அடிப்படையில் 1ம் நிலை, 2ம் நிலை, உச்சி மட்டம் எனும் வகைகளாகவும் பொறுப்பின் அடிப்படையில் நட்டப் பொறுப்பு வரைய றுத்த, நட்டப் பொறுப்பு வரையறுக்காத கூட்டுறவுச் சங்கங்கள் எனவும் நோக்கத்தின் அடிப்படையில் தனி நோக்கம், பலநோக்கம்,

எனவும் உரிமையின் அடிப்படையில் உறுப்பினர் பூரண உரிமை, பதிவாளரின் கட்டுப்பாட்டு உரிமை என பலவாறாக வணிக அமைப்புக்களின் மத்தியில் தன்னிகரற்று விளங்குகின்றது.

1995 ஆம் ஆண்டு றொஸ்ரேல் முன்னோடிகளால் மன்செஸ்ரர் மாநாட்டில் கூட்டுறவுக்கான கொள்கைகள் வகுக்கப் பட்டன. அவையாவன

•தன்னிச்சையானதும் சுதந்திரமானதுமான அங்கத்தவர்
•ஜனநாயக முறை நிர்வாகம்
•அங்கத்தவர்களிற் கிடையேயான பொருளாதார ஒத்துழைப்பு
•சுதந்திரமான தனித்துவம்
•கூட்டுறவு தொடர்பான கல்வியை எல்லோரிற்கும் வழங்குதல்
•பிரதேச, சர்வதேச, தேசிய கூட்டுறவு சங்கங்கள் உடனான ஒத்துழைப்பு
•சமூகம் தொடரப்பான அக்கறை

போன்ற கொள்கைகளை கொண்டுள்ளது.

“எந்தவொரு மனிதனும் தனித்து வாழ முடியாது” இக் ”கூற்று வணிக அமைப்பக்களுக்கும் முரணானது அல்ல அதற்கேற்றாற் போல் கூட்டுறவு சங்கங்களிற்கு

கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம், உணவு ஆணையாளர் திணைக்களம் என்பன பொருட்களை வழங்கும் நிறுவனங்களாகும். அத்துடன் இவ் சர்வதேச கூட்டுறவு இணைப்பு நிறுவனத்தின் சேர்ந்துக் கொள்ளக் கூடிய அமைப்புக்களாக

•தேசிய கூட்டுறவு சபை
•தேசிய மட்ட கூட்டுறவு சங்கங்கள்

என்பனவும்

• கூட்டுறவு மூலதனத்தை
• மக்கள் வங்கி
• கூட்டுறவு கிராமிய வங்கி
• பிரதேச அபிவிருத்தி வங்கி

என்பனவும் கொண்டு கூட்டுறவு பங்காளி ஆகி நிற்கின்றன.

மேலும் இக் கூட்டுறவு ஆகனது தனது நிர்வாக கட்டமைப்பு தொடர்பு களையும், தொழிற்பாட்டு எல்லைகளையும் அடிப்படையாக வைத்து சங்க மட்டம், மாவட்ட மட்டம், தேசிய மட்டம் எனும் 3 மட்டங்களை அடிப்படையாக கொண்டு சங்க மட்டம் அல்லது முதல்நிலை கூட்டுறவு சங்கம் ஆனது மக்களை அங்கத்தவராகக் கொண்டு அமைக்கப்படும் ஆரம்ப சங்கங்களை கொண்டதாகவும் மாவட்ட மட்டம் ஆனது ஆரம்ப சங்கங்கள் இணைந்து மாகாண அல்லது மாவட்ட ரீதியாக இணைக்கப்பட்ட சமாசங்களை கொண்டதாகவும் தேசிய மட்டமானது நாடு முழுவதையும் தொழிற்பரப்பாக கொண்டு இயங்கும் தேசிய சங்கங்களை கொண்ட தாகவும் (2ம் நிலை கூட்டுறவு சங்கங்கள் அங்கத்தவராக இருக்கும்) வகுக்கப்பட்டு 3 நிர்வாக அமைப்பை கொண்டு செயற் படுகின்றது.

அதுமட்டுமல்லாது இக் கூட்டுறவு ஆனது தன்னகத்தே 3 நிர்வாக கட்டமைப்பை கொண்டுள்ளதைப் போல் ஏனைய வணிக அமைப்புக்களில் இருந்து வேறுபட்ட அம்சங்களை கொண்டு ஏனைய

அமைப்புக்களில் இருந்து மேன்மை பெறுகின்றது. அந்தவகையில்,

பங்குகளை கொள்வனவு செய்வதன் மூலமாக கூட்டுறவின் அங்கத் துவ உரிமையை பெற்றுக் கொள்ளும் 10 இற்கு மேற்பட்ட அங்கத்தவர்களை கொண்டுள்ளது.

அங்கத்தவர்களுக்கு பங்குகளை விற்பனை செய்வதன் மூலம் பிரதான வழிகளிலும் மக்கள் வங்கி மூலமாக கடன் அரசாங்கத்திடம் இருந்து நன்கொடை, அகநிதி மூலமான இலாபத்திரட்டுக்கள் மூலமாக மூலதனத்தை திரட்டிக் கொள்கின்றது.

எல்லா சங்கங்களின் உரிமைகளும் பங்குகளை கொள்வனவு செய்த அங்கத் தவர்களுக்கும் அல்லது உறுப்பினர்களுக்கும் உரித்துரிமை உடையது.

முகாமையாளர் நிர்வாகம் ஆனது பொதுச் சபையின் கூட்டத்தில் நியமிக்கப்படும் பணிப்பாளர் சபையின் கீழ் செயற்படும்.

நட்டப் பொறுப்பு வரையறுக்கப் பட்டதாகவோ அல்லது வரையறுக்கப் படாததாகவோ காணப்படும்.

இலாபப் பகிர்வானது உறுப்பினர்கள் சங்கங்களுடன் செய்து கொண்ட கொடுக்கல் வாங்கல் அடிப்படையில் பகிரப்படும்.

கணக்குப்பதிவு, கணக்காய்வு என்பன கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரின் கீழ் நடாத்தப்படும்.

கூட்டுறவு இணைக்கப்பட்ட நிறுவனமாக இருப்பதால் நீடிய வாழ்வு உடையவையாகவும் காணப்படும்.

கூட்டுறவு நிலையம் ஒன்றை கலைக்கும் பதிவினை நீக்கும் அதிகாரத்தை கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் கொண்டு காணப்படுவர்.

இத்தகைய பண்புகளை கொண்டு கூட்டுறவானது மேன்மை பெற்று நிற்கின்றது.

இவ்வாறு பலவாறான அம்சங்களை மட்டும் கொண்டிராது கூட்டுறவானது
•கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்
•கூட்டுறவு முகாமைச் சேவைகள் நிறுவனம்
•கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
•இலங்கை தேசிய கூட்டுறவுச் சபை

போன்ற நிறுவனங்களை இக் கூட்டுறவானது தனது நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்லும் வகையில் இனை நிறுவனங்களாக கொண்டுள்ளது என்றால் மிகையாகாது.

அந்தவகையில் கூட்டறவு ஆனது கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்திடம் பல்வேறு பணிகளை வேண்டி நிற்கின்றது. அவையாவன,
•கூட்டுறவு சங்கங்களை பதிவு செய்தல்
•அரச கூட்டுறவு கொள்கைகளை செயற்படுத்துதல்
•கூட்டுறவு பணிகளை மேற்பார்வை செய்தல்
•மக்களின் முறைப்பாடுகளை பரிசீலனை செய்தல்.

கூட்டுறவுச்சங்கங்களின் கணக்குகளை கணக்காய்வுக்கு உட்படுத்துதல்என்பனவேயாகும்

அந்தவகையில் தேசிய கூட்டுறவு

சபையானது மேலும் பலபணிகளை ஆற்றுகின்றது. கூட்டுறவு கொள்கைகளை பிரசித்தப்படுத்தி பாதுகாத்தல் கூட்டங்கள் கருத்தரங்குகள் மூலம் திறன் விருத்திக்கு உதவுதல். சங்கங்களை பிரசித்தப்படுத்தி அரசிடம் பேரம் பேசுதல். சங்கங்களின் நிர்வாகப் பணிகளுக்கு அறிவுரை வழங்கல், சர்வதேச கூட்டுறவு அமைப்புக்களுடன் சேர்ந்து செயற்படுதல் என்பனவாகும்.

அத்துடன் கூட்டுறவு முகாமை சேவை நிறுவனத்தின் பணிகளாக,

•முகாமைத்துவ ஆலோசனை செயற்திட்டங்கள் வழங்குதல்

•இயக்குனர் நிர்வாக உத்தியோகத்தர் ஏனைய ஊழியருக்கு விரிவுரை கருத்தரங்கு நடாத்தல்

•பலநோக்கு கூட்டுறவு சங்கங்களை புனரமைத்தல்

•கூட்டுறவு வியாபார நிலையங்களை நவீனமயப்படுத்தல்

போன்ற பல வழிகளில் கூட்டுறவுக்கு தனது பணிகளை ஆற்றுகின்றது.

•கூட்டுறவு பணிகள் ஆணைக் குழுவின் பணிகளை இனம் காணுவோம். ஊழியரை சேர்த்தல் தொடர்பான சகல நடவடிக்கை களையும் வேலை நிபந்தனைகளையும் வரையறுத்தல்.

•கூட்டுறவு சங்க பதவி நியமனங்களை அங்கீகரித்தல் .

•பதவிகளுக்கான சம்பளத் திட்டங்களை விதந்துரைத்தல் முறையீடுகளை விசாரிப் பதற்கான ஒழுக்காற்று சபையை நியமித்தல் போன்ற பல்வேறு விதந்துரைத்தல்.

முறையீடுகளை விசாரிப்பதற்கான ஒழுக்காற்று சபையை நியமித்தல் போன்ற பல்வேறு வழிகளில் பல்வேறு நிறுவணங்களும் கூட்டுறவை பூரண மனிதன் ஆக்குகின்றன என்றால் தவறாகுமா?

மனித வாழ்க்கையைப் போலவே வணிக நிறுவனங்களின் வாழ்க்கையும் சிலவேளைகளில் முடிவுக்கு வந்து விடுகின்றன. அந்தவரிசையில் கூட்டுறவானது,

•பதிவு செய்யப்பட்டு ஓராண்டுக்குள் வியாபாரம் ஆரம்பிக்காமை.

•இருவருடங்கள் தொடர்ந்து இயங்காது இருத்தல்.

•உறுப்பினர் எண்ணிக்கை 10க்கு குறைதல்.

•கூட்டுறவு அபிவிருத்தி ஆணை யாளர் கலைப்புக்கு உத்தரவிடல்.

•சங்க உறுப்பினரில் 3∴4 பங்கினர் கலைக்குமாறு கோரிக்கை விடல்.

போன்ற பல்வேறு சந்தர்ப்பங்களில் கூட்டுறவின் ஆயுள் ஆனது முடிவுக்கு கொண்டுவரப்படுகின்றது.

மக்களது சமூக, கலாசார, தேவை களையும் எதிர்பார்ப்புக்களையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக சொத்து விருப்பில் ஒன்ற சேர்ந்தவர்களின் சுயேட்சையான சங்கமாக காணப்படும் கூட்டுறவு ஆனது உற்பத்தியாளர்களதும், மக்களதும், அங்கத் தவர்களதும் அபிவிருத்தியை விருத்தி செய்வதுடன்

•தட்டுப்பாடான பொருட்களை வழங்குதல்.

•பரவலாக காணப்படுதல்.

•சரியான நிறையில் பொதியிட்டு வழங்குதல்

•சரியான குறைந்த விலையில் பொருள் வழங்குதல்.

•சுயசேவை முறையிலான கடைகள் காணப்படல்

போன்ற பண்புகளால் மக்களை கவர்ந்து வைத்திருக்கும் கூட்டுறவு ஆனது

•விற்பனை மேம்படுத்தல் முறைகளை பின்பற்றுதல்.

•நுகர்வோர் ஒற்றுமையைப் பாதுகாத்தல்.

•அரசதலையீடுகைள நீக்கி சுதந்திரமாக தொழிற்படல்.

•பயிற்சியழிப்பதன் மூலம் முகாமைத திறனை விருத்தி செய்தல்

•ஊழியர்களுக்கு சம்பளம், தரகு போன்றவற்றை வழங்குதல்.

•கவர்ச்சியான தற்சேவை விற்பனை நிலையங்களை உருவாக்குதல்.

•மூலதன அளவை அதிகரிக்க வழிவகை மேற்கொள்ளல்.

•வாடிக்கையாளர் நோக்கிய சந்தைப் படுத்தலை மேற்கொள்ளல்

•சேவை நேரத்தை அதிகரித்தல்

•ஊழியர் பயிற்சி, அவர்களின் அறிவு, விழுமியங்கள் பண்புகளின் நிலமைகளை மேம்படுத்தல்.

விற்பனை செய்யும் பொருட்கள் சேவைகளை அதிகரித்தல் போன்ற வழி களை கையாழுவதன் மூலம் இலங்கையின் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் வீழ்ச்சியை போக்கி போட்டியை எதிர்கொள்ளும் வகையில் கூட்டுறவு எனும் மனிதனை புத்துயிர் பெறச் செய்யலாம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

ச. யதுர்சன்
தரம் : 12C

# அங்கீகார வணிகமும் அதன் முக்கியத்துவமும்
# (Franchise business and It's Importonce)



**அங்கீகாரவணிகம் (Franchise business)**

குறித்த நிறுவனத்தின் வியாபார பெயரின் கீழ் அல்லது பண்டக் குறியின் கீழ் பொருட்கள் சேவைகளை குறித்த பிரதேசத்தில் உற்பத்தி செய்வதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு ஒப்பந்தம் செய்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அனுமதி அளிக்கும் ஓர் வியாபார முறை அங்கீகார வியாபார முறை ஆகும்.

தமது வியாபார பெயரின் கீழ் (Trade name) பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குவதற்கு இன்னோர் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கும் நிறுவனம் அங்கீகாரம் வழங்கும் நிறுவனம் (Franchiser) எனப்படும். இந் நிறுவனத் திடம் இருந்து உரிமையை பெற்ற நிறுவனம்

அங்கீகாரம் பெற்றவர் (Franchisee) எனப்படும். இலங்கையில் அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களுக்கு உதாரணம்

1. அங்கீகார வியாபார முறையின் கீழ் பொருட்களை உற்பத்தி செய்து வழங்கும் நிறுவனங்கள் - Pizza Hot, KFC, Medonalds

2. அங்கீகார முறையின் கீழ் சேவையினை வழங்கும் நிறுவனங்கள் - DHL, TNT and Fedex

அங்கீகார வணிக வகைகள்

அங்கீகாரம் வழங்குபவருக்கும் அங்கீகாரம் பெறுபவருக்குமிடையே ஏற்படுத்தப்படும் அங்கீகார வணிக உடன்படிக்கைக்கு அமைவாக அங்கீகார வணிகமானது பல்வேறு நோக்கங்களின் அடிப்படையிலும் பல்வேறு தேவை கருதியும் வித்தியாசமான வகைகளில் உருவாக்கப்படலாம்.

உ-ம் :

1. உற்பத்தி பொருளுக்கான அங்கீகார வணிகம்

2. உற்பத்திக்கான அங்கீகார வணிகம்

3. வணிக முறைக்கான அங்கீகார வணிகம்

என்றவாறாக உருவாக்கப்படுவதைக் கூறலாம். மேலும் அங்கீகாரம் பெறுபவர் ஒருவர் அங்கீகார வணிகத்தைக் கொள் வனவு செய்யும் போது தனக்குப் பொருத்தமான அங்கீகார வணிகத்தைக் கொள்வனவ செய்வது மிகவும் முக்கியமான தாகும். கொள்வனவ செய்யப்படும் அங்கீகாரம் வணிகம் உற்பத்திப் பொருளுக்கானதாகவோ உற்பத்திக் கானதாகவோ, வணிக முறைக் கானதாகவோ காணப்படும். எவ்வாறானதாக இருப்பினும் அது அங்கீகாரம் பெறுபவருக்கு பொருத்த மானதாக இருத்தல் அவசியமாகும். இந்தவகையில் அங்கீகாரம் பெறுபவர் தனக்குப் பொருத்தமானதாக அங்கீகார வணிகத்தை தெரிவு செய்கின்ற அடிப்படை யிலும் அங்கீகார வணிகத்தைப் பின் வருமாறு வகைப்படுத்தலாம்

1. ஒற்றை அலகு அங்கீகார வணிகம் (Single unit franchising)

2. தொடர் வரிசை அங்கீகார வணிகம் (Seqvential Franchising)

3. பிரதேச அபிவிருத்தி அங்கீகார வணிகம் (Area development franchising)

4. உப அங்கீகார வணிகம் (sub franchising)

5. பிரதேச பிரதிநதித்துவ அங்கீகார வணிகம் (Area representation franchising)

ஒற்றை அலகு அங்கீகார வணிகம் (Single unit franchising)

அங்கீகாரம் பெறுபவர் அங்கீகாரம் வழங்குபவருடன் செய்து கொள்ளும் உடன்படிக்கைக்கு அமைய முதலில் குறிப்பிட்ட ஒரு இடத்தில் அல்லது பிரசேதத்தில் மட்டும் அங்கீகார வணிகத்தை உருவாக்க அனுமதிக்கப்படுவார். இதே போல இன்னும் பல அங்கீகாரம் பெறுபவர்களுக்கு வேறு இடங்களில் அங்கீகார வணிகங்களை உருவாக்க அங்கீகாரம் வழங்கபவர் அனுமதி தருவார். இதுவே ஒற்றை அலகு அங்கீகார வணிகம் எனப்படும்.

## தொடர் வரிசை அங்கீகார வணிகம் (Sequential Franchising)

அங்கீகாரம் பெறுபவர் அங்கீகாரம் வழங்குபவருடன் செய்து கொள்ளும்

உடன்படிக்கைக்கு அமைவாக முதலில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அல்லது பிரதேசத்தில் மட்டும் அங்கீகார வணிகத்தை உருவாக்க அனுமதிக்கப்படுவார். பின்னர் அங்கீகாரம் பெறுபவர் ஒவ்வொன்றாக மேலும் பல அங்கீகார வணிகங்களை உருவாக்க அங்கீகாரம் வழங்கபவரிடம் அனுமதி கோரும் பட்சத்தில் அங்கீகாரம் பெறுபவரின் ஆளுமை தகைமை மற்றும் பொருத்தம் என்பவற்றை கருத்தில் கொண்டு ஒவ்வொன்றாக வரிசையாக இன்னும் பல அங்கீகார வணிகங்களை உருவாக்க அங்கீகாரம் பெறுபவருக்கு அனுமதி வழங்குவார். இதுவே தொடர்வரிசை அங்கீகார வணிகம் எனப்படும்.

## பிரதேச அபிவிருத்தி அங்கீகார வணிகம் (Area development franchsing)

அங்கீகாரம் பெறுபவரைப் பிரதேச அபிவிருத்தியாளராக நியமித்து அவர் மூலம் குறிப்பிட்ட பிரதேசத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் அங்கீகார வணிகங்களை உருவாக்க அங்கீகாரம் வழங்குபவர் அனுமதி வழங்குவார். இதன் பிரகாரம் குறிப்பிட்ட பிரதேசத்தில் குறிப்பிட்ட காலத்திற்கு அங்கீகாரம் வழங்குபவரின் பிரதேச அபிவிருத்தியாளராக தொழிற்படுவதன் மூலம் அவரின் வேண்டு கோளிற்கிணங்க அங்கீகார வணிகங்களை உருவாக்கி அதற்கு தேவையான ஊழியர் களையும் நியமித்து அங்கீகார வணிகங் களை நடாத்தி செல்வார் இது பிரதேச அபிவிருத்தி அங்கீகார வணிகம் எனப்படும்.

## உப அங்கீகார வணிகம் (sub franchising)

இது தலைமை அங்கீகார வணிகம் (master franchisising) எனவும் அழைக்கப்படும். இது இரு மட்டத்தில் அங்கீகாரம் பொறுபவர்களை கொண்டதாகும். அதாவது அங்கீகாரம் வழங்குபவர் அங்கீகார வணிகத்தை நடாத்த அங்கீகாரம் பெறுபவருக்கு அனுமதி வழங்கவார். இருவரும் செய்து கொள்ளும் உடன்படிக் கைக்கு அமைவாக அங்கீகாரம் பெறுபவர் குறிப்பிட்ட பிராந்தியத்திற்கு உப அங்கீ காரம் வழங்குபவராக (sub franchiser) தொழிற்படுவதன் மூலம் குறித்த பிராந்தியத்தில் உப அங்கீகாரம் பெறுபவர் களை (sub francinsees) நியமித்து அவர்களுடாக உப அங்கீகார வணிகங் களை நடாத்துவார்.

## பிரதேச பிரதிநித்துவ அங்கீகார வணிகம்

இதுவும் உப அங்கீகார வணிகம் போன்று இரு மட்டத்திலும் அங்கீகாரம் பெறுபவர்களைக் கொண்டதாகும். அதாவது அங்கீகாரம் பெறுபவர் அங்கீ காரம் வழங்கபவரால் பிரதேச பிரதிநிதியாக (Area representative) நியமிக்கப்படுவார். எனினும் உப அங்கீகார வணிகத்தில் காணப்படும் அங்கீகாரம் பெறுபவரை (உப அங்கீகாரம் வழங்குபவர்) பார்க்கிலும் குறைவான அதிகாரம் உடையவர் அதாவது பிரதேச பிரதிநிதியாக தொழிற்படுவதன் மூலம் அங்கீகார வணிகங்களை உருவாக்க முடியுமாயின் அந்த அங்கீகாரம் பொது

மக்கள் தொடர்பான ஆட்சேர்ப்பு ஏனைய நடவடிக்கைகள் போன்ற சபை நடவடிக் கைகள் தொடர்பாகவும் அங்கீகாரம் வழங்குபவரே முக்கிய பங்காற்றுவார்.

**அங்கீகார வணிகத்தின் அனுகூலங்கள், பிரதிகூலங்கள்**

அங்கீகாரம் பெறுபவர் பெறும் அனுகூலங்கள்

•சொந்த முயற்சியில் இயக்க முடிதல்

•அங்கீகாரம் வழங்குபவரின் உதவியுடன் வணிகத்தை விரிவுபடுத்த முடியும்.

•வணிக இடர் ஓரளவு குறைவாக காணப்படும்

•விளம்பரப்படுத்தல் மற்றும் மேம்படுத்தும் நடவடிக்கைகள் அதிகம் மேற்கொள்ள தேவையில்லை.

**அங்கீகாரம் வழங்குபவர் பெறும் அனுகூலங்கள்**

•அதிக இறை வருமானத்தை உழைக்க முடிதல்

•வணிகம் விரிவடையும்

•வியாபாரப் பெயரை விற்பனை செய்வதன் மூலம் வருமானம் உழைக்க முடிதல்

•அங்கீகாரம் பெற்றவரின் முதலீட்டின் ஊடாகவும் அதிக இலாபத்தை உழைக்க கூடிய சந்தர்ப்பம் உருவாதல்

**அங்கீகாரம் பெறுபவர் பெறும் பிரதி கூலங்கள்**

•அங்கீகாரம் வழங்குபவரின் கட்டப்பாடு கூடுதலாக இருத்தல்

•பூரணமான சுதந்திரமின்மை

•அங்கீராகம் வழங்கபவரின் நன்மதிப்பில் முழுமையாக வணிகம் தங்கியிருத்தல்

•இலாபம் தொடர்பான நிச்சயமற்ற தன்மை காணப்படல்

**அங்கீகாரம் வழங்கபவர் பெறும் பிரதிகூலங்கள்**

•அங்கீகாரம் பெறுபவர் விடும் தவறுகள் வணிகத்தின் நன்மதிப்பை பாதிக்கலாம்.

•அங்கீகாரம் வழங்கபவரின் நன்மதிப்பை பயன்படுத்தி அங்கீகாரம் பெறுபவர் இலாபம் உழைத்தல்

**References:**

WWW.Franchise chat.com

WWW.wikipedia.com

Business studies part - I Book - I (S.Mayoran)

Different types of franchising (Sr.callumfloyd)


ச. சாயீசன்

தரம் 12C

*d d d d d d d d*



# நிதிச் சந்தை பற்றிய அறிமுகம்
# (An Introduction to the Financial Market)




நீண்டகால மற்றும் குறுங்கால நிதிமுதல்களை வகுத்துக் கொள்வதற்கான தளம் அல்லது இடம் நிதிச் சந்தை எனப்படும். பொதுவாக நீண்டகாலம் மற்றும் குறுங்கால நிதி வழங்குனர்களையும் நிதி பெறுனர்களையும் தொடர்புபடுத்துகின்ற செயலொழுங்கு நிதிச்சந்தை எனப்படும். இச்செயலொழுங்குக்கு பௌதீக அல்லது இலத்திரனியல் முறைமைகள் அடிப்படையாக அமைகின்றன.

நீதிச் சந்தையில் கையாளப்படுகின்ற ஆவணங்களின் அல்லது பிணையங்களின் நோக்கம் மற்றும் முதிர்வுக்காலம் என்பவற்றின் அடிப்படையில் நிதிச்சந்தையினை பணச்சந்தை மற்றும் மூலதனச் சந்தை என வகைப்படுத்த முடியும்.

## 1. பணச் சந்தை (Money Markdet)

குறுங்கால நிதி மிகை மற்றும் நிதிப் பற்றாக்குறையினை எதிர்நோக்குபவர்களை தொடர்புபடுத்துகின்ற செயலொழுங்கு பணச்சந்தை எனப்படும். இது ஒரு வருடத்திற்கு குறைந்த முதிர்வு காலத்தினையுடைய பிணையங்களைக் கொண்டு அமைந்திருக்கும் பணச்சந்தையின் துணைச் சந்தைகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

### அழைப்புக் கடன் சந்தை (Call Money Market)

குறுங்கால நிதிப்பற்றாக்குறையினை எதிர்நோக்குகின்ற வணிக வங்கிகள் அதே துறைசார்ந்த வணிக வங்கியிடமிருந்து அல்லது அரசாங்கத்திடமிருந்து தொலைபெசி மூலமாகத் தொடர்பு கொண்டு பணத்தினைத் திரட்டிக் கொள்ளும் செயலொழுங்கு அழைப்புக்கடன் ச்நதை எனப்படும். இங்க வணிக வங்கிகளுக் கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் வாடிக்கையாளர்களின் நம்பிக்கையினை பேணும் முகமாக மத்திய வங்கியில் பேணப்படும் சிறப்பொதுக் கணக்கின் ஊடாக சீராக்கப்படுகின்றன. இது ஓர் இரவு அல்லது ஒரு வாரத்திற்கு நெகிழ்ச்சியுடையதாக அமையும்.

### வணிகப்பத்திரங்களின் சந்தை (Market for commercial papers)

குறுங்கால நிதிப்பற்றாக்குறையினை எதிர்நோக்கும் வணிக வங்கிகள் நிதியினைத் திரட்டிக் கொள்வதற்காக பயன்படுத்தும் சட்ட ரீதியான ஆவணம் வணிகப்பத்திரம் எனப்படும். இதை கைமாற்றம் செய்வதன் ஊடாக அல்லது பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட முதிர்வு திகதியில் பணமாக மாற்றிக் கொள்ள முடியும். இது வணிகப்பத்திரங்களின் சந்தை எனப்படும்.

### நாணயமாற்றுச் சந்தை (Foreigb currency market)

மத்திய வங்கியின் அந்நியச் செலவாணிக் கட்டுப்பாட்டுக் கொள்கைகளுக்கு அமைவாக இலங்கையில் வணிக வங்கிகள் அந்நியச் செலவாணிச் சந்தையினை பேணுகின்றன. சர்வதேச வர்த்தகத்தின் போது அந்நியச் செலவாணிக் கொடுக்கல் வாங்கல்கள் இச் சந்தையூடாக நிறைவேற்றப்படுகின்றது. எனவே வணிக வங்கிகள் அந்நியச் செலவாணியின் திரவத்தன்மையினை (கிடைப்பனவு) பேணும் பொருட்டு அந்நியச் செலவாணிச் சிறப்பொதுக்கங்களை பேணுவதுண்டு மாறாக மேலதிக உடனடித் தேவைகளுக்கு மத்திய வங்கியிலிருந்து பெற்றுக் கொள்ளமுடியும். செலவாணிக் கொடுக்கல் வாங்கல்களை விரைவுபடுத்தும் முகமாக அனுமதி பெற்ற பணத்தரகர் நிறுவனங்கள் முகவர்களாக செயற்பட மத்திய வங்கி அனுமதித்துள்ளது.

### கரைகடந்த வங்கிச் சந்தை (Off shore Market)

அனுமதிக்கப்பட்ட தனிப்பட்ட அல்லது நிறுவனத்தின் அந்நியச் செலவாணி மூலமான கொடுக்கல் வாங்கல்கள் வணிக வங்கியின் அந்நியச் செலவாணி வங்கி அலகின் ஊடாக நிறைவேற்றப்படுகின்றன. இச் சந்தையில் அனுமதிக்கப்பட்டவர்கள் அந்நியச்

செலவாணியில் பணத்தினை வைப்புச் செய்ய அல்லது மீளப் பெற முடிவதுடன் வட்டி வீதமானது அந்நியச் செலவாணியில் கணித்து வழங்கப்படுகின்றது. இங்கு கணக்குகள் சேமிப்புக் கண்காக அல்லது நடைமுறைக் கணக்காக அமையலாம். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கரைகடந்த வங்கிச் சந்தையூடாக பரிமாற்றம் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### திறைசேரி உண்டியல் சந்தை (Market for Treasury Bills)

அரசாங்கம் குறுங்கால நிதியினைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் மத்திய வங்கியில் உள்ள பொதுப்படுகடன் திணைக்களத்தினால் 3, 6 மற்றும் 12 மாதகால முதிர்வுகாலமுடைய திறைசேரி உண்டியல்களை வெளியிட்டு தேவையான குறுங்கால நிதியினை திரட்டுகின்றது. இங்கு பொதுப்படுகடன் திணைக்களத்தினால் வராந்தம், ஏல வியாபார அடிப்படையில் முதன்நிலை வணிகர்களுக்கு திறைசேரி உண்டியல்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

திறைசேரி உண்டியல்களைக் கொண்டுள்ள முதன்நிலை வணிகர்கள் அவற்றை பொதுமாக்களுக்கு அல்லது நிதி நிறுவனங்களுக்கு விற்பனை செய்து மீள்கழிவு செய்து கொள்ள முடியும். அல்லது முதிர்வு காலத்தில் பணமாக மறா்றிக் கொள்ள முடியும். பொதுவாக திறைசேரி உண்டியல்கள் முகப் பெறுமதியில் குறித்த கழிவில் வழங்கப்படும். முதிர்வில் முகப் பெறுமதியினைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன் 100மூ அரச உத்தரவாத்தினைக் கொண்டுள்ளது. முதன்நிலை வணிகர்கள் திறைசேரி உண்டியல்களை பொதுப்படுகடன் திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளல் உண்டியலுக்கான முதலாம் சதரச்சந்தை எனவும் அதனை பொது மக்களுக்கு விற்பனை செய்தல் இரண்டாம் தரச் சந்தை எனவும் வகைப்படும்.

### மூலதனச் சந்தை (Capital Market)

நீண்டகால முதல் மற்றும் கடன் நிதியினை எதிர்பார்பப்வர்களையும் நீண்டகால நிதி மிகையினை எதிர்நோக்குபவர்களையம் ஒன்றிணைக்கும் செயலொழுங்கு மூலதனச் சந்தை எனப்படும். இங்கு பிணையங்கள் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட முதிர்வுக்காலத்தினைக் கொண்டிருக்கும் அல்லது முதிர்வுகாலம் வரையறுக்கப்படாததாக காணப்படும்.

மூலதனச் சந்தையில் வழங்கப்படும் பிணையங்களின் சிறப்பியல்பு அடிப்பைடயில் மூலதனச் சந்தையினை கடன் பிணையங்களுக்கான மூலதனச் ச்நதை மற்றும் உரிமை முதலுக்கான மூலதனச் சந்தை என வகைப்படுத்த முடியும்.

### கடன் பிணையங்களுக்கான மூலதனச் சந்தை (Capital Market fro debt securities)

முதல் நிதியினைத் திரட்டிக் கொள்ளும் நோக்கில் அரசாங்கம் மற்றும் கம்பனிகள்

ஒரு வருடத்திற்கு மேற்பட்ட முதிர்வுக் காலத்தினை உடைய பிணையங்களை வழங்குவதன் ஊடாக நிதியினைத் திரட்டிக் கொள்ளுதல், கடன் பிணையங்களுக்கான சந்தை எனப்படும். இங்கு கடன் பெற்றவர் முதிர்வக் காலத்தில் அல்லது உடன்படிக்கைக்கு அமைவாக கடன் முதல் மற்றும் வட்டியினை மீளச் செலுத்த வேண்டும்.

இங்கு அரசாங்கம் நிதியினைத் திரட்டிக் கொள்ளும் முகமாக குறைந்தது இரண்டு வருடகால முதிர்வினையுடைய திறைசேரி முறைகளை பொதுப்படுகடன் திணைக்களத்தினால் முதல்நிலை வணிகர்களுக்கு ஏலவியாபார முறைமையில் வழங்குகின்றது. அதேபோல் கமப்னிகள் தொடுநிதிக்கடன்கள் எனும் நீண்டகால கடன் பிணையங்களை பொதுமக்களுக்கு பங்கச் சந்தையூடாக அல்லது தனிப்பட்ட ரீதியில் கம்பனியுடன் தொடர்படைய கட்சியினருக்கு முகப் பெறுமதியில் அல்லது கழிவில் வழங்குகின்றன.

## திறைசேரி முறி (Treasury bond)

அரசாங்கம் நீண்டகால நிதியினைத் திரட்டிக் கொள்ளும் நோக்கில் மத்திய வங்கியில் உள்ள பொதுப்படுகடன் திணைக்களத்தால் வழங்கப்படும் பிணைப்பத்திரம் திறைசேரி முறி எனப்படும். இது 2 தொடக்கம் 20 வருட முதிர்வு காலத்தினைக் கொண்டிருப்பதுடன் பூரண அரச உத்தரவாத்தினையம் கொண்டுள்ளது. இவை பொதுவாக வருடத்திற்கு இரண்டு தடவைகள் வட்டி வழங்கக் கூடியவை.

## தொகுதிக்கடன்கள் (Debe3ntures)

கம்பனிகள் தமது நீண்டகால நிதித் தேவையினைப் பெற்றுக் கொள்ளும் முகமாக வழங்கம் தவணை குறித்த கடன் பிணைப்பத்திரங்கள் கம்பனியிடம் மீளக் கொடுத்து பணமாக மாற்றிக் கொள்ள முடியும். இப்பிணைப்பத்திரம் காலக்கிரமத்தில் குறித்த வட்டி வீதத்தினை வழங்குகின்றது.

தொகுதிக்கடன்களை அவை கொண்டுள்ள சிறப்பியல்புகளின் அடிப்படையில் மிதக்கும் தொகுதிக்கடன்கள், தாழ்நிலைப்படுத்தப்பட்ட தொகுதிக்கடன்கள் அழைக்கத்தகு தொகுதிக்கடன் மாற்றத்தகு தொகதிக்கடன்கள் என வகைப்படுத்த முடியும்.

## உரிமை முதல் சந்தை (Equity Market)

உரிமை முதலினைத் திரட்டிக் கொள்வதற்கான சந்தை உரிமை முதல் சந்தை எனப்படும். உரிமை முதல் என்பது கம்பனி மீதான பூரண உரிமையினை கொடுக்கக்க கூடிய பங்ககளை வழங்கவதன் ஊடாக திரட்டப்படும் நிதிமுதல், உரிமை முதல் எனப்படும். இவ் உரிமை முதலினைப் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய பிணையங்களைக் கொண்டுள்ளவர்கள் கம்பனியின் உரிமையாளர்கள் ஆவர். உரிமைத்துவத்தினை வழங்ககின்ற பிணையங்கள் நிறவனத்தின் தொடர்ந்து செல்லும் எண்ணக்கருவிற்கு அமைவாக முதிர்வக் காலத்தினைக் கொண்டிருப்பதில்லை.

இந்நிலையில் இவ்வாறான நீண்டகால முதிர்வு காலத்தினையுடைய பிணைங்களினைக் கொண்டுள்ளவர்கள் அதனைப் பணமாக மாற்ற முதிர்வுக்காலம்

வரை காத்திருக்க வேண்டும். முதிர்வுக் கால மற்ற பிணையங்களைக் கொண்டுள்ளவர்கள் அவற்றை கறித்த கம்பனியிடம் கொடுத்து பணமாக மாற்ற முடியாது. இந்நிலை குறித்த பிணையங்களுக்கான திரவத்தன்மையினை புலப்படுத்துகின்றது. ஆகவே நீண்டகால பிணையங்களுக்க திரவத்தன்மை குறைவு அல்லது அற்றநிலை தோற்றுவிக்கபப்டுகின்றது.

இந்நிலையில் நீண்டகாலப் பிணைங்கள் மீதான முதலீடுகள் ஓர் சிறந்த முதலீட்டு முயற்சியாக கருத முடியாது. ஏனென்றால் முதலீட்டுக்கான சிறந்த பண்புகளில் திரவத் தன்மை முக்கியமானது. எனவே இவ்வாறான செயலொழுங்கு வளர்ச்சி பெற்றது. இங்கு பிணையங்கள் முதன் முதலாக விற்பனை செய்கின்ற நிகழ்வு முதலாம் தரச் சந்தை எனவும் முதலாம் தரச்சந்தையில் பரிமாற்றப்பட்ட பிணையங்களை முதிர்வுக் காலத்திற்க முன்னர் மீள்கழிவு செய்தல் இரண்டாம் தரச்சந்தை அல்லது பங்குச்சந்தை எனவும் வரையறுக்கப்படுகின்றது. இதனால் பிணையங்களுக்கான திரவத்தன்மை அதிகரிக்கப்பட்டு முதலீட்டுக்கான தெரிவுகள் பன்முகப்படுத்தப்படுகின்றன.

ம.சுயந்தினி

தரம் : 12C

# சந்தைப்படுத்தலின் மைய எண்ணக்கருக்கள்



சந்தைப்படுத்தலை வெவ்வேறு அடிப்படையில் வரைவிலக்கணப்படுத்த முடியும். சிலர் சந்தைப்படுத்தலை சமூக ரீதியான செயற்பாடாக கருதுவதோடு சிலர் சந்தைப்படுத்தலை முக்கியத்துவ செயற பாடாக கருதுகின்றனர்.

சந்தைப்படுத்தல் என்பது நபர்கள் மற்றும் குழுக்கள் பெறுமதியுடைய உற்பத்தி ஒன்றினை உருவாக்குதல் மற்றும் வெளிப்படுத்தல் பரிமாற்றுதல் ஊடாக மனித தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்தல் தொடர்பாக காணப்படும் சமூக மற்றும் முகாமைத்துவ செயன்முறை" ஆகும்.

இவ் வரைவிலக்கணத்தை தெளிவு படுத்துவதனூடாக சந்தைப்படுத் தலானது பின்வரும் மைய எண்ணக்கருக்களிலேயே தங்கியிருப்பதை அவதானிக்க முடியும்.

1. சந்தை மற்றும் விநியோகஸ்தர்
2. தேவை மற்றும் விருப்பங்கள்
3. உற்பத்தி (பொருள் மற்றும் சேவை)
4. பெறுமதி, கிரயம், திருப்தி
5. பரிமாற்றும், கொடுக்கல் வாங்கலும்
6. தொடர்புகளும் வலையமைப்புகளும்

சந்தை மற்றும் விநியோகம்:


சந்தைப்படுத்தலின்படி சந்தையானது பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்

தப்படுகிறது. "சந்தை என்பது தேவைகளையும், விருப்பங்களையும் பூர்த்தி செய்வதற்காக பரிமாற்றத்தில் ஈடுபடுவதற்கு விருப்பம் கொண்டு காணப்படுகின்ற தரப்பினரையும், கொள்வனவு சக்தியை உடைய இலக்கு வாடிக்கையாளரையும் உள்ளடக்கிய தொகுதி" ஆகும்.

இவ்வரைவிலக்கணத்தின்படி இலக்கு வாடிக்கையாளர் (Potential customer) என்பது உற்பத்தி பொருளினை தற்போது கொள்வனவு செய்பவர்களையும், எதிர்காலத்தில் கொள்வனவு செய்ய எதிர்பார்ப்பவர்களையும் உள்ளடக்கியது" ஆகும்.

தேவைகளையும் விருப்பங்களையும் வெளிப்படுத்துகின்ற நபர்களின் எண்ணிக்கை அடிப்படையில் சந்தையின் அளவு தீர்மானிக்கப்படும். பாரம்பரிய ரீதியில் சந்தை என்பது கொள்வனவாளரும் விற்பனையாளரும் உற்பத்தி பொருளினை பரிமாற்றிக் கொள்கின்ற இடம் என அழைக்கப்படுகிறது. சாதாரணமாக நகரங்களிலும் வீதியோரங்களிலும் இத்தகைய சந்தைகள் அமைந்திருந்தன. இது வெவ்வேறு பெயரை கொண்டு அழைக்கப்படுகின்றது. உதாரணமாக சில்லறை சந்தை, மொத்த விற்பனை சந்தை, மீன் சந்தை ஆகியவற்றை கூற முடியும்.

விநியோகஸ்தர்கள் தமது கூட்டினை கைத்தொழில் (Industry) எனவும், கொள்வனவாளர்களின் கூட்டினை சந்தை எனவும் குறிப்பிடுகின்றனர். கொள்வனவாளர்களும், விற்பனையாளர்களும் நான்கு அடிப்படையில் தொடர்பு கொள்கின்றனர். விற்பனையாளர்கள் பொருட்கள், சேவைகள், தொடர்பாடல் என்பவற்றை சந்தைக்கு வழங்குவதோடு, வாடிக்கையாளர்கள் பணம் மற்றும் தகவல்களை விற்பனையாளர்களை நோக்கி வழங்குகின்றனர்.




பாரம்பர ரீதியான சந்தையில் முற்றிலும் மாறான வகையில் இன்றைய சந்தைகள் காணப்படுகின்றன. இதற்கான காரணம் டிஜிற்றல் (Digital) தொழில்நுட்பம் மற்றும் இணையம் என்பவை ஆகும். இது சந்தை வெளி அல்லது இணைய சந்தை (Cybermarket) எனப்படும். இத்தகைய சந்தைகளிற்கு சந்தைக்கான இடம் என்ற ஒன்று அவசியமில்லை.

1. வாடிக்கையாளர் சந்தை
2. கைத்தொழில் வணிக சந்தை

வாடிக்கையாளர் சந்தை என்பது இறுதி பாவனை நோக்கில் பொருள், சேவைகளை கொள்வனவு செய்யும் சந்தையை குறிக்கும். கைத்தொழில் வணிகச் சந்தை என்பது மீள் உற்பத்தி நோக்கில் பொருள், சேவைகளை கொள் வனவு செய்யும் சந்தையை குறிக்கும் கைத்தொழில் வணிக சந்தையில் காணப்படும் கொள்வனவாளர்கள் வணி கர்கள் ஆவர்.

தேவை, விருப்பம், கேள்வி :

சந்தையில் காணப்படுகின்ற வாடிக்கையாளர்களின் தேவைகளும், விருப்பங்களும் சந்தைப்படுத்தலின் ஆரம்பமாகும். மனிதன் உயிர் வாழ காற்று, நீர், உடை, உறையுள் என்பன அவசியம். இதற்கு மேலதிகமாக பொழுதுபோக்கு, கல்வி, தொடர்பாடல் என்பவை தொடர்பிலும் நபர்கள் அதிக விருப்பு டையவர்களாக காணப்படுகின்றனர்.

மனித தேவைகள் என்பது ஏதேனும் ஒன்று கிடைக்காமை காரணமாக தோன்றுகின்ற உணர்வு நிலை ஆகும். மனிதனுக்கு சாதாரணமாக உணவு, உடை, உறையுள், அன்பு, பாதுகாப்பு என்பன அவசியமாகின்றன. இத்தகைய அடிப்படை தேவைகள் சந்தைப்படுத்துபவர்களால் உருவாக்கப்படுபவை அல்ல. இவை மனிதனுக்கு உளவியல் ரீதியாக தோன்றுகின்ற விடயங்கள் ஆகும்.

உற்பத்தி பொருள் :

நபர்களின் தேவைகளும், விருப்பங் களும் உற்பத்திகளினூடாக பூர்த்தி செய்யப்படுகிறது. உற்பத்தியானது சில சந்தரப்பங்களில் வெளிப்படுத்தல்களாகவும் சில சந்தரப்பங்களில் தீர்வாகவும் அமையும்.

கட்புலனாகாத நலன்களுடன் இணைந்த உற்பத்தி அளிப்பு (Offering) எனப்படும். அளிப்பு என்பது உற்பத்தி, சேவை, தகவல், அனுபவம் என்பவற்றை உள்ளடக்கியது. அளிப்பானது பெயருடன் காணப்படுமானால் அது வியாபார குறி (Brand) எனப்படும்.

பெறுமதி, கிரயம், திருப்தி :

இலக்கு மூலம் வாடிக்கையாளரை நிருப்திப்படுத்தும் பெறுமதியளிக்கப படுமானால் அளிப்பு வெற்றி தரும். கொள்வனவாளர் பெறுமதியையடைய உற்பத்தியையே தெரிவு செய்வர். அது தரம், சேவை, விலை (Quality, Service & Price = QSP) ஆகிய அம்சங்களின் கலவையாகும். இது வாடிக்கையாளருடைய மூவகை பெறுமதி எனப்படும்.

பரிமாற்றும் கொடுக்கல் வாங்கலும்

தனியாள் பொருள் அல்லது சேவையை பெற்றுக் கொள்வதற்கான முறை பரிமாற்று ஆகும். சந்தைப் படுத்தலின் முக்கிய எண்ணக்கருவான பரிமாற்று என்பது "தனது வளங்களை அளிப்பு செய்து தனக்கு தேவையான உற்பத்தியை பெறுதல்" ஆகும்.

இரு கட்சிகள் அல்லது சில கட்சிகளுடன் பெறுமதி பரிமாற்றபடுதல் கொடுக்கல் வாங்கல் எனப்படும். வியாபாரத்தின் போது உரிமை மாற்றப் படுகிறது. அது கொடுக்கல் வாங்கல் எனும் ஒப்பந்தத்தின் மூலமாக முடிவடைகிறது.

தொடர்பும் வலையமைப்பும்:

வெவ்வேறு வாடிக்கையாளருடன் அன்னியோன்னியமான, திருப்திகரமான நீண்டகால தொடர்பினை பேணல் சந்தைப்படுத்தலின் முக்கிய எண்ணக் கருவாகும். இது தொடர்பு சந்தை (Relationship Marketing) எனப்படும். வாடிக்கையாளர், வழங்குனர், விநியோகஸ்தர் போன்ற பல்வேறு கட்சிகளுடன் நீண்ட காலமாக ஏற்படுத்தி கொள்ளப் பட்டுள்ள தொடர்பு வணிக நிறுவனத்தின் ஒரு சொத்தாகும். இந்த சொத்து சந்தைப்படுத்தல் வலையமைப்பு (Marketing Network) எனப்படும்.

ப.அபிவர்ணா
தரம் : 12C

# இலங்கையின் சந்தை அமைப்பில் சிறு வியாபாரங்களின் வகிபாங்கு



இலங்கையின் பொருளாதார வளர்ச்சி தொடர்பில் சிறு வியாபாரங்களின் பங்களிப்பு மிக நீண்ட காலமாக எதிர்பார்க் கப்படுகின்றது. மொத்த உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பதற்கு வேலையின் மையை குறைப்பதற்குப் பிரதேச ரீதியான வளங்களை ஒழுங்காக பயன்படுத்துவதற்கு சிறு வியாபாரங்களின் பங்களிப்பு பெரிதும் அவசியமென மக்கள் பெரிதும் நம்பிக்கை கொண்டுள்ளனர். 2012 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத்திலும் கூட பல்வேறு சலுகைகள் சிறுவியாபாரங்களுக்கு வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வரவு செலவுத் திட்ட அறிக்கையில் மொத்த தேசிய உற்பத்திக் கான சிறு மத்திய (SME) வியாபாரங் களின்ப ங்களிப்பினை 3 மடங்கு அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. இந்நோக்கத்தை அடையும் முகமாக பல்வேறு நேரடி மற்றம் நேரில் சலுகைகளை வழங்க அரசு முடிவு செய்துள்ளது. அவற்றுள் நேரடி சலுகைகள் சில கீழ்வருமாறு

1. 500 மில்லியன் ரூபாவை விட குறைவான விற்பனை வருமானத்தை பெறும் சிறு மத்திய முயற்சிகளின் தொடக்கச் செலவு மற்றும் ஆரம்ப ஆண்டிற்கான வரி என்பன குறைக்கப்பட்டுள்ளது.

2. பசும்பால், தேயிலை, கறுவா, இறப்பர், றப்பர்பால் தொழில் என்பவற்றில் ஈடுபடும் சிறுமத்திய முயற்சிகள் தேசத்தை கட்டியெழுப்பும் வரியிலிருந்து விடுதலை செய்யப்படுகிறது.

3. சிறு மத்திய முயற்சியாளர்களின் விற்பனை வருமானம் 500m லும்

குறைவானதெனில் அவர் செலுத்த வேண்டிய பொருளாதார சேவை கட்டணத்தில் 100m வரை சலுகையினை பெற முடியும்.

4. சிறுமத்திய முயற்சியாளர் ஒருவருக்கு இலங்கையில் உற்பத்தி செய்யப்படாத ஏதேனும் பொறி இயந்திரங்களை வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படம் பொறி இயந்திரங்களுக்கான பூரணவரி விலக்களிப்ப உண்டு.

5. வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களிலிருந்து தமது முதலீடுகளில் 10% விவசாயத்துறைக்கும் 10% சிறுமற்றும் மத்திய முயற்சிகளுக்கும் கடன் வழங்க வேண்டும் என்பது கட்டாயப்படுத் தப்பட்டுள்ளது.

6. இலங்கை வங்கி, மக்கள் வங்கி மற்றும் ஏனைய பிரதேச வங்கிகள் தமது கிளையினை எல்லா மாவட்டங்களிலும் ஆரம்பிக்க வேண்டும் என்பது கட்டாயப் படுத்தப்பட்டுள்ளதோடு ஏனைய தனியார் வங்கிகளோடும் இது வலியுறுத்தப்படுகிறது.

7. சிறு மத்திய முயற்சியாளருக்கு வழங்கப்படுகின்ற கடன்கள் தொடர்பில் அரசு 50% வரை மீள் நிதியிடல் வசதிகளை வழங்கும்.

8. சிறு மத்திய முற்சிகளுக்கு வங்கிகள் கடன் வழங்கி ஈட்டி கொள்ளம் வருமானத்துக்காக அரசுக்கு செலுத்தும் வரிவீதமானது 28% இருந்து 24% ஆக குறைக்கப்பட்டுள்ளது.

**சிறு வியாபாரங்கள் என்றால் என்ன?**

தினயொருவரின் உடமையிலும் தனியார் ஒருவரால் நடாத்தப்படுவதும் ஊழியர்கள் குறைந்தளவில் தொழில் புரிவதும் வருட விற்பனை வருமானம் ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்படு வதும் கைத்தொழிலில் எவ்வித அழுத்தத் தையும் ஏற்படுத்த முடியாத வியாபாரங்கள் சிறு வியாபாரங்க்ள என அழைக்கப் படுகிறன்றது.

**சிறுவியாபாரங்களை வேறுபடுத்து வதற்கான காரணங்கள்**

1. ஒப்பிடுவதற்கும், கணிப்பிடுவதற்கும்

சிறுவியாபாரங்களின் வினைத் திறன் அளவிடுவதற்கும் ஏனைய வணிகங் களோடு ஒப்பீடு செய்வதற்கும் ஏனைய வணிகங்களோடு ஒப்பீடு செய்வதற்கும் சிறு வணிகங்களின் செயலாற்றுகையை அறிவதற்கும் ஆகும்.

2. அரச ஊக்குவிப்புக்களையும், சலுகை களையும் வழங்குவதற்கு

இலங்கையில் சிறுவணிகங்களுக் கென பல்வேறு விசேட நிதியுதவிகள், மானியங்கள், வரிச்சலுகை போன்றவை அரசால் நேரடியாகவும் ஏனைய நிதி நிறுவனங்களால் நிதியுதவி வழங்கப் படுகின்றது.

3. சர்வதேச நிதியுதவிகளை பெற்றுக் கொடுக்க

உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய விருத்தி, சர்வதேச அபிவிருத்திக்கான ஜப்பானிய வங்கி போன்ற சர்வதேச நிறுவனங்களினூடாக வழங்கப்படுகின்ற நிதியுதவிகளையும் ஏனைய உதவிகளையும் சிறு வணிகங் களுக்கு பெற்றுக் கொடுத்தல்.

4. கடன் வழங்குதல்

வங்கிகள் மற்றும் ஏனைய நிதி நிறுவனங்களிலிருந்து வழங்கப்படுகின்ற சலுகை அடிப்படையிலான கடன் வழங்குதல்

இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கும் சிறு வியாபாரங்களின் பங்களிப்பு யாது?

1. தொழில் வாய்ப்புக்களை வழங்குதல்
2. வறுமையை குறைத்தல்
3. புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்தல்
4. விசேட பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்தல்
5. பாரிய வணிகங்களுக்கு தேவையான பொருட்களை வழங்குதல்
6. உற்பத்தி திறனையும் இலாபத் தன்மையையும் அதிகரித்தல்
7. நெகிழ்ச்சித் தன்மை (Fiexibility)
8. தேசிய / உள்நாட்டு உரிமை
9. சமூக பங்களிப்பு
10. இணையத்தள சந்தையில் பிரவேசித்தல்

பல சிறுவணிகங்கள் தோல்வியடைவதற்கான காரணங்கள்

1. வணிகத் திட்டமிடலின் குறைபாடு
2. முயற்சியாண்மை திறன்களின் குறைபாடு
3. முகாமைத் திறன் இன்மை
4. கைத்தொழில் தொடர்பில் அனுபவமின்மை
5. நிதிப்பற்றாக்குறை
6. பிழையான இடத்தெரிவு
7. இருப்பு மற்றும் நிதி கட்டுப்பாடு ஒழுங்கற்று காணப்படல்
8. இலக்கு வாடிக்கையாளர்களை கவருவதற்கும், பாதுகாப்பதற்கும் தவறுதல்

ப.மிதிலா
தரம் 12C

## பெருந்தெருப் போக்குவரத்தும் புகையிரதப் போக்குவரத்தும்



**போ**க்குவரத்து என்பதன் பொருள் வெளியைத் தாண்டுதல் எனலாம். அதாவது தனிநபர்களையும் பொருள்களையும் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கக்கொண்டு வருதலும் கொண்டு போதலும் ஆகும். போக்குவரத்தின் தோற்றத்தை ஆராய்ந்தால் அதன் வளர்ச்சியானது புதுமைமிக்கதாகும். தலையில் அல்லது தோளில் பொருட்களை சுமந்து செல்லுதல், இழுத்துச் செல்லுதல், மிருகங்களின் மீது ஏற்றிச் செல்லுதல், நீரில் அடித்துக்கொண்டு போகச் செய்தல் போன்று ஆரம்பகாலத்தில் அமைந்த போக்குவரத்து முறைமை படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்று விண்வெளியை வெற்றிகொள்ளும் றொக்கற் போன்ற முறைகள் வரை முன்னேற்றம் கண்டுள்ளன.

இது போக்குவரத்து முறை வளர்ச்சியின் இறுதிக்கட்டமாகாது. எதிர்காலத்தில் அதற்கு அப்பாலும் விரிவடையும் என்பதில் ஐயமில்லை.

போக்குவரத்து வணிகக் கருமங்களுக்கு மட்டுமன்றி பொதுவாக முழு சமூகத்திற்கும் அத்தியவசியமான சேவை ஆகும். இன்று அது அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாகிவிட்டது. முழு உலகையும் தொடர்புபடுத்தும் முறையாகப் போக்குவரத்தைக் கருத முடியும். வணிக நிறுவனங்களுக்கும், தனிநபர்களுக்கும் அவரக்ளுடைய தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யும் துணைச்சேவையாக போக்குவரத்து முக்கிய பங்காற்றி வருகிறது. சந்தை தானாகவே விரிவடைந்து செல்வதற்குப் போக்குவரத்து உதவி வருகிறது. உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உற்பத்தி செய்யும் பொருட்களை நுகர்வதற்கு வாய்ப்புக்களை போக்குவரத்து உருவாகியுள்ளது. ஊழியர்களும் ஏனைய தனிநபர்களும் வணிகக் கருமங்களுடன் தொடர்புபடுவதற்கான ஆற்றலை போக்குவரத்து ஏற்படுத்தியுள்ளது. முழு உலகிலும் ச்நதைக் கருமங்களைத் தொடர்புபடுத்தவும், சந்தை துரிதமாக விரிவடையவும் போக்குவரத்து அவசிய மாகிறது.

இலங்கையில் போக்குவரத்து வலையமைப்புக்குள் தெருப் போக்குவரத்து மிகவும் முக்கியமானது இந்நாட்டுச் சனத்தொகையில் 65% அளவுக்கு கிராமப் பிரதேசங்களில் வாழ்வதற்கு இதுவே காரணமாகும். மொத்தப் போக்குவரத்துச் சாதனங்களில் 70% அளவானவை தேசிய தெருப்போக்குவரத்து வலையமைப்புக் குள்ளே போக்குவரத்துச் செய்கின்றன. நாட்டில் அதிகரிக்கும் பயணிகள், பண்டப போக்குவரத்துக்கான கேள்விக்குப் போதுமான அளவுக்கு தெருப் போக்கு வரத்து விருத்தியடையவில்லை. நாளுக்கு நாள் அதிகரித்துவரும் போக்குவரத துக்கான கேள்விக்கும், அதிகரிக்கும் போக்குவரத்து சாதனங்களின் எண்ணிக் கைக்கும் பொருத்தமான அளவுக்கு புதிய பாதை அமைப்புக்களும் உள்ள பாதை களின் விரிவாக்கங்களும் நடைபெறு வதில்லை. கடந்த சில தசாப்தங்களுக்குள் புதிய பாதைகள் அமைக்கப்படாமல் பழைய பாதைகளில் ஓரளவு திருத்தங்கள் மட்டுமே இடம்பெற்றுள்ளன. இதனால் தூரப் பிரயாணம் செய்யும் வாகனங்கள் ஊக்கமிழந்தன. நாட்டின் பொருளாதாரக் கருமங்களின் விரிவாக்கம் தடைப்பட்டு நின்றன. கொழும்பு நகரை அண்மிய பெருந்தெருக்கள் சில மட்டுமே குறிப்பிட்ட அளவுக்கு அபிவிருத்தி செய்யப்படுகின்றன.

அரச உரிமையாக நடை பெற்றவரும் பயணிகள் போக்குவரத்துச் சேவையை விரிவாக்கும் எண்ணத்துடன் 2005 ஆம் ஆண்டு இலங்கை மத்திய போக்குவரத்துச் சபை மீளமைக்கப்பட்டது. அதுவரை பிரதேச ரீதியாக நடைபெற்று வந்த பஸ் போக்குவரத்து சேவை எல்லாம் மத்திய போக்குவரத்து சபையின் கீழ் கொண்டுவரப்பட்டன. பயணிகள் பஸ் வண்டிச் சேவை செயற்திறன் அற்றதாகக் காணப்படுவதற்கு போக்குவரத்துக்கு தகுதியான பஸ் வண்டிகளின் எண்ணிக்கை

குறைவாகக் காணப்படுதல், விபத்துக்களின் எண்ணிக்கை அதிகமாக இருத்தல், தொழிற்சங்கங்களின் அநாவசிய தலையீடு போன்றவற்றைக் குறிப்பிட முடியும். பயணிகள் பஸ்வண்டிப் போக்குவரத்தில் 60% அளவுக்கு தனியார்துறை பூர்த்தி செய்கிறது. 70000 அளவான குடும்பங்கள் நேரடியாக பஸ் சேவை மூலம் வாழ்கின்றனர் எனவும் 30000 குடும்பங்களின் வாழ்க்கை மறைமுகமாக பஸ்சேவையில் தங்கியிருப்பதாகவும் புள்ளி விபரங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

இலங்கைப் பயணிகள் போக்குவரத்து தொடர்பிலும் பண்டப் போக்குவரத்து தொடர்பிலும் இலங்கைப் புகையிரத சேவை 1928 வரை முக்கிய பங்காற்றியுள்ளது. ஆனால் இப்போது புகையிரதப் போக்குவரத்தின் பங்களிப்பு மிகக் குறைந்த மட்டத்தை அடைந்துள்ளது. முழுப் பயணிகள் சேவையில் 8% அளவுக்கும் முழுப் பண்டப் போக்குவரத்தில் 5% அளவுக்கும் மட்டுமே புகையிரதப் போக்குவரத்தின் பங்களிப்புக் காணப்படுகிறது. இத்தகைய வீழ்ச்சிக்குப் பிரதான காரணம் தரைப்போக்குவரத்தின் போட்டியாகும்.

இப்போது இலங்கையில் புகையிரதப் பாதை கரையோரப் புகையிரதப் பாதை, மலை நாட்டுப் புகையிரதப் பாதை, வடமத்திய புகையிரதப் பாதை என வரையறுக்கப்பட்ட சில பிரதேசங்கள் வரை மட்டும் விரிந்து காணப்படுகிறது. அந்த வரையறுத்த பிரதேசங்களுக்கான சேவைகளை நடாத்துதல் கூட பிரச்சனைகள் நிறைந்ததாக காணப்படுகிறது. உயர்தரத்திலான புகையிரத சேவை காணப்படவில்லை. நிதி அடிப்படையிலும் இலங்கைப் புகையிரத சேவை பல பிரச்சனைகளை எதிர்நோக்கியுள்ளது.

இலங்கையின் புகையிரத சேவையின் குறைபாடுகளுக்கு புகையிரதக் கட்டணத்தை அதிகரிப்பதற்கான வரையறைகள் அடிக்கடி நிகழும் ஊழியர் பிணக்கு, SLR முகாமைத்துவத்தில் காணப்படும் குறைபாடு போன்றன காரணங்களாகின்றன. இக் காரணங்களினால் புகையிரத சேவை பெரு நட்டத்தில் நடாத்தப்படுகிறதென்பதை அறிய முடிகிறது. SLR அரச நிதி ஒதுக்கீட்டில் பெருமளவுக்குத் தங்கியிருக்க வேண்டியுள்ளது. ஆனாலும் குறைபாடுகளை நீக்கி நல்ல புகையிரத சேவையை வழங்கும் நோக்குடன் ஞடுசு சேவை 2005 இல் மறுசீரமைக்கக்பட்டது. அந்த வருடத்தில் SLR சேவை தொடர்பில் உபாயத்திட்டங்களும் முன்வைக்கப்பட்டன. அதன் மூலமாக கிரயக்கணக்கீடு, ஆதனமுகாமை, சந்தைப்படுத்தல் என்பவை தொடர்பில் உபாயமுறைகள் உருவாக்கப்பட்டன. அரசின் கட்டுப்பாட்டிலிருந்தும், நிதி ஒதுக்கீட்டிலிருந்தும் விலகிய வணிகமயமாக்கப்பட்ட நிறுவனமாக புகையிரத சேவை இயங்கவதற்குரிய முறையில் அதன் செயற்பாட்டை மாற்ற வேண்டியுள்ளது.

சி.அபிவர்ணா
தரம் : 12C



# கைத்தொலைபேசி தொழில்நுட்பங்கள் (Mobile Technology)

திரு ச. சசிஸ்குமார்
ஆசிரியர்,
யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி

இலக்கியத்தில் அன்னத்தை தூது அனுப்பியதாக சொல்லப்படுகிறது, வரலாறு புறாவை தூது அனுப்பியதாக சொல்கிறது. இவ்வாறு அஞ்சல் சேவை எப்போ ஆரம்பிக்கப்பட்டதோ அக்காலப்பகுதியில் இருந்தே நவீன தகவல்தொடர்பு சாதனத்துக்கான தேடல் ஆரம்பிக்கப்பட்டது. அந்த வகையில் "மிஸ்டர் வாட்சன், இங்கே வாருங்கள், உங்களுடைய உதவி எனக்கு தேவை" ("Mr.Watson, come here I want to your help") என்று தன் உதவியாளருடன் முதல் உரையாடலை நிகழ்த்தி தொலைத்தொடர்பு புரட்சிக்கு வித்திட்டார் அமெரிக்காவைச் சேர்ந்த அலெக்ஸாண்டர் கிரகம் பெல். இது 1876 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 10 ஆந் திகதி இடம்பெற்றது.

கடந்த 135 ஆண்டுகளில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தில் பல்வேறு திருப்பமுனைகள் ஏற்பட்டுள்ளன. நாகரிக வாழ்க்கையின் நடைமுறைத்தேவைகள் ஒருபுறம் உந்தித் தள்ள, மனிதனின் புத்திக் கூர்மையும் ஆராய்ச்சி மனப்பாங்கும் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தில் புதிய புதிய பரிமாணங்களைத் தோற்றுவித்தன.

தற்போது வேலைக்கு செல்லும் போதும், துவிச்சக்கரவண்டி, உந்துருளி, பேருந்து போன்றவற்றில் பயணிக்கும் போதும் கைத்தொலைபேசியை கூடவே எடுத்துச் செல்கிறோம். பயணங்களின் போது உறவினருடனோ அல்லது நாம் வேலை செய்யும் அலுவலகத்துடனோ தொடர்பு கொண்டு நமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதாகவுள்ளது. தற்கால செல்பேசியில் கேமரா பொருத்தப்பட்டள்ளது. இதன் மூலம் நாம் செல்லுமிடங்களில் உள்ள நல்ல காட்சிகளைப் படம் பிடிக்கலாம் அதனை நண்பர்களின் செல்பேசிக்கு அனுப்பக் கூடிய வசதிகள், செல்பேசியில் இருந்தே இணையத்தை தொடர்பு கொண்டு நமக்கு வந்துள்ள மின்னஞ்சல்களைப் பார்வையிடக்கூடிய வசதி போன்ற இன்னும் பல நம்பமுடியாத விந்தைகளை நிகழ்த்த இருக்கும் செல்பேசித் தொழில்நுட்பம் பல படிமுறை வளர்ச்சிகளைக் கடந்துவந்துள்ளது.

கணனியின் தொழில்நுட்ப வளர்ச்சியினை பல்வேறு தலைமுறைகளாக வகைப்படுத்தியது போல செல்பேசி தொழில்நுட்ப வளர்சியினையும் பல்வேறு தலைமுறைகளாக வகைப்படுத்தியுள்ளனர். அதாவது இலக்கத்துடன் தலைமுறை (Gneration) என்பதில் உள்ள "G" இனை இணைத்து 1G, 2G, 3G, 4G என தொழில்நுட்பங்களை வகைப்படுத்தியுள்ளனர்.

உங்கள் செல்பேசியில் இருந்து இன்னொரு நபரின் செல்பேசியுடன் எவ்வாறு தொடர்பு ஏற்படுத்தப்படுகிறது? உங்கள் செல்பேசியானது அருகில் உள்ள தொலைத்தொடர்பு கோபுரத்துடன் தொடர்பு கொண்டு அதனூடாக குறித்த வலையமைப்புடன் இணைகின்றது (உதாரணமாக Dialog, Mobitel, Airtel போன்றன) அதன் பின்னர் குறித்த அவ்வலையமைப்பு நீங்கள் அழைத்த நபரின் செல்பேசி எந்த தொலைத்தொடர்பு கோபுரத்திற்கு அருகாமையில் உள்ளது என்பதை அறிந்து அதனுடன் தொடர்பினை ஏற்படுத்துகின்றது. தொ.தொ. கோபுரத்தின் உயரத்திற்கு ஏற்ப அது தொடர்பு ஏற்படுத்தக்கூடிய பரப்பளவு அதிகரிக்கும். இப்போது புரிகிறதா உங்கள் பகுதியில் ஏன் Coverage குறைவாக இருக்கின்றது என்பது. இவ்வாறு ஒரு குறித்த வலையமைப்பானது தனது ஒவ்வொரு தொலைத்தொடர்பு கோபுரத்துக்கிடையிலும் செல்பேசிகளுக்கிடையிலும் தகவல்களைப் பரிமாறுவதற்கு வெவ்வேறு வகையான தொழில்நுட்பங்களைக் கையாளுகின்றன (உதாரணமாக CDMA, GSM போன்றன). இத்தகைய தொழில்நுட்பங்களைத்தான் பல்வேறு தலைமுறைகளாக வகைப்படுத்திப் பார்க்கப்போகிறோம்.

## முதல் தலைமுறை First Generation (1G)

இத் தொழில்நுட்பத்திற் முன்னய தொழில்நுட்பங்களான 0G, 0.5G தொழில்நுட்பங்களைப் பற்றி சற்று ஆராய்வோம்.

**0 G** தொழில்நுட்பம்.

இரண்டாம் உலகப்போர் காலத்தில் படைத்தளபதிகளுடன் தொடர்புகொள்வதற்கு ரேடியோ ∴போன்களை பயன்படுத்தினார்களே அந்தவகையான ரேடியோ ∴ போன்களில் பயன்படுத்திய தொழில்நுட்பத்தினை "0G" என அழைக்கப்படும். அக்கால நடமாடும் தொலைபேசிகள் வாகனங்களில் பொருத்தப்பட்டிருக்கும். அதாவது Transmitter உம் receiver உம் இணைந்த Trans-receiver வாகனத்தின் பின்பகுதியில் இணைக்கப்பட்டிருக்கும். அதனுடன் இணைந்த கேடகும்/பேசும் கருவி ஓட்டுனரின் ஆசனத்திற்கருகில் காணப்படும்.

**0.5G** தொழில்நுட்பம்.

இந்த தலைமுறையில் இரண்டு வகையான ரேடியோ ∴போன்கள் பணன்படுத்தப்பட்டன.

1. **Autotel:**

இத்தொலைபேசி PALM (Public Automated Land Mobile) எனவும் அழைக்கப்பட்டது. இதில் தகவல்களை அனுப்ப பெற 35 Watts உயர்சக்தி கொண்ட Analog signal (VHF- Very High Frequency அலைவரிசை) பயன்படுத்தப்பட்டது.

## 2. Auto Radio Phone (ARP)

இது ஃபின்லாந்தில் 1971 ஆம் ஆண்டு வணிகரீதியில் அறிமுகப்படுத்தப்பட்ட முதலாவது நடமாடும் வலையமைப்பாகும். இத்தொழில்நுட்பமும் Analog signal ஐ பயன்படுத்தியதோடு 150 MHZ அலைவரிசையில் 1 watts முதல் 5 Watts வரையான மின்சக்தியுடன் இயங்கியது. முதலில் இது ஒருவழித் தொடர்பாடலையே கொண்டிருந்தது. அதாவது ஒருவர் பேசி முடித்தபின்னர்தான் மற்றவர் பேசமுடியும். (Walkie talkie போன்றது) பின்னர் இருவழித்தொடர்பாடலை மெற்கொள்ளக் கூடியதாக இருந்தது. இவ்வலையமைப்பில் புவிப்பரப்பானது ஒவ்வொரு சிறு பகுதிகளாக (அண்ணளவாக 30 km சுற்றளவு) பிரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு சிறு பரப்பையும் செல் (Cell) என அழைக்கப்படும். ஒரு செல்லில் இருந்து இன்னொரு செல்லுக்கு நுழையும் போது அழைப்புக்கள் துண்டிக்கப்படும். இத ஒரு குறைபாடாக காணப்பட்டது.

## முதலாம் தலைமுறை (First Generation - 1G):

இந்தவகை தொழில்நுட்பத்தின் ஊடாகத்தான் முதன் முதலில் உலகில் இருக்கும் அனைத்து கைத்தொலைபேசிகளையும் இணைக்க முடிந்தது. இது 1980 களில் அறிமுகம் செய்யப்பட்டது. இவை Analog சமிஞ்ஞைகளையே பயன்படுத்தியதோடு குறைந்தளவான மின்சக்தியில் இயங்கியது. மேலும் இந்த தொழில்நுட்பத்தின் படி நாம் செல்போன் வழியாக பேச மட்டும்தான் முடியும். SMS (குறுஞ்செய்தி) போன்ற சேவைகள் இந்த தொழில்நுட்பத்தில் கிடையாது இத்தொழில் நுட்பத்தில் ஒரே அலைவரிசையில் ஒரு நேரத்தில் ஒருவர் மட்டும் தான் தொடர்பை ஏற்படுத்த முடியும். மேலும் இவை முழுஇருவழித் தகவல் பரிமாற்றத்தினைக் கொண்டமைந்திருந்தது. அதாவது ஒரே நேரத்தில் இருவரும் பேச அல்லது கேட்க முடியும்.

## இரண்டாம் தலைமுறை (Second Generation - 2G)

இது 1990 களின் ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தொழில்நுட்பமாகும். இங்கு எண்ணியல் (Digital) சமிஞ்ஞைகள் மூலம் தொடர்பாடல்கள் மேற்கொள்ளப்படுகிறது. இதுவே 1G இற்கும் 2G இற்குமான பிரதான வேறுபாடு. இதனால் இங்கு குரலின் தரம் சிறந்ததாக அமைவதோடு ஒரே அலைவரிசையில் ஒரு நேரத்தில் பலர் தொடர்புகளை மேற்கொள்ள முடியம். ஆனால் இதன்

மூலம் குரல் வழி அழைப்புகளை மாத்தரமே மேற்கொள்ள முடியும். Digital Data களை (மின்னஞ்சல், ஏனைய மென்பொருட்கள் சார்ந்தவை) இதனூடாக கையாள முடியாது.

தொலைபேசியில் தொலைத்தொடர்பு கோபுரங்களை இணைப்பதற்கு GSM (Global System for mobile Commun cations) CDMA எனும் இருவகையான தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தொலைத்தொடர்பு நிறுவனங்கள் தமது வலையமைப்புக்களை மேற்கொண்டன. இதில் GSM உடன் ஒப்பிடுகையில் CDMA சிறப்பான தொழில்நுட்பத்தின் அடிப்படையில் இயங்குவது என்றாலும் GSM System இனைதான் அதிகமான நிறுவனங்கள் பயன்படுத்துகின்றன. இத்தகைய தொழில்நுட்பத்தின் மூலம் தொலைபேசியில் பேசுவது மட்டுமன்றி குறுஞ்செய்தி (sms) பேசுபவர்கள் தொலைபேசி எண் (Caller ld), செய்திகளை சேமித்து வைத்தல், ஒரே அலைவரிசையில் பலர்அழைப்புக்களை மேற்கொள்ளல் போன்ற சேவைகளையும் பெற்றுக்கொள்ள முடியும்.

2G இலிருந்து 3G இற்கு மாறுகின்ற இடைநிலைக்கட்டத்தில் இரண்டு படிநிலைகளைக் கொண்டது. அவற்றை 2.5G, 2.75G என வகைப்படுத்தலாம்.

## 2.5G தொழில்நுட்பம்.

இத் தொழில்நுட்பத்தில் முக்கியமாக கருதப்படுவது யாதெனில் தகவல்பரிமாற்ற முறையாகும். அதாவது 2G இல் சுற்றுகைதொடர்பாக்க முறைமை (Circuit Switching) பயன்படுத்தப்பட்டது. 3G இல் தகவல் பெட்டக தொடர்பாக்க முறைமை (Packeting Switching) பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட 2.5G இல் இந்த இரண்டு முறைமையும் பயன்படுத்தப்படுகிறது. இந்த பெட்டக தொடர்பாக்க முறைமையினூடாகத்தான் கைத்தொலைபேசியின் வழியாக இணையம் (E-mail, internet) சேவைகளைப் பெறக் கூடியதாகவுள்ளது. இத்தகைய சேவையினைப் பெற்றுக்கொள்வதற்கு இரண்டு வகையான தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

1. GPRS (General Packet Radio System)
2. HSCSD ( High Speed Circuit Switched Data)

## 2.75G தொழில்நுட்பம்.

**GSM** Network களை 3G தலைமுறைக்கு இட்டுச்செல்வதற்கு முன்னோடியாக அமைந்த தொழில்நுட்பமாக விளங்குவது EDGE (Enhance Data rate for Global Evolution) தொழில்நுட்பமாகும். இத்தொழில்நுட்பத்தினையே 2.75G என அழைக்கப்படுகின்றது. இருக்கும் Network இல் எவ்வித மேம்மாடும் செய்யாமலே இத்தொழில்நுட்பத்தினைப் செயல்படுத்த முடியும் என்பதே இதன் சிறப்பம்சமாகும். 3G தொழில்நுட்பமான UMTS இற்கு நேரடியாக மாறமுடியாத Mobiie Phone சேவையாளர்களுக்கு EDGE தொழில்நுட்பம் ஒரு சிறந்த மாற்றீடாகும். EDGE

தொழில்நுட்பமானது GPRS இன் சேவையின் அதிவேக வடிவமெனபதால் இதனை EGPRS (Enhance GPRS) எனவும் அழைப்பர். GPRS இல் பெறப்படும் அனைத்து சேவைகளும் அதிவேகத்தில EDGE இல் கிடைக்கும். மேலும் GPRS இல் இல்லாத Video மற்றும் Multimedia பயன்பாடுகளுக்கு EDGE உகந்தது.

## Third Generation (3G) மூன்றாம் தலைமுறை வலையமைப்பு

2.5G, 2.75G தொழில்நுட்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட தகவல் பெட்டகம் (Data Packet) கட்டமைப்பின் வேகம் வீடியோ மற்றும் அகன்ற அலைவரிசை (Broad band) போதுமானதாக இல்லை மேலும் இணையவசதிகளை 2G இல் பெறுவதற்கு நீங்கள் ஒரே இடத்தில் இருக்கவேண்டும். வாகனங்களில் பயணம் செய்துகொண்டு இணைய வசதியினை பெறுவது கடினம் எனவே இவற்றினை நிவர்த்தி செய்வதற்காக 1992 இல் சர்வதேச தொலைத்தொடர்பு கூட்டமைப்பானது (International Telecom Union - ITU) International Mobile Telecommunication – 2000 (IMT-2000) எனும் Mobile Network களுக்கான ஒரு பொதுவான தரப்பாட்டினை (Standard) உருவாக்கியது. அதன்படி தகவல் பரிமாற்ற வேகத்தைப் பொறுத்தவரை IMT-2000 வகுத்துள்ள வரையறைகளாவன.

1. வாகனத்தில் பயணிக்கும் போது வேகம் 144 Kbps.
2. நடந்து செல்லும் போது வேகம் 384 Kbps.
3. வீட்டுக்குள் இருக்கும் போது வேகம் 2 Mbps.

2G, 25G சேவைகளை பெறப்படும் போது 3G சேவையானது குரலொலி மற்றும் தரவு சேவைகள் இரண்டையும் ஒரே நேரத்தில், உயர்ந்த தரவு பரிமாற்ற விகிதத்தில் கையாள அனுமதிக்கிறது.

(HSPA), (UMTS), (HSDPA), (WCDMA), (EDGE), (EGPRS) ஆகிய தொழில்நுட்பங்கள் 3G இற்கென ஒதுக்கப்பட்டுள்ளது.

## Fourth Generation Network 4ம் தலைமுறை வலையமைப்பு

நான்காவது தலைமுறை கட்டமைப்பு தொழில்நுட்பத்தின் முக்கிய காரணிகளாவன

- அதிவேக அகன்ற அலைவரிசை சேவை (High Speed mobile Broadband)
- குரல் (Voice) மற்றும் தரவு (eafa) இரண்டுக்கும் ஒரே கட்டமைப்பு

### 1. அதிவே அகன்ற அலைவரிசை

G தொழில்நுட்பத்தால் 100MB/S இற்கும் அதிகமாக வேகமுள்ள அகன்ற அலைவரிசை சேவையை அளிக்க இயலும் இந்த அதிவேக அலைவரிசையினால் கிடைக்கும் சில சேவைகளாவன.

- Mobile TV சேவை வழியாக நாம் எங்கிருந்தாலும் நம்முடைய TV Channel ஐ செல்பேரியில் பார்க்பமுடியும்.
- அதிக வரையறை (High Definition / Highuality) வீடியோக்களை அதிவேகத்தில் செல்பேசியில் பார்க்க இயலும்
- Live Streamlng முறையில் செல்பேசி வழியாக ஒரு நிகழ்ச்சிளை நேரலையாக உலகத்தின் எந்த மூலையிலும் இருக்கும் உறவானவர்கள், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளமுடியும்.
- Video Calling - இதன் மூலமாக நாம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டே பேசமுடியும்.


## 2. கட்டமைப்பு

2G, 3G தொழில்நுட்பத்தில் நாம் பேசும் பேச்சுக்களை (Voice) கடத்தி செல்வதற்கு சுற்றமைப்பு விசைமாற்றி (Cirlait Switching) என்ற தன் கட்டமைப்பும் இணைய சேவையை வழங்க தகவல் பெட்டக விசைமாற்றி (Paeket Switching) என்ற தனி கட்டமைப்பும் தனித் தனியாகவுள்ளது. ஆனால் 4G தொழில்நுட்பத்தில் இரண்டிற்கும் சேர்த்து ஒரே கட்டமைப்புதான் அதாவது 2G/3G கட்டமைப்பில் ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு நாம் பேசுவது ஒருபாதை வழியாகவும், இணைய சேவைகள் இன்னொரு காதைவழியாகவும் நம் செல்பேசியை வருகின்றது. ஆனால் 4G இல் இரண்டும் Volie vi pip என்ற தொழில்நுட்பத்தின் வழியாக தகவல் பெட்டக (Packet) முறையில் கடத்திச் செல்லப்படுகின்றது.

குரல் மற்றும் தரவு (eata) இரண்டிற்கும் ஒரே கட்டமைப்பு என்பதனால் 4G கட்டமைப்பை நிருவ ஏற்படும் செலவு குறைவு.

**மனித வாழ்வின் முக்கிய நிகழ்ச்சிகளில் திருமணமே தலை சிறந்தது. இதில் பிறருக்குத் தலை நீட்ட இடமே கிடையாது. ஆனால், மணமக்களைச் சிறிதும் கலந்து கொள்ள விடாதபடி பிறர் தலை கொடுக்கும் (முன்நின்று நடத்தும்) நிகழ்ச்சி திருமணந்தான்.**

**– ஷெல்டன்**



# PARTS OF SPEECH

**Mr.S.Suresh**
Teacher
J/Chavakachcheri Hindu College

Speech is the language it is spoken. Speech consists of words. Each word has a distinctive class of kind. Most of the words can be used under the heading of different classes in different sentences or in difference parts of the same sentence, depending upon the sense it is wanted to convey through them. Thus the speech can be divided in eight distinctive parts which are called

PARTS OF SPEECH.

1. Noun
2. Pronoun
3. Verb
4. Adjective
5. Adverb
6. Preposition
7. Conjunction
8. Interjection

1. A NOUN is a word which is used as the name of a person, place or thing,

Eg : Mohan is a good boy
I have many books
Delhi is the capital of India
The ganga is a chief river of India
Honesty is the best policy
Childhood is the age of innocence
Gold is a precious metal.

2. A PRONOUN is a word which is used in place of a Noun,

Eg : Mohan could not attend the meeting because he was not feel ing well.

My name is Sohan and I have come to see you.

Two boys were punished because they tried to create indisci pline the class.

3. An ADJECTIVE is a word which defines a Noun or a Pronoun,

Eg : Kaul is a brilliant boy.

He is very wise

This book is mine

There are forty students in this class.

4. A VERB is a doing word. It tells us what a Noun or a Pronoun is doing or has done,

Eg : He is an obedient boy

She knows how to write a letter

You have worked very hard for the examination

She song a beautiful song

I will never betray my country.

5. An ADVERB is a word which defines as Adjective, a Verb or another Adverb,

Eg : Kehar runs fast

His colour is very dark

She rushed quickly to words the train

Lovely took the matter very lightly

She returned home quite happily.

6. A PREPOSITION indicates the relationship of a Noun or a Pronoun with the remaining part of the sentence:

Do not laugh at the poor.

We sat in the shade of the tree

We should abide by the laws of the country

Sheila is given to telling lies

The students should listen to their teachers

The cat jumped upon the table

This road leads to Delhi

He was charged with murder


Kalyani has been relieved of the post
His services have been dispensed with
The child fell into the well
The green grass spreads over the ground


7. A CONJUNCTION is a word which joins two words, phrases, Clauses or Sentences,

Eg : Mohan and Sohan are real brothers
I have seen him but I do not know where he lives
He made a mischief, therefore, he was punished.


8. An INTERJECTION is a word which is used to express sudden outburst of some strong feeling or emotion such as joy, sorrow, regret, surprise, contempt etc,

Eg : Hurrah! We have won the match
Bravo! Well done
Alas! She is no more
Ah! He has lost everything in gambling
Good Heavens! What sight!





வர்த்தக மன்ற ஏற்பாட்டில் தேசத்தின் மகுடம் கண்காட்சியின் போதான சுற்றுலாப் புகைப்படங்கள். (தரம் 12C மாணவர்கள்)




வர்த்தக மன்ற ஏற்பாட்டில் மடு.திருக்கேதீச்சரத்திற்கான
சுற்றுலாப் புகைப்படங்கள்.
(தரம் 13C மாணவர்கள்)

# சுற்றுலா நினைவலைகள்



அலை கடந்த பின்னும் ஈரம் போல
என் சுற்றுலா நினைவுகள் என்னைக் குளிர்த்துகிறது
தவம் செய்தேனா இக் களப்பயணம் செல்ல
தென்மராட்சித் தோட்டத்திலே
செழிப்புற்ற என் இந்து அன்னையின் மகன் கொடுத்த
பேருந்து வண்டியில் அநுராதபுரத்தின் ஒயாமடு
பிரதேசத்தின் தேசத்திற்கு மகுடம் தெயட்ட கிருள 6வது என்ற கண்காட்சியைப்
பார்த்து
பிரமித்துப் போனேன்.
என் வாழ்வில் என்றும் கண்டிராத கண்காட்சி
என் தந்தை போல அறிவுரைகளை வழங்கிய ஆசிரியர்களும்
அன்புடன் அரவணைத்த ஆசிரியைகளும்
என் அன்புச் சகோதரர்களுடனும் சேர்த்து சகோதரத்துவத்தை வலுவாக்கி
இரண்டு நாட்கள் என் குடும்பத்துடன் ஒன்றாக சங்கமித்து
நண்பர்களுடன் கூச்சலிட்ட நினைவுகள் - என்
வாழ்வில் அழியாத கல்வெட்டுக்களாகும்
நண்பர்களது அளவற்ற அன்போடும்
ஆசிரியர்களது எல்லையற்ற அக்கறையோடு
ஒரே சிரட்டையில் ஒன்றாக உணவுண்டு
மனத் திருப்தியோடு புத்தரை வழிபட்டு
நண்பர்களோடு நள்ளிரவில் கூச்சலிட்ட
இந் நிலைவலைகள்
ஒன்றா? இரண்டா முடியவில்லையே என்ன
பட்டறிந்த பாடறிந்த அந்த இனிய நாட்கள்
என் வாழ்க்கைச் சுவடுகளாய்



என் நெஞ்சோரம்

நான் மிகிந்தலையில் படியேறிய அந்நாள் இன்னும் மறையவில்லை

என் தொலைதூர வாழ்விற்கு ஓர் அத்திவாரமாய்

இந் நினைவலைகள் என் நிஜ அலைகள்

விஜயரத்தினம் சேர் கொண்டு வந்த நுளம்பு வலையும்

Driver அண்ணா தெரிவு செய்து வழங்கிய

பாடல்களும் என்னை மிகவும் கவர்ந்தது

இந் நினைவலைகள் என் நெஞ்சில் கலப்புற்ற

கல்விச் சாலை தந்த அளப்பரிய அனுபவங்கள்

நிஜமாக்கத் துடிக்கிறேன் இன்னொரு முறை சுற்றுலா செல்ல

கேட்டுப்பார் விண்மீனை என் கதையைச் சொல்லும்

என்னை அன்புடன் கவனித்த ஆசிரியர்க்கு

நன்றி என்று முன்றெழுத்தில் கூறினால் முடிவடைந்து விடாது

அதற்கு ஈடு இந்த பூமியா? வானமா? கூற என்றால் முடியவில்லை

இத்தனை நன்றிகளும் எம் ஆசிரியர்களுக்காகவே பிறந்தனவா?

இவர்கள் அன்புக்கு அகராதி ஏன் அரிச்சுவடியும் கூட இல்லை

என் நினைவலைகளை இத்தோடு முடித்துக் கொள்கிறேன்

என் மனதை விட்டல்ல இக்காகிதத்தை விட்டு.

சி.கஜானி
தரம் : **12C**

மிகக் கழனமானவை மூன்றுண்டு,

- இரகசியத்தைக் காப்பது
- இழைக்கப்பட்ட தீங்கை மறப்பது
- ஓய்வு நேரத்தை உயர்ந்த வழியில் பயன்படுத்துவது.

– ஜே.பி.பால்மர்

# மனதோடு மன்னார்



கல்லூரி வாழ்க்கையைப்
பிரிந்து போகின்ற
கடைசித் தருணத்திலே
கல்லூரி சிட்டுக்கள் நாம்
கனவுகளோடு காத்திருந்த
பயணம் நனவாகியது
கனவை நனவாக்கிய
கல்லூரி முதல்வர்க்கும்
வழிகாட்டிய ஆசிரியர்களுக்கும்
உதவிக் கரம் நீட்டிய
வகுப்பாசிரியரின்
தம்பிக்கும் ஏனையோர்க்கும்
நன்றிகள் பல்கோடி
சிவப்பு வண்ணம் பூசி
கிழக்கு வானிலே
கதிரவன் உதயமாகக்
கலகலப்பாய் புறப்பட்டோம்
காத்திருப்பு நிறைவேறிய
சந்தோசத்தில் நாம்
ஆச்சரியம் ஊட்டிய
சங்குப்பிட்டி பாலம் வழியே
தொடர்ந்தது நம் பயணம்
மன்னாரை நோக்கி
காட்டுவழி நெடுந்தூரம்
கலகலப்பாய் எம்பயணம்
பாவங்கள் நீக்கிடும் பாலாவிக்
கரையினில்
பகற்பொழுது கழிந்தது
அமைதியான மாதோட்ட
நன்னகரில் அருள்புரியும்
கேதீச்சரநாதன் தாள்
பணிந்தோம், அவன்
அருள் வேண்டினோம்
மடுமாதா அருள்வேண்டி
தொடர்ந்தோம் பயணம்
வழியிலே தோகை விரித்தாடும்
மயிலைக் கண்டோம்
பெருமை கொண்ட
பெருக்க மரம் கண்டோம்
மாலையிலே
மடுமாதா தரிசனம்
மனதை நிறைத்தது
பொழுது சாயும் நேரம்
மறக்க முடியாத
மன்னாரை விட்டு
புறப்பட்டோம் நாம்
தாண்டிக்குளம்
தாண்டிப் போகையிலே
அரைச்சாமம் தாண்டியது
முறுகண்டி பிள்ளையாரில்
சில நிமிடங்கள் கரைந்தது
இராப்பொழுதிலும்
கலகலப்பாய் எம்பயணம்
நண்பர்களின் ஆட்டமும்
ஒலித்த பாடலும்
தூக்கத்தை கலைக்க
களைப்பு மறந்து
கலகலப்பாய் நாம்
கல்லூரி வாழ்க்கையில்
நண்பர்களோடு கூடி
மகிழ்ந்த எம் பயணம்
ஊருறங்கும் சாமத்தில்
முடிந்து போயிற்று
எனினும் நினைவுகள்
என்றும் அழியாது



வே.வானதி
தரம் 12C

# வணிகத்தின் பரிணாம வளர்ச்சி



இடத்துக்கிடம் புலம் பெயர்ந்த மனிதர் கூட்டம்
இருப்பிடத்தை நிலையாய் ஓர் இடத்தில் ஆக்கி
திடமாக வாழ்க்கையிலே தமது வாழ்வுத்
தேவைகளைப் பூர்த்தி செய்யப் பயிர் விளைத்தார்

தற்தேவைப் பூர்த்திக்காய் பொருட்கள் மற்றும்
சார்கின்ற சேவைகளைத் தாமேயாக
உற்பத்தி செய்வதனை வணிகக் கல்வி
உரைக்கும் நேர் உற்பத்தி என்ற வாறே

தனிநபருக்குண்டான சிறப்புத் தேர்ச்சி
தானே மிகை உற்பத்திக்கேதுவாமே
நனிவிளைந்த பொருட்களினைப் பிறர்க்குத் தந்து
நாடும் பிற பொருள் கொளலே பண்ட மாற்றாம்

பண்டமாற் றென்கின்ற செயற்பாட் டாலே
பற்பல வாய்ப் பிரச்சினைகள் எழுதல் கண்டார்
பண்டத்தின் பெறுமதியின் வேறு பாட்டால்
பண்டத்தை மாற்றுவதில் குறைகள் கண்டார்

எண்ணுதலில் எடுத்தலிலே பதம் கண்டார்
இவற்றிற்கு நிரந்தரமாய்த் தக்க தீர்வு
பண்ணுவதாய் பணப்பயன்பா டமைத்தார், அஃது
பரிமாற்று டகமென்றறி முகமும் ஆச்சே

செப்புகின்ற பணத்தினது பயன்பா டாமே
தேசத்தில் வியாபார வளர்ச்சிக் கென்றும்
ஆளப்பரிய பயனுடைய தாயிற் றென்று
உரைப்பதனை எல்லோரும் உணரலாமே

கைத்தொழிலில் உண்டான புரட்சி யஃதின்
காரணத்தால் குடிசைக்கைத் தொழில்கள் எல்லாம்
மெத்தப்பெரும் ஆலைக்கைத் தொழில்கள் ஆகி
மிகப் பெரிதாய் உற்பத்தி விளைத்த தாமே

## உயர்தர வர்த்தக மாணவர்கள் -12 (2012)



## உயர்தர வர்த்தக மாணவர்கள்-13 (2012)



# உயர்தர வர்த்தக மாணவர் மன்ற செயற்குழு உறுப்பினர்கள் 2011-2012



இடமிருந்து வலம் (இருப்பவர்கள்)
மு.வரதராஜன். இ.பிரபேஸ்கண்ணன். பு.குகானந்தன். ஒ.விஜயரட்ணம்.(பகுதித்தலைவர்) த.பாலசண்முகநாதன் (உதவி அதிபர்) ந.பாலச்சந்திரன் (பிரதி அதிபர்) அ.கயிலாயபிள்ளை (அதிபர்)ச.யதுர்சன் (மன்றத் தலைவர்) க.நவிலன் (இதழாசிரியர்) க.சத்தியான்நதன் (மன்றப் பொறுப்பாசிரியர்) செ.செல்வராசா (பிரதி அதிபர்) இ.முருகுப்பிள்ளை.(பகுதித்தலைவர்) த.பாலகிருஸ்ணன்

இடமிருந்து வலம் (நிற்பவர்கள்)
த.பிருந்தாபன். சி.கேதுஜன். ச.ஜெயதர்ஷன் (பொருளாளர்) வ.ஜெசிந்தன். ர.வாகீசன். ஜெ.கபில்ராஜ். ச.விபூசனன். ச.சாயீசன். ஸ்ரீ.ரிசர்பன் (செயலாளர்) பிரதீபா. த.துஜீபா.அ.அனுஷா. சி.அபிவர்ணா. த.உஷானா. பு.தர்ஜனி. ந.கவிப்பிரியா.

ஏற்றமுறு நவீன உபகரணம், மற்றும்
இயந்திரத்தின் பயன்பாடு, தொழில்நுட்பங்கள்
மாற்றிமிக விலாசமுடைத் தாக்கித் திந்த
மார்க்கத்தில் உற்பத்திப் பெருக்கைத் தானே

இந்த வகை உற்பத்திப் பெருக்கம் தானே
ஏதாகும் வியாபார வளர்ச்சிக் கென்பர்
சந்தைக்கேள் விக்கேற்ப மிகை உற்பத்தி
தான்துரித மாக்கியதே வியாபா ரத்தின்

வளர்ச்சியினை உள்நாடு வெளிநா டென்ற
வகைப்படுத்தும் இரு இடத்தும் சந்தைக் கேள்வி
தளத்தினடிப் படையான உற்பத்திக்குத்
தாபித்த முறை "நேரி முறை' யென்பாரே

ஏற்றமுறு தொடர்பாடல், தொழில்நுட்பத்தில்
இயைந்ததாம் வளர்ச்சியுடன் இணைந்த தாகி
மாற்றமுடன் அதிகரிப்பாம் இவற்றை நல்கும்
வணிகத்தில் அவற்றை வகுத்துரைக்கக் கேளீர்!

இலத்திரனியல் வணிகச் செயற்பாடு தோன்றல்
இலத்திரனியல் தபால் தோற்றம் பெறுதலோடு
இலத்திரனியல் பணம் என்ப துருவங் கொள்ளல்
இணையப்பா வனை வணிகத் தெழுதலாமே.

ந.கவிப்பிரியா
தரம் : 13C

## பல்லாண்டு காலங்களின் பின்னும் இந்து வணிகன்



இந்து வணிகனே!
நீ எப்போ திரும்பி வருவாய் என
நான் காத்திருந்தேன்.............
விழித்திருந்தேன்............
அதுவும் நீண்ட வருடங்களுக்கு பின் நீ மீண்டும் வருவது
என் ஆட்சிக் காலத்தில் என நினைத்து உவகை அடைகின்றேன்
வணிகனே! உன் மலர்வால் வணிகத்துறை மட்டுமல்ல
இந்து அன்னையே புத்துயிர் பெறுகிறாள்
வணிகத்துறைக்கு இலக்கணமாய்
விளங்குபவனே
விலைவாசி எற்றத்தால் நாம் தான் பாதிக்கப்பட்டோம்
என நினைத்தோம் - ஆனால்
நீரும் பாதிக்கப்பட்டீர் என்பது
உம் வரவின்மையால் உணர்ந்து கொண்டோம்
போர் தந்த வடுக்கள் தான் உம் மறைவுக்கு காரணம்
என நன்கு புரிந்ததனால் தான் நாம்
நம் இளமை துடிக்க இதயம் பறக்க
விளைவு ஏதும் நோக்காது வினைகள் பல செய்தோம்
இளரத்தம் கொதிக்க இந்து அன்னை
மகிழ இவ் வணிகனை நாம் மீண்டும்
எழுந்து வரச் செய்து இத்
தேசத்தின் தேடலுக்கு தேவை பல தீர்த்தோம்

தாமோதரனின் வழித்தோன்றலில் உதித்த
தாமோதரன் சஞ்சிகை போல்
வணிகத்துறையில் பெரும் படைப்பில் உதித்ததாம் இவ்
இந்து வணிகன்
இது கடல் கடந்து புகழ்பரப்பி உன் மணம்
வீசச் செய்யுதம்மா
பத்தாயிரம் சாதனைகளும் பத்தாயிரம் படைப்புக்களும்
என்றென்றும் உனை உயர்த்துதம்மா
சங்கூதி முரசறைந்து உன் புகழை
நாம் சொல்ல வேண்டியதில்லை இந்து அன்னையே
எம் மவர்களின் சாதனைகள் உன் புகழை
பறை சாற்றுதம்மா - உலகறிய

உன் புகழ் கொண்டு உலவுகின்றோம்
இன்று
உன் புகழ் கொண்டு உன்னை உயர்விப்போம்
நம்பு

இந்துவின் வணிகா! உன்புகழ்
சொல்ல நான் பெரியவன் அல்லன்
எனினும் உதவி பெற்றவள் நான்
ஆதலால் உன் புகழ் சொல்ல முயல்கின்றேன்
உன் அளப்பரிய சாதனைகள் சொல்ல
இந் நூற்றாண்டு போதாது
எனினும் உன்னை வாழ்த்த எண்ணிற்று என் நெஞ்சு
வாழ்த்தினேன்
இந்து வணிகா!
வாழிய வாழியவோ
உன் புகழ் வாழியவே!

பு. தர்ஜனி
தரம் :13C

எப்படிப்பட்ட முட்டாளும் பணத்தைச் சம்பாதித்து விடலாம். ஆனால் அதை ஒரு புத்திசாலி மட்டுமே காப்பாற்ற முடியும்.

– அமெரிக்கா

பணக்காரனுக்குப் பின்னும் பத்துப்பேர், பைத்தியக்காரனுக்குப் பின்னும் பத்துப்பேர்

– இந்தியா

# ஓயாது பணி செய்து ஓய்வு பெறும் பாலா சேர்



எமது பாடசாலைக் காலத்தின் இறுதிப் பகுதியில் வெளிவரும் இந்து வணிகன் சஞ்சிகையானது எமக்கு மட்டுமல்லாமல் எமது வணிகக் கல்வி ஆசான் தம்பித்துரை பாலகிருஷ்ணன் (நம் எல்லோரும் பாலா சேர் என அன்பாக அழைக்கும்) அவர்களின் கற்பித்தல் காலத்தின் இறுதி இதழாகவும் அமைவதனால் பாலா சேரைப் பற்றிச் சில வரிகள் கண்ணீருடன் சொல்லி விட்டு செல்கின்றறேன்.

உண்மையில் பாலா சேர் மாணவர்களாகிய எமக்காக செய்யும் அர்ப்பணிப்பையும் தியாகத்தையும் முழுமையாகக் கூறிவிட இவ் இந்து வணிகன் இதழ் போதாது எனினும் சில விடயங்களை மட்டும் இங்கு குறிப்பிடுகின்றேன்.

நான் இந்துக் கல்லூரியில் இணைந்து கொண்ட ஆரம்ப காலப் பகுதியில் (க.பொ.த) உ/த அனைத்து ஆசான்களிலும் ஒருவராகவே பாலா சேரை நினைத்தேன். கண்டிப்பு நிறைந்ததாக காணப்படும் சேருடைய வெளித்தோற்றத்தைப் பார்க்கையில் அப்போது சற்று பயமாகவும் இருந்தது. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல சேர் ஒரு ஆசிரியராய் மட்டுமல்லாது ஒரு தந்தை போல் எமை நேசித்து கல்வி கற்பிக்கும் இனிய நல்மனிதர் என்பதை என்னால் உணர முடிந்தது.

பாலா சேரை எனக்குத் தெரிந்தது இரு வருடங்கள் மட்டுமே என்றாலும் இந்த இரு வருடத்திலும் கற்ற விடயங்களோ எண்ணில் அடங்காதவை. நாம் பாலா சேரிமிருந்து வணிகக் கல்வியை மாத்திரம் கற்று விடவில்லை. வாழ்க்கைக்குத் தேவையான எத்தனையோ விடயங்களை ஒழுக்க விழுமியங்களை கற்றத் தந்து எமை வளர்த்து விட்டார் என்பதை மறந்து விட முடியாது.

எதிர்காலத்தில் இந்த நாட்டின் நற்பிரசைகளாக விளங்கப் போகின்றவர்கள் மாணவர்களாகிய நாங்கள். அவ்வாறான நாம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை சொல் மூலம் மட்டுமல்லாது செயல் மூலமம் காண்பிப்பவர் எங்கள் பாலா சேர்.

1990 ஆம் ஆண்டு மார்ச் மாத காலப்பகுதியில் இந்துவின் மண்ணில் காலடி எடுத்து வைத்த பாலாசேர் அன்று தொடக்கம் இன்றுவரை இந்து வணிகத்துறை புரிந்த

பல சாதனைகளிற்கு சொந்தக்காரர் என்றால் அது மிகை இல்லை.
பாலா சேர் அடிக்கடி எமக்கு கூறிக் கொள்ளம் வாக்கியம் எதை நீ நினைக்கின்றாயோ அதை நீ அடைவாய் அதற்காகத் தளராது முயற்சி செய்ய வேண்டும் என்பதாகும்.

வகுப்பறைக்குள் நுழைந்ததும் முதல்ந ாள் பாடாலைக்கு வராத மாணவர்களிடம் காரணம் கேட்டு, முன்பு படித்த விடயங்களுள் கேள்வி கேட்டு பாடப்பரப்பினுள் நுழையும் பாணி இருக்கிறதே, அது பாலாசேருக்கே உரியது. அதுமட்டுமல்லாமல் இந்துவில் கற்று இன்று உயர் தொழில் புரியும் பலருடைய கதைகளை கற்றலுக்கு இடையிடையே கூறி எமது கற்கும் ஆர்வத்தை தூண்டி விடுபவர் பாலாசேர். எத்தனை பாடவெளைகள் என்றாலும் சலிக்காது நாமிருந்து கல்வி கற்க நகைச்சுவைகள் பல கூறி கல்வி கற்பிப்பவர் பாலாசேர்.

மாணவர்களை தனது குழந்தைகளாக நேசித்து தனது உடல் வருத்தத்தையும் பாராது எத்தனையோ நாட்களில் நான்கு ஐந்து ஏன் ஆறு பாடவேளைகள் கூட சேர் எமக்கு கல்வி கற்பித்ததை எம்மால் மறந்து விட முடியுமா?

இங்கு ஒரு விடயத்தைக் குறிப்பிட்டே ஆக வேண்டும் இன்ற மாணவர்கள் தனியார் கல்வி நிலையத்தை நாடும் சூழ்நிலை அதிகரித்துக் காணப்படுகின்றது. ஆனால் பாலாசேர் மாணவர்களிற்கு நேர்த்தியாகப் பாடத்திட்டத்தை வடித்து மேலதிகக் கற்றல் தேவை எதுவுமின்றி மாணவர்களை பரீட்சைக்கு வழி அனுப்பி வைப்பவர்.

இந்துவின் வணிகத்துறையில் வணிகக் கல்விப் பாடத்தில் அதிகமான மாணவர்கள் சிறந்த பெறுபேறு எடுப்பது வழமை. இதற்குக் காரணம் பாலாசேர் என்பதை எவராலும் மறுத்து விட முடியாது.

இத்தகைய ஒரு நல் ஆசான் ஓய்வு பெறுவது என்பது எமது வணிகத்துறைக்கு மாபெரும் இழப்பாகும் என்பதில் எதவித ஐயமும் இல்லை. இருபத்து இரண்டு வருடங்களாக இந்து மாணவர்களிற்காக ஓயாது பணி செய்து ஓய்வு பெறும் எம் இனிய ஆசானுக்கு இரு கரம் கூப்பி நன்றி கூறுகின்றோம். பல்லாண்டு காலம் நலமாக வாழ்கவென வாழ்த்தி நிற்கின்றோம்.

கோ.சர்மிளா
தரம் 13 C


Abans chavakachcheri
சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இந்து வணிகன்
சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்
Abans


Koshala Learners
கோசலா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
பதிவு இல- DS: 591
குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி
அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.
எழுத்துப் பரீட்சையில் சித்தி அடைய வீதி ஒழுங்கு
வகுப்புகள் நடைபெறும்.
தாம் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சி
வழங்கப்படும்
சாரதி அனுமதிப் பத்திரத்திற்கான மருத்துவ
சான்றிதழ் (மெடிக்கல்) எமது காரியாலயங்களிலே
பெற்றுக் கொள்ளலாம்.
சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இந்து வணிகன்
சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்
யாழ்ப்பாணம்,சாவகச்சேரி பருத்தித்துறை, கிளிநொச்சி
Tel. 0217903351 0217903422 0771129295 0776222778
S. Ravichandran
TP. 07753356979


குகன் ஸ்ரூடியோ
Kugan studio
சாவகச்சேரி இந்துக்கல்லூரியின்
இந்து வணிகன் சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்.
Canon
EOS
தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, வாகன அனுமதிப்பத்திரம், ஆகியவற்றிற்கான
நிழற்படங்களை டிஜிற்றல் முறையில் படம் பிடிப்பதற்கு
அரசாங்க உத்தரவாதம் பெற்ற புகைப்படக் கலையகம்
KANDY ROAD CHAVAKACHCHERY
கண்டி வீதி,சாவகச்சேரி


பொதிகை புத்தகசாலை
புத்தகங்கள்,காகிதாதிகள்,பாடசாலை உபகரணங்கள்,
பரீட்சைமாதிரி வினாத்தாள்கள் போன்றவற்றினை
எம்மிடம் குறைந்த விலையில்
பெற்றுக் கொள்ளலாம்.
சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இந்து வணிகன்
சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்
சாவகச்சேரி


ராஜன் ஆபரண மாளிகை
சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இந்து வணிகன்
சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்
இல.07 தனங்கிளப்பு வீதி சாவகச்சேரி.
உரிமையாளர் :- ச.நடராசா தெ.பே. 0773086859


ஹரன் வர்த்தக நிலையம்
சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இந்து வணிகன்
சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்
வீட்டுக்குத் தேவையான பலசரக்கு சாமான்,பால் மா வகைகள்
என்பவற்றினை பெற்றுக் கொள்ள எம்மிடம் நாடுங்கள்.
தரம் அது நிரந்தரம்
தொ.பே.-0778393896
104, சுற்றுவட்டம்
கண்டி வீதி,சாவகச்சேரி.


SRI RAAM SILK
Dealers in textiles, Specialist inSarees,
Salwars, Skirt & Blouse, Other kind of textiles
சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இந்து வணிகன்
சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்
No : 17, MODERN MARKET, CHAVAKACHCHERI
Tel.:- 021-2270258, 0777069078



நிலா புடவையகம்
இல, 20 நவீன சந்தை (உட்புறம்) சாவகச்சேரி
இன்றைய நவநாகரிகத்திற்கு ஏற்ற திருமண பட்டு
புடவைகளிற்கும் சேட்டிங், சூட்டிங், பஞ்சாபி
ஸ்கேட் பிளவுஸ், சிறுவர் சிறுமியர்களுக்கேற்ற
ரெடிமேட் ஆடைகள் அனைத்திற்கும் நாட
வேண்டிய ஓரே ஸ்தாபனம்.
NILA TEX
NO:20 MODERN MARKET (INSIDE)
CHAVAKACHCERI.
MOBILE:- 0774191767
சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இந்து வணிகன்
சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்


கிருபா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை
LEARNER DRIVER
குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவாக சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கப்படும்.
எழுத்துப் பரீட்சையில் சித்தி அடைய வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
தாம் விரும்பிய நேரங்களில் வாகனப் பயிற்சி வழங்கப்படும்.
சாரதி அனுமதிப் பத்திரத்திற்கான மருத்துவச் சான்றிதழ் (மெடிக்கல்) எமது காரியாலயங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
சாவகச்சேரி இந்துக்கல்லூரியின்
இந்து வணிகன் சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்.
தலைமைக் காரியாலயம் - 226 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 0212224353, 0777225292
கிளைகள் - A9 வீதி சாவகச்சேரி, கிளிநொச்சி, நெல்லியடி, விசுவமடு
0214923202 - 0212285505 - 0213006550 - 021 320 1515


ABI PHONE SHOP
சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இந்து வணிகன்
சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்
LG
PHONE SALLES
REPAIRING
UNLOCKING
SIM CARDS
Sri Lanka Telecom
Mobitel
We Care. Always.
airtel
HUTCH
Dialog
Suntel
NO.03 KANDY ROAD.
CHAVAKACHCHERI
PHOE NO. 021 2270214
E.mail. tnelsan@gmail.com


இலங்கை அரசாங்கத்தாலும் சர்வதேசத்தாலும் அங்கீகரிக்கப்பட்ட கணினி நிறுவனம்
சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இந்து வணிகன்
சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்
DMI
COMPUTER EDUCATION
Degree Course
Bachelor of Information Technology (BIT)
Professional Computer Training Courses
Diploma in Information Technology
Diploma in PC Application
Diploma in Microsoft Office
Adv. Dip. in Hardware & Networking
Dip. in Pre-Press Desktop Publishing
Dip.in Web Designing & Development
Dip.in Computerized Accounting
Tally Financial Accounting Training
Diploma in Video Production & Multimedia
AutoCAD
Veta
Spoken English
மல்டிமீடியா கற்கை நெறிகள்
Master Diploma in Multimedia
2D & 3D Animation
சாவகச்சேரியில்
கண்டி வீதி, ப.நோ.கூட்டுறவுச்சங்க கட்டிடம் (HNB அருகில்) Tel.:021-227 0243
CSS
ISO 9001:2008 Certified Institution (INDIA)
IAB
City& Guilds UK
veta
Experts in English Training
DMI COMPUTER EDUCATION
இல. 113, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் Tel.:021-222 4403
M.M.V வீதி நெல்லியடி Tel.:021-226 2470
K.K.S வீதி (NSB அருகில்) சுன்னாகம் Tel.:021-224 1970


SK சூஸ் லாண்ட்
கண்கவர் டிசைன்களில் பாதணி வகைகளா, அழகு சாதனப் பொருட்களா, அன்பளிப்புப் பொருட்களா அனைத்தையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஓரே ஸ்தாபனம்...
SK சூஸ் லாண்ட்
இல 230, கண்டி வீதி,
சாவகச்சேரி
SK சூஸ் லாண்ட்
இல 12, நவீன சந்தை உப்புரம்,
சாவகச்சேரி
சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இந்து வணிகன்
சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்


THURKA TRADERS
தூர்க்கா ரேடர்ஸ்
சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இந்து வணிகன்
சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்...
KE
CO
L MARINE
STISHELL
NIPPON CEMENT
DEALERS HARDWARE ITEMS ,ELECTRICAL TOOLS
ALL TYPE OF WIRING ITEMS, PVC PIPES WATER TANKS,
ALL ITEMS OF HARDWARES.
NO.325,
KANDY ROAD
CHAVAKACHCHERI.
இல. 325.
கண்டி வீதி
சாவகச்சேரி.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இந்து வணிகன்
சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்...


# தனுஷன் ஜுவலர்ஸ்

**ஓடர் நகைகள் குறித்த தவணையில் உத்தரவாதத்துடன் 22 கரட்டில் செய்து கொடுக்கப்படும்.**



கச்சாய் வீதி, சாவகச்சேரி.

தெ.பே: 21227023,0774911942


யாழ் ரெக்ஸ்
சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இந்து வணிகன்
சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்
ஆண்கள்,பெண்களுக்கான
ஆடைத் தெரிவுகள்
மற்றும் திருமண வைபவங்களுக்கு
எம்மிடம் மிகவும்
தரமான ஆடைகளைப்
பெற்றுக்
கொள்ளலாம்.
KANDY ROAD
CHAVAKACHCHERI.
கண்டி வீதி
சாவகச்சேரி.



FASHION INDIA
சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இந்து வணிகன்
சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்
Ladies & kids wear
sarees, Skirt & tops
Chudithar Readymade
& Materials All Cream items ,
Covering
NO. KUT 06, NEW MARKET, CHAVAKACHERI
0778588886 , 0750470490


JAPAN SOFT
Computer Hardware
Phone Repair & Sales
Software CD
No 10, UPSTAIR NEW MARKET
CHAVAKACHCERI
சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இந்து வணிகன்
சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்


THAMOTHARAM PILLAI& SONS
சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இந்து வணிகன்
சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்
KANDY ROAD, CHAVAKACHCHERI

# KETHEES TEXTILES



Dealerj in Textiles Specialist
In Saree Salvars Skirt / Blause
Other kind of Texiles.

No.19 New market
Chavakachcheri.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இந்து வணிகன்
சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்


# அபிஷா ரெக்ஸ்
# ABISHA TEX



சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இந்து வணிகன்
சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்

09இ நவீன சந்தை (உட்புறம்)
சாவகச்சேரி.

09, New Market (Inside)
Chavakachcheri.
Tel. 0779124249


பிள்ளையார் அச்சகம்
Pillaiyar Offset Printers,
676 பருத்தித்துறை வீதி நல்லூர்,
யாழ்ப்பாணம்.
T.P:-0773901877

# நன்றி நவில்கின்றோம்


எமது மன்றத்தின் வெளியீடான "இந்து வணிகன்" 3வது மலராக உங்கள் கரங்களில் தவழ்கின்றது. இது பலரது கூட்டு முயற்சியின் வெளியீடாகும். இம்மலரானது சிறப்பாக வெளிவருவதற்கு அருளாசிச் செய்தி வழங்கிய சிவஸ்ரீ கு.ஸ்ரீகாந்தக்குருக்கள் அவர்களுக்கும் ஆசிச் செய்தி வழங்கியவர்களுக்கும் , வாழ்த்துச் செய்தி வழங்கியவர்களுக்கும் முதற்கண் நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

மேலும் சிறப்பு பகுதிக்கான ஆக்கங்களை வழங்கி உதவிய ஆசிரியர்களுக்கும் மாணவர் பகுதிக்கான ஆக்கங்களை தந்துதவிய மாணவர்களுக்கும் அவர்களை வழிப்படுத்திய ஆசிரியர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

இம்மலரானது மீண்டும் வெளிவர வேண்டும் என்பதில் அதிக அக்கறை கொண்டு தேவையான ஆலோசனைகளையும், ஒத்துழைப்பையும் வழங்கி முன்னின்ற ஊக்குவித்த எமது கல்லூரி அதிபர் அவர்களுக்கும் அவரோடு இணைந்து செயற்பட்ட பிரதி அதிபர்கள், துணை அதிபர், பகுதித்தலைவர் , பொறுப்பாசிரியர், தாமோதரம் பிரதம ஆசிரியர் திரு.க.முத்துலிங்கம் ஆசிரியர், ஏனைய மன்ற ஆசிரியர்கள் ஆகியோருக்கும், மற்றும் விளம்பர அனுசரணை செய்த வணிகப் பெருந்தகைகளுக்கும் எமது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந் நூலுருவாக்கத்திற்கு கணனிப் பதிவு, கணினிப் பக்க வடிவமைப்பு என்பவற்றைச் செய்துதவிய திருமதி க.நளாயினி அவர்களுக்கும், அட்டைப் படம், மற்றும் விளம்பரங்கள், ஏனைய படங்களை வடிவமைத்துதவிய எமது சித்திர பாட ஆசிரியர் திரு ஆ.வைகுந்தன் அவர்களுக்கும், மலரினை இறுதி வடிவமைப்புச் செய்துதவிய பிள்ளையார் அச்சகத்தைச் சேர்ந்த திரு.யோ.இன்பரூபன் அவர்களுக்கும், இம் மலரினை அழகாகவும், துரிதமாகவும் அச்சுப் பதிவு செய்துதவிய பிள்ளையார் பதிப்பகத்தினருக்கும் எமது சிரம் தாழ்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மலர்க்குழு



A SPECIAL REWARD WITH
SEYLAN SCHOLAR!
சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இந்து வணிகன்
சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்
2% p.a. interest reduction
on Seylan Scholar Higher Education Loans
for everyone who visits the Seylan Bank stall (Hall A, Stall D4)
at BMICH Future Minds exhibition*
Register Now!
SEYLAN SCHOLAR OFFERS:
• 2% p.a. interest reduction over the existing rate
(Interest rate of 12% p.a. for facilities secured by property and interest rate of 14% p.a. for facilities secured by guarantors)
• Documentation fees waived off
• Loans of up to Rs. 7.5 million
• Flexible repayment period of up to 7 years
• Joint loans (with parents/relations/spouse)
• Available through the islandwide branch network
Offer valid for applications collected from the Seylan Bank stall
and submitted to Seylan Bank branches before 30th September 2011
*Monthly instalment of Rs. 1,765/- for a loan of Rs. 100,000/-
For further information please call: Rasheed - 077 3243 931, Thojana - 077 3243 988
SEYLAN SCHOLAR
EDUCATION LOANS
Seylan Towers, No. 90, Galle Road, Colombo 03.
Tel: +94 11 2456789, +94 11 4701000 Fax: +94 11 2456456 Email: info@seylan.lk
Brand Finance Rating: "A" Fitch Rating : BBB-(lka) Co. Reg. No.: PQ 9
SEYLAN
BANK PLC
The bank with a heart

# அனைவருக்கும் காப்புறுதி

ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸின் 50 ஆண்டுகள் நிறைவினை கொண்டாடுகின்றோம்.

## சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் இந்து வணிகன் சிறப்புடன் வெளிவர வாழ்த்துகின்றோம்



தேசத்திற்கு பெருமையுடனும் மிகப்பெரிய அடையாளமாகவும் சேவைபுரிந்த தமது 50 ஆண்டுகால பொற்காலத்தினை ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் கொண்டாடுகின்றது. இச்சாதனை தருணத்தினை நினைவுகூறும் ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸ் இலங்கைவாழ் மக்கள் அனைவருக்கும் ஏற்றதாக 'சுவர்ணதஜ' காப்புறுதியை அறிமுகஞ் செய்கின்றது. மிகவும் நெகிழ்வு தன்மையிக்க வசதியான இக்காப்புறுதியை ஒவ்வொரு இலங்கை பிரஜையும் பெற்றுக் கொள்ள முடியும். ஸ்ரீலங்கா இன்ஷுவரன்ஸின் நோக்கமாக அனைத்து குடிமக்களுக்கும் காப்புறுதி எனும் நோக்கினை இலக்காக கொண்டே இது நடைமுறைபடுத்தப்படுகிறது.

- உங்கள் வருமானத்திற்கு ஏற்ற ஆயுள் காப்புறுதியை தெரிவு செய்ய முடியும்
- கட்டுப்படியான தவணைக்கட்டணம்
- 10-30 ஆண்டுகால வசதியான கால எல்லை
- திடீர் மரணம் சம்பவிக்கும் தருணத்தில் காப்புறுதி தொகை இரட்டிப்பாகும்.
- காப்புறுதி முதிர்வுறும் தருணத்தில் காப்புறுதி ஒப்பந்தம் வழுவில் இருக்குமாயின் செலுத்தப்பட்ட முழுத் தவணைக்கட்டணமும் திருப்பி செலுத்தப்படும்.

50 ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் சுவர்ணதஜ அனைவருக்கும் காப்புறுதி

ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ் தந்தையும் தாயும் போன்று


பிள்ளையார் அச்சகம், நல்லூர்.

Design:- A.vaikunthan CHC